பக்கங்கள்: முப்பத்திரண்டு +16

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 04 ஞாயிற்றுக்கிழமை (19.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 205



09
இருப்பதை அழித்துவிட்டு எதை ஆய்வு செய்வது





17
இலங்கை அரசை கலங்கவைத்துள்ள சனல் 4 வீடியோ



27
அளவெட்டி அடாவடி



29
நான் இளமையாகிறேன்

## மஹிந்தவுக்கு அமெரிக்க நீதிமன்றம் அழைப்பாணை

கொழும்பு, ஜூன் 19

சித்திரவதையால் பாதிக்கப்படுவோரைப் பாதுகாக்கும் அமெரிக்க சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு அமெரிக்க சமஷ்டி நீதி மன்றமொன்று அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி. நகரிலுள்ள நீதிமன்றமொன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் 30 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டஈடு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கிலேயே ஹேக் உடன்படிக்கையின் கீழ் அமெரிக்க நீதிமன்றமொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு அழைப்பாணை பிறப் பித்துள்ளது. ஜனாதிபதிக்கான அழைப்பாணை, இலங்கையின் நீதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஹேக் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகளில் அமெ ரிக்காவும் இலங்கையும் அடங்குகின்றன. மாணவர் ரஜி ஹர் மனோகரன், பிரேமாஸ் ஆனந் தராஜா, ரி.தவராஜா ஆகியோரின் உறவினர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

இலங்கையில் நீதிக்குப் புறம்பான

(04 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுக்கான தெரிவுக்குழு; கூட்டமைப்பு நிராகரிப்பு

### இந்தியாவும் எதிர்க்கும் சாத்தியம்

கொழும்பு, ஜூன் 19

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்கும் அரசின் யோசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடியோடு நிராகரித்தது. அது பற்றிக் கூட்டமைப்பு ஒரு போதும் கண்டுகொள்ளாது என்றும் அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டால் அதில் பங்கெடுக்கப் போவதில்லை என்றும் கட்சியின் இணைச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரி வித்தார். இதேவேளை இந்தியாவும் இந்தத் தெரிவுக்குழு யோசனை தொடர்பில் திருப்தியாக இல்லை என்றும் தெரிய வருகிறது.

கடந்த 10ஆம் திகதி கொழும்பு வந்திருந்தது இந்திய மூவரணி. இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்புச் செயலர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ், பாதுகாப்பு அமைச்சின் செயலர் பிரதீப் குமார் ஆகியோர் அதில் இடம்பெற்றிருந்தனர்.

(31 ஆம் பக்கம் பார்க்க)

## பதிவு நடவடிக்கையை நிறுத்தியது இராணுவம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினர் மேற்கொண்டு வந்த ஆள்பதிவுகள் அனைத்தும் நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் நிறுத்தப்பட்டுள்ளன என்று யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

படையினர் ஆள்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உயர் நீதிமன்றத்தில்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழமே ஒரே தீர்வு; தமிழக மக்கள் கருத்து

சென்னை, ஜூன் 19

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தனித் தமிழீழமே ஒரே தீர்வு என்று தமிழ் நாட்டைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சென்னையின் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றான லொயோலாவின் ஊடக ஆய்வியல் புலத் தலைவர் பேராசிரியர் ச.இராசநாயகம் தலைமையில் மக்கள் ஆய்வகம் நடத்திய கருத்துக் கணிப்பில் இந்த முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்ன என்று கேட்கப்பட்ட கேள்விக்கு

(31 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கூட்டத்தை தாக்கியவர்கள் படையினராயின் கடும் தண்டனை

### வழங்கப்படும் என்கிறார் கட்டளைத் தளபதி

யாழ்ப்பாணம், ஜூன் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அளவெட்டி தேர்தல் கூட்டத்தி னுள் புகுந்து அங்கிருந்தவர்களை விரட்டியவர்கள் இராணுவத்தினராக இருந்தால் அவர்கள் மீது தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க.

''இராணுவத்தைச் சேர்ந்த சில சக்திகளோ வேறு தேவையற்ற சக்திகளோ அளவெட்டிச் சம்பவத்தில் தொடர்புபட்டிருக்கலாம். இராணுவப் பொலிஸார் அது தொடர்பில் விசாரணை நடத்தி வருகிறார்கள். இராணுவத்தினர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பது கண்டறியப்பட்டால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்'' என்றார் ஹத்துருசிங்க.

யாழ். படைகளின் சிவில் நிர்வாக

(04 ஆம் பக்கம் பார்க்க)

## 1,000 கடாக்கள் வெட்டிச் சரிப்பு

### கவுணாவத்தையில் இரத்தப் பலி

வலி.வடக்கு, ஜூன் 19

கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் நேற்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடாக்கள் வெட்டிச் சரிக்கப்பட்டன. அவற்றில் ஆலயத்தில் வெட்டவென திட்டமிட்டு வளர்க்கப்பட்ட பெரிய ஆடுகள் 300இற்கும் மேற்பட்டவை என்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

20 ஆண்டுகளின் பின்னர் ஆலயத்தின் முன்றிலில் மிருகவதை நடக்க இராணுவத்தினரும் பொலிஸாரும் இடமளித்தமையைத் தொடர்ந்து, காலை சுமார்



4.30 மணி முதல் ஆடுகளை வெட்டிச் சரிக்கும் படலம் ஆரம்பிக்கப்பட்டது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டியில் தாக்குதலில் ஈடுபட்ட மேஜர் உட்பட இராணுவத்தினரை அடையாளம் காட்டத் தயார்

### தளபதியிடம் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

அளவெட்டியில் எமது கட்சி நடத்திய கூட்டத்தை இராணுவம்தான் குழப்பித் தாக்குதல் நடத்தியது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை அடையாளம் காட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம்.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ்பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன் ஆகியோருக்கும் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க


(31 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான காலநிலை நாள் முழுவதும் நிலவும்.

# சர்வதேசத்தின் ஆதரவு தற்போது தமிழரின் பக்கம்; இவ்வேளையில் கூட்டமைப்பு வென்றேயாக வேண்டும்

## உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்கள் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

சர்வதேசத்தின் ஆதரவு தற்போது எமது பக்கம் திரும்பியிருக்கும் சூழலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வருகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வென்றாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனை மக்களுக்கு உணர வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வைக்க வேண்டியது வேட்பாளர்களாகிய உங்களது கடமையாகும்.

இராணுவ சீருடையிலே துப்பாக்கிகளோடு அளவெட்டியில் எம்மை அச்சுறுத்தியது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதில் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இராணுவத்திலேயே 'இனந்தெரியாதவர்கள்' இருக்கின்றார்கள் என்பதை கூறும்போது நகைப்புக்கிடமாக இருக்கின்றது.



நல்லூர், இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களுக்கான கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்விலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

### இராணுவத்தினரிலும் 'இனந்தெரியாதவர்கள்'

இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்றுகையில்; சுதந்திரமான தேர்தல் நமது நாட்டில் இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை. இனிவரும் காலங்களில் நீதிமன்றங்களிலும்கூட நீதி கிடைக்குமா என்பது தெரியவில்லை.

எமக்கு விடுக்கப்பட்ட இத்தனை அச்சுறுத்தல்களை நீங்கள் அறிந்தும் எம்முடன் கைகோர்ப்பதற்கு இங்கே வந்த மைக்கு நன்றிகள். உங்களுடைய வெற்றிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்கத் தயார் - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது உரையில்; அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சில் இதுவரையில் எதுவும் எட்டப்படவில்லை. இருந்தும் தொடர்ந்தும் பேசிக் கொண்டிருக்கிறோம். இவை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவற்றை நீங்கள் மக்களிடத்திலே தெளிவுபடுத்தவேண்டும்.

### திணறுகிறது அரசு

அரசியல் சாணக்கியத்தோடு மக்கள் எங்களோடு நிற்கின்றார்கள் என்ற பலத்தில்தான் பேசுகின்றோம். அரசு தற்போது சர்வதேச அழுத்தத்தினால் திணறிக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் விரும்பாத - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்காத - தீர்வை திணிக்க நாம் விடமாட்டோம் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தவை வருமாறு:-

### படலையைத் தட்டி வாக்குக் கேட்க வேண்டும்

மக்களிடத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது குற்றச்சாட்டு இருக்கின்றது. இவர் கள் வாக்குக் கேட்ட பின்னர் போய் விடுவார்கள் என்று. நாங்கள் மக்களாகிய உங்களுடன் வேலை செய்தால் என்ன நிகழும் என்பதையும் வேலை செய்வதைத் தடுப்பது யாரென்பதும் அளவெட்டியில் இடம்பெற்ற சம்பவத்துடன் மக்களுக்கு விளங்கியிருக்கும்.

தமிழினம் அழிக்கப்பட்ட உணர்வோடு கலங்கிப்போய் இருக்கிறார்கள் எமது மக்கள். அவர்களது படலையைத் தட்டித் திறந்து சென்று தான் வாக்குக் கேட்க வேண்டும். அவர்கள் பொதுக் கூட்டங்களுக்கு வருவதற்குப் பயப்படுவார்கள். எனவே வீடுவீடாகச் சென்று கேளுங்கள் - என்றார்.

நிகழ்வின் இறுதியில் உரையாற்றிய சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாவது:

### போர்க் குற்றத்திலிருந்து தப்ப அரசு முயற்சி

வருகின்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நாம் ஏனைய தேர்தல்கள் போன்று நோக்கக் கூடாது. இந்தத் தேர்தலில் அரசும் அரசுசார்ந்த அடிவருடிகளும் தேர்தலில் வெல்ல வேண்டுமென்ற முனைப்பில் இருப்பதையே அளவெட்டிச் சம்பவம் வெளிக்காட்டுகின்றது. அரசு, தேர்தலில் வென்று தமிழ் மக்கள் தமது பக்கம் நின்கின்றார்கள் என்று சர்வதேசத்துக்குச் சொல்ல ஆசைப்படுகின்றது. ஏனெனில், போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து தப்பவே அவ்வாறு முயலுகின்றது. இதனை நாம் முறியடிக்க வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் புளொட் தலைவர் த.சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் இரா.சங்கையா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-15)

# பிடிபட்டான் திருடன்

தாவடி தெற்குப் பகுதியில் நேற்று மாலை வீடொன்றுக்குள் புகுந்து தொலைபேசி மற்றும் சில பொருள்களைத் திருடிக் கொண்டு தப்பிக்க முயன்ற திருடன் ஒருவனை ஊர்மக்கள் மடக்கிப் பிடித்து சுன்னாகம் பொலிஸில் ஒப்படைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது: நேற்று மாலை 5 மணியளவில் தாவடி தெற்கில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த திருடன் அங்கிருந்த பொருள்கள் சிலவற்றைத் திருடிக்கொண்டு வெளியேவரும்போது அந்த வீட்டுப் பெண் கண்டு கத்தியுள்ளார்.

கூக்குரலைக் கேட்டு ஊர் மக்கள் கூடியபோது திருடன் அவர்களிடம் மாட்டிக் கொண்டான். மக்கள் அவனைப் பிடித்து மின் கம்பத்துடன் கட்டிவிட்டு அருகில் இருந்த இராணுவ முகாமுக்குத் தகவல் கொடுத்தனர். தொடர்ந்து பொலிஸாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் திருடன் ஒப்படைக்கப்பட்டான். (ஒ-10)

# சொந்த எம்.பிக்கள் மீதே விந்தன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னைப் புறக்கணிக்கிறார்கள் என்று குற்றச்சாட்டைக் கிளப்பி உள்ளார் அதே கட்சியைச் சேர்ந்த, யாழ். மாநகர சபை உறுப்பினரான கே.என்.விந்தன்.

''சபையின் ஆளுந்தரப்பு உறுப்பினர்களால் எதிர்த் தரப்பினருக்கு அச்சுறுத்தல்கள், கொலை மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. இது பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிட்டிருந்தோம். அவர்களும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளிடம் இது விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதாக உறுதி அளித்திருந்தனர். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை'' என்று நேற்றிரவு விந்தன் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவைச் சந்தித்துப் பேசிய போதுகூட, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரச்சினை குறித்து எதுவும் பேசவில்லை என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

''அரசியல் எதிராளர்களின் அளவுக்கதிகமான அழுத்தங்களுக்கு உள்ளாகி வருபவன் நான். கூட்டமைப்புக்குள் இருக்கும் மற்றொரு கட்சியின் உறுப்பினர் நான் என்பதால் என்னைப் புறக்கணிக்கின்றனரோ என்ற எண்ணம் தோன்றுகின்றது'' என்று விந்தன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ)

# நிகழ்வுகள்

## மழலைகளின் மெய்வன்மைப் போட்டி

புத்தூர் நவக்கிரி இந்து இளைஞர் முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இந்து இளைஞர் மன்றத் தலைவர் த.நிர்மலானந்தன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத்தைச் சேர்ந்த திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்து கொள்வார்.

(ஒ-10)

## கும்பாபிஷேக மலர் வெளயீடு

தென்மராட்சி, ஜூன் 19

உசன் கஜகேணி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்தையொட்டிய மலர் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.தேவகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.குமரன் கலந்து கொள்வார்.

மலரின் முதல் பிரதியை சு.சிவபாதசுந்தரம் பெற்றுக்கொள்வார்.

(ஒ-207)

## 'வணிகமேதை' வெளியீட்டு விழா

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வணிக மன்றத்தின் 'வணிக மேதை' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வணிக மன்றத்தலைவர் மு.மிதுலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா கலந்து கொள்வார்.

(ஒ-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டித் தாக்குதல் சம்பவம் உண்மையே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

அளவெட்டியில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுவது உண்மையே என்று பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறைப் பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேராவே அவ்வாறு த.தே.கூட்டமைப்பின் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதை உறுதி செய்திருப்பதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயினும் முன்னதாக யாழ்.பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி அவ்வாறான தாக்குதல் சம்பவம் நடைபெறவில்லை என்று மறுத்திருந்தார்.

தாக்குதல் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குதான் நேரில் சென்று பார்வையிட்டதாக குறிப்பிடும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா, இராணுவத்தினர்தான் அதில் தொடர்புபட்டிருந்தார்களா என்பது குறித்தும் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கின்றார்.

ஆயினும் விசாரணையின் போது அவ்விடத்தில் இருந்த இராணுவத்தினரும் தாங்கள் தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை என்று மறுத்ததாக அவர் மேலும் குறிப்பிடுகின்றார். இதற்கிடையே இராணுவப் பேச்சாளரிடம் இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் வினவப்பட்டபோது அச்சம்பவம் பற்றிக்கூட தான் இதுவரை கேள்விப்படவில்லை என்று நேற்று மாலை அவர் தெரிவித்ததாகவும் திவயின பத்திரிகை செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'புலம்பெயர் புலி'களுக்கு எதிராக அனைவரும் அணிதிரளுங்கள்

## இவ்வாறு கூறுகிறார் கோத்தபாய ராஜபக்ஷ

புலம்பெயர்ந்த புலிகளுக்கு உதவுபவர்களுக்கு எதிராக அணிதிரளுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சகல தேசப்பற்றுள்ள மக்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாடு பெற்றுக்கொண்டுள்ள வெற்றியைக் காட்டிக்கொடுத்து பயங்கரவாதம் தலைதூக்குவதற்கு உறுதுணை புரிவோருக்கு எதிராகவும், நாட்டை பாதுகாப்பதற்கும் மக்கள் மீண்டும் அணிதிரள வேண்டுமெனவும் அவர் நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் இறைமையையும் மக்களையும் பாதுகாப்பதற்காக 30 வருட காலங்களுக்கு மேல் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட படையினரை மறந்து செயற்பட்டால் மீட்கப்பட்ட நாடு எம்மிடமிருந்து கைநழுவிப் போய்விடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். பயங்கரவாதிகள் எமது நாட்டைப் பிளவுபடுத்தி அதனை துண்டாட முயற்சி செய்தனர்.

தற்போது சர்வதேசத்துக்கூடாக அதனை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். பிரபாகரனுக்கு எதிராகப் போராடிய படையினருக்கு எதிரான வீடியோக் காட்சிகளைத் தயாரித்து சர்வதேசத்திடம் முன்வைத்துள்ளனர்.

படையினரின் வெற்றி இதன்மூலம் மலினப்படுத்தப்பட்டுள்ளது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சிறுசம்பவமொன்று பொலிஸாருக்கு அறிவிக்கப்படாமல் நேரடியாக அமெரிக்கத் தூதரகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் முதலாவதாக அமெரிக்கத் தூதரகத்திலேயே விசாரிக்கப்பட்டும் உள்ளது என்றும் தெரிவித்தார். கட்டுநாயக்காவில் இடம் பெற்ற சம்பவங்கள் நேரடியாக ஜேர்மன் தூதரகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசமெங்கும் எமதுநாடு அபகீர்த்திக்கு உள்ளாகும் வகையில் ஒரு தரப்பினர் செயற்படுகின்றனர் என்பது இதன் மூலம் தெளிவாகிறது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டுள்ள பயங்கரவாதிகள் பின்னர் கொல்லப்பட்டுள்ளதாக சனல்-4 வீடியோ காட்சிமூலம் கூறப்படுகிறது. எனினும், கிழக்கில் பௌத்த மத தேரர்கள் கொல்லப்பட்டதையோ, நிராயுதபாணியான 600 பொலிஸாரைக் கொலை செய்ததையோ சாதாரண அப்பாவிப் பொதுமக்கள், குழந்தைகளைக் கொலை செய்ததையோ சனல்-4 காண்பிக்கவில்லை.

இராணுவத்தளபதி அண்மையில் நடத்திய மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் மேற்குலக நாடுகள் அதனை நிராகரித்துவிட்டன. அங்கு பயங்கரவாதத்தை ஒழித்த முறை மற்றும் சிக்கல்களுக்கு பதிலளிக்கவும் நாம் தயாராகவிருந்தோம். எனினும், எம்மை குற்றஞ்சாட்டுபவர்கள் அந்த மாநாட்டுக்கு சமுகமளிக்கவில்லை.

நுகேகொட ஆனந்த சமரகோன் ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று நடைபெற்ற படைவீரர்களின் நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பிரிட்டன் அதிகாரிகளிடம் இருந்து தப்பிப் பிழைத்த தமிழ் இளைஞன்

பிரிட்டனில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்படுகின்றமையில் இருந்து கடைசி நிமிடங்களில் தப்பித்துக் கொண்டார் தமிழ் இளைஞனான நடராஜா சுதாகரன் ( வயது 31 ) என்பவர்.

இவர் தான் இலங்கைக்கு திருப்பப்படுகின்றமையை ஆட்சேபித்து கடந்த வியாழக்கிழமை அதிகாலை தூக்கில் தொங்கியவர். எனினும் தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவர் நாடு கடத்தப்படுகின்ற விமானம் புறப்படுகின்றமைக்கு வெறும் இரு நிமிடங்களே இருந்தன. நீதிமன்றத்தின் தடை உத்தரவுடன் வந்து சேர்ந்தார் இவரின் சட்டத்தரணி. விமானத்தில் இருந்து சுதாகரன் இறக்கப்பட்டார்.

இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுகின்ற பட்சத்தில் கொலை செய்யப்படுவார் என்பது சுதாகரனின் அச்சமாக உள்ளது. சுதாகரன் பிரிட்டனில் 2005 ஆம் ஆண்டு முதன்முதல் அரசியல் தஞ்சம் கோரி இருந்தார்.

லண்டனில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் வைத்து 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜேர்மன் பிரஜை ஒருவரை திருமணம் செய்து கொண்ட இவருக்கு ஒரு குழந்தை உள்ளது.



# சந்தியடிச் சோமு

## பராக்... பராக்... பக்கத்து வீட்டுப் பெரியண்ணைமார் வந்து போட்டினம்

சோமண்ணை உங்கட வரவுக்காக ஒவ்வொரு ஞாயிறும் பார்த்துக் கொண்டிருக்கிறனாங்கள்என்றபடி முத்தல் வெண்டிக்காய் பார்த்து தெரிஞ்சு கொண்டிருந்த என்னோட சேர்ந்து கொண்டார் சிவக்கொழுந்து. பிள்ளையிட்ட போனவர் அங்க இருக்கப்பிடிக்காமல் ஊரோட வந்திருக்கிறார். அந்தாள் சோமண்ணையென்று கூப்பிட நான் அதை காதில வாங்காத மாதிரி நல்லா இழைச்சுப் போனீங்கள்.கொலஸ்ரோல், சலரோகம் ஏதும் கண்டு பிடிச்சு சொல்லிப்போட்டாங்களோ? என்று கதைய மாத்தினன். ஓம் எல்லாமிருக்கெண்டு சொல்லி ஒன்றும் தின்ன வேண்டாமெண்டுறாங்கள்.ஆட்டாமா ரொட்டி, குரக்கன் மா புட்டு, ஒரு துண்டு மீன் என்று கட்டுப்பாடுகள் அதிகம். அது தான் கொஞ்சம் வயக்கெட்டுப் போனன். இது போதாதென்று என்ர கடைசி மகள் நெஞ்சுப் பிடிப்பென்று கொண்டு போய் காட்டினா. அவளுக்கும் உந்த வருத்தமெல்லாம் இருக்கென்டு உடம்ப உருக்க வேணுமென்று சொல்லி போட்டாங்கள். அதுக்காக ஒவ்வொரு நாளும் மரக்கறி அவிச்சு தின்ன வேணுமென்றும் சொல்லிப் போட்டாங்கள். அவள் பாவி இரவில மரக்கறி அவிச்சுத் திண்டு போட்டு நித்திரையில்லாமல் வயிறு புகையிது என்று அழுகிறாள் என்று கொஞ்சம் மூச்சு விட்டார். ''கண்டது கடியதெல்லாம் சோதிக்கச் சொல்லியிருப்பாங்களே?'' . ''ஓம். ஒரு தொகை ரெஸ்ருகள் எடுக்க வேணுமென்று எழுதித் தருகினம். அதுக்கு மட்டும் இரண்டாயிரம் மூவாயிரமென்று செலவாகுது. திரும்பவும் மூச்சு வாங்க நிறுத்தினார்

உந்த பெரியாஸ்பத்திரி டாக்குத்தர்மார வைச்சிருக்கிற மருந்துக்கடைகள், மெடிக்கல் சென்ரர்களில சோதிச்சு அங்கேயே உடன காட்டலாம்தானே?என்று நான் கேட்க, மனிசன் உடன சொல்லிச்சு, ஒவ்வொருத்தரும் ஒவ்வொன்ற தொடக்கி வைச்சு தங்கட தான் திறமென்றுகினம். எனக்கு உதுகளில கொஞ்சம் விளப்பம் குறைவு தானே, நான் அவசரத்துக்கு ''குயிக்காத்'' தருகிற இடத்தில போய் அவசரமா எல்லாத்தையும் எடுத்து கொண்டு போய் பக்கத்திலேயே இருந்த டாக்குத்தரிட்ட காட்டினனான். அவர் சொல்லுறார், உந்த ரெஸ்ருகளை நம்பேலாது. இப்படியான சோதனைக்கு ஒரு எம்.எல்.ரி. தேவை. அவர் சைன் பண்ணாட்டி நாங்கள் அந்த ரிப்போட்டுகளை எப்படி நம்புறது. யாரோ ஒருத்தர் தகுதியில்லாதவர் சோதினைகளை செய்து போட்டு ''குயிக்கா'' சைன் வைச்சுத் தாறார். நாலிடத்தில விசாரிச்சு உந்த இரத்தம்,சலம் ,மலம் இருதயம், எல்லாத்தையும் சோதிக்கக் குடுக்க வேணும் என்றார்.

எனக்கு திக்கென்று போட்டுது. அவன் பாவி தானே இத்தின வருசமா அதுவும் ''குயிக்கா'' யாழ்ப்பாணத்தில எங்கட மலம்,சலமெல்லாம் சோதிக்கிறவன். அவனுக்கு என்ன தகுதியிருக்கென்று அவர் கேட்டாப்பிறகு, நான் கேட்டன் ''டொக்டர் எந்த இடத்தில சோதிச்சா நல்லது ?'' என்று. உடன சொன்னார் இங்க சுகர்னியில அங்க டேடர்சில, ஆசிரியில என்று.. சரியென்று தலையாட்டிப் போட்டு வந்திட்டன். பிறகு இதை நான் என்ர சினேகிதமொன்றிட்ட வந்து சொன்னன். உடன அவன் சொன்னான். அந்தாள் தான் நடத்திற இடத்தின்ர வியாபாரத்துக்காக தான் அப்படிச் சொல்லியிருக்கும். எல்லா இடமும் ஒரே லெவல்ல தான் சோதிப்புக்கள் இருக்கும் என்றான். பாருங்கோ பிசினஸ் எங்கெல்லாம் புகுந்து எப்படி ஆட்டிப் படைக்குது. சோதிக்க சொல்லுறவனில இருந்து சோதிக்கிறவன் வரை பம்மாத்தென்றால் நாங்கள் நடுத்தெருவில தான் என்றபடி மரவள்ளிக் கிழங்கொன்ற எடுத்துக்கொண்டு சிவக்கொழுந்து போக நான் மெல்ல சந்திப்பக்கம் நழுவினன்.

இந்த கோதாரிகளைக் கேட்டு சுறுக்கென்று தலைக்கு ஏறின பத்தத்தை இறக்கி வைக்க அதை விட நல்ல இடம் வேறென்ன இருக்க முடியும். அங்க சந்தியில இருந்து பாருங்கோ சற்று நின்று நிதானமா காதக் கொடுத்தன். கதிரண்ணைதான் சத்தமா சொல்லிக் கொண்டிருந்தார். உவங்கள் பக்கத்து வீட்டு அறுவார் இந்த நேரத்தில ஏன் வந்து போனவங்கள்.உந்த கிழட்டான் நாடு சுக்கு நூறா உடைஞ்சால் தான் எங்களுக்கு நிம்மதி வரும் போல என்றார். இதைக் கேட்டுப்போட்டு நான் சொன்னன் ஏன் நெடுகலும் அவங்களைத் திட்டுறதை விட்டுட்டு நல்ல விதமாகவும் பார்க்கப் பழக வேணும். இதைக் கேட்டுட்டு உடன நடேசண்ணை சொன்னார் சோமண்ணையும் கட்சி மாறிட்டாரோ? சாதகமா பார்க்க வேணுமென்றிறார் எங்கட தியட்டர்காரர் சொல்லுறது போல கிடக்கு என்றார். அப்ப கூட்டமைப்புக்காரர் போல பக்கத்து வீட்டு பெரியண்ணாக்கள நம்பினாச் சரியோ என்று பதிலிக்கு நான் நக்கலா கேட்க எல்லாரும் குப்பென்று சிரிச்சுப் போட்டினம்.

இங்க வந்து போன பக்கத்து வீட்டு பெரியண்ணைமார் கூட்டத்தில தமிழ்நாட்டுக்கு பக்கத்து வீட்டு ஜென்மத்து பகையாளிகள் தானாம் அதிகம் இருக்கினம். புலியள அழிக்கிறமென்று போட்டு சனத்த அழிக்கிறதுக்கான உயர்மட்டக் நடவடிக்கைக் குழுவில உவங்கள் தானாம் இருந்தவங்கள். இது கதிரண்ணையின் தகவல்; ஜெ பொருளாதாரத் தடை கொண்டு வர வேணுமென்று தீர்மானம் நிறைவேற்றின கையோட உந்தக் கூட்டம் இங்க வந்திருக்கென்றா ஏதோ எங்கள அழிக்க புது சதி தீட்டுறாங்களென்று தான் அர்த்தமா இருக்கும்என்று நான் சொல்ல உந்த பிரித்தானியாக்காரன் ஆவணப்படத்தை ஒரு பக்கம் காட்டிப்போட்டு பெடிபெட்டையளப் பிடிச்சு இஞ்ச அனுப்புறாங்கள் என்றார் பெஞ்சனியர். எல்லாரும் சேர்ந்து கூட்டுச் சதிதான். நாங்கள் தான் நப்பாசையில இருந்து ஏமாந்து போறம் பாருங்கோ என்றார் கம்பஸ் வாத்தியார். உதுகளையெல்லாம் பார்க்காமல்,கேட்காமல் பேசாமல் இருந்தா நிம்மதியா இருக்கும். கண்துடைப்புக்கு கன காரியம் பண்ணப்போறதா கதைவிட்டு உந்த கூட்டங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொண்டு அலுவலும் பார்த்துக் கொண்டு போய் சேர்ந்திடும் என்றார் கந்தையர். ஓம் ஓம். நாங்கள் அணிலேற விட்ட நாயாட்டம் நாக்கத் தொங்கப் போட்டபடி இருக்க வேண்டியது தான் என்றபடி நான் எழும்பி வந்திட்டன். நின்றா வாயில என்ன வருமென்று தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் கூட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களைச் சந்திப் பதற்கு முன்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து அளவெட்டிச் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்திருந்தார்.

பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அளவெட்டிச் சம்பவம் யாரால், எதற்காக மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸாரும் இராணுவப் பொலிஸாரும் விசாரித்து வருகின்றனர்.

கொழும்பிலேகூட சில தேவையற்ற சக்திகள் இயங்குகின்றன. அவ்வாறே யாழ்ப்பாணத்திலும் சில சக்திகள் இயங்கக்கூடும். அதனை நான் முற்றாக நிராகரிக்க முடியாது. ஆனால், இராணுவத்தினருக்கு அரசியலில் எந்த நாட்டமும் இல்லை.

மக்களைப் பாதுகாப்பதுதான் எமது நோக்கம். அதற்காகத்தான் நாம் வாழ்வாதார உதவிகளைக்கூட அவர்களுக்கு ஏற்படுத்தித் தருகின்றோம்.

இராணுவ நகரமாக யாழ்ப்பாணம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் படையினரைக்கூட அகற்றி வருகிறோம். இருந்தாலும் சில பாதுகாப்பு நடைமுறைகளுக்காக அவர்களைப் பணியில் இருத்த வேண்டியுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகள் சுமுகமாகவும் சுதந்திரமாகவும் நடக்க நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். அளவெட்டிச் சம்பவம் போன்ற ஒன்று இனிமேல் நடக்க இடமளிக்க மாட்டோம். அதற்கான உறுதிமொழியை நாம்வழங்குகின்றோம் - என்றார் அவர்.

(உ-ஐ)

## பதிவு நடவடிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குத் தாக்கல் செய்திருந் தனர். விசாரணையின் போது பொலிஸ் மா அதிபர், யாழ். படைகளின் தளபதி ஆகியோருக்காக நீதிமன்றுக்கு வந்திருந்த பிரதிச் சட்ட மா அதிபர், அனைத்துப் பதிவுகளையும் நிறுத்துவதாக உறுதி அளித்திருந்தார்.

அதனை அடுத்து குடாநாட்டில் ஆள்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளைப் படையினர் நிறுத்தி இருந்தனர். ஆனால், கடந்த ஓரிரு வாரங்களாக மீண்டும் இந்தப் பதிவு நடவடிக்கைகள் வீடு வீடாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதற்கும் கடும் எதிர்ப்புக் கிளம்பி இருந்தது.

இந்த நிலையில், நேற்று யாழ். நகரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து கட் டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்து ருசிங்க, பதிவுகள் உடனடியாக நிறுத்தப் பட்டன என்று அறிவித்தார்.

"கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதன் அடிப்படையில் பதிவுகளை உடன் நிறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவு உடனடியாகவே நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது'' - என்று தெரிவித்தார்.

உயர் நீதிமன்றம் ஏற்கனவே வழங்கியுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படாததன் காரணத்தாலேயே அதனை நிறுத்துவதற்குப் படையினர் முடிவு செய்துள்ளனர்.

விரைவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதால், படையினர் தமக்குத் தேவையான விவரங்களை அதிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-ஐ)

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலைகளால் இந்த மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையின் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்த வழக்கில் பிரதி வாதியாக குறிப் பிட்டுள்ளனர்.

ரஜிஹர் மனோகர் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருமலையில் கொல்லப்பட்ட மாணவர்களில் ஒரு வராவார். ஆனந்தராஜா 2006 ஜூன் மாதம் மூதூரில் கொல்லப்பட்ட பட்டினிக்கு எதிரான அமைப்பு நிறுவனத்தின் ஊழியர்கள் 17 பேரில் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரி.தவராஜாவின் குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மோதல் தவிர்ப்பு வலயத்திலிருந்த பதுங்குக் குழியொன்றில் வீழ்ந்த எறிகணையினால் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1,000 கடாக்கள் வெட்டிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்தமாக 1050 கடாக்களும் நூற்றுக் கணக்கான கோழிகளும் ஆலய முன்றலில் வெட்டிச் சரிக்கப்பட்டமையை, ஆயிரக் கணக்கானவர்கள் ஆர்வத்துடன் முட்டி மோதிக்கொண்டு பார்வையிட்டனர்.

கவுணாவத்தையில் வெட்டிச் சரிக்கவென, குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான ஆடுகள் பெரும் சோடனைகளுடன் டிராக்டர்களிலும் லான்ட் மாஸ்டர்களிலும் கொண்டு வரப்பட்டன. மேளதாளங்களுடனும், வெடி ஆரவாரங்களுடனும் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கடாக்கள் வந்தன.

தெல்லிப்பழை, கருகம்பனை, கவுணாவத்தை வைரவர் ஆலயப் பொங்கல் மற்றும் மடைத் திருவிழா நேற்று நடைபெற்றன.

ஆலயம் அமைந்துள்ள பகுதி இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்திருந்ததால், இதுநாள் வரை அங்கு கடாக்களை வெட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. எனினும் படையினரிடம் அனுமதி பெற்று ஒரு கடாவை மட்டும் ஆலய முன்றிலில் வெட்டிய பின்னர், ஏனையவற்றைத் தனியார் காணி ஒன்றில் வைத்து வெட்டி வந்தனர்.

இம்முறை ஆலயத்துக்குச் செல்ல அனைவருக்கும் இராணுவத்தினர் அனுமதி வழங்கியமையைத் தொடர்ந்து ஆயிரம் கடாக்களும் ஆலய முன்றிலிலேயே வெட்டிச் சரிக்கப்பட்டன.

வெட்டிச் சரிக்கப்பட்ட கடாக்களை உணவுக்காக வாங்கிச் செல்வதில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்தவர்கள், நீயா நானா என்று போட்டியிட்டனர். முதலாவதாக வெட்டிச் சரிக்கப்பட்ட கடா ஒரு லட்சம் ரூபாவுக்கு விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிருடன் 3 லட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்டு ஆலய முன்றிலில் வெட்டிச் சரிக்கப்பட்ட ஒரு கடா, ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு விற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்தில் வெட்டிச் சரிப்பதற்காகக் கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக வளர்க்கப்பட்ட கடாக்கள் நேற்றுமுன் தினம் இரவு இளவாலை வடக்குப் பகுதிகளான சித்திரைமேழி, வித்தகபுரம், ஆலடி, பன்னாலை, கருகம்பனை, தெல்லிப்பழை, கீரிமலை ஆகிய இடங்களில் வர்ண மின் விளக்குகளால் சுற்றிவர அலங்கரிக்கப்பட்ட இடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பின்னர் அவை டிராக்டர்கள், லான்ட் மாஸ்டர்களில் ஏற்றிச் செல்லப்பட்டு நேற்றுக் காலையில் கவுணாவத்தை ஆலய முன்றிலில் வெட்டிச் சரிக்கப்பட்டன. (உ-த-86-38)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வீடு கொளுத்தும் இராசாவுக்கு கொள்ளி கொடுக்கும் மந்திரிகளாக...

முப்பது வருட காலப் போரில் எல்லாத்துறைகளிலும் பல வழிகளாலும் சீரழிக்கப்பட்டவை வடக்கு, கிழக்கு மாகாணங்களே. கிழக்கில் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் போர்க்காலப் பாதிப்பு ஒப்பீட்டளவில் குறைவு என்று குத்துமதிப்பாகக் கொள்ளலாம். அந்த மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் போரின் பாதிப்புகள் அதிகம். அதனால் ஏற்பட்ட சீரழிப்புகளும் மிகஅதிகம்.

ஆனால் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு மாகாணத்தில் போரூடு விளைவிக்கப்பட்ட பேரழிவுகள், நாசங்கள், அட்டூழியங்கள் சொற்களில் வடிக்க முடியாத, அடக்க முடியாத அளவுக்கு பரிமாணங்கள் பலவாகவும் பாதிப்புகள் எண்ணில் அடங்காதவையாகவும் உள்ளமையை எவரும் மறைக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

வடக்கு மாகாணத்தின் போரின் நடுவன் அங்கங்களாக மாற்றப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் பூண்டோடு நாசமாக்கப்பட்டன. அயலில் உள்ள மன்னார், வவுனியா மாவட்டங்களும் சராசரி மட்டத்துக்கு அழிவைக் கண்டவை. இறுதிப்போர் நடத்தப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களோடு ஒப்பிடும் போது, யாழ்ப்பாண மாவட்டத்தின் அழிவுகளும் பாதிப்புகளும் சராசரி மட்டத்துக்குச் சற்று உயர்ந்தன எனலாம்.

இறுதிப்போரின் போது மனிதாபிமானத்துக்கும் மனித நீதிக்கும் அப்பாற்பட்ட அட்டூழியம் கோரத்தாண்டவம் ஆடிய கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை முந்தைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு, மீளக் கட்டியெழுப்புவதற்கு ஆகக்குறைந்தது இரண்டு தசாப்தங்களாவது தேவை. மீள்கட்டமைப்பும் அபிவிருத்தியும் காண்பதற்கு அந்த இரண்டு மாவட்டங்களையும் சேர்ந்த மக்கள் எத்தனை ஆண்டுகளுக்குக் காத்திருக்க வேண்டும், பொறுத்திருக்க வேண்டும் என்பதனை எந்த நிபுணராலும் சரியாக நிர்ணயிக்கவோ எதிர்வு கூறவோ இயலாத நிலை.

ஆனால், அந்த இரண்டு மாவட்டங்களையும் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தித்துறைகளில் புறக்கணிக்கும், ஓரம் கட்டும் அநியாயமும் அதிகாரத்தனமும் முகிழ்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இதுவே ஆரம்ப வேளையாக இருப்பதால், இங்கே சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் உள்ளூர்சேவை மேம்படுத்தல் திட்டம் ('நெல்சிப்') ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மூன்றாண்டு காலத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 86 மில்லியன் அமெரிக்க டொலர்களை (9.42 பில்லியன் ரூபா) ஒதுக்கீடு செய்துள்ளது.

வடமாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி முறைப்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் -

வீதி, பாலம், சந்தை, பொதுநோக்கு மண்டபம், சனசமூக நிலையங்களின் கட்டுமானம், பொது அமைப்புக் கட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் அவசிய வேலைத்திட்டங்களுக்கு எனப் பயன்படுத்தப்படும் என்பது பிரகடனப்படுத்தப்பட்ட விதிமுறை.

ஆனால், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு போரினால் பேரழிவு கண்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள மொத்தம் எட்டு உள்ளூராட்சி சபைகளில் எதற்குமே நிதிஒதுக்கீடு செய்யவில்லை என்று அப்பகுதி மக்கள் குறைப்படுகிறார்கள். முறைப்படி, நீதியின் பிரகாரம் அந்த இரண்டு மாவட்டங்களுக்குமே முன்னுரிமை வழங்கியிருக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் ஏனைய மூன்று மாவட்டங்களுக்கும் 'நெல்சிப்' முதல் கட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டதை எவரும் குறை காண முடியாது. ஆனால் பேரழிவைக் கண்ட - இல்லை இல்லை- முழு அழிவு கண்ட- கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் தலா நான்கு உள்ளூராட்சி சபைகளில் ஒவ்வொன்றுக்கேனும் நிதி உதவி ஒதுக்காதது ஏன் என்ற அந்த மாவட்ட மக்களின் நியாமான கேள்விக்கு பதிலளிப்பது யார் பொறுப்பு?

தர்மத்தின் வழி நின்று, மனித நியாயத்தின் செல்நெறியைப் பின்பற்றி, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களின் மீள் வாழ்வுக்கு உதவ வேண்டிய தமிழ் அதிகாரிகள், அவ்வாறு செயற்படாமையை, அவர்கள் தமது சொந்த மக்களுக்கு, தமிழ் உறவுகளுக்குக் கைகொடுக்காமையை 'துரோகம்' என்ற சொல்லுக்குள் அடக்குவதில் தப்பு எதுவும் இல்லை.

கணிப்பீட்டு சபை அறிக்கை, வருமான விவரத் திரட்டு, கணக்காய்வாளர் அறிக்கைக்கு பதிலிறுக்காமை, ஐந்தொகை கணக்கீடு ஆகியன இரண்டு மாவட்டங்களிலும் உரிய வகையில் பேணப்படாத காரணத்தினாலேயே 'நெல்சிப்' உதவித் திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் போரினால் அடிமட்டத்துக்கு அடித்து வீழ்த்தப்பட்ட சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் மேம்படுத்தல் திட்ட நிதி ஒதுக்கீடு செய்ய முடியவில்லை என நொண்டிச் சாட்டுக் கூறும் வேளை அல்ல இது!

உள்ளூராட்சிச் சபைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் போரின் உச்சத்தில் தமது உயிரைக் காப்பாற்றவும், குடும்பங்களையும் உறவுகளையும் காப்பாற்றவும் துடித்து, உணர்வுகள் இழந்த இக்கட்டான நிலையில் இருந்த உள்ளூராட்சி சபை அதிகாரிகளும் மனிதர்களே. அதனை உள்வாங்கி, அவர்களுக்கென விதி விலக்கு முறையைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பை அதியுயர் அதிகாரிகள் தமது கைகளில் எடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வந்திருக்கலாமே? அது அவர்களால் இயலாமற் போனது ஏனோ?

சர்வதேச நிதி நிறுவனம் வழங்கும் நிதியில் ஒவ்வொரு சதமும் போரினால் அழிந்துள்ள எமது பிரதேசங்களுக்கும் எமது உறவுகளுக்கும் பயன்தர வேண்டும் என்ற பெருமனது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வராதது ஏனோ?

அவரவர் தத்தமது நலன்களைப் பேணுவது தப்பென்று நாம் சொல்லவில்லை. ஒரு துளி மனித நேயமும், மக்கள் நலனும் சேராமல் செயற்பட முன்வராதவர்கள்- அரச உயர் பதவிகளில் இருப்பவர்கள்- வீடு கொளுத்தும் இராசாவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கும் அமைச்சர்களாக, எங்கள் உயர் அதிகாரிகள் விளங்கும் வரை, எமது மக்களுக்கு மீட்சி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது துர்லபமே.

# முகாம்களில் உள்ளவர்களைக் குடியமர்த்த கோம்பாவில் பகுதியில் 600 ஏக்கர் காணி

## துப்புரவு செய்யும் பணிகள் படுவேகமாக

யாழ்ப்பாணம், ஜூன் 19

வவுனியாவில் உள்ள அகதிமுகாம்கள், நலன்புரி நிலையங்கள் அனைத்தும் விரைவில் மூடப்படவுள்ளதால் இந்த முகாம்களில் வசித்துவரும் குடும்பங்கள் வேறு இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதற்கான சகல ஒழுங்குகளையும் துரிதமாக மேற்கொண்டுவரும் அரசு முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள கோம்பாவில் என்னும் இடத்தைத் தெரிவுசெய்து அங்கு இதற்கென 600 ஏக்கர் காணியை ஒதுக்கியுள்ளது.

இறுதி யுத்தம் காரணமாக சொந்த வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து அடிப்படை வசதியின்றி முகாம்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களை மீள்குடியமர்த்துமாறு இந்தியா உட்பட வெளிநாடுகள் கூறிவருவதுடன் பலவிதமான அழுத்தங்களையும் கொடுத்து வருகின்றன. இரு வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து முகாம்களில் மக்களை வைத்திருப்பது சர்வதேச மட்டத்தில் அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தி வருகின்றது.

வன்னிப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படாததினால் இடம்பெயர்ந்த மக்களை அங்கு சொந்த இடங்களில் குடியமர்த்த முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் முகாம்களில் எஞ்சியுள்ள மக்களை வேறு ஓர் இடத்தைத் தெரிவு செய்து அங்கு மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள கோம்பாவில் என்னும் காட்டுப்பகுதியைத் தெரிவு செய்து அரசு 600 ஏக்கரை இதற்கென ஒதுக்கியுள்ளது. தற்பொழுது இப்பிரதேசம் வேகமாகத் துப்புரவு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது (த-115)

# கொழும்பு-தூத்துக்குடி விமான சேவையை விஸ்தரிக்கத் திட்டம்

## ஆனால் கப்பல் சேவை பாதிக்கப்படலாம் என்று அச்சம்

கொழும்பு, ஜூன் 19

கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த இரு இடங்களுக்கும் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் மற்றும் மிஹின்லங்கா நிறுவனங்கள் விமான சேவையையும் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளன. இது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கப்பல் சேவையை பாதிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் அடுத்த மாதம் 4ஆம் திகதியும், மிஹின்லங்கா மிக விரைவிலும் தமது விமானசேவையை கொழும்பு - தூத்துக்குடிக்கு விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை இவ்விடங்களுக்கான விமானப் பயணத்தைப் பாதிக்காது என்றும் விமானப் பயணத்துக்கான தேவை அதிகரித்துக்கொண்டு வருகின்றது என்றும் விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால், கொழும்பு - தூத்துக்குடிக்கான விமானசேவையை மேலும் விஸ்தரிப்பதன் மூலம் தற்போதைய கப்பல் சேவைக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்று கருத்துக் கூறப்படுகின்றது.

கொழும்பு - தூத்துக்குடிக்கான விமான் சேவையில் வாரந்தோறும் 10 விமானங்களை ஈடுபடுத்தியுள்ள எயார்லைன்ஸ் நிறுவனம் ஜூலை 4ஆம் திகதி முதல் 13 விமானங்களை ஈடுபடுத்தும் என்ற இந்த நிறுவனத்தின் திருச்சிக்கான முகாமையாளர் அஹம்மட் மஸாஹூம் கூறியுள்ளார். (சி)

# வடக்கில் இராணுவ ஆட்சி தான் என்பதை அளவெட்டித் தாக்குதல் உணர்த்துகிறது

## புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடபகுதியில் இராணுவத்தினரே சகலவற்றையும் தீர்மானிப்பவர்களாக உள்ளனர். அளவெட்டியில் இடம்பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் மீதான தாக்குதல் சம்பவம் இதனையே எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி இந்தச் சம்பவம் குறித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இராணுவத்தினரின் விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையிலேயே இங்கு யாரும் எதனையும் செய்யமுடிகிறது. அதற்கு அப்பால் ஜனநாயகம், சுதந்திரம்,இயல்பு வாழ்வு என்பதெல்லாம் செல்லாக்காசாகி விட்டன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கை, செயற்பாடுகள் பற்றிய நிலைப்பாட்டில் எமது கட்சிக்கு எதுவித உடன்பாடும் கிடையாது. அதேவேளை அந்தக் கட்சியினருக்கு உள்ள ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தக் கூட்டத்தை இராணுவத்தினர் அடாவடித்தனமாகத் தாக்குதல் நடத்திக் கலைப்பது என்பது வடக்கு-கிழக்கில் இராணுவத்தினரின் ஆதிக்கத்தையும், ஜனநாயக விரோதத்தையும் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

தேர்தல், வாக்குச் சேகரிப்பு, ஆசனங்கள், பதவிகள் என்பவற்றுக்கு அப்பால் சகல ஜனநாயக முற்போக்கு இடதுசாரி சக்திகளும் ஒன்றிணைய வேண்டும். இதன் மூலம் வடக்கு -கிழக்கில் ஜனநாயகம், சுதந்திரம், இயல்பு வாழ்வு, அரசியல் தீர்வு ஆகியவற்றை வென்றெடுப்பதற்கான ஒரு பொது இணக்கப்பாட்டின் கீழ் செயலாற்ற முன்வரல் வேண்டும் என்றுள்ளது. (த-4)

# தேர்தல் பாதுகாப்பு நடைமுறை தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 19

அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர், அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் , கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி கலந்து கொண்டு பாதுகாப்பு நடைமுறை தொடர்பாக விளக்குவார்.

(த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் வெற்றிடம்

எமது நிறுவனத்துக்கு கணக்காய்வாளர்கள், கணக்குத் தெரிந்தவர்களும் விற்பனையாளர்களும் தேவைப்படுகின்றனர். தொடர்புகளுக்கு கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்குத் தங்களது விவரங்களைத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: பெண்கள் விரும்பத்தக்கது.

முகாமையாளர்,
வீ.ஆர்.ரி கட்டடம்,
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.

# இணுவில் சிவனின் இறுவட்டு வெளியீடு

வலி.வடக்கு, ஜூன்.19

இணுவில் காரைக்கால் சிவன் கோயில் மீது தென்னிந்திய கலைஞர்களினால் பாடப்பட்ட இறுவட்டு வெளியீடு இன்று இரவு 7 மணிக்கு இணுவில் கந்த சுவாமி கோயில் ஆலய மண்டபத்தில் யோ.சுதந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிக பீடப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

தென்னிந்திய இசைக் கலைஞர் முகேஷின் இசை நிகழ்வும் இங்கு இடம் பெறவுள்ளது.

(த-86)

## தேவை

ரைப் செற்றிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. பயிலுனரும் தேவை. நேரில் வரவும். நேரம்:- 3 pm - 5pm
(கிழமை நாள்களில்)
ஐங்கரன் ஒவ்செற்
சிலையடி, மந்திகை. T.P- 0212263641

## குத்தகைக்கு

ஆரியகுளம் சந்தி புத்த விகாரைக்கு முன்பாக உள்ள அரிவுப் பட்டறை குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

0778175926

## இணையத்தள வடிவமைப்பு

நியாயமான கட்டணத்துடன் தரமான இணையத் தளங்கள் வடிவமைத்துத் தரப்படும்.

**UNLIMITED HOSTING**

Unlimited Space
Unlimited Bandwidth
Host Unlimited Domains
Unlimited Email Accounts
cPanel unique control panel
cPanel
5000/= Per Year

**BASIC WEB HOSTING**

500 MB Space
Host Unlimited Domains
Unlimited Email Accounts
cPanel unique control panel
750/= Per Year

எமது பாடநெறிகளைப் பயிலும் அனைவருக்கும்

Free) Domain Name, Web Hosting, Website Templates and Scripts

## இணையத்தள கற்கைநெறிகள்

இணையத்தள வடிவமைப்புத் துறையில் நீண்டகால அனுபவம் உள்ளவர்களால் உங்களுக்கு 100% திருப்தி அளிக்க கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகள். சான்றிதள்களுக்காக மட்டுமோ, பரீசைகளை மட்டும் இலக்காகக் கொண்டோ வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டம் அன்று. தொழில் ரீதியான [Professional ] இணையத்தளங்களை வடிவமைப்பதில் வல்லுனராக விரும்புபவர்களுக்கு சர்வதேசரீதியில் தொழில்ரீதியான இணையத் தளங்களை வடிவமைப்பவர்களால் போதிக்கப்படும் கற்கைநெறிகள். தனிப்பட்ட வகுப்புக்களும் உண்டு.

- Professional Web Designing
- Professional Web Development
- Web-Based System Development

இணையத்தள வடிவமைப்புத் துறை மிகவும் பரந்தது. அதிக வேலை வாய்ப்புக்களை உடையது, அதிக வருமானம் தருவது, கற்பதற்கு இலகுவானது. மேலதிக விபரங்களுக்கு நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

webster networks
MAKING DREAMS REALITY

இல 2/4, யாழ்-மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
[வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அருகில்]

www.websternetworks.lk 021 222 0261, 0779 471 771

# உணவுப் பதார்த்தங்கள் ஆராய்வுக்காக கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட நகரப்பகுதிகளின் விற்பனை நிலையங்களில் இருந்து ஐஸ்கிறீம், ரொபி, தேன், நல்லெண்ணெய், மிளகாய்த்தூள், இனிப்பு வகைகள் போன்றவைகள் யாழ். மாநகர சுகாதாரப் பரிசோதகர்களால் எடுக்கப்பட்டு கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உணவு மாதிரிகளின் சுகாதார நிலைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ம-7)

## முன்பள்ளி ஆசிரியர்கள் தேவை


எமது முன்பள்ளிக்கு பயிற்றப்பட்ட ஆங்கிலம், தமிழ் கற்பிக்கக் கூடிய தகுதியான ஆசிரியர்கள் தேவை.
தொடர்பு- 0779122918
Muthuram Kids, Kaddapirai

## முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்த் தாங்கி மற்றும் கட்டட நிர்மாண உப ஒப்பந்தக்காரர்கள் தேவை.

நீர்த்தாங்கி மற்றும் கட்டட நிர்மாண முன் அனுபவம் உடையவர்கள் (கொங்கிறீட், சட்டரிங், கம்பி, மேசன், வேலை) பொருத்தம்.
செலவுப்பணமும், தங்க இடமும் தரப்படும்.

தொடர்பு-
Squire Mech Engineering (pvt) Ltd.
135/1, Old Kottawa Road,
Nawinna,
Maharagama.
Tel No: 011-2839678 / 011-4306501-2/4
Fax No: 011-2851069 / 011-2851199

உ
சிவமயம்



இணுவில் கோண்டாவில் காரைக்கால் பதியுறை

திருவருள்மிகு விசாலாட்சியம்மை சமேத விஸ்வநாதஸ்வாமி திருக்கோயில்

புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**நாள் : 19.06.2011 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : காலை 10.36 மணி முதல் 11.36 மணிவரை**

**பிள்ளையார் துதி**
மதலத்து மகிமை கொள் ஆலயம்
வேதநூல் துணையாக விரித்திட
ஆதரித் தொ டருள்தர வாரணன்
பாதபத்மம் பரவி பணிகுவாம்

**சிவன் துதி**
நாலுதிசை முகமும் நண்ணுதலும் மேலுமொரு
கோலத் திருமுகமும் கொண்ட - சால
உருத்திர கோலத்துடனே காரைக்கால் பதிதனிலே நீண்டு வந்த
பருத்த திரு முகலிங்கம் பார்

**முருகன் துதி**
புல்லினால் வருடம் கோடி புதுமண்ணால் நூறு கோடி
துல்லிய செங்கல்லாலே தூய முந்நூறு கோடி
அல்லியங் கோதே கேளாய் அருந்தரும் ஆலயங்கள்
கல்லினால் அமைத்த பேர்கள் கைலை வைகுந்தம் மீந்தார்.

அடியார்களே!

ஈரேழு பதினான்கு உலகங்களுள் அனைத்து ஜீவராசிகளும் அன்புப் பெருக்கோடு வாழும் இப்பூதலத்துள் பஞ்சகண்டங்களுள் பரதன் ஆண்ட பாரத கண்டத்தின் பால் இந்து சமுத்திரத்தின் முத்தென மிளிரும் ஈழவள நாட்டின் சிரமென விளங்கும் யாழ்ப்பாணத்தில் கமமும், கலையும், கல்வியும் ஒருங்கமைந்து சிறப்புற்று ஓங்கும் இணுவில் கோண்டாவில் கிராமந்தனில் புனித மரச்சோலையமைத்து புண்ணிய சித்தர் வாழ்ந்து நாடிய அன்பர் பிணி தீர்த்து சித்தி சொரிந்த காரைக்கால் பதி தன்னில் ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரு ஜோதியாகிய சிவன் ஆன்மாக்கள் மீது கொண்ட அருட்பெருங்கருணையினால் சத்யோத்ஜாதாதி பஞ்சமுகங்களோடு மகாலிங்க உருவத் திருமேனிச் சிறப்போடு ஸ்ரீ விசாலாட்சியம்பிகா சமேத விஸ்வநாத சுவாமி என்னும் திருநாமம் தாங்கி அருளாட்சி புரியும் புராதன க்ஷேத்திரத்தில்!

நிகழும் மங்களம் மிகு கர வருஷம் உத்தராயணம், கிரீஷ்ம ருது, மிதுனமாதம் 4 ஆம் நாள் (19.06.2011) பானு வாரம், சதுர்த்தி திதியும், திருவோண நக்ஷத்திரமும் அமிர்த யோகமும் கூடிய காலை 10.36 மணிமுதல் 11.36 மணிவரையுள்ள சிங்க லக்ன சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமிக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு திருவருள் கைகூடியுள்ளது. அடியார்கள் யாவரும் இப்பெருவிழாவில் கலந்து சரியைத் தொண்டாற்றி எம்பிரானின் திருவருட் கோலத்தைத் தரிசித்து போற்றி வழிபாடாற்றி வாழ்வில் இகபர சுகங்கள் பெற்றுய்வீர்களாக!!



"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும் .**



யாழ். நகரில் முதன் முறையாக
CAUSEWAY Colour box
மூலம் வர்ணந்தீட்டப்பட்டு காட்சி தரும் கோயில்.

ralston from the Netherlands
The Colour box Tinting System




Manufacturd By:
15, Noel Mendis Mawatha, Moderawila Industrial Estate, Panadura, Sri Lanka.
Tel : (94) 038 - 2240040, Fax : (94) 038 - 2240046, E-mail : luxury@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அரச வேலைக்கான நேர்முகத் தேர்வு

## எப்படி நடத்த முடியும் எனக் கேள்வி

யாழ்ப்பாணம்,ஜூன் 19

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் அரச வேலைவாய்ப்புக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவருகிறது.

இதனை எப்படி நடத்த முடியும் எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

தேர்தல் காலங்களில் அரச வேலை வாய்ப்புக்கு விண்ணப்பம் கோருதல், நேர்முகப்பரீட்சைகள் நடத்துதல், நியமனங்கள் வழங்குதல், பதவி உயர்வு வழங்குதல், சம்பள உயர்வு வழங்குதல் என்பன தேர்தல்கள் சட்ட விதிமுறைகளுக்கு முரணானது எனத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தக் காலப் பகுதியில் வழங்கப்படும் நியமனங்கள் செல்லுபடியற்றவை. இவற்றை வழங்குவதற்கும் சட்டத்தில் இடமில்லை.

இந்த நிலையில் நேர்முகப் பரீட்சைகளை எப்படி நடத்த முடியும் எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் மகளிர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுவருகிறது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் உள்ளூராட்சித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னரே அனுப்பப்பட்டுள்ளன. ஜூன் இரண்டாம் திகதியிடப்பட்டு விண்ணப்பதாரிகளுக்கு இந்த அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மகளிர் விவகார, சிறுவர் பராமரிப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தலைமையில் இந்த நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

நேர்முகப்பரீட்சை நடத்துவதற்குத் தகுதியான சில உத்தியோகத்தர்கள் தெரிவு செய்து வழங்குமாறு அமைச்சு என்னைக் கேட்டுக்கொண்டது.

அதன்படி எனது மாவட்ட செயலகத்திலிருந்து சில அதிகாரிகளைத் தெரிவு செய்து வழங்கியுள்ளேன். மற்றும்படி இந்த நேர்முகப் பரீட்சைக்கோ அல்லது இதன் நியமனத்துக்கோ எனக்குத் தொடர்பில்லை - என்றார். (த-02-14)

## 'நெல்சிப்' திட்டத்தில் வீதிகள் புனரமைப்பு

தென்மராட்சி, ஜூன் 19

சாவகச்சேரி நகரசபையால் மேற்கொள்ளப்படவுள்ள 'நெல்சிப்' செயற்றிட்டத்தின் கீழ் இரண்டு வேலைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் முதலாம் வட்டாரத்திலுள்ள மீசாலை மேற்கில் 1.3 கிலோமீற்றர் நீளமுடைய கேணியடி வீதி, நான்காம் வட்டாரத்திலுள்ள 1.1 கிலோமீற்றர் நீளமுடைய கல்வயல் இராமலிங்கம் பழைய பாடசாலை வீதி ஆகியவையே புனரமைக்கப்படவுள்ளன.

புனரமைப்பு வேலைகளில் அந்தப் பகுதி மக்களின் பங்களிப்பும் ஒரு பகுதியாக உள்வாங்கப்படவுள்ளதாக அந்தந்தப் பகுதி மக்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

கல்வயல் இராமலிங்கம் பழைய பாடசாலை வீதிபுனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை காலை கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்றது. (த-207)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 19

லண்டன் மெற்றோபொலிற்றன் கல்லூரியின் நிலையம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இல.197, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (த)

### நினைவாக...



உதவிடுவோம்: யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளோருக்கு கைதடி கிழக்கு இராஜபுரியைச் சேர்ந்த அமரர் நாகன் சின்னப்பெடியன் ஓராண்டு ஞாபகார்த்தமாக அவரது மனைவி திருமதி சி.செல்லம்மா பன்னிரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருள்கள் வழங்குகிறார். (த-388)

## ஒரே குடும்பத்தில் 3 பெண்கள் மோ.சைக்கிள் விபத்தில் காயம்

தென்மராட்சி, ஜூன் 19

வீதி வளைவில் மோட்டார் சைக்கிளை செலுத்திய வேளையில் அதன் சில்லு சறுக்கியதில் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மீசாலையில் இடம்பெற்றது.

சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த சிறிதரன் பிரியா (வயது-37), அவரது பிள்ளைகளான சி.ஸ்ரீஜெனா (வயது-21) சி.ஸ்ரீபிரியா (வயது 9) ஆகியோர் காயமடைந்தனர்.

இதேவேளை பளை, தர்மக்கேணியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் ஆனந்தராசா (வயது-33) என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிசிக்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ( த-207)

## யாழ்.வலயப் பாடசாலைகளிடையே அழகியற் போட்டிகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளிடையிலான சித்திர, சங்கீத, நடன, நாடக போட்டிகள் நாளை திங்கள்கிழமை முதல் தொடர்ந்து நான்கு தினங்கள் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இடம்பெறவுள்ளன.

சித்திரம், நடனம், ஆகிய போட்டிகள் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும், சங்கீத பாடம் யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியிலும், நாடகமும் அரங்கியலும் யாழ்.மத்திய கல்லூரியிலும் இடம்பெறும் என்று யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார். (ம-313)

### சட்டத்தரணிகளை வைத்து வழக்காட

## வசதியில்லா மக்களுக்கு உதவ சட்ட உதவி மன்றம் அமைப்பு

தென்மராட்சி, ஜூன் 18

நீதிமன்றங்களில் சட்டத் தரணிகளை வைத்து வழக்குகளை நடத்துவதற்கு வசதியில்லாத மக்களுக்கு உதவி செய்வதற்கென சட்ட உதவி மன்றம் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.

தென்னிலங்கைப் பகுதி நீதிமன்றங்களிலுள்ளது போன்று வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களில் சட்ட உதவி மன்ற அலுவலகங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அந்த வகையில் சாவகச்சேரி நீதிமன்றில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டு இந்த நீதிமன்றங்களுக்கு வரும் வசதியில்லாத மக்களுக்கு உதவி செய்ய மன்றம் தன்னாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இவ்வாறு சாவகச்சேரி நீதிமன்றுக்கு விஜயம் செய்த இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசரும், இலங்கை நீதிபதிகள் பயிற்சி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரும் சட்ட உதவி ஆணைக்குழுவின் தலைவருமாகிய நீதியரசர் என்.கே. உடலகம நீதிமன்றின் சட்டத்தரணிகள், உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் உரையாற்றுகையில்:

இந்தச் சட்ட உதவிகள் அனைத்து மக்களும் பெற்று நன்மையடைய வேண்டுமென்பதில் சட்ட உதவி மன்றம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சட்ட உதவிகள் பலப்படுத்தப் படுவதனால் அனைவருக்கும் நீதி, நியாயம் கிடைப்பதற்கு வழி ஏற்படுகின்றது.

மேலும் சட்ட உதவி மன்றத்தின் தலைவராக தான் நியமிக்கப்பட்டதனால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் விசேட கவனம் செலுத்தி மன்ற அலுவலகங்கள் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்- என்றார். ( ஒ-207)

### பாலியல் வன்புணர்வு வழக்கு; தொடர்ந்து சமுகம் தராத

## சந்தேக நபருக்கு பகிரங்கப் பிடியாணை; இரு பிணையாளரின் பிணைப் பணம் பறிமுதல்

தென்மராட்சி, ஜூன் 19

வழக்கு ஒன்றின் சந்தேக நபர் தொடர்ச்சியாக நீதிமன்ற தவணைகளுக்கு வராததால் அவருக்கு எதிராகப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் பிணையாளர்களிடமிருந்து தலா 25 ஆயிரம் ரூபா பிணைப் பணம் சவாகச்சேரி நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டு அரச உடைமையாக்கப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு வழக் கொன்றில் சந்தேக நபராக குற்றம் சாட்டப்பட்ட வரணி இடைக் குறிச்சியைச் சேர்ந்த நபரை தலா 25 ஆயிரம் பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல நீதி மன்றம் அனுமதி வழங்கியது.

பிணையில் சென்ற இவர் நீதிமன்ற வழக்குத் தவணைகளுக்கு வராததால் பிணையாளர் இருவரும் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டு பிணைத் தொகையாக குறிப்பிட்ட தலா 25 ஆயி ரம் ரூபாவை பணமாக செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

வரணி, கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த இளம் பெண்ணை பாலியல் வன்புணர்வுக்கு உட் படுத்திய சம்பவம் தொடர்பான இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. நேற்று முன்தினம் சந்தேக நபர் நீதிமன்றத்துக்கு சமுகம் தரவில்லை. அதனை அடுத்தே சந்தேக நபருக்கு எதிராக பகிரங்கப் பிடியாணை பிறப் பித்த நீதிவான் மா.கணேசராசா பிணையாளர்களைக் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன் பிணைப் பணமாக செலுத்தப் பட்ட தொகையைப் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

## மாவை கலட்டி மாணவருக்கு கற்றல் உபகரணப் பொதிகள்

யாழ்ப்பாணம் ஜூன் 19

வலி வடக்கில் 23 வருடங்களின் பின் மீளக் குடியமர்ந்த மாவை கலட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 62 மாணவர்களுக்கு யாழ்.எய்ட் நிறுவனம் கற்றல் உபகரணப் பொதிகளையும், பற்பசை, பற்றூரிகை ஆகியவற்றையும் வழங்கியுள்ளது.

கடந்த புதனன்று மாவை கலட்டி சனசமூக நிலையத்துக்கு அருகில் வைத்து இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட எல்.ஓ.எல்.சி. நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் இராமநாதன் நடராஜா இந்த உதவிப் பொருள்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் யாழ்.எய்ட் நிறுவன திட்டப்பணிப்பாளர் வ.பார்த்தீபன், திட்டஇணைப்பாளர் திருமதி தர்மினி றஜீவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய எல்.ஓ.எல்.சி.நிறுவன யாழ். கிளை முகாமையாளர் பிரதேசத்தின் 30 பெண்களுக்குத் தமது நிறுவனம் மூலம் சுயதொழில் கடன் வசதிகள் செய்து தரப்படுமென உறுதியளித்தார். (த-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலின்போது முற்றாக அழிவடைந்த நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயம் புனர் நிர்மாணத்தின் பின் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. ஆலய பிரதமகுரு சிவத்திரு மா.பத்மநாதன் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் இடம் பெறும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் மாலை 3 மணிக்கும் இடையில் எண்ணெய்சாத்தும் நிகழ்வு இடம்பெறும். நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

அன்றைய தினம் ஆலய புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்ட கலைமாணி க.இராசேந்திரன், விஸ்வகுலசிறி, க.சிவராசா, வே.இராஜ்குமார், சு.துவாரகன், ப.பகீரதன், க.நாகலிங்கம் ஆகியோருக்கு ஆலய பிரதமகுரு விசேட பட்டங்களை வழங்கிக் கௌரவிப்பார்.

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலய சிவஸ்ரீ சோம.சிவகுமார குருக்கள் ஆசியுரையை வழங்குவார். (ம-302)

## மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையினால் தரம் 5 புலமைப் பிரிசில் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆன்மிகச் சொற்பொழிவை யாழ்.சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய நிகழ்த்தவுள்ளார். (த-313)

### ஆசிரியர் தேவை

தரம் 6 இல் படிக்கும் மாணவனுக்கு ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு English Medium இல் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
தொடர்பு: 071 8946461

### மரண அறிவித்தல்

#### இராசேந்திரம் ஜெயக்குமரன்



கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம்- ஜெயக்குமரன் நேற்றுமுன்தினம் (17.06.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (17.06.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுவன் தெற்கு,
தெல்லிப்பழை. (சி/954)

தகவல்:
குடும்பத்தினர்.

### அட்சயா அழகுக் கலைப் பயிற்சியகம்

வீட்டில் இருந்தபடியே சம்பாதிக்க ஆசையா
சிறுகடை பார்லர் ஆரம்பிக்க வேண்டுமா?

(அரவிந் ஸ்ருடியோவுக்கு அருகில்)

* பேஷியல்- சில்வர், கோல்ட், வைற்றிங், புறுட், ஏ.எச்.ஏ கிளைக்கோலிக், பிளாட்டினம், இயற்கை மூலிகை பேஷியல், பேள் பேஷியல், அரோமா பேஷியல், ஸ்பைருலினா வீளிச்சிங், வக்ஸிங், திரட்டிங்.
* மேக்கப்- இந்து, கிறிஸ்தவ, சிங்கள, குஜராத், குப்தாஸ், மொடன், மடிசார், மணப்பெண் அலங்காரங்கள்.
* கெயார்ஸ்டைல்- 25 விதமான நவீன கொண்டைகள், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல், கெயா ட்ரீட்மென்ட்.
* பிளவுஸ் கட்டிங் (6), சாறிவேக் (6), வொக்கே (4). மேற்படி பயிற்சி நெறிகள் ஆரம்பம்.
* உடல் எடைகுறைக்கும் இயற்கை மூலிகை அடங்கிய பால்மா, எடை கூட்டும், ஒட்டிய கன்னங்களை மிக அழகாக்கும் குளிசைகள் பெற்றுக்கொள்ளலாம். இயற்கை மூலிகை பேஷியல் (பருக்கள், கறைகள், கருவளையங்கள் அகற்றும்) செய்துகொள்ளலாம்.
* ஒரிஜினல் வைற்றிங்கிறீம் விற்பனைக்கு உண்டு.
* றிச் கேக் ஒன்று 45/= மட்டுமே.

அட்சயா,
461, நாவலர் றோட், அத்தியடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
★0772106155
(4976)(39)

### வீடு விற்பனைக்கு

கோண்டாவில் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு. தனிக்கிணறு, 4 அறை, அற்றாச் பாத்றூம் றொயிலட், சுற்றிவர மதில் என அனைத்து வசதிகளுடனும் உள்ள வீடு.

தொடர்பு: 077 3273125, 0771023585

குறிப்பு: வாகனங்கள் நிறுத்தும் வசதியும் உண்டு. Store ஆகவும் பாவிக்கலாம்.

UK, USA, AUSTRALIA, CANADA, FRANCE, SWITZERLAND, NEW ZEALAND
ஆகிய நாடுகளிற்கான

### FINANCIAL SPONSORSHIP

(பண வைப்புகள்)
வங்கிகளினூடாக செய்துகொடுக்கப்படும்.

Arranging
STUDENT, DEPENDENT
Visa to UK

Racas Travels & Tours (Pvt) Ltd.
No. 7/1, W.A. Silva Mawatha, Colombo - 06.
Tel : 0773 152327 (சாரங்கநாதன்), 0778885903 (நிஸ்சினா) 011- 2583575,

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் (கடற்கரை) பொலிகண்டி கந்தவனக் கோவில் அருகாமையில் முப்பது பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு : 0775581639-0717563730

### WALK IN INTERVIEW

21.06.2011 (Tuesday)

சாவகச்சேரி மற்றும் நெல்லியடியில் அமைந்துள்ள
எமது கிளைகளிற்கு கீழ்க்கண்ட பணியிடங்களிற்கான
நேர்முகத்தேர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 9 A.M - 5:00 P.M வரை
யாழ் நகர் அலுவலகத்தில் நடைபெறும்.

**Course Counsellor - Female**

**Trainee Instructor- Male / Female**

**Computer Instructor - Male / Female**

The Applicant should posses 2 Passes in G.C.E. A/L.Recognized Computer Diploma, Fluency in English and ability to work as a team

மேற்கண்ட கிளைகளிற்கு
அலுவலக சுத்திகரிப்பாளரும் தேவை.

ASIAN COMPUTER EDUCATION
2G ,Stanley Road, Jaffna.T.P - 021-222-5677

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### முருகேசு இராசையா

பிறப்பு: 12.08.1926 இறப்பு: 20.05.2011

"கல்வியும் கருமம் பலவும் எமக்காற்றி
மும்மையும் எம்மை பேதித்து வளர்த்தெடுத்த
எம் தந்தையே நின்தன் திருவுடல் மறைந்து
திருநாள்கள் முபத்து கடந்தே என் செய்வோமே"

கடந்த 20.05.2011 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் தந்தை முருகேசு இராசையா அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டும் பல்வேறு உதவிகள் புரிந்தும் எமது துயரங்களில் தோள் கொடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறுகின்றோம்.

இன்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

களிகோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.
ஜேர்மனி: 00492267655249

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(39)(5001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பதை அழித்துவிட்டு எதை ஆய்வு செய்யப் போகிறார்கள்....?

தொல்பொருள் ஆய்வுகளும் நடவடிக்கைகளும் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் முனைப்புப் பெறத் தொடங்கியுள்ளன. கடந்த காலத்தைப் பொறுத்த வரையில் தமிழர்களின் வரலாற்றை உறுதிப்படுத்தும் தொல்லியல் ஆய்வுகள் கேள்விக் குறியாக இருந்தன.

கடந்த முப்பது ஆண்டு காலமாக அவர்களை விடாது துரத்திய யுத்தம் காரணமாக அவர்களின் உடைமையையும் உயிரையும் பேணிப் பாதுகாக்க ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அதற்கே நேரமும் சரியாக இருந்தது.

ஆனால் பெரும்பான்மையினரைப் பொறுத்தவரையில் புதிது புதிதாக மீட்கப்படும் இடங்களில் ஆலமரம், அரச மரங்களுக்குக் கீழ் தமது தொல்லியல் எச்சங்களைக் கண்டுபிடித்து அங்கு விகாரைகளை நிறுவிக் குடியேற்றங்களையும் ஏற்படுத்தி வந்தனர்.



ஆனால் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் யுத்தத்துக்கு முன்னதாகவும் அதற்கு மத்தியிலும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இந்தவகையில் 1917ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கந்தரோடைப் பகுதியில் போல் பீரிஸ் என்பவரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பின்னர் 1967ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் விமலாபேக்லா என்பவரால் கந்தரோடையில் மீண்டும் தொல்லியல் ஆய்வு நடத்தப்பட்டது. இதன்போது யாழ். குடாநாடு புரதான நகர மையமாகவும் குடியேற்ற நகரமாகவும் விளங்கியது என்பதற்கான சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**தமிழர் வரலாற்றை உணர்த்தும் சான்றுகள்**

இதன்பின்னர் 1980 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சிற்றம்பலம், பேராசிரியர் ரகுபதி ஆகியோரால் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இதன்போது தமிழர்களின் வரலாற்றை அதன் உண்மையை வெளிப்படுத்தும் சான்றுகள் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் பின்னர் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் தலை விரித்தாடிய கொடும் யுத்தம் காரணமாக தொல்லியல் ஆய்வுகள் மட்டுப்படுத்தப்பட்டன. ஆனாலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் இல்லை.

இதேவேளை, அண்மையில் கருத்துத் தெரிவித்த யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ஒருவரின் கருத்து தமிழ் மக்களின் நீண்ட வரலாற்றுத் தொன்மையை உள்ளங்கை நெல்லிக்கனி போல் வெளிப்படுத்துகின்றது. அதாவது வடமராட்சி கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களின் இருப்பை உறுதிப்படுத்தும் நாணயங்கள், மணி வகைகள் கூரை ஓடுகள் என்பன மீட்கப்பட்டிருந்தன. இவற்றில் 'நாக பூமி', 'கொலம்' எனத் தமிழ் பிராமி வரிவடிவில் பொறிக்கப்பட்ட நாணயங்கள் மீட்கப்பட்டன. இவை தமிழ்மக்களின் இருப்பையும் அதன் வரலாற்று உண்மையையும் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

தற்போது பயங்கரவாதம் வேரோடு பிடுங்கப்பட்டுவிட்டது, யுத்தம் முடிவடைந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த சூழ்நிலையில் தொல்லியல் திணைக்களத் தின்பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணம், கோயில் வீதியில் திறக்கப்பட்டு அதன் மூலமாகத் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது கோட்டையை மையமாக வைத்து இந்தத் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகள் பற்றி அண்மையில் வரலாற்றுத் துறை பேராசிரியர் எஸ்.புஸ்பரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில், ''கோட்டை தொல்லியல் ஆய்வின் போது சேர, சோழ, பாண்டிய, யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத் தொல்லியல் பொருள்கள் பொலநறுவை தமிழ் மன்னர் காலத் தொல்லியல் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இதேவேளை கோட்டை என்பது போர்த்துக்கேயர் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையின் பிரதி விளைவாக இடிக்கப்பட்ட இந்து ஆலயங்களையும் ஏனைய பண்பாட்டு மையங்களையும் வைத்து அமைக்கப்பட்டது என்று வரலாறு சான்று பகர்கின்றது'' என்று கூறினார்.

**தமிழர் இருப்பை உணர்துபவை**

இதேவேளை, யாழ்.நகரம் 2500 ஆண்டு கால வரலாற்றுச் சிறப்பை உடையது என்பது வரலாற்று ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, அண்மையில் பூநகரி மன்னித்தலையை அடுத்துள்ள கௌதாரி முனை காட்டுப் பகுதியில் மீட்கப்பட்ட இந்துக் கோயில் தமிழ் மக்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வந்த நிலையான இருப்பை உறுதிப்படுத்தி நிற்கிறது.

அதாவது அன்றைய காலப் பகுதியில் நாணயங்கள், ஆலயங்கள் தமிழர்களுக்கென்று இருக்கும் அளவுக்கு சூழ்நிலை காணப்பட்டது என்றால் தமிழர்களுக்கென்று தனியான அரசு நிலவியிருக்கின்றது என்பது வெளிப்படையாக உறுதிப்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாண தொல்லி யல் ஆய்வுகள் குறித்து தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி செனரத் திஸநாயக்க தெரிவிக்கும்போது, ''கோட்டை தமிழ் மக்களின் பெரும் சொத்து. அதனைப் பாதுகாப்பது தமிழ் மக்களின் பொறுப்பு. கோட்டையில் மீட்கப்படும் தொல்லியல் பொருள்களை வேறு எந்த இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்போவதில்லை. அதனை யாழ்ப் பாணத்திலுள்ள தொல்பொருள் காட்சிச் சாலை ஒன்றை நிறுவி அதனை இங்கே வைத்துப் பாதுகாக்கப்போகிறோம்'' எனத் தெரிவித்தார்.

தற்போதைய தொல்லியல் ஆய்வுகளில் 15 தமிழ்ப் பட்டதாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும் இதை 125 ஆக அதிகரிக்கத் தாம் நடவடிக்கையெடுத்துவருவதாகவும்தெரிவித்தார்.

**தமிழர்களின் அஸ்திரம்**

இந்த நிலையில் தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களிடம் எஞ்சியிருக்கும் இறுதி அஸ்திரம் அவர்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வந்த தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்தும் தொல்லியல் எச்சங்களே.

போர் என்ற போர்வையில் பல இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இந்து ஆலயங்கள் ஏப்பம் விடப்பட்டன். இதற்கு எல்லாம் மணிமகுடம் வைத்தது போல சில மாதங்களுக்கு நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் தனது வரலாறு தொடர்பான வித்துவச் செருக்கைக் காட்டினார் எல்லாவல மேதானந்ததேரர்.

தமிழ் மக்களின் வரலாற்றைத் திரிபுபடுத்துவதற்கு நல்லிணக்க ஆணைக்குழு சாட்சியம் ஏதோ வாய்த்துவிட்டது போல அவர் அங்கு வைத்து முழுப் பூசணிக்காயை சோற்றிலே புதைக்க முற்பட்டார். அதே வகையில் தமிழ் மக்கள் வந்தேறு குடிகள் என்றும் அவர்களுக்கு இங்கு வாழும் உரிமை கிடையாது என்றும் தனது வித்துவச் செருக்கை, விசுவாசத்தை நல்லிணக்க ஆணைக் குழு முன் காட்டினார் அவர். ''கேட்பவன் கேணையனாக இருந்தால் கேள்வரகில் நெய்வடியும்'' என்ற பழமொழியின் உள்ளார்ந்த அர்த்தம் அவரின் வாதத்தின் மூலம் வெளிப்பட்டது. இதன்போது சிலவேளைகளில் விமல் வீரவன்ச தொல்லியல் தொடர்பானதனது வித்துவத்தையும் காட்ட முற்பட்டிருந்தார்.

இது இவ்வாறு இருக்க தற்போது வீதி அகலிப்பு என்ற பதம் யாழ்ப்பாணத்தில் அனைத்துத் தரப்பாலும் மிக மலிவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது காங்கேசன்துறை வீதி அகலிப்பின்போது தமிழ் மக்களின் தொல்லியல் எச்சங்கள் ஆகிய ஆலயங்கள், பண்பாட்டுச் சொத்துக்கள் அழிக்கப்படும் ஏது நிலை உருவாகியுள்ளது. இந்த விடயம் குறித்து எவரும் உரிய வகையில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவரவில்லை. மாறாக அவற்றை அழிப்பதிலேயே குறிக்கோளாக உள்ளனர். வீதி அகலிப்பு என்பது காலத்தின் தேவைதான். அது மறுக்க முடியாத ஒன்றுதான். அபிவிருத்தி என்று வரும்போது வீதிகள் அகலப்படுத்தப்பட வேண்டும். ஆனால் எமது பாரம்பரியங்கள் பண்பாடுகள் பேணப்படவும் வேண்டும். இதில் இருவேறுபட்ட கருத்துக்கு இடமேயில்லை.

**ஜெனநாயகன்**

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தொல்லியல் எச்சங்களைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட தேசிய மரபுரிமைகள் அமைச்சர் கலாநிதி ஜெகத்பாலசூரிய ''தமிழ் மக்களின் தொல்லியல் எச்சங்களைப் பாதுகாப்பது எமது அரசின் தலையாய கடமை'' எனத் தெரிவித்திருந்தார்.

**எதுநடக்கப் போகிறது**

அதாவது தொகுத்து நோக்கின் அமைச்சர் சொல்கிறார் தொல்லியல் எச்சங்களைப் பாதுகாப்போம் என்று. ஆனால் வீதி அபிவிருத்தியினால் இவை இடிக்கப்படும் ஏது நிலை உருவாகியுள்ளது. இதைத் தடுக்கச் சம்பந்தப்பட்ட அமைச்சு ஏன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை? என்பதே பொது மக்களின் விடை காண முடியாத கேள்வி.

இந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற நேர்காணல் ஒன்றில் கருத்துத் தெரிவித்த தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் ''எதிர்காலத்தில் இந்துக் கோயில்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட இருக்கின்றன'' எனத் தெரிவித்தார். இதேவேளை இருப்பதை இடித்துவிட்டு எதை ஆய்வு செய்ய போகின்றார்கள். கந்தரோடையில் உள்ள புத்த சின்னங்களையா? இந்தக் கேள்விக்கு உரிய விடைகள் உரிய தரப்பினரால் தரப்படுமா? இதுதான் இன்று மக்களின் அவா.

எனவே உண்மையானதும் நீதியானதுமான தொல்லியல் ஆய்வுகள் கடந்த காலத்தைப் போல தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே பேரவா.

தமிழ் மக்கள் கடந்த காலத்தை நினைத்துப் புலம்பி எதிர்காலத்தை இழப்பதை விடுத்து தொல்லியல் ஆய்வுகளுக்குத் தோள் கொடுக்கவேண்டும் என்பதே காலத்தின் தேவையும் கூட.

---





### தமிழறிஞர் மரபில் வழிவந்த முதுபெரும் புலவர் ஒருவரின் பார்வையில்....

நல்லஉளம் நல்லசெயல் நற்றொண்டே ஆற்றும்
நன்மையினால் பெருவாழ்வு வாழ்கின்ற எங்கள்
செல்லப்பா நடராசா எனும்பெரியார் வாழ்க!
செகத்தென்றும் பார்போற்றப் பல்லாண்டு வாழ்க!

தமிழ்ப்பற்றும் இனப்பற்றும் சைவத்திற் பற்றும்
தம்மகத்தே கொண்டுள்ளார் சால்புநலம் மிக்கார்
அமிழ்தொப்பார் இவரென்றே அனைவருமே கூறும்
அன்பு நெறிதனில் நிற்கும் இவர்வாழ்க நீடே!

பாராளு மன்றத்தின் நடவடிக்கை பற்றிப்
பார்போற்றும் வண்ணமொரு அற்புதநூல் படைத்தார்
சீரான கட்டுரைகள் காலமெலாம் எழுதிச்
சிறப்பினையும் மதிப்பினையும் வையகத்தே கொண்டார்

யாழ்ப்பாணத் தமிழர் தம் தனித்துவத்தை மற்றும்
கலைகளினை வாழ்முறையை உணவுமுறை தன்னை
ஆய்ந்தாய்ந்து கட்டுரையாம் மணிகள்பல தந்தார்
ஆற்றலினால் பிறர்போற்றும் சிறப்பெல்லாம் கொண்டார்

எண்பத்தோ ராண்டகவை எய்துமிவர் மேலும்
எண்ணரிய பணியாற்றிப் புகழ் மேலும்பெற்றே
இன்புற்று வாழ்கவென மிகவாழ்த்தி மகிழ்வோம்
இறையருளால் இவர்மேலும் பல்லாண்டு வாழ்க!

புலவர் ம.பார்வதிநாதசிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரத்தியேக குழு வகுப்பு

பிரத்தியேக, குழு வகுப்புகள் நடைபெறு கின்றன.
க.பொ.த. (உ/த)- 2013 இணைந்த கணிதம். -
26/1, வளாக ஒழுங்கை, திருநெல்வேலி
தொடர்பு: 0776253414

### அன்னபூரணி அம்பாள் சைவ உணவுச் சேவை

சகல விதமான வைபவங்களுக்கும் ஏற்ற விதத்தில் தரமானதாக வாடிக்கையாளரின் விருப்பத்துக்கு ஏற்ப தயாரித்து வழங்கப்படும்.

திருமதி திருச்செந்தில்நாத சர்மா
(செந்தில் ஐயா)
உடுவில் வீதி, மானிப்பாய்.
தொ.பே: 0774087168

## வடமாகாண தமிழ்த் தினப் போட்டி அடுத்த வாரம்

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தினப் போட்டி எதிர் வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை யில் இடம்பெறும் என வட மாகாணப் பதில் கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார். (த-313)

### வீடு வாடகைக்கு

இல.139, கோயில் வீதி, இல 464, நாவலர் வீதியில் அமைந்த வாகனத் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0717831852




## இனி இல்லை நெஞ்சுவலி!!!

இருதய நோயாளிகள் நெஞ்சுவலி இன்றி எதிர்காலத்தில் சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மூலிகை மருந்து இரத்தவோட்டத்தை சீர்படுத்தும் பக்கவிளைவுகள் இல்லை. சுகமான எதிர்காலம் உறுதியானது

We Protect Your Heart With Ayurvedic Medicine

எமது ஏனைய சிகிச்சைகள்
* புற்றுநோய் கவனிப்பு
* ஈரல் பிரச்சினைகள்
* மூட்டு முதுகுவலி
* புரொஸ்டிரேட் பிரச்சினை
* ஒற்றைத்தலைவலி
* மன அழுத்தம்
* இருமல் & சளி
* படுக்கைப்புண்
* நீரிழிவுப்புண்
* விஷ வைரஸ் பாதிப்பு

புற்றுநோய்க்கான ஆயுர்வேத மருந்து எதனையும் அறிவீர்களா?

ஆம்! நான் அறிவேன். புற்றுநோய் பாதுகாப்புக்கு பக்கவிளைவுகள் இல்லாத மருந்து

Rs. 2,400/=



Sponsored by
FAIR PHARMA (PVT) LTD
(ஆயுர்வேத மருந்துவம்)
Level 5 / East Tower / 1C,
World Trade Centre,
Colombo 01.
0094 115 517 897,
5 551 879, 5 558 442.
Fax: 5 517 756
Website: www.ayurveda.lk
fairpharmasrilanka@yahoo.com

**Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330**

BOI APPROVED & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

இலவச ஆலோசனைகளுக்கு

தினசரி வைத்திய சேவைக்கு
உலக வர்த்தக வலயம்

வெளிஇடங்களில்
மாதாந்த சேவை – ஜீன்

திகதி & இடங்கள்

20ஆம் திகதி - வல்வெட்டித்துறை
20ஆம் திகதி - பருத்தித்துறை
21ஆம் திகதி - யாழ்ப்பாணம்
21ஆம் திகதி - தெல்கொட
22ஆம் திகதி - குருநாகல்
23ஆம் திகதி - வத்தளை
23ஆம் திகதி - அநுராதபுரம்
24ஆம் திகதி - வெல்லம்பிட்டிய
25ஆம் திகதி - பலப்பிட்டிய
25ஆம் திகதி - கண்டி
26ஆம் திகதி - கிரிபத்கொட
27ஆம் திகதி- அளுத்கம
28ஆம் திகதி - நுவரெலியா
29ஆம் திகதி - மாத்தளை
30ஆம் திகதி - வீரவில

## குரு கிர்பா வின் சேவையை நீங்கள் பெற்றுவிட்டீர்களா?

### இல்லை என்றால்.....

எமது முகவர்கள் தங்களிடம் வரும்போது
இதனைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

**"வாழ்க வளமுடன்"**

(த/931)

## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

- **UK** → அதிகூடிய கட்டணம் - ரூபா. 150,000/- , Student Visitor Visa
- **USA** → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே.
- **CANADA** → IELTS, Sponsor தேவையில்லை. No age limit, PR
- **POLAND** → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
- **GERMANY** → Tuition Fee இல்லை, IELTS 5.5, PR
- **CYPRUS** → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
- **New Zealand** → IELTS - 5.0 + Work Permit

நாடுமுழுவதிலும் முகவர்கள் தேவை

பஸ்னா - 0778 438403, 0771000044

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

### கடை வாடகைக்கு

A-9 வீதி, கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்கு அருகில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.
திருவையாறில் தென்னந்தோப்பு குத்தகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு: 0779339694

### வான் விற்பனைக்கு

நிசான் (செறினா) 58 -XXXX இலக்க வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0750417083

### விற்பனைக்கு

48 CC DAIDO மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771674389

### வீடு வாடகைக்குத் தேவை

K.K.S.வீதி கொக்குவிலுக்கும் தெல்லிப்பழைக் கும் இடைப்பட்ட பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0777789259

### உடனடி வேலைவாய்ப்பு

ஸ்ரீ கல்கி தையல் நிலையத்தில் தையல் அனு பவம் உள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பு. யுக்கி, ஓவலக் தையல் மிசினில் நன்கு அனு பவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0771380893, 07168033412
டச்சு வீதி, சாவகச்சேரி.

### வேலைக்கு ஆள்தேவை

கொழும்பில் உள்ள பிரபல்யமான தனியார் நிறுவனம் ஒன்றின் யாழ்ப்பாணக் கிளைக்கான

★ Machine Operator Cum Marketing Executive (20 - 30வயது Male)

★ Marketing coordinator (20 -30 வயது Female)

ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங் கப்படும். ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி யுடையவராக இருத்தல் வரவேற்கத்தக்கது.

★ விண்ணப்ப முடிவுத் திகதி- 28.06.2011

தொடர்பு:
0779938114
jobopportunities 2004@gmail.com
(4495)

### வாடகை/குத்தகை வர்த்தக கட்டடத் தொகுதி

சுன்னாகம் நகரில் இருந்து 3Km தூரத்திலும் யாழ். நகரில் இருந்து 6Km தூரத்திலும் யாழ் - காங்கேசன்துறை வீதியில், மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் ஆஞ்சநேயர் கோயில் முன்பாக, வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களுக்கு ஏற்ற 8000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இரு மாடிக் கட்டடத்தொகுதி வாட கைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு.

மேற்படி கட்டடத் தொகுதியின் உட்கட்டுமான வேலைகள் தங்களின் தேவைக்கேற்ப அமைத்துக் கொடுக்கப்படும். வாகனத் தரிப்பிட வசதிகளும் உண்டு.

தொடர்புகளுக்கு:
KMAS Engineering Contractors,
Vanniasingam Veethy, (Near Primary Health Care Unit)
Inuvil South, Inuvil.
T.P-0775415140, 0773867599
(4958)

## STUDY IN UK

யாழ். மாணவர்களின் நம்பிக்கைக்குரிய எம்முடன் இணைவதன் மூலம் இலகுவாக விசா பெற்று உங்கள் UK கனவினை நனவாக்குங்கள்.

* எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள் (மொத்தச் செலவு 8 லட்சம் மட்டுமே)
* O/L தகைமை போதுமானது IELTS தேவையில்லை. (ஒரு வருட விசா)
* குடும்பமாகக் குறைந்த செலவில் செல்வதற்குரிய வசதிகள்
* இரு வாரங்களில் VFS இல் ஆவணங்கள் கையளிக்கப்படும்.
* நீங்கள் வழங்கும் சகல பணத்துக்கும் அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும்.
* நாம் குறிப்பிடும் காலப்பகுதியினுள் நீங்கள் UK செல்லாவிட்டால் உங்கள் சகல பணத்தையும் மீளப்பெறலாம்.

JUL/AUG INTAKE

"முயற்சி திருவினையாக்கும்"

(4967)

தொடர்புகளுக்கு:
Sana: 077 6277767
0774724951

GLOBAL VISION (PVT) Ltd
247, Palaly Road,
Kantharmadam.

## உடன் விற்பனைக்கு

* BOX செற்
  DIGITAL RECEVIER - DENON
  230 - 1000 w - out
  MODEL NO - AVR 1000
  MADE IN JAPAN.
* KEN WOOD EQUALIZER DIGITAL
  MADE IN MALAYSIA
* DVD PLAYER

(மேற்கூறியவை வாடகைக்கும் விட உகந்தது)

PIONEER CD செற்
US 66 - COMPACT MINI COMPONENT
3 VCD - 2000 w (Pmpo)
என்பன உடன் விற்பனைக்குண்டு.

(4980) தொடர்பு: 0779382888

## BIT தொடர்ந்து 10 வது வருடமாக... BIT

### கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிப் பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம்

புதிய பிரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. Closing Date: 31/07/2011
BIT கற்கைநெறியினைத் தொடர்ச்சியாக 10 வருடங்கள் கற்பிக்கும் ஆசிரியரால் அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

100% practical

Why MIS for BIT?
1. 10 years experienced teacher
2. BIT Registration & Guidance
3. Free Internet Facility for 24/7
4. Free handouts/CDs/DVDs
5. Saturday/Sunday Classes
6. Past Paper Discussion

எமது ஏனைய கற்கைநெறிகள்
PHP Ruby Joomla Java VB.Net AJAX ASP.Net JavaScript XML RSS VB.Net GNU/Linux Illustrator RoR Networks FlashMX InDesign Python Hardware WordPress

விரும்பிய எவரும் கற்கலாம்

MIS Open Source College
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS) Call Us: 0776577359
74, சபாபதி வீதி தலையாழி பிரம்படி யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ராஜினாமா

வவுனியா, ஜூன் 19
வவுனியா நகரசபையின் எதிர்க்கட்சி தலைவர் ஜி.ரி. லிங்கநாதன் நகரசபை உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

தனது ராஜினாமா கடிதத்தை நகரசபைச் செயலாளருக்கும், மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளருக்கும் அவர் அனுப்பியுள்ளார்.

அவர் கடந்த வவுனியா நகர சபைத் தேர்தலில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சார்பாகப் போட்டியிட்டு தெரிவானவர்.

இவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா நகரசபை ஆளும் தரப்பினரின் சீரற்ற நடவடிக்கையினால் மக்களுக்கு சேவையாற்ற முடியாது உள்ளது.

சேவையாற்றவே தேர்தலில் போட்டியிட்டு சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன். ஆனால் மக்களுக்கு சேவையாற்ற முடியாமல் இருப்பதனால் நகர சபைக்குள் வசிக்கும் குடியிருப்பாளர்களின் பல கேள்விகளுக்கு என்னால் பதிலளிக்க முடியாது உள்ளது.

இதனால் தொடர்ந்தும் சபை உறுப்பினராக இருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்ற காரணத்தால் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளேன் என லிங்கநாதன் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ம)

# மன்னார் மடு மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா 23 ஆரம்பம்

மன்னார், , ஜூன் 19
மன்னார் மடுமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதனை முன்னிட்டு மன்னார் மடுப் பிரதேசத்தில் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மடுமாதா ஆலயத் திருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அண்மையில் விசேட கூட்டமொன்றும் நடைபெற்றது.

ஆலயத் திருவிழவை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள விசேட சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள், மற்றும் வர்த்தக நிலையங்கள் அமைத்தல் போன்ற விடயங்கள் குறித்து இந்தக் கலந்துரையாடல்களின் போது ஆராயப்பட்டது.

எதிர்வரும் ஜூலை மாதம் இரண்டாம் திகதிதிருவிழாத் திருப்பலி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு சூரிய மின்கலம் அன்பளிப்பு

கிளிநொச்சி,ஜூன் 19
பூநகரி செல்லையா தீவு சிறி கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான சூரிய மின்கலத் தொகுதியை அந்தப் பகுதியைச் சேர்ந்த ஜேர்மனியில் வசிப்பவர்களான செ.பாலசுப்பிரமணியம் குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற போரால் இந்த ஆலயத்தின் தளபாடங்கள், ஆலய பொருள்கள் அழிவடைந்துள்ள நிலையில் இந்த உதவி பெரும் உதவியாக இருக்கும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.(எ-406)

## பாரம்பரியம்....



வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் நடத்தப்பட்ட முழு நிலா கலை நிகழ்வில் இடம்பெற்ற நிகழ்வின் ஒரு காட்சி

# பொருளாதார அமைச்சின் நிதியில் கிளிநொச்சியில் கட்டுமானப் பணி

## விவரங்களை சமர்ப்பிக்கக் கோரிக்கை

நாவற்குழி,ஜூன் 19
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் பல கட்டுமானப் பணி மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை அரசினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கட்டுமானங்களுக்குரிய தேவைகள் குறித்த விவரங்களை அடுத்த மாதம் 18ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இராமநாதபுரம் கமநல சேவை நிலையப் புனரமைப்பு, கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் 3ஆயிரத்து 125 சதுர அடி வகுப்பறைக் கட்டடப் புனரமைப்பு, மாயவனூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கான 3ஆயிரத்து 125 சதுர அடி வகுப்பறைக் கட்டடப் புனரமைப்பு, அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகக் கட்டடப் புனரமைப்பு, சாந்தபுரம் பொது நோக்கு மண்டபம் புனரமைப்பு என்பன நடை பெறவுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் 800 சதுர அடி அளவுள்ள ஆசிரியர் விடுதி புனரமைக்கப்படவுள்ளது.

பூநகரி பிரதேச செயலக பயிற்சி நிலையமும் இத்திட்டத்தில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

(ம-121)

# பொங்கல் விழா

கிளிநொச்சி, ஜூன் 19
பூநகரி, காவாக்குளம் வைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை நடை பெறவுள்ளது.

இந்தப் பொங்கல் விழாவில் மடையிடுதல், பானைகளில் வளந்து பொங்குதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறுவது சிறப்பம்சமாகும்.

இந்த ஆலயம் நூறு ஆண்டுகளுக்கு மேல் காவாக்குளம் கிராமத்தில் இருந்து மக்களுக்கு அருள்புரிந்து வரும் மிகவும் பழமை வாய்ந்த வைரவர் ஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-406)

# மன்னார்– பாசிக்குடா பிரதான வீதி மக்கள் போக்குவரத்துக்கு நாளை திறப்பு

மன்னார் , ஜூன் 19
கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த மன்னார் பள்ளிமுனைக் கடற்கரைப் பகுதியிலுள்ள பிரதான வீதி நாளை மக்களின் பாவனைக்கு திறந்துவிடப்படவுள்ளது.

மன்னார் பள்ளிமுனை கடற்கரைப்பகுதியிலுள்ள பிரதான வீதியை கடற்படையினர் 20 வருடங்களுக்கும் மேலாக மூடிவைத்துள்ள நிலையில், பொது மக்கள் தொடர்ந்து அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் மேற்படி வீதியைத் திறந்துவிடுமாறு மன்னார் நகரசபை விடுத்த கோரிக்கையையடுத்து மேற்படி வீதி திறக்கப்படவுள்ளதாக மன்னார் நகரசபையின் தலைவர் சந்தான்பிள்ளை ஞானப் பிரகாசம் தெரிவித்தார்.

மேற்படி வீதியைத் திறப்பது தொடர்பில் புதிதாக பதவியேற்ற மன்னார் நகரசபையின் தலைவர் சந்தான்பிள்ளை ஞானப் பிரகாசம், உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாசன், நகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் கடற்படையினருடன் கலந்துரையாடினர்.

இதன்போது, மக்களின் பாவனைக்கு மேற்படி வீதியை திறந்துவிடுவதாக கடற்படையினர் தம்மிடம் உறுதியளித்ததாக மன்னார் நகரசபையின் தலைவர் சந்தான்பிள்ளை ஞானப் பிரகாசம் தெரிவித்தார். (ம)

# வவுனியாவில் காணிப் பிரச்சினை; தீர்ப்பதற்கு செயலகத்தில் விசேட மாநாடு

வவுனியா, ஜூன் 19
வவுனியா மாவட்டத்தில் நீண்டகாலமாக நிலவிவரும் காணிப்பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றிய உயர்மட்ட மாநாடு வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

எனினும் இந்த விடயம் தொடர்பாக எந்தவித முடிவுகளும் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பல பிரச்சினைகள் இங்கு முன் வைக்கப்பட்டன.

குளங்களை அத்துமீறி பிடித்து நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை, சிவில் நிர்வாகம் இல்லாத காலத்தில் அரச காணிகளை பலர் அத்து மீறி பிடித்தமை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் குடியிருப்பாளர் காணிகளை பெருமளவு சுவீகரித்து வீதி எல்லைக் கோடுகள் இட்டமை போன்ற பல பிரச்சினைகள் இங்கு முன் வைக்கப்பட்டன.

குறித்த பிரச்சினைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வருவதென மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் 20 முதல் 30 வருடங்களாக குடியிருக்கும் பலருக்கு காணிக்கான உறுதிப்பத்திரங்கள் கிடைக்காமை தொடர்பாகவும் இந்த மநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காணிக்கான உறுதிப் பத்திரங்கள் இல்லாமையால் வங்கியில்கடன்பெற்றுக்கொள்ள முடியாதிருத்தல் ஏனைய வாழ்வாதார உதவிகளை குடியிருப்பாளர்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருத்தல் ஆகியன பிரச்சினைகள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டன.

சட்டமா அதிபர் திணைக்களகத்தைச் சேர்ந்த அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி குமரன் இரட்ணம், வவுனியா மாவட்ட அரச அதிபர், நான்கு பிரதேச செயலாளர்கள், காணி அலு வலக சிரேஷ்ட அதிகாரிகள், நில அளவைத் திணைக்கள அத்தியட்சகர், வீதி அபிவிருத்தி திணைக்களப் பொறியியலாளர்கள், நகரசபை செயலாளர், நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர், பொலிஸார் உள்ளிட்ட பலர் இதில்கலந்து கொண்டனர். (ம)

# கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய பொதுச்சந்தை

கிளிநொச்சி, ஜூன் 19
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை புதிதாக பொதுச்சந்தையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக சந்தையொன்று அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு இணங்க இந்தச் சந்தையை கரைச்சிப் பிரதேசசபையின் ஒத்துழைப்புடன் கெயார் நிறுவனம் அமைத்துக்கொடுத்துள்ளது.

ஆனைவிழுந்தான் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சபாநாயகம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் சந்தையைத் திறந்து வைத்தார். பெயர்ப் பலகையை கெயார் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் மைத்திரி திரைநீக்கம் செய்து வைத்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்



இன்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை புனராவர்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பசஷ மஹா கும்பாபிஷேகம் காணும் இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் அருள் மிகு பொழிய இறைவன் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

**லிங்கம் ஸ்ரேரர்ஸ்**
நாவலடி, இளவாலை. (49)

# பணியாளர் தேவை

**மாதங்கி தையலகம்**

E.mail-Mathanky90@gmail.com T.P.: 0212285561

1. சகலவிதமான உடைகளும் சிறந்த முறையில் வெட்டித் தைக்கக் கூடியவர்.
2. மின்சாரத்தில் தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள்.

கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆர்வம் உள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ள வாரநாள்களில் மு.ப 10.00 பி.ப-3.00 மாலை வரை
25.06.2011 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி, கனகபுரம் வீதி, கிளிநொச்சி

# வாருங்கள்!! யாழ்ப்பாணம்!! பாருங்கள்!! மகிழுங்கள்!!

தேசத்தின் இல்லம்-விருந்தினர் விடுதி
ஊரெழு-யாழ்ப்பாணம்.

**தங்களை மகிழ்வுடன் அழைக்கிறது**

தேசத்தின் இல்லம், யாழ்ப்பாணம். பலாலி வீதியில்-09 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. 10 நிமிடங்களில் தனியார் வாகனத்தில் இதனை அடையலாம்.

**உங்களை மகிழ்விக்க:**
1. குளிரூட்டப்பட்ட அறைகளும், பிற வசதிகளும்.
2. இயற்கையுடனிசைந்த தோட்டமும் வேப்ப மர நிழலும்.
3. மிக விசாலமான வாகனத் தரிப்பிடம்

தங்கள் முற்பதிவுக்கு அழையுங்கள்: 0212228030, 0774727569, 0778693370, 0114626100

(2132)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சின்னத்துரை



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்துரை (14.06.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிதம்பரத்தின் அன்புக் கணவரும் சத்தியதேவி, தம்பிராசா, கமலராசா, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் பவானி, கலாநிதி, ஹேமமாலினி ஆகியோரின் அன்பு மாமனும் ரவிராஜ், பகீரதன், நிரோசன், தர்ஷிகா, துஷானிகா, நிலானிகா, அனுசிகா, டிசானி, தனுசன், ரக்ஷிகா, அஸ்மிதா, கம்ஷா, வினோச், பவின்ராஜ், சாருகன் ஆகியோரின் அன்புப் பேரனும் டிலக்ஷி, திபிஷன், அஜீஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(19.06.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்துக்கு (கோப்பாய் வீதி) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய், (4956)

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

திருமதி

## மரியம்மா சவரிமுத்து இரத்தினராசா

(நேசம் அக்கா)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியம்மா நேற்று (18.06.2011) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினராசா சவரிமுத்து வின் அன்பு மனைவியும் அன்ரன் கிறைசிஸ் (கரவெட்டி), ஜோசப் நீக்கலஸ் (மதுரம்-பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் பிலேமேந்திரா (யோகம்), ஜெறாட் மாசில்லாமணி (செல்வம்), மேரி சறோஜினிதேவி (சறோ) ஆகியோரின் அன்புத் தாயும் கிறேஸ் மேரிராணி, அலோசியா (பிரான்ஸ்), ரஞ்சி (கனடா), கிறிஸ்ரீனா (சுவிஸ்), கமலாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் றொபின் (கனடா), றொசாந்தி (கனடா), மேரி அனித்தா, விக்ரர், நிறஞ்சன், யோண்றொஜ், யோயல், அனந்தன், அலன், பவியன், கரோலின், கெவின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.06.2011) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன்,
மிருசுவில்.

தகவல்:
அன்ரன் கிறைசிஸ்
(மகன்).

# காணி விற்பனைக்குண்டு

புலோலி தெற்கு, புலோலியில் உள்ள இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
மேலதிக தகவலுக்கு: ஆர். மகேந்திரா
0212240103, 0750492181

# வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் 4 பேர்ச் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0771- 000041

# வீடு விற்பனைக்கு

பொன்னையாலேன், ஆனைக்கோட்டையில் இரண்டு பரப்புடன் கூடிய மூன்று அறைவீடு விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தரகர் இல்லை. T.P- 0718451438

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு பலாலி வீதியில் 7,3 பரப்பளவுள்ள காணிகள் விற்பனைக்குண்டு. (கோண்டாவில் சந்தியிலிருந்து 100 மீற்றரில் காணி உண்டு.)
தொடர்புகளுக்கு:- 0779239334. (4951)

# வீடு விற்பனைக்கு

தாவடி - மானிப்பாய் வீதியில் தாவடிச் சந்தியிலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் 1½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 3 அறைகள் கொண்ட 1000 சதுர அடி வீடு விற்பனைக்குண்டு. வீட்டின் முன் கடை கட்டக் கூடிய வசதியும் உள்ளது.
விலை ரூபா 50 லட்சம்
தொடர்புகளுக்கு: 0775486570

# எலக்ரோனிக் சாதன பழுது பார்த்தல்

30 வருட அனுபவமுள்ளவரால் வீடுகளுக்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0713833399

# கடைகள் விற்பனைக்கு/ வாடகைக்கு

யாழ்.நகரின் மையப்பகுதியில் இல.60, ஜும்மா பள்ளிவாசல் வீதியில் புதிதாகக் கட்டப்படும் 7 கடைகள் கொண்ட கடைத் தொகுதியில் கடைகள் விற்பனைக்கு அல்லது வாடகைக்குண்டு.
தொடர்பு:
0778995431, 0750434277.

# வீடு வாடகைக்குண்டு

நல்ல சூழலில் 07 அறைகளையும், 02 குளியலறைகளையும், 01 சமையலறையையும் கொண்டதுமான வீடு வாடகைக் குண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. பூங்கனிச்சோலைக்கு அருகில்.
தொடர்புகளுக்கு:-0777207260, 0750406396.

# இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது 420/- மட்டும். கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

# உயிரூட்டுகின்றோம்

உங்களிடம் உள்ள முற்றும் பழுதடைந்து, பாவிக்க முடியாத நிலையில் உள்ள எந்தவகையிலான தொழில்சார் மின்சாரக் கருவிகளையும், சிறப்பான முறையில் இயங்கக்கூடிய வகையில் உத்தரவாதத்துடன் திருத்தித்தரப்படும்.



இலங்கையில் பாவனையில் உள்ள சகலவிதமான தொழில்சார் மின்சார உபகரணங்கள், கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்களினை பெற்றுக்கொள்ளலாம்.

**GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.**

இல. 05, கருவப்புலம் ஒழுங்கை,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி). 021 2226459.
(நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்)

# யாழ் நகரில் வீடு விற்பனைக்கு / வாடகைக்கு

யாழ். இந்து கல்லூரி,
மகளிர் கல்லூரி,
யாழ். பல்கலைக் கழகத்துக்கு
அருகில் 4 பரப்புடன் கூடிய 2 மாடி
வீடு விற்பனைக்கு / வாடகைக்கு
உண்டு. 7 படுக்கையறைகள்,
2 வசிப்பறைகள் (Hall),
4 குளியலறைகள்/கழிப்பறைகள்,
2 சமயலறைகள், 1 களஞ்சிய அறை
Open Balcony, கிணற்றுடன் கூடிய
குழாய்த்தண்ணீர்,
2 வாகனத் தரிப்பிடங்கள்.
தொடர்பு : 0778 445 528

# வலி. வடக்கில் வாழ்வாதார உதவிகள்

அளவெட்டி, ஜூன் 19

வலி. வடக்கில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை ஐக்கிய நாடுகள் உணவு விவசாய அமைப்பு வழங்கியுள்ளது. இதில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் 20 கோழிக் குஞ்சுகளும் அதற்கான தீவனங்கள் வழங்கியுள்ளனர். அத்துடன் விவசாயத்தை மேம்படுத்தக் கூடிய வகையில் பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ம-313-36)

# விற்பனை பிரதிநிதி தேவை

நகரில் இயங்கி வரும் பிரபல வியாபார நிலையத்துக்கு விற்பனைப் பிரதிநிதி (Distributor sales Rep) தேவை. தகுதி உடையவர்கள் தங்கள் சுய விவரக்கோவையை எதிர்வரும் 24.06.2011 இற்கு முன்பாக கிடைக்க கூடியவாறு கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பவும். கிளிநொச்சி மாவட்டத்திலும் வேலைசெய்யக் கூடியவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது.

முகாமையாளர்.
இல. 154, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (C/928)

# வர்த்தக ஸ்தாபன விற்பனை

பிறவுண் வீதி, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்துக்கும் முன்பாக26 A இலக்க நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும். "சிவன் கணினிப் பூங்காவும்" எழுது பொருள்களும் sivan computer Park and Staioners என்னும் வர்த்தக ஸ்தாபனம் அலுமினிய கண்ணாடி, மரஅலுமாரிகள், இறாக்கைகள், இரண்டு போட்டோப் பிரதி இயந்திரங்கள் மற்றும் வியாபாரப் பொருள்கள் என்பவற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. காலை 8.00 மணிமுதல் பி.பி 5.00 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்புத் தொலைபேசி இல. 021-222 3843. (2148)

# கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg வுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA No -01 புறொயிலர் குஞ்சுகள், 22.06.2011 விநியோகிக்கப்படும்.

**ராஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P. No- 0212222867, 0776090926

# உடனடி வேலைவாய்ப்பு

வத்தளையில் அமைந்துள்ள பிரபல ஆடை தொழிற்சாலைக்கு தேர்ச்சிபெற்ற / தேர்ச்சிபெறாத 18 வயதிற்கு மேற்பட்ட உதவியாளர்கள் (Helpers) தேவை. ஆண்,பெண் இருபாலாரும் நேரடியாக வருகை தரவும். இலவச தங்குமிட வசதி, குறைந்த விலையில் உணவு மற்றும் சம்பளமாக ரூபா. 20,000/- வரை வழங்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
இல.18,வெளியமுன ரோட், ஏகித்த,
வத்தளை.011-2930223

# STUDY IN NEW ZEALAND

- IELTS இன்றியும் விண்ணப்பிக்கலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E O/L
- வயதெல்லை கிடையாது
- விரும்பிய பாடநெறிகள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- இலவச ஆலோசனைகள்

10 வருடங்கள் நம்பகரமான சேவை

(661 Course)
6 Months Course in Sri Lanka → 6 Months Course in New Zealand
100% Guaranteed direct placement to NZ

HOTLINE 0755 091 091

Approved Learning Centre:
SBG New Zealand School of Business & Government NEW ZEALAND

முதல் 10 மாணவர்களுக்கு இலவச IELTS வகுப்பு.

விண்ணப்ப முடிவுத்திகதி: 10. 07. 2011

**GREENWICH COLLEGE (PVT) LTD**


34, Galle Road, Dehiwala. (Opp. Municipal Council, Dehiwala)
T: 011 2 713 214
E: info@greenwich.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தமும் சீற்றமும்

மந்தரை சூழ்ச்சியால் அயோத்தியில் இடம் பெற்ற சம்பவங்கள் எதையும் பரதன் அறிந்திருக்கவில்லை. அயோத்தியில் இருந்து ஏழு நாள்கள் பயணம் செய்ய வேண்டிய கேகய தேசத்துக்கு அவன் சென்றிருந்தமையே இதற்கான காரணமாகும். பரதன் அயோத்திக்கு மீள்வதற்கு முன்னர் முக்கிய காரியங்கள் அங்கு அரங்கேறிவிட்டன. இராமன் காடேகிவிட்டான். தசரதன் உயிர் துறந்து விட்டான். ஆனால் இந்தச் சம்பவங்கள் எதையும் அறியாத அப்பாவியாகவே பரதன் அயோத்தியை வந்தடைந்தான்.

மறுபுறம், கைகேயியின் விருப்பப்படி பரதனே நாட்டாட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வான் என்கின்ற நம்பிக்கையோடு இராமனும் காடேகினான். ஆனால் அரச பாரத்தை ஏற்பதற்குப் பரதன் மறுத்தமையோ தாயை வெறுத்து உரைத்தமையையோ அவன் அறியான். ஏன்,தந்தை இறந்த செய்தியைக்கூட அவன் அறிந்திருக்கவில்லை.



காடேகும் வழியில் காண்பவரின் வினாக்கள் இராமன் அயோத்தியை விட்டுக் காடேக யாது காரணம் என்பதாக அமைந்திருக்கின்றது. பரதனது நிலை பற்றி அறியாத இராம இலக்குவர் தம்மிடம் வினவப்பட்ட இவ்வினாவுக்குப் பரதனே 'அயோத்தியின் அரசுப்பொறுப்பில் இருக்கின்றான்' என்ற சாரப்படப் பதிலுரைத்துப் போகின்றனர்.

இந்த நிகழ்வுக்குப் பின்னால் பரதனும் பரிவாரத்தினரும் காட்டுக்குச் செல்கின்றனர். காடேகிய இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வருவேன் என்கிற வேட்கையோடு பரதனது தலைமையில் அவர்களது பயணம் அமைந்திருந்தது. இராமன் சந்தித்த பாத்திரங்கள் பரதனையும் சந்திக்கின்றன். அயோத்தியின் அரசுப் பொறுப்பை ஏற்காது இராம தியானத்தில் வருகின்ற பரதனிடம் அயோத்தியை விட்டு வருவதற்கான காரணம் யாதென அந்தப் பாத்திரங்கள் வினவுகின்றன.

**இலக்கியக் காட்சி – ௰**

பரதனின் சிந்தையில் துயர மூட்டுகின்ற இந்த வினாவுக்குப் பரதன் எவ்வாறு விடை பகன்றான் என்பதை இனி நோக்குவோம்.

வேடர் குலத்தைச் சார்ந்த குகன், சிருங்கி பேரத்தின் தலைவனாக விளங்குகின்றான். இராமன் நகர் நீங்கிய காரணத்தை இலக்குவன் வாயிலாக உசாவி அறிந்து வைத்திருக்கிறான். பரதனைக் கண்டு-அவன்மேல் ஐயுற்று- பின் தெளிவுற்று நின்ற குகன், ''கங்கைக் கரைக்காட்டுக்கு வந்த காரணம் யாதோ? எனப் பரதனை வினவி நின்றான். பரதனே அயோத்தியின் அரசுப் பொறுப்பில் இருக்கிறான் என்று உள்ளூர நினைத்திருந்தமையால் குகனிடம் இவ்வாறான ஒரு கேள்வி பிறந்தது. வேடர் தலைவனின் அறியாமையால் விளைந்த இந்த வினாவுக்குப் பரதன் சாந்தமாகப் பதிலளித்தான்.

*''முழுது உலகு அளித்த தந்தை*
*முந்தையோர் முறையினின்றும்*
*வழுவினன், அதனை நீக்க மன்னனைக்*
*கொணர்வேன்''* என்றான்

உலகம் முழுவதும் ஒரு குடை நிழலில் ஆட்சி செய்த சக்கரவர்த்தியாகிய என் தந்தை தசரதன், தன் முன்னோரது நீதி மரபினின்றும் தவறி விட்டான். அந்த அநீதியை நீக்கும் பொருட்டு முறைப் படி அரசுப் பதவியை வகிக்க வேண்டிய இராமனை திரும்ப அழைத்துக் கொண்டு செல்வதற்காக வந்தேன் என விளக்கமாகப் பதிலுரைக்கின்றான்.

இதே போன்றதொரு வினாவைப் பரத்துவாச முனிவரும் பரதனிடம் வினவுகின்றார். கங்கையைக் கடந்து சென்ற பரதனையும் பரிவாரத்தினரையும் கண்ட பரத்துவாச முனிவர்,

*எடுத்த மாமுடி சூடி நின்பால் இயைந்து*
*அடுத்த பேர் அரசு ஆண்டிலை ஐய நீ*
*முடித்த வார் சடைக் கற்றையை மூசுதூசு*
*உடுத்து நண்ணுதற்கு உற்றுளது யாது?*

என வினவுகின்றார். உன்னிடம் வந்து சேர்ந்த கோசல இராச்சியத்தை ஆளாமல் வனத்துக்கு வருவதற்கான காரணம் என்ன? என்பதாகப் பரத்துவாசரது வினா அமைகின்றது. பேரரசு ஆண்டிலை என்று அவர் கூறுவது இராமன் இல்லாத இடத்தில் அது பேருக்கு ஒரு அரசுதானே தவிரப் பேரரசு அல்லவே என்ற நையாண்டிப் பொருளையும் வெளிப்படுத்துகின்றது.

முற்றும் உணர்ந்த முனிவராகிய பரத்துவாசரின் இவ்வினா பரதனுக்குச் சினத்தை மூட்டுகின்றது. மனக் கொதிப்பை ஏற்படுத்துகிறது.

*''எனக்கு அடுத்தது இயம்பிலை நீ என்றான்*
*உனக்கு அடுப்பது அன்றால் உரவோய்''* என்றான்

''எனக்குப் பொருந்திய சொற்களை நீ கூறவில்லை. இவ்வாறு கூறுவது உன் தவநிலைக்குப் பொருத்தமானதும் அன்று'' எனச் சீற்றத்துடன் பதிலுரைக்கின்றான். உரவோய் என்பதற்குப் பேரறிவுடையவன் என்பது பொருள். தன்னைவிட அறிவால் மேம்பட்ட, முற்றும் உணரும் ஆற்றலுடைய பரத்துவாச முனிவர் இவ்வாறு வினவலாமா? என நினைத்த மாத்திரத்திலேயே பரதனின் தார்மீகக் கோபம் சீற்றமாக வெளிப்படுகின்றது.

தன்னிலும் தாழ்ந்த குகனது வினாவுக்குப் பொறுமை காத்துச் சாந்தத்தை வெளிப்படுத்திய பரதன் தன்னிலும் உயர்ந்த பரத்துவாசர் இதே வினாவை எழுப்பியபோது சீறிவிழுகின்றான். தற்கால வாழ்வியலில் இத்தகு நிலைமைகள் ஏற்படுகின்றபோது மனிதர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என நோக்கின் மேற்படி காட்சிக்கு மாறுபட்ட போக்கையே பெரும்பாலானவர்கள் கைக்கொள்கின்றனர் என்பதைத் தரிசிக்க முடியும்.

தம்மிலும் உயர்ந்தோரது கேள்வி நீதியற்று அமைந்து, தம் மனதை நோகடித்தாற்கூட நாணிக் கோணிச் சாந்தமாகப் பதிலுரைப்பவர்கள், தம்மை விடத் தாழ்ந்தவர்களிடம் சீறிச் சினந்து தம் வன்மையைக் காட்டிவிடுகின்றனர். இதுவே தற்கால நடைமுறை. ஆனால், பண்பில் உயர்ந்தவன் எனப் போற்றப்படுகின்ற பரதன், தன்னிடம் வினவப்பட்ட ஒரே வகையான வினாக்களுக்கு அறிவில் உயர்ந்தார், அறிவில் தாழ்ந்தார் என வகுத்துப் பதிலுரைத்த பாண்மை நம்மவர்க்கெல்லாம் படிப்பிணையாக அமைந்திருக்கிறதல்லவா?



**ச.லலீசன்**
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

---

# மேடைகள்

**சிறுகதை**



மாலை மூன்றுமணி-கல்லூரியில் சன வெள்ளம் பட்டிமன்றம் நடக்கப்போவதாகச் சொன்னார்கள். குடும்பத்தின் கண்கள் ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் 'குடும்பத்தின் கண்கள் பெண்களே'என வாதாடுவதற்காக எனது நண்பி சிந்தியாவின் கணவன் செந்தூரனும் வந்திருந்தான். பல மேடைகளில் ஏறி முழங்கி இருக்கிறான். நல்ல பேச்சாளன்.

சரியாக மூன்று முப்பதுக்குப் பட்டிமன்றம் ஆரம்பமாயிற்று.சிலர் தமது யோசனைகளையும் ஆதங்கத்தையும் இன்னும் சிலர் தமது அனுபவங் களையும் தமது வாதாட்டத்தின் மூலம் வெளிபடுத்திக் கொண்டிருந்தனர். செந்தூரனும் பெண்களுக்காக வரிந்து கட்டிக் கொண்டு அடித்து முழக்கினான். வெற்றிவாகையுடன் மேடையிலிருந்து இறங்கினான்.

நாளைக்குச் சிந்தியாவின் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டே சன வெள்ளத்தில் மிதந்து கொண்டு வெளியேறுகையில் யாரோ கூறியது காற்றுவாக்கில் எனக்குக் கேட்டது; ''உவங்களெல்லாம் மேடையில் இலக்கண சுத்தத்தோட நல்லாப் பேசுவினம், இவயளின்ர பேச்சை வீட்டிலை போய்ப் பார்க்கவேணும் தமிழ்ப் பாஷை பாடையேறிப் போய்க்கொண்டிருக்கும், செந்தமிழின் இனிமையில் காது கிழிஞ்சு போகும்''

சிந்தியாவுக்குத் தெலைபேசி மூலம் அறிவித்து விட்டு எனது வருகைக்காகக் காத்திருக்கும் அவளுக்கு - அவளுக்குப் பிடித்மான பயற்றம்பலகாரமும் சுட்டு எடுத்துக்கொண்டு என்னுடைய ஓய்வுப் பொழுதில் அவளது வீட்டுக் கதவைத் தட்டினேன்.

நண்பி சிந்தியா என்னுடன் படித்த காலத்தில் மிகக் கோபக்காரியாக இருந்தாள். ஆனாலும் அந்தக்கோபம் நியாயமானதாகவே இருக்கும். மிகச் சிறிய தவறுகளுக்குக் கூடக் கோபிப்பாள். ஏன் சரியாகச் செய்யவில்லை? ஏன் இரட்டைவேடம் போடுகிறீர்கள்? ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள்?இப்போ பெரிதும் மாறி இருந்தாள். அதிகம் கோபப்பட மாட்டாள். என் சிந்தனையின் ஊடே''வர்றேன் வர்றேன்''என்றபடியே சிந்தியா வந்து கதவைத் திறந்து வரவேற்றாள்.

நேற்று நான் ''என்ன சிந்தியா எப்படி இருக்கிறாய்'' என்று நலம் விசாரித்தேன். ''எனக்கு என்னடி ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒரே ஒரு மகளோட நல்லா இருக்கிறன்.'' சிந்தியா சொல்லும் போது அத்தொனி நல்லா இல்லையோ என்று எண்ணத்தோன்றியது.

''நேற்று நான் உன்ர டார்லிங் பட்டிமன்றத்தில நல்லா வெளுத்து வாங்கிறதப் பார்த்தன். சும்மா சொல்லக்கூடாது அந்த மாதிரி வெளுத்துக்கட்டினார்'' நான் புகழ்ந்தேன்.

சிந்தியா சிரித்தபடி ''ஏன் அழுக்கு துணியே உடுத்திக்கொண்டு வந்தவர். வெளுத்துக் கட்டுவதற்கு'' என்றாள். க.பொ.த. உ்யர்தரம் படிக்கும் சிந்தியாவின் மகள் தேநீர் கொண்டுவந்தாள். சுவையாக இருந்தது ''பிள்ளை நீரும் நல்லாப் படிச்சு அப்பாவைப் போல பெரிய அறிவாளியா வரவேணும். நேற்று அவற்ற பேச்சைக் கேட்டு எல்லாரும் கைதட்டினவையள்'' என்று நான் அறிவுரை கூறினேன்.

கயல்விழியோ ''அவை பதினொண்டும் போட்டுக் கொண்டு போயிடுவினம் மேடையில பேசுறதுக்கு! வீட்டில பேசிறபேச்சைக் காது குடுத்துக் கேட்க ஏலாது. பெரிய ஆடம்பரமாகப் பிள்ளையளுக்குப் பெயர் வைப்பினம்.ஆனால் கூப்பிடுறது ''எருமை ,சனியன், மூதேவி, நாயே....'' என்றுதான். ஏன் இவைகளையே பெயராக வைத்தால் சுகமாகக்கூப்பிடலாம் தானே?'' என்று வெறுப்பை உமிழ்ந்தாள். சிந்தியா விரக்தி யாகச் சிரித்தாள்.

'' என்ன சிந்தியா சிரிக்கிறாய் ஒரு மாதிரி?'' என்றேன்.

''ஓம்,எனக்கு இப்ப அழுகை மறந்து பல வருடங்களாகிவிட்டது. இப்ப எதை நினைத்தாலும் சிரிப்புத்தான் வருகிறது. முன்பெல்லாம் அவர் ஏதும் பேசினாரெண்டால் கோபிப் பேன்-பிறகு அழுதுகொண்டு இருப்பேன் . இப்ப அப்படியல்ல பல பிரச்சினைகள், பல அனுபவங்கள்,பல எழுத்தாளர்களின் ஆக்கங்கள் என்னை நிறையவே மாற்றிவிட்டன. அறியாமையால் தான் தவறு செய்யினம். ஏன் கோபப்படவேணும்? சிந்தியா தத்துவம் பேசினாள்.

''அப்ப யாரும் தவறு செய்தால் அவையத் திருத்தாம, சிரிச்சுக்கொண்டிருக்க வேணும் எண்டே நீ சொல்லுறாய்?''என்று கேட்டேன்.


''சிரிச்சுக்கொண்டிருக்க வேணும் எண்டு நான் சொல்லவில்லை. ஏன் கோபப்படவேணும் எண்டுதான் கேக்கிறன். அறியாமையால செய்யிற தவறுகளை அவர்களே உணர்ந்து திருந்திற மாதிரி மெதுவாத் திருத்தலாம். என்னுடைய கணவர் என்னைப் பேசினால் நான் இப்பவெல்லாம் கோபிக்கிறதில்லை. ஏதோ உளறுகிறார் எண்டு பேசாமல் விட்டுடுவன்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

**கி.தவபாக்கியம்,**
**அரச வீதி, உரும்பிராய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையைத் தடையாக எண்ணாமல் உறுதியுடன் உழைக்கும் தாய் மனம்



''இரக்கப் போனாலும் சிறக்கப்போ'' என்பதைப் போல் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த மக்களில் குடும்பப் பொறுப்புக்களைச் சுமக்கும் பெண்கள் தமது குடும்பத்தின் வறுமையைத் தீர்ப்பதற்கு எந்த வேலையைச் செய்தாலும் உதவும் என்று எண்ணும்போது அவர்களின் மனம் அறுதலடையும். அந்த வகையில் கடந்த 34 வருடங்களாக பழங்களை விற்பனை செய்து குடும்பப் பொறுப்புக்களையும் தமது தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றார் இந்த வயோதிபத் தாய்.

யாழ்ப்பாணம், கொட்டடி, மீனாட்சியம்மன் கோயிலடியை நிரந்தரமாகக் கொண்டவர் லீலாவதி கமலேஸ்வரன். நான்கு பிள்ளைகளின் தாயாரான இவர் கணவனின் இறப்புக்குப்பின் நிரந்தரமாகவே சிறு தொழிலை செய்து பிழைக்கவேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளதோடு தனது பிள்ளைகளின் கல்விச் செலவு உட்பட ஏனை தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய கடமை இவருக்கே வந்துள்ளது.

இதனால் கடந்த 34 வருடங்களாக யாழ்.நகரின் பொதுச் சந்தையில் பழங்கள் விற்பனை செய்து அதில் வரும் வருவாயில் அன்றாட தேவைகளை நிறைவேற்றி வருகின்றார்.


பழ விற்பனைகளில் குறிப்பாக பலாப்பழத்தை வெட்டி விற்பதுதான் தற்போது இவரது பிரதான தொழிலாக இருக்கிறது. வியாபாரத்துக்குத் தேவையான பழங்களை யாழ். நகரின் பொதுச் சந்தையிலேயே வாங்கி அதைத் தேவைக்கேற்ற முறையில் வெட்டி பாவனையாளர்களுக்கு விற்பனை செய்து வருகிறார். தற்போது பலாப் பழ காலம் ஆரம்பித்துள்ளதால் தனது வியாபாரம் கொஞ்சம் வீழ்ச்சியடைந்துள்ளதாக இந்தப் பெண்மணி தனது கவலையைத் தெரிவிக்கின்றார்.

ஆனாலும் வெளியிடங்களில் இருந்து வரும் சிலர் ஆசையுடன் பலாப்பழம் வாங்கிச் செல்வார்கள். இதனால் குறித்த நேரத்தில் எனது வியாபாரம் முடிவடைந்து விடும். அதனால் நாள் முழுதும் காத்திருந்து வியாபாரம் செய்யவேண்டிய தேவை இல்லை.

எனது வியாபாரத்தில் கிடைக்கும், கிடைத்த வருவாய் மூலம் தான் எனது பிள்ளைகளுக்கு நான் திரு மணம் செய்து வைத்தேன். அவர்கள் தற்போது தனிக் குடும்பங்களாகச் சென்றதால் எனது கடமைகள் கொஞ்சம் குறைவடைந்து விட்டதோடு எனது முதுமைக் காலத்தில் பிள்ளைகளுக்கோ, உறவினர்களுக்கோ இடைஞ்சல் இல்லா மல் சந்தோசமாக எனது பேரனுடன் தங்கி இருக்கின்றேன். அவர்களுக்கும் துன்பங்களைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக நான் இயலுமானவரை வேலை செய்து வருகிறேன். எனது பிள்ளைகளில் ஒரு மகனை கடந்த 22 வருடங்களாகக் காணவில்லை. இது தொடர்பாக அனைத்து இடங்களிலும் முறைப்பாடுகளைச் செய்துள்ளேன். எனது இந்த வியாபாரம் எனக்கு பணத்தைப் பொற்றுத் தந்தாலும் வேதனையுடன் வாழ்ந்து வருகிறேன். நான்செய்யும் வியாபாரத்தில் பலாப் பழம் மட்டுமே விற்பனை செய்வது கிடையாது ஏனைய பழங்களின் காலங்களைப் பொறுத்து அவற்றையும் விற்பனை செய்வேன் என்கிறார். இன்று எத்தனையோ பெண்கள் முதுமைக்காலத்தில் உறவுகளாலும் சமூகத்தா லும் ஒதுக்கப்பட்டு மன உளைச்சல்களைச் சந்தித்து வருகின்றனர். இவர்கள் தமது முதுமையை ஒரு தடையாகக் கருதாமல் உழைத்து வாழ வேண்டும் எனும் மனத்தைரியத்துடன் சுயமாகத் தொழில் செய்து உழைக்கும் பெண்கள் எத்தனை பேர் இருக்கின்றனர். முதுமையடைந்துவிட்டால் வீட்டுக்குச் சுமை எனக் கருதி அவர்களை வேலைக்காரிகளாக நடத்த சில உறவுகள் தயங்குவதில்லை. அத்துடன் வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டு முதியோர இல்லங்களில் தள்ளிவிடாமலும் இல்லை. இந்த நிலை மாறுவதற்கு இவர் போன்ற பெண்கள் எடுத்துக் காட்டாக வாழ்கின்றனர் என்பதே உண்மை. கடந்த 34 வருடங்கள் கடந்த நிலையிலும் சற்றுக்கூட களைப்பையும் பொறுப்பையும் வெளிக் காட்டாமல் அன்றாட வருமானம் கிடைக்கும் சந்தோசத்தில் துல்லியமாகச் செயற்படுகின்றார் இந்தப் பெண் மணி.

**பாண்டியம்மா**

# சீதனம்...!



ஏலத்தில் விற்றும்
இந்தச் சந்தையில்
விலைபோகவில்லை இவள்....

மரத்துப் போய்விட்டது
மனம்
காலில்லாதவன்
செருப்புப்போட
ஆசைப்பட்டதுபோல
காசில்லாத திருமண
வாழ்க்கை...

கூந்தலில் ஊடுருவும்
வெள்ளிக் கீற்றுகள்
அவளின் மனக்குமுறல்
உயிரையே உலையில்
போடுகிறது

சாமிக்கெல்லாம்
நேர்த்தி வைத்து
காத்திருக்கிறாள்
பாவிமகள் இராமர்களின்
வரவை எண்ணி

**து. சுதர்சன்,**
2ஆம் வருடம், ஆரம்பக்கல்வி,
யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி.

## வாழ்வுக்கு சில...

★ உங்கள் அழகிலும் ஆரோக்கியத்திலும் என்றும் அக்கறையுடன் இருங்கள்.

★ ஒரு நாளைக்கு ஒரு நிமிடமாவது உங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க நேரம் ஒதுக்குங்கள்.

★ பிறரில் அக்கறை காட்டுவதை விட உங்கள் மீது அக்கறை காட்ட முயற்சிப்பதோடு உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க கற்றுக்கொள்ளுங்கள்.

★ உங்கள் கோபத்தை மற்றவர்கள் மீது திணிக்காது எப்போதும் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள்.

★ துன்பங்கள் வரும் போது அதிலிருந்து விடுபட கற்றுக் கொள்ள வேண்டும்.

★ தேவையில்லாத விடயங்களில் அதிக அக்கறை காட்டுவதை விட சுயமாக சிந்திக்கவும் முடிவெடுக்கவும் பழகிக் கொள்ளுங்கள்.

★ நம்பிக்கைக்கு உரியவருடன் நட்பு வைக்க மறவாது அவர்களிடமும் எச்சரிக்கையாக இருங்கள்.

**-நிலா**

# பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கும்போது அதற்கான விளைவை எதிர்கொள்வது பெண்களே...!

பெண்கள் தொழில் செய்யும் இடங்களில் பல்வேறு பட்ட பாலியல் ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் போதிலும் அதனை வெளிப்படுத்தவோ அல்லது அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ பின்தங்கிச் செல்லும் நிலை இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

பொதுவாகப் பெண்கள் தொழில் புரியும் இடங்களில் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கவே நேரிடுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து விடுபடுவதற்கு என்ன செய்ய வேண்டும் எவ்வாறான வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமின்றி தொந்தரவு கொடுப்பேரிடம் இருந்து இவர்கள் விலகி நிற்க வேண்டியது அவசியமாகின்றது. நீங்கள் வேலை செய்யும் பகுதியைத் தனிமையாக வைத்திருக்காமல் ஏனைய ஊழியர்களின் பார்வை உங்கள் மீது படக் கூடிய வகையில் அமைந்திருப்பது இதில் முக்கியமாகின்றது.

குறிப்பாக பாலியல் ரீதியான தொந்தரவுகளையும், மன உளைச்சல்களையும், எதிர்கொள்ளும் ஒவ்வொரு பெண்களும் பயம், வெட்கம் காரணமாக அதனை வேறு எவரிடம் வெளிப்படுத்தாமல் தமக்குள் மறைத்து விடுகின்றனர். இந்தச் செயற்பாடுகள் தொந்தரவு கொடுப்போருக்கு இன்னும் சாதகமாகி விடுகின்றதே தவிர அவர்களைத் திருத்துவதற்கோ அல்லது அதிலிருந்து பாதிக்கப்பட்ட பெண்கள் விலகுவதற்கோ வழி கிடைப்பதில்லை.

இதனால் ஏற்படும் பின்விளைவுகளைப் பெண்கள் சந்திக்க [illegible] குடும்ப [illegible] தொழிலுக்குச் சென்றே ஆகவேண்டும் என்ற கட்டத்தில் இருக்கும் பெண்கள் இவ்வாறான பிரச்சினைகளால் பெண்கள் உடல் உள ரீதியாகப் பாதிக்கப்படுவதுடன் , தொழிலில் இருந்து விலகவும் முடியாமல் தொழில் செய்யவும் முடியாமல் பெரும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.இந்த நிலையில் குடும்பத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளதால் குடும்பப் பொறுப்புக்களைக் கொண்டு நடத்தமுடியாமல் அல்லல்பட்டு வருவதையும் சமூகத்தில் பரவலாகக் காணமுடிகின்றது.

தொழில் புரியும் இடங்களில் பெண்கள் பாலியல் ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது அது தொடர்பாக மேலதிகாரியிடம் முறைப்பாடு செய்ய வேண்டியதுடன் மேலதிகாரிக்கு உறுதிப்படுத்தக் கூடிய வகையில் இதற்கான ஆதாரங்களைத் தேடுவதிலும் அவதானமாக இருக்க வேண்டும். இதில் பயப்பிடுவதற்கோ அல்லது வெட்கப்படுவதற்கோ எதுவும் இல்லை. இவ்வாறான பிரச்சிணைகள் ஏற்படுமிடத்து எந்த நேரமும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதும் அவசியமகின்றது.

எனவே இத்தகைய விடயங்களைக் கருத்தில் கொண்டு ஏனோ தானோ என்று வாழ ஆரம்பித்தால் எமது வாழ்வைத் தொலைத்து எதிர்கால இலட்சியங்களை இழந்து துன்பத்துடன் வீட்டுக்குள் அடங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். அதற்கு யாரும் இடமளிக்கக் கூடாது என்பதே இன்றைய சூழலில் தேவையாகவுள்ளது.

**-சஞ்சி,** யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் நாயனார்



நாயன்மார் எனப்படுபவர்கள் யார் தெரியுமா? சிவனை நாயகனாய் போற்றுபவர்களையே நாயன்மார்கள் என்று கூறுவதுண்டு. அவர்கள் தூங்கும் போதும் சிவனையே நினைத்துக் கொண்டு இருப்பார்கள்.

இதற்கு எடுத்துக் காட்டாக ராஜா ஒருவர், விழுப்புரத்துக்கு அருகில் இருக்கின்ற திருக்கோவிலூர் என்ற ஊரில் ஆட்சி செய்தார். அவ ருடைய பெயர் மெய்ப்பொருள் நாயனார். அவரை வேறு எந்தநாட்டு ராஜாவாலும் வெற்றிகொள்ளமுடிய வில்லை. காரணம் அவரிடம் இருந்த சிவபக்தியும், விசுவாசமான வீரர்களும். அதுமட்டு மன்றி அவரும் எல்லாருக்கும் வாரி வாரிக்கொடுத்து உதவி செய்வார். அதனால் எல்லோரும் அவரை சுவாமி என்றே வணங்குவார்கள்.

இதைப் பார்த்த ஏனைய நாட்டு ராஜாக்களுக்குப் பொறாமை. இவரை எப்படியாவது தோற் கடித்து, இவருடைய நாட்டைப் பிடிக்க வேண்டும் என்று பல தடவை முயற்சி செய்தும் தோற்றுவிட்டார்கள்.

இந்த ராஜா விபூதி பூசி ருத்திராட்ச மாலை போட்டுக்கொண்டு யார் வந்தாலும் அவர்களுக்குத் தேவையான உடை, உணவு எல்லாம் கொடுப்பார். இதைத் தெரிந்து கொண்ட எதிரி நாட்டு ராஜா ஒருவன் என்ன செய்தான் தெரியுமா? தன்னிடம் இருந்த ஒற்றன் ஒருத்தனை திருக்கோவிலூருக்கு சிவனடியார் வேஷத்தில் அனுப்பி வைத்தான். அவனுடைய பெயர் மூத்தநாதன்.அவனும் வேடம் போட்டுக்கொண்டு நாட்டுக்குள்ளே நுழைந்து நேரே அரண்மனைக்குப் போனான். இவனுடைய விபூதியையும் ருத்திராட்ச மாலையையும் பார்த்த காவலாளிகள் உள்ளே அனுமதித்துவிட்டனர். அப்போது மன்னர் மெய்ப்பொருள் நாயனார் அரச சபையில் இருந்தார். சபைக்கு ஒரு சிவனடியார் வருகிறார் என்றவுடன், அவரை ஓடி வந்து வரவேற்றார்.

சிவனடியார் வேடத்தில் இருந்த முத்தநாதன், தன்னுடைய வேலையை ஆரம்பித்தான். அவன் மன்னனை நோக்கி, மன்னா நான் பல அரிய மந்திரங்களையெல்லாம் பல காலம் தவம் செய்து பெற்றிருக்கிறேன். அவற்றில் சிலவற்றை உங்களுக்குத் தரவே வந்திருக்கிறேன் என்றான்.

இதைக்கேட்ட மன்னனும் மகிழ்ச்சியடைந்து, ஐயா நாங்கள் செய்த பாக்கியம் இது. உங்கள் விருப்பப்படி பெற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன் என்றார். இதைச் சற்றும் எதிர்பார்க்காத முத்தநாதன் சமாளித்துக் கொண்டு, ஐயா இதை நான் எல்லோர் முன்னாலும் உங்களுக்குத் தரமுடியாது. தனியான இடத்தில்தான் தரமுடியும் அதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றான். மன்னனும் தன்னுடைய தனிமாளிகைக்கு முத்தநாதனை அழைத்துச் சென்றார். சிவனடியார் வேடத்திலிருந்த முத்தநாதன் ஏதோ மந்திரம் சொல்வது போலநடித்து, மன்னர் காணாத வேளையில், தன்னுடைய இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியால், மன்னர் மெய்ப்பொருள் நாயனாரின் வயிற்றில் குத்தி விட்டான். இதை அரண்மனை ஒற்றன் ஒருவன் பார்த்துவிட்டு, முத்தநாதனைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொலை செய்யப் பாய்ந்துவிட்டான்.

இதைக்கண்ட மன்னர் மெய்ப்பொருள் நாயனார், முத்தநாதனைப் பிடித்த தனது வீரனை, ''இவர் நம்மவர், இவர் கெடுதல் செய்திருந்தாலும், இவருக்கு நாம் தீங்கு செய்யக்கூடாது. ஆகவே இவரை நம் நாட்டு எல்லை வரை கவனமாக விட்டு வரவேண்டியது உன்பொறுப்பு'' என்று கூறி உயிரை விட்டார். மன்னரை சிவனடியார் வேடத்தில் வந்த ஒருவன் கொன்றுவிட்டான் என்ற செய்தி காட்டுத்தீயாய் பரவி மக்கள் அனைவரும் அரண் மனைமுன் கூடிவிட்டனர். தனக்கு சதி மூலம் தீங்கு செய்வதனுக்கும் கருணை காட்டி உயிர்ப் பிச்சையளித்த மன்னர் மெய்ப்பொருள் நாயனாரின் சிவபக்தி இன்றளவும் பக்தியுடன் போற்றப்படுகிறது.

அ.கனுஷா, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

# சிந்தனைத் துளிகள்...

★எப்போதும் பணத்தைப் பற்றி சிந்திக்காதே அது உன்னை அழித்துவிடும்.

★தோல்வியைக் கண்டு பயப்படாதே திரும்பிப் பார் அங்கே வெற்றியின் விலாசம் விழுந்துகிடப்பதை.

★திடமான மனத்தோடு உழைப்பவருக்கு இறைவன் உதவ காத்துக்கொண்டிருப்பான்.

★சிலரை சிலகாலம் ஏமாற்றலாம்; பலரை பல காலம் ஏமாற்றலாம்; எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற முடியாது.

★அறிவு ஞானத்தைத் தேடிச்செல்பவருக்கு இறைவன் கவனத்தின் வாசலைத் திறந்துவிடுவான்.

★அழகுள்ள முகத்தினைத் தேடாதே அறிவுள்ள மனத்தினைத் தேடு.

★நீ பிறருக்கு என்ன செய்கிறாயோ அதைப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்வாய்.

★கடின உழைப்பொன்றுதான் ஒரு மனிதன் செய்யும் வேலைக்கு சிறந்த முதல்.

க.மதுசன்
தரம்-06, யா/கைதடி நுணாவில்
அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.



# சிறப்புமிகு சின்னங்கள்

| | |
|---|---|
| சேமிப்பின் சின்னம் | - எறும்பு |
| தந்திரத்தின் சின்னம் | - நரி |
| கருணையின் சின்னம் | - நாய் |
| தியாகத்தின் சின்னம் | - அன்னை கஸ்தூரி |
| ஒற்றுமையின் சின்னம் | - காகம் |
| பொறுமையின் சின்னம் | - கழுதை |
| தொண்டின் சின்னம் | - அன்னைத் தெரேசா |
| அன்பின் சின்னம் | - தாஜ்மஹால் |
| அமைதியின் சின்னம் | - புறா |

ச.லக்சி, தரம் 7ஏ,
யாழ். சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

# பொன்மொழிகள்

தலை சிறந்த மரணத்தை விட மட்டமான வாழ்கையே மேலானது!
குழம்பிய குட்டையில் முகம் தெரியாது குழப்பமான உள்ளத்தில் நியாயம் தெரியாது.
பூனை முட்டாளாக இருந்தால் அதை எலி விரட்டியடித்துவிடும்.
ஆணுக்கு போர் எப்படியோ, அப்படியே பெண்ணுக்கு பிரசவம்.
காதைப் பிடித்து இழுத்தால் தலை பின் தொடர்ந்து வரும்.
ஒரு வெளவால் வீட்டுக்கு இன்னொரு வெளவால் வந்தால் அதுவும் தொங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும்.
பழக்கமில்லாதவன் தன் பல்லையும் கூட சுத்தம் செய்ய முடியாது.
ஒரு நிமிடக் கோபம் ஓராயிரம் வருடப் புகழையும் அழித்துவிடும்.
தேன் மலரைக் கண்டுபிடிக்கத் தெரியாத தேனீக்கு பட்டினிதான் பரிசு.

க.மதுசன்
தரம்-06, யா/கைதடி நுணாவில்
அ.த.க.பாடசாலை.

## விடை தெரியுமா? 112

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகில் உள்ள மிகப்பெரிய நீச்சல் குளம் எந்த நாட்டில் உள்ளது அதன் மொத்தப் பரப்பளவு எவ்வளவு?
2. சோவியத் ரஷ்யாவில் இருந்து தனிநாடாகப் பிரிந்துள்ள நாடு எது?
3. உலக குருதிக் கொடையாளர் தினம் எப்போது அனுஷ்டிக்கப் படுகிறது?
4. இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹமானுக்கு 2009 ஆம் ஆண்டு எத்திரைப்படத்துக்காக 2 ஒஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டன?
5. சீன துணை அதிபர் பெயர் என்ன?

### விடைகள் 110

1.திருமதி மதுமதி வசந்தகுமார்
2.விளாடி மிர்புடின்
3.வளர்ந்த நாடுகளின் மாநாடு ஜி-8
4.கனடா நாட்டின் ரொறண்டோ நகரில் உள்ள உலக சுகாதார நிறுவனம்
5.ஆபாதான் எண்ணை சுத்திகரிப்பு நிலையம்

### வெற்றி பெற்றவர் விவரம்

1. சி.நிறோஜன்
தரம் 6, யாழ்.நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.
2. யோ.சிவரஞ்சினி
தரம் 8, யா/ மட்டுவில் கமலாசினி க.ம.வி.
3. ஜ.சாம்பவி
தரம் 8ஈ, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.
4. தே.அகுலப்பிரியன்
யாழ்.கச்சேரி நல்லூர் வீதி.


**விடை தெரியுமா?**

தெரிந்தால் 25.06.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.





இ.விதுஷன்,
அரவெளி பாலர் பாடசாலை, மீசாலை.



கே.வாகினி, தரம் 3ஏ,
மாவிட்டபுரம் சர்வோதய பாடசாலை.




கு.கஜப்பிரியன், தரம் 11,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.



அ.துவின்நாஸ்,
சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்



உ.கபிலசர்மா, தரம்2 ,
யா/கோக்குவில் இந்துக் கல்லூரி.



கு.கரிகரன், தரம் 2,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்

1 கிலோ அரிசி 2600 ரூபா
100 கிராம் சீனி 1100 ரூபா
100 கிராம் செத்தல் 2800 ரூபா
2 பனடோல் 500 ரூபா
ஓ....
எல்லாமே
நல்ல விலை போனது
அங்கே
சும்மா போனது
எம் உயிர்கள் மட்டும்தான்!

தேவான் சுரேஷ்,
மன்னார்.

## செல்போனில் சேகரித்த காதல்



இலக்கத்தை அழுத்தி
இன்முகத்துடன் என் அவளைச் சந்திக்க
செல்போனை அடித்தேன்
என் அவளின் செல்போன்
செல்லரித்துப் போனது
துடித்தது என் இதயம் பல நாள்கள்
அவளின் குரல் துடிப்பின்றி
கண்ணீர் வடிப்பிலே என் பயணம் ஆனது
எடுப்பாள் என்னவள் என்று
எத்தனை நாள்கள் காத்திருந்தும்
எனக்கு எந்த அழைப்புமே
அவளிடமிருந்து எட்டிக் கொள்ளவில்லை
எட்டாத கனிக்கு கொட்டாவியாய்
என் பயணமும் திக்கற்றுப் போனது
உறக்கமின்றி நான்
உணவின்றி நான்
உணர்வற்று நான்
இதுவெல்லாம் என் அவளின்
உதயமற்றதால்
படிப்பிலே இருந்த துடிப்பை விட
அவள் நினைவுப் பிடிப்பிலே
விடிந்தது பல காலை....
அன்னமவள் என்னவள்தான்
கன்னியவள்தான் இருந்தும்
ஆசையோடு மறுபடியும்
செல்போனை அழுத்த
ஆறடியில் அடங்கும் வாழ்க்கை போல்
அழைப்பின் மணி அற்றதால்
நானும் அமைதியானேன்
ஆண்டவா ஏன் என்னை
காண்டாவனமாக்கிவிட்டாய்
கண் விழித்துப் பாரையா
கல்லுக்குள்ளும் ஈரமுண்டு கசியுமையா
கண்ணீரோடு கலந்தேன்
கறுத்த நாள்களாய் இருந்த
நாள்கள் நகர்ந்து போக
காகங்கள் கரைவது போல்
ஹலோ என்று ஒரு அழைப்பு
மறுதாக்கமாய் அக்கணமே
ஹலோ என்று சொல்ல
எப்படி இருக்கிறாய் என்றாள்
நம்பவே முடியவில்லை
தெம்புதான் இல்லையாயினும்
பல நிமிடங்கள் பிரசங்கமாய்
தொடர்கதை சென்றது
பதிலுக்கு நானும்
உள்ளக் குமுறலைக்
கொட்டித் தீர்த்தேன்
அறுசுவையிலும் பார்க்க அவளின்
கதை ருசியில் சிக்கிக் கொண்டேன்
சிக்க வேண்டிய வலையானதால்

ஜெயாம் ஜெகன்,
புதுக்குடியிருப்பு.

## நினைவுத் தணல்



வெறுமையானது
நிறையப் பெறாமல்
நினைவுத் தணலில் வேகின்றது
எம்-எதிர்காலம்
உணர்ச்சிகள்
பாசக் கடலில் முத்தெடுக்கப்போய்
கிடைத்ததோ மரணப்பரிசு

சுதந்திரம்
அமைதியை இழந்து
பெற்றதோ கண்ணீர்ச் சுமைகள்

பாடைகள்
உற்பத்தியாகித் தீர்ந்தும் விட்டது
ஆனால் மனித இழப்புக்கள்
இருப்பில்தான் இருக்கின்றன.....

ஜே.எல்.ராஜ்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## சந்தேகம்



என்னிடம் கடிதம்
தந்துவிட்டு போனவனை
கலைத்துச் சென்று
தாக்கிய பின்னர் தான்
என் அப்பாவுக்குப் புரிந்தது
அவன் என் காதலன் அல்ல
புதிதாக வந்த எங்கள் ஊர்
தபால்காரன் என்று....

## விடுதலை

என் பிள்ளை
விடுதலை ஆக
இன்னும் நான்கு
மாதங்கள் உண்டு
ஏன் எனில்
இப்போது தான்
என்மனைவி
ஆறு மாதக்
கர்ப்பவதி.

முகமாலை ஊர்
செ.நாதன்



## வேஷம் போடும் உலகமே வேண்டாம் எம்மை வாழ விடு



மீளவும் மீளவும்
நியாயத் தராசில்
நிறுக்கப்படுகிறதெம் எதிர்காலம்
முடிவிலியாய்த் தொடரும்
இப் பயணமதில்
எதுவும் நிகழும் என்ற
நம்பிக்கை எமக்கில்லை
அன்றிலிருந்து இன்றுவரை
நாங்கள் யாருக்காகவோ
படைக்கப்பட்டவர்கள்தான்
நிருபித்தபடி
நகர்கிறது காலம்
ஒரு நம்பிக்கையில்
மீளெழும் போதெல்லாம்
எதிர்வொடு
குதர்க்கத்தினுள்
குதறப்படுகிறதெம்வாழ்வு
அன்று எம் அழுகைகளை
அரட்டை செய்து
எல்லோர்க்கும்
நாங்கள் இன்று
பந்துகளாகிப் போனதால்தான்
எம் மேல் பாசம் வந்திருக்கிறது
வேஷம் போடும் உலகமே
வேண்டாம் எம்மை வாழவிடு

புலோலியூர் வேல்நந்தன்.

## எத்தனை தலைவர்கள் எத்தனை நிறங்கள்

இந்த நாட்டில்....
மாபெரும்
மாண்புமிகு
தலைவர்;
அவர் தம்
இரத்தத்தின்
இரத்தமான
ஓர் இளம்
தலைவர்
உறவிலொரு
அதிகாரம்மிக்க
தலைவர்
பாதுகாப்பு வேண்டியே
உறவிற் பிறிதொரு
தலைவர் உழைப்பதற்கே
அனுசரணை பெற்ற
கறுப்பிதய
ஊழல் தலைவர்கள்
வேண்டியவர்களை
வேண்டிய இடத்தில்
வேகமாய் குடியமர்த்தும்
சாயம் போன
சிவப்புத் தலைவர்
அராஜயங்களுக்கு
ஆசி வழங்கும்
காவித் தலைவர்
''பல்டி'' அடித்து வந்த
பச்சைத் தலைவர்கள்
சண்டித் தனங்களுக்கென்றே
சரியான ஒரு
மஞ்சள் முகத் தலைவர்
இவர் மக்களை
அடிப்பார், உதைப்பார்
நலிந்த மக்களை
மரங்களிலும்
கட்டி வைப்பார்.
நிறுவனங்களை
நிர்மூலமாக்குவார்
மாடுகளையும்
மாயமாக்குவார்
கலாநிதியாம் இவர்...
எத்துறையில் எனத்
தெரிந்து கொண்டால்
எம் பிள்ளைகளும்
படிக்கலாமன்றோ?
எதிர்நாளில் எம்
அவரும் ஒருநாள்
மந்திரியாவார்!
மன்னர்களுக்கு
ஏதய்யா...
இந்நாட்டில் செல்வாக்கு
மந்திரிகளுக்கே நல்வாழ்வு....!

இத்தனைக்கும்
வேடிக்கை
என்னவென்றால்...
தனக்குப் பின்னே
இத்தனை தலைமை
இத்தனை நிறங்கள்
இருப்பது
மாண்புமிகு தலைமைக்குத்
தெரியாமைதான்

தனக்குப் பின்புறம்
நடக்கும்
தவறுகள், சதிகள்
தெரியாமல் இருப்பதுதான்
தலைமைத்துவ
தவறுகளாம்...!

வெளிப்பகை முன்னின்று
தாக்கும் நிலைமைகள்
உச்சத்தில் இருக்கையிலே
உட்பகை
சேர்ந்தே வளரும்
தருணத்தில் முதுகின்
பின்னின்று குத்தும்

யூலியஸ் சீசர் கூட
இப்படித்தான்
இருந்தான்
ஈற்றில்...
புரூட்டஸ் நீயுமா?
என வியந்தே
தரையில் வீழ்ந்து
மடிந்தான்
இது எனது
கூற்றல்ல
வரலாற்று வடுக்கள்....!

ஏ.எம்.கமால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசை கலங்க வைத்துள்ள சனல்- 4 வீடியோ









ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

எங்கும் சனல்-4 என்பதே பேச்சு இலங்கையின் மானம் காற்றிலே போச்சு. தெருவிலே கேட்ட பாடல் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் திரும்பவும் பிறந்து வந்துவிட்டாரோ என்ற கேள்வியுடன் தெருவை எட்டிப் பார்த்த போது ஒருவர் இந்தப் பாட்டை ராகம், தாளம் பிசகாமல் பாடிக் கொண்டு வந்தார். சற்று வயது முதிர்ந்த அவரின் நடையில் தெரிந்த மெல்லிய தள்ளாட்டம் அவருள் 'காய் பிரட்டிக் கள்ளு' வேலை செய்வதாக ஒரு ஊகத்தை ஏற்படுத்தியது.

அவர் கிட்ட வந்ததும் ''ஐயா நானும் நீங்களும் கூட இலங்கையர் தானே. எங்கடை மானம் ஏன் போகப் போகுது?'' எனக் கேட்டேன். அவர் பாட்டை நிறுத்திவிட்டு என்னைப் பார்த்தார்.

நான் ''இப்படிப் பாடினால் நல்லாய் இருக்கும்'' என்று விட்டு ''எவரும் சனல்- 4 என்பதே பேச்சு, அரச மானம் காற்றிலே போச்சு'' என்று பாடுங்கோ என்றேன்.

''அடியடா சங்கை! நீதான் பாட்டுக்காரன்'' என்று விட்டு நான் கூறியதையே பாடிக்கொண்டு போக ஆரம்பித்தார். அந்த முதியவர் முதலில் பாடிய வரிகளைக் குறைகூறிவிடவும் முடியாது. ஏனெனில் இலங்கையின் ஆட்சியாளர்களாலும், படையினராலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாகவோ, மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவோ குற்றச்சாட்டுக்கள் எழும் போது அவை இலங்கையின் இறைமைக்கும் நற்பெய ருக்கும் எதிராகத் தொடுக்கப்படும் கணைகள் என் றொரு மாயை அரச தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது

ஆனால் குற்றமிழைத்ததாகக் கருதப்படுவது சில அதிகார வெறிபிடித்த தனி நபர்களேயொழிய இலங்கை நாடோ அல்லது இலங்கை மக்களோ அல்ல. அதைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்ளும் நாள் கள் வெகுதொலைவில் இல்லை என்பதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துவிட்டன. ஏனெனில் கடந்த காலங்களில் கட்ட விழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகளும் உயிர்ப்பலிகளும் இப்போ மெல்ல மெல்ல சிங்கள மக்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறன.

எனினும் ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலரும் தங்களுக்கு எதிராக நீட்டப்படும் குற்றச்சாட்டுகளை முழுநாட்டின் மீதும் சுமத்தப்படுவதாக ஒரு மாயையை ஏற்படுத்துவதிலேயே குறியாக இருக்கின்றனர். அப்பணியைப் பல அமைச்சர்களும் அரச சார்பு ஊடகங்களும் அட்சரம் பிசகாமலே தொடர்ந்து வருகின்றன.

எப்படியிருந்த போதிலும் சனல்- 4 வெளியிட்ட இலங்கையின் கொலைக் களம் என்ற இந்த வீடியோ நாடா உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி ஏற்கனவே இலங்கை அரசு தொடர்பாகக் கண்டனங்களை வெளியிட்டு வந்த மனித உரிமை அமைப்புக்களை மேலும் கோபாவேசமடைய வைத்திருக்கிறது.

இந்தப் படக்காட்சி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் மாநாட்டில் காட்டப்பட்ட போது பல பிரதிநிதிகள் கண்ணீர் விட்டனர். சிலர் காட்சிகள் சிலவற்றைப் பார்க்க முடியாது கண்களை மூடிவிட்டனர். காட்சி முடிந்த பின்பும் பலர் திகைத்துப் போய் எதுவும் செய்ய முடியாது உறைந்து போயிருந்ததாகக் கூடக் கூறப்படுகிறது.

இதுவரை இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்கள் வெறும் குற்றச்சாட்டுக்களாகவும் அரசின் நிராகரிப்புகளாகவுமே விளங்கி வந்தன. ஆனால் ஐ.நா நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையோ அப்பிரச்சினையை இன்னொரு கட்டத்துக்கு உயர்த்திவிட்டது. எவ்வளவுதான் இலங்கை அரசு அதற்குத் தனது எதிர்ப்பைக் காட்டியபோதும் அதை நிராகரிப்பதாகச் சவால் விட்டபோதிலும் உலக அளவில் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்கள், ஆலோசனைகள் இலங்கை அரசினால் கூடப் புறமொதுக்க முடியாத வகையில் வலிமையாக இருந்தன. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் போன்ற பல நாடுகள் உடனடியாகச் சர்வதேசத் தரம் கொண்ட விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்த ஆரம்பித்தன. இந்த விடயத்தில் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் கூட இலங்கையை ஐ.நா நிபுணர் குழுவுக்கு எதிரான குரல்களை அடக்கி வாசிக்கும் படி எச்சரித்துள்ளன. இலங்கை அரசு அந்த அறிக் கையைத் நிராகரித்துவிட்டதாகக் கூறியபோதும் ஐ.நா செயலர் பான்கீ மூன் தாம் இந்த அறிக்கை தொடர்பாக இலங்கையின் பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் அதன் பின்பே அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கப்படும் என அறிவித்துள்ளமையும் இலங்கை அரசைத் திக்குமுக்காட வைத்துள்ளது. இப்படியான நிலையில்தான் இலங்கையின் கொலைக்களம் என்ற சனல்-4 வெளியிட்ட வீடியோ வெளியாகியுள்ளது.

கடந்த 14 ஆம் நாளன்று அது பகிரங்கமாகவே ஒளிபரப்பப்பட்ட போது உலகம் முழுவதுமே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. நாற்புறமும் சர்வதேச அளவிலான கண்டனங்கள் எழுந்தன.

குறிப்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரிட்டன் பிரதமர் டேவிட் கம்ரூன் இவை தொடர்பாக உடனடி விசாரணை நடத்தப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். அதேவேளையில் பிரிட்டன் வெளி விவகார அமைச்சர் அந்த விடயங்கள் தொடர்பாக நேர்மையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். இலங்கை அரசோ நாம் இது தொடர்பாகப் பரிசீலனை செய்ததாகவும் அவை போலியானவை எனவும் கூறி நிராகரித்துவிட்டது. ஆனால் சனல்- 4 நிகழ்ச்சித் தயாரிப்பாளரோ இதில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு காட்சியையும் ஆறு நிபுணர்கள் மூலம் பரிசோதித்து அவை அத்தனையும் உண்மையானவை எனக் கண்டறிந்ததாகவும் அடித்துக் கூறியுள்ளார்.

இது இலங்கை அரசின் மறுப்புரைகளுக்கு ஆப்பு வைக்கும் வகையிலேயே வலிமையானதாகத் தெரிகிறது. அதேவேளையில் வெளிவிவகார அமைச்சு இதில் காணப்படுபவை உண்மையானால் அது தொடர்பாக இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணை செய்யும் எனத் தெரிவித்துள்ளது.

எப்படியிருந்த போதிலும் சனல்- 4 இலங்கை அரசை ஒரு சர்வதேச நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது என்பது உண்மை. ஆனால் இலங்கை அரசு உள்ளூரில் நாட்டின் இறைமை, அந்நிய சக்திகளின் சதி போன்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு சிங்கள மக்களைத் தன் பால் வைத்திருக்கும் அதேவேளையில் ராஜதந்திர ரீதியில் சர்வதேச அழுத்தங்களைத் தவிர்க்கச் சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

தன் பின்னால் இலங்கை மக்கள் அனைவரும் நிற்கிறார்கள் என்பதைச் சர்வதேசத்துக்குக் காட்ட ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையையோ, சனல்- 4 வீடியோவையோ தமிழ், சிங்கள, முஸ் லிம் மக்கள் அனைவரும் எதிர்க்கின்றனர் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

விமல் வீரவன்சவும், ஜாதிக ஹெல உறுமயவும் சில அமைச்சர்களும் அரசின் போர்க்குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் சிங்கள மக்கள் மறுக்கிறார்கள் எனவும் அரசுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள் எனவும் ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்த என்ன விலையைக் கொடுக்கவும் தயாராயுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமோ சனல்- 4 நிறுவனம் மேல் வழக்குத் தொடரப்போவதாகக் கூறித் தன் விசுவாசத்தை வெளிப்படுத்தியுள்ளார். ஏனைய அரசுடன் இணைந்துள்ள முஸ்லிம் தலைவர்களும் இந்த விடயத்தில் அரசு சார்பாகச் செயற்படுவார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ, பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரனோ, கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தனோ ஐ.நா நிபுணர் குழுவுக்கு எதிராகவோ, சனல்-4 இற்கு எதிராகவோ ஆயிரம் தரம் அறிக்கை விடவும் தயார்.

இன்று இலங்கை மக்கள் அனைவரும் ஐ.நா நிபுணர்குழு அறிக்கையையும் சனல்- 4 வீடியோவையும் எதிர்க்கிறார்கள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தத் தடையாக இருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. எலும்புத் துண்டுகளை எறிந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விலைக்கு வாங்கிவிட முடியாது என்பதையும் அரசு தெளிவாகவே தெரிந்து வைத்திருக்கிறது.

எனவே அடுத்த கட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அடக்கி வைப்பது. அதன் ஆரம்பம் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதல் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் மீது இராணுவச் சீருடை அணிந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள். ஏற்கனவே சிவஞானம் ஸ்ரீதரன் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியும், சரவணபவனுக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டலும் இங்கு கவனிக்கத்தக்கவை. தேர்தல் பிரசாரங்களைத் தடுப்பது, சாதாரண நடமாட்டங்களுக்கு அச்சுறுத்தல் விடுவது, பொதுமக்களை மிரட்டுவது போன்ற நடவடிக்கைகளும் தொடரலாம்.

இப்போது அளவெட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தேர்தல் நோக்கத்துடன் மட்டுப்படுத்தப்படக் கூடியதல்ல. தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் தமிழ் மக்களின் குரலை அடக்கி, அரசின் ஏவலாளர்களின் குரலை தமிழ் மக்களின் குரலாகக் காட்டக் கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தும் ஒரு நீண்ட நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பிரதியாகும். எனவே இந்த விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் மிக மிக விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 19.06.2011 முதல் 25.06.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஊக்கம், உற்சாகம் கூடும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். சிலருடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். கவனக்குறைவாக சில வேலைகளைச் செய்து அவதிப்படலாம். தண்டச் செலவு நேரும். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றம் உண்டு. வருமானம் அதிகரிக்கும். வீட்டில் அவ்வப்போது சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அது மற்றொரு வகையில் சரியாகி விடும். தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்ள சந்தர்ப்பம் சாதகமாக அமையும். வீட்டிற்குத் தேவையான ஆடம்பரப் பொருள்கள் வாங்குவீர்கள். வீண் பேச்சை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும் கலகலப்பான அனுபவம் உண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நல்ல செய்தி கேட்கலாம்.

### இடபம்

பணவரவுகளைப் பெறலாம். காரியங்களை நினைத்தபடி நடத்திக் கொள்ளலாம். நண்பர்கள் சந்திப்பாலும், உதவிகள் கிடைப்பதன் மூலமும் உற்சாகம் அடைவீர்கள். பல நாள் முயற்சிக்குப் பலன் கிடைக்கும். ஊக்கம், உற்சாகம் கூடும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளியூர்ப் பயணம் செல்லும் வாய்ப்பு உருவாகலாம். தொழில் ரீதியான விடயங்களில் அடிக்கடி குழப்பங்கள், பிரச்சினைகளைச் சந்திக்கலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். எந்த விடயத்திலும் ஒன்றுக்குப் பலமுறை யோசித்துச் செயற்படுவது ஆதாயம் தரும். சிறிய விடயங்களுக்குக் கூட பெரிய அளவில் கோபப்பட்டு மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். அதனால், பொறுமையோடு செயற்பட வேண்டும். நிலம், பூமி விவகாரங்கள், கட்டடப் பணிகள், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் இழுபறிகளே அன்றி ஆதாயம் இல்லை. பொலிஸ் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், விருந்து விசேஷங்கள், பயணங்கள் போன்றவற்றால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும்.

### மிதுனம்

முடிவுகள் எடுப்பதில் குழப்பங்கள், தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். பிள்ளைகள் வழியில் கணிசமான செலவு, அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். கடினமாக உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். எந்த வேலையையும் திட்டமிட்டபடி முடிக்க முடியாமல் தடைகள், இடையூறுகளைச் சந்திக்கலாம். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களுக்காக, கணிசமான பணத்தைச் செலவிடலாம். சகோதரர்கள், பங்காளிகள் வழியிலும், காவல் துறை, நிலம், பூமி தொடர்பான விடயங்களுக்காகவும், பயணங்கள், வாகனங்கள் பராமரிப்பு, மனைவியின் தேவைகளை நிறைவேற்றுதல் போன்றவற்றுக்காகவும் கணிசமாகச் செலவிடலாம். உத்தியோக ரீதியான அலைக்கழிப்பு அதிகரிக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். பொன், பொருள்கள், ஆடை, ஆபரணங்கள் சேரும்.

### கடகம்

ஆதாயமில்லாத அலைச்சலுக்கு ஆள்படலாம். மனதில் வெறுப்பு, விரக்தி குடிகொள்ளும். தேவையற்ற செலவுகளைச் செய்யலாம். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லையுண்டு. சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். வீண் பயம் ஆள்கொள்ளும். திடீர் வெளியூர்ப் பயணம் செல்லலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் உதவிகள் கிடைக்கும். பொலிஸ் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதன் மூலம் உற்சாகம் பெறுவர். நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. பெண்கள், சகோதரிகள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றாலும் சந்தோஷம் அடைவீர்கள். ஆடை, ஆபரணப் பொருள்கள் வாங்கலாம். அரசாங்கம், அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக அமையும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். தொழில் ரீதியான விடயங்கள் அனுகூலமாக முடியும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம்.

### சிங்கம்

மனதில் இனம்புரியாத சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும். உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். கடன் மிகுதிகள் வசூலாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலையலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கிவிட்டு அவதிப்படுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். தந்தை, அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், கல்வி முயற்சிகள், தகவல் தொடர்புகள், முகவர் தொழில் போன்றவற்றில் திருப்திகரமான சூழ்நிலை காணப்படும். சொந்தபந்தங்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். தொழில், உத்தியோக ரீதியான விடயங்கள் சாதகமாக அமையும். தயக்கம், குழப்பம் இல்லாமல் எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். பங்காளிகளுடன் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும் சூழ்நிலை உருவாகும். பெண்கள் தொடர் பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக வராத கடன் மிகுதி ஒன்று வரலாம்.

### கன்னி

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். நீங்கள் நினைத்த வேகத்திற்கு சில வேலைகளைச் செய்ய முடியாமல், தடைகளை எதிர்கொள்ளலாம். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். அவ்வப்போது குழப்பம், தடுமாற்றம், சலிப்பு, வெறுப்பு, விரக்தி, பின்னடைவு போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். உடல் ரீதியான பிரச்சினைகளாலும் அவ்வப்போது ஊக்கம், உற்சாகம் குறையலாம். எந்த விடயத்திலும் புத்திசாலித்தனமாகச் செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். பிள்ளைகளின் கல்வி முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வெளிவட் டாரத்தில் உங்களின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வீர்கள். தொழில் ரீதியான பாராட்டுக்களைப் பெறலாம். பணிபுரிவோர் மேலதிகாரிகள் மூலம் சலுகைகள் பெற வாய்ப்பு உண்டு. ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆளாகலாம்.

### துலாம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பணம் பல வழிகளிலும் கரைந்து கொண்டிருக்கும். அத்தியாவசியமான, முக்கியமான செலவு எது என்பதை ஒன்றுக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது. வருமானத்திற்கு மீறிய காரியங்களைச் செய்வதைத் தவிர்க்க வேண்டும். சட்ட விவகாரங்களில் சிக்கல்கள் ஏற்படலாம். தொழில் புரிவோர் நம்பகமான வேலையாள்கள் இல்லாமல் அவதிப்படலாம். பிள்ளைகள் வழியிலும் பொருள் செலவுகளைச் சந்திக்கலாம். செலவுகளை கடன் வாங்கியோ அல்லது சேமித்த பணத்தை எடுத்தோ, உறவினர்களிடம் கைமாத்து வாங்கியோ சமாளிக்கலாம்.

### விருச்சிகம்

சிறிய வேலைகளுக்குப் பல முறை அலைய நேரிடலாம். சில வேலைகளைச் செய்ய மறப்பதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலருடன் கோபதாபங்கள் ஏற்படலாம். எதிர்பாராத பயணங்கள் செல்லலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். அடுத்த சில நாள்களுக்குப் பின்வரும் என நினைத்த பணவரவு ஒன்று திடீரென வரலாம். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். இருப்பினும், கணவன் மனைவி உறவில் சிறு சிறு பிரச்சினைகள் அவ்வப்போது ஏற்படலாம். பெண்கள், சகோதரிகள், சகோதரர்கள், பங்காளிகள் வகையில் செலவுகள், பிரச்சினை போன்றவற்றை எதிர்கொள்ளலாம். வாகனங்களில் செல்லும்போதும் அதிக வேகத்தைத் தவிர்க்க வேண்டும். நீண்ட தூர பயணங்களால் அலைச்சல்களைச் சந்திக்கலாம். அரசாங்கம், அரசியல்வாதிகள், மருத்துவம், தந்தை தொடர்பான விடயங்களும் சாதகமாக இல்லை. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆள்படலாம்.

### தனுசு

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். உறவினர்கள் வருகையால், விருந்து, விசேஷங்களால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களைச் சிலர் கொடுக்கலாம். சுகமான அனுபவங்களைப் பெறலாம். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். பயனற்ற காரியங்களுக்காக அலைய நேரிடலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். வேலைப்பளு தொடரும். எந்த விடயமும் சுலபமாக நடக்காமல், கடும் இழுபறிக்குப் பின்னரே நடக்கும். எந்த விடயத்திலும் துணிச்சலாகவும், தன்னம்பிக்கையுடனும் செயற்படுவீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. எதிர்ப்புகள், போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள். வீட்டுக்குத் தேவையான மின் உபகரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். புதிய வீடு, மனை வாங்க மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். இவர்களால் அனுகூலம், ஆதாயம் பெறலாம். கணவன் மனைவி இடையே வாக்குவாதங்களால் மனஸ்தாபம் ஏற்படலாம்.

### மகரம்

திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். அடுக்கடுக்காக வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். சில வேலைகளைத் தாமதமாக ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் அடையலாம். அடிக்கடி உணர்ச்சி வசப்பட்டு, பொறுமையை இழந்துவிடலாம். சகோதரர்கள், பங்காளிகள், மாற்று மதத்தினர் தொடர்பான வகையில் தொல்லைகளே அன்றி ஆதாயம் இல்லை. இருந்தாலும், பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சிறிது ஆறுதல் அடையலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அவர்களுக்காக நீங்களும் சில நல்ல காரியங்களைச் செய்யலாம். முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம்.

### கும்பம்

திட்டமிட்ட வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். சில வேலைகளுக்காக கடுமையாக அலைய நேரிடலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றைக் குறைந்த விலைக்கு வாங்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். கடன் மிகுதிகளைத் தீர்ப்பீர்கள். பணவரவுகள் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கொடுத்த பணமும் எக்குத் தப்பாக மாட்டிக் கொள்ளலாம். குறித்த நேரத்திற்கு எந்த வேலையையும் செய்ய முடியாமல் தவிக்கலாம். பணிபுரிவோர் அடிக்கடி நிர்வாகத்தினரின் அதிருப்திக்கு ஆளாகலாம். நீங்கள் சரியாகச் செய்தாலும், மற்றவர்களால் சிக்கலில் மாட்டிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம். வருமானம் வருவதற்கு முன்னரே செலவுகள் முந்திக் கொண்டிருக்கும். தேக ஆரோக்கிய விடயங்களும் சொல்லிக் கொள்ளும் வகையில் இருக்காது. அடிக்கடி சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். இல்லையெனில், ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களிலும், கடன் விவகாரங்களிலும் கவனம் அவசியம்.

### மீனம்

எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சில வேலைகளை தவறுதலாக செய்துவிட்டு ஒன்றுக்கு இரண்டு முறை செய்யலாம். தண்டச் செலவுகள் உருவாகும். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். சிலரிடம் இருந்து எதிர் பார்த்த உதவி கிடைக்காமல் ஏமாற்றம் அடையலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல் லலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். குடும்பத்தில் குதூகலம் அதி கரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடுகள் பெருமை தரும் வகையில் அமையும். வசதி படைத்தவர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். சேமித்த பணம் கணிசமாகக் கைக்கு கிடைத்து கடன் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த ஆலயங்களுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். போட்டி, எதிர்ப்புகள் இல்லாமல் எந்தக் காரியத்தையும் சுலபமாகச் செய்து முடிப்பீர்கள். அரசியல்வாதிகள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பெண்கள், விருந்து, உபசரிப்புகள், இனிய பயணங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடு நனையுது என்று ஓநாய்.....

தமிழ் நாட்டு மீனவர்களின் வடகடல் ஆக்கிரமிப்புத் தொடர்பாக தென்னிலங்கை மீனவர் அமைப்புகளும், அரசியல்வாதிகளும் தெரிவித்து வரும் கருத்துக்களும், நடவடிக்கைகளும் எம்மைப் பொறுத்தவரை ''ஆடு நனையுது என்று ஓநாய் அழுகுது'' என்ற பழமொழியையே எம் கண் முன்கொண்டு வருகின்றது. இந்த விடயமாகச் சில கருத்துக்களை வடபகுதி மீனவர் சங்கங்களும் மீனவ சமூகத்தினரும் அறிந்திருத்தல் பயனுடையதாகும்.

### கடல் தடைச் சட்டம்

1980 களில் அப்போதைய தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி காலத்தில் கடல் தடைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து வடக்கு, கிழக்கு மீனவர்கள் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள், பட்டினிச் சாவுகள், கடலில் நிகழ்ந்த படுகொலைகள், காணாமல் போனமை என்று மீனவர்கள் அனுபவித்த கொடுமைகள் எளிதில் மறக்கவோ, மறைக்கவோ முடியாதவையாகும். இவ்வாறான தடைச் சட்டங்கள் வடபகுதி கடலில் தமிழ் பேசும் மீனவர்களுக்காவே அமுல்படுத்தப்பட்டது ஒரு முக்கியமான விடயமாகும். இந்தக் காலப் பகுதிகளில் தென்னிலங்கை பெரும்பான்மையின மீனவர்கள் இராணுவ கடற்படை உதவியுடன் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். குறிப்பாகத் திருகோணமலை மாவட்டம், முல்லைத்தீவின் கொக்கிளாய் பிரதேசம், மன்னார் குதிரைமலைப்பகுதி, மன்னார் வளைகுடா போன்ற பகுதிகளில் தென்னிலங்கை மீனவர்கள் கடல் வளங்களை சூறையாடியதுடன் அங்கு வந்து செல்லும் பருவகால மீனவர்கள் அந்தப் பகுதியில் நிரந்தர குடியிருப்பாளர்களாகவும் மாற்றப்பட்டுள்ளார்கள்.

### வடக்கு, கிழக்கில் தென்னிலங்கை மீனவர்

இந்தப் பின்னணியுடன் இன்றைய நிலைமையை நோக்கும்போது தற்போது நிலவும் அமைதிச் சூழலைப் பயன்படுத்தி இராணுவ, கடற்படை உதவியுடன் பல தென்னிலங்கை மீனவக் குடியிருப்புக்களை வடக்கு,கிழக்குப் பகுதிகளில் நிறுவுவதற்கான பல முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. வடமராட்சி கிழக்குப் பிரதேசம், முல்லைத்தீவு சாலைப்பகுதியில் இருந்து கொக்கிளாய் வரைக்குமான கடலோரக் கிராமங்களிலும் மன்னார் பகுதி கிழக்கு மாகாணம் என இந்த முயற்சிகள் மிகவும் ஆரவாரத்துடன் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் குறிப்பாக வெளிப்படையாக நடைபெற்ற இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டலாம்.

1.முல்லைத்தீவில் பெரும்பான்மையின மீனவர்கள் படகுகள், கடற்றொழில் உபகரணங்களுடன் பெருமளவாகத் தங்கியிருந்து சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் உள்ளூர் மீனவர்கள் அப்பிரதேசங்களில் குடியமரவோ, மீன்பிடித் தொழிலில் ஈடுபடவோ முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளார்கள்.

2.மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காயாங்கேணி, சல்லித்தீவு, கதிரவெளி மற்றும் கடலோரக் கிராமங்களில் பெரும்பான்மையின மீனவர்கள் பலாத்காரமாகக் காணிகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைக்கு உள்ளூர் மீனவர்கள் தங்கள் காணிகளை விற்க வேண்டும் என்று இராணுவமே அழுத்தம் கொடுக்கின்றது.

இவ்வாறாக அரச உயர்மட்டத் திட்டமிடலுடன் பெரிய ஆக்கிரப்புத்திட்டம் ஒன்று அரங்கேறிக் கொண்டிருக்கிறது. இவற்றை மறைப்பதற்காகவும் தற்போது தமிழ்நாட்டு மக்கள் ஈழத்தமிழர்கள் மேல் காட்டும் பெரிய ஆதரவு அலையை திசை திருப்புவதற்காகவும் கடந்த 30 ஆண்டுகளாக சீரழிக்கப்பட்டிருக்கும் வட பகுதி மீன்பிடித் துறையையும் மீனவர் சமூகத்தையும் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி வடபகுதி மீனவர்களுக்கு உள்ள ஒரே பிரச்சினை தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினைதான் என்று கூறிக் கொண்டு பெரும்பான்மை மீனவர்களை வடபகுதிக் கடலில் முழுவசதியுடனும் களம் இறக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு முயற்சிக்கிறது. அதற்காகக் கையில் எடுத்திருக்கும் ஆயுதம்தான் தென் இந்திய மீனவர் பிரச்சினை. இதை வடபகுதி மீனவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தென்னிலங்கை ஓநாய்களின் நீலிக் கண்ணீரில் வடபகுதி மீனவ சங்கங்கள் மயங்கி விடக்கூடாது.

### யார் இந்த தமிழ் நாட்டு மீனவர்கள்

**மையூரான்**

இலங்கை அரசு தரையிலும் கடலி லும் எம்மக்களை கொன்று குவித்தபோது உயிருக்குப் பயந்து சர்வதேச எல்லையைக் கடந்து எம்மைப் பாதுகாப்பாக அழைத்துத் தமிழ்நாட்டு முகாம்களில் சேர்த்தவர்கள் இவர்கள்தான்.

பெரிய பொருளாதாரத் தடையை எம்மீது திணித்துப் பட்டினிச் சாவை எதிர்கொண்ட போதெல்லாம் கடல் வழியாக உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து எம்மிடம் சேர்த்தவர்கள் இவர்கள்தான்.

1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் சங்கம் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதாவது மீன்பிடிப்புக்காகச் செல்லும் படகுகளின் முக்கிய குறிக்கோளாக ஈழ அகதிகளை இலவசமாக தமிழ்நாடு கொண்டுவந்து சேர்ப்பது தான். இரண்டாம் பட்சமாகத்தான் மீன்பிடியில் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு அகதிகளை ஏற்றிவரும் படகுகளுக்கு எரிபொருள் மற்றும் உதிரிப் பாகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

தமிழ்நாட்டு கடலோரக் காவல்படையின் கெடுபிடியிலிருந்து தப்புவதற்காகப் பல ஈழ அகதிகள் இடைநடுவில் இறக்கிவிடப்பட்டனர். இந்தப் பிரச்சினையில் தமிழ் நாடு மீனவர் சங்கம் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுத்திருந்தது.

### கச்சைதீவைப் பாதுகாக்க தமிழக மீனவரால்தான் முடியும்

கச்சதீவு உண்மையிலேயே தமிழக மீனவர்களுக்குச் சொந்தமானதுதான். அது அவர்களிடம் இருப்பதுதான் எமக்கும் பாதுகாப்பு. ஏனெனில் நாளை அங்கு முளைக்கும் புத்தர் சிலையையும் சிங்கள குடியேற்றத்தையும் அவர்களால்தான் தடுக்க முடியும். எனவே அது அவர்களிடம் இருப்பதுதான் நல்லது.

கடலில் இறங்கி மீன்பிடிக்கக் கட்டுமரம் கூட இல்லாத நிலைதான் வடபகுதி மீனவரின் பெரும்பாலானவரின் நிலை. இந்த நிலைமையை முன்னேற்றாது அவர்களின் 'இறால்' பிடியை எப்படி ஆக்கிரமிப்பது என்பது உண்மையான நில ஆக்கிரமிப்பு, இன ஆக்கிரமிப்பாளர்களுடன் கைகோர்த்துக் கொண்டு எமது தமிழக உறவுகளை ஆக்கிரமிப்பாளர்கள் என்று கூறுவது எவ்வளவு நியாயமானது. தமிழக உறவைக் கைவிட்டதால் தான் இன்று ஈழத் தமிழினம் இவ்வளவு பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது எனலாம்.

இன்றைய நிலைமையில் மனித குலத்துக்கு எதிரான படுகொலையில் இருந்து தப்ப வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு. அதற்கு ஈழத்தமிழர்களையும் தங்களோடு சேர்க்க வேண்டிய தேவையும் உண்டு. இதற்காக வடபகுதி மேல் அக்கறை காட்டுவதாக வெளிப்படுத்துவதன் ஒரு முயற்சியாகவும் இது அமையலாம்.

தமிழ்நாட்டு மக்கள் எம்மோடு கைகோர்த்து நிற்கிறார்கள். இதை உடைக்கும் தந்திரமாக அவர்களை எம்மேல் வெறுப்படைய வைப்பதற்காகப் போடும் சதித் திட்டங்களில் இதுவும் ஒன்று. குறிப்பாக தமிழக மீனவர்களை வடபகுதி மீனவர்களே கைது செய்து பொலிஸாரிடம் ஒப்ப டைத்தார்கள் என்ற செய்தியை மிகவும் பிரபலமாக எல்லா ஊடகங்களிலும் தெரிவித்தார்கள்.

அண்மையில் தமிழக மீனவர்கள் கடற்படை யால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் வடபகுதி மீனவர்களால்தான் கொலை செய்யப்பட்டார்கள் என்று சில ஊடகங்கள் செய்திவெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே இவற்றின் உள்நோக்கங்கள் அனைவருக்கும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தபோதும் சில அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், மீனவ அமைப்புக்களின் செயற்பாடுகள் வருத்தம் அழிப்பதாகவேயுள்ளது.


மேற்படி கருத்துக்களைத் தங்களின் மேலான கவனத்துக்கு எடுத்து மீனவச் சங்கங்கள், மீனவக் கிராமிய அமைப்புக்கள் இவர்களின் சதித்திட்டத்துக்கு பலியாகாமல் இருக்க வேண்டும் என்பது இக்கால கட்டத்தில் முக்கியமானதாகும். ★

# உடல் வலுவைக் கொடுக்கும் திணை மா

## திணை

**வேறுபெயர்**- ஏனல், கங்கு
**தாவரவியற் பெயர்** - Setaria Italica
**(செற்றேரியா இற்றலிக்கா)**
**குடும்பம்** - Graminea **(கிரமினே)**
**சிங்களப்பெயர்** - **தணஹால்**
**சமஸ்கிருதப்பெயர்** - **கங்கு, பிரியங்கு, சியாமா**
**ஆங்கிலப்பெயர்** - Italian Millet

திணை என்றதும் திணைப் புனங்காத்த வள்ளியும் முருகப்பெருமானும் நினைவுக்கு வருவர். தேனும் திணைமாவும் முருகனுக்கு மிகவும் பிடித்த நிவேதனம். முருகப்பெருமானுக்குரிய விரதங்களை அனுட்டிப்பது மிகவும் கடினமானது. கார்த்திகை விரதம், கந்த சஷ்டி விரதம் முதலியன உடலை வருத்தி ஒருதுளி நீர்தானும் பருகாமல் அனுஷ்டிக்கும்போது உரிய பலன் கிடைப்பது நிச்சயம். அவ்விதம் உடலை



வருத்தி விரதமிருந்தவர்கள் விரதத்தை முடிக்கும் போது தேனும் திணைமாவும் சர்க்கரையுங் கொண்டு நெய்விட்டு மாவிளக்கேற்றிப் பிறகு அந்த மா விளக்கையே பிரசாதமாக உண்பதும் உண்டு. அவ்விதம் உண்பதில் அர்த்தமுள்ளது. விரதத்தால் இழந்து போன உடல்வலுவை திணைமா தொடர்ந்தும் சாப்பிட்டால் கொடுக்கும் என்ற உண்மை இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. ''மாத்திணையைக் கொள் மைந்தூறு மாக் கையே'' (ஆக்கை- உடல்) என்பது மருத்துவக் கூற்று.

இத்தகு பெருமைவாய்ந்த திணை ஒரு வித்திலைத் தாவரம். ஓராண்டுத்தாவரம். 5 அடி உயரம் வரை வளரக்கூடியது. குறுகிய தட்டையான நீண்ட

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

இலை. கதிர்செடியின் நுனியில் உண்டாகும். கனி செம்மஞ்சள் நிறமானது. திணையரிசியை மூடியுள்ள உமியை நீக்கிய பின்பே உணவாகப் பயன்படுத்த வேண்டும்.

திணையரிசி, திணைமா என்பன உணவாகப் பயன்படுத்தும்போது கபதோடம், வாததோடம் என்பவற்றை நீக்கிப் பசியையுண்டு பண்ணுவதுடன் உடலுக்கு வன்மையையும் கொடுக்கும். ஆயினும் இது தொடர்ந்து பாவிக்கும்போது சூட்டையுண்டு பண்ணும் என்பதால் வாரத்தில் 2,3 நாள்கள் பாவிப்பதே நல்லது. குழந்தை பெற்றவர்களுக்கும் திணையரிசிக் கஞ்சி, திணைமா என்பன உணவில் சேர்த்துக் கொள்ளல் நன்று.

## கடுகு

**வேறுபெயர்** - **ஐயவி**
**தாவரவியற் பெயர்** - Brassicajuncea
**(பிரசிக்கா ஜுங்சியா)**
**குடும்பம்** - Cruciferae
**சிங்களப்பெயர்** - **அப**
**சமஸ்கிருதப்பெயர்** - **சர்சபா**
**ஆங்கிலப்பெயர்** - Mustard

கடுகில் கருங்கடுகு (செங்கடுகு), வெண்கடுகு என்ற பேதங்களுண்டு. இவற்றைவிட காய்க்கடுகு, மலைக்கடுகு, சிறுகடுகு, பெருங்கடுகு என்ற வகைகளும் உண்டு. கடுகு சிறு பூண்டு, 2 அடி வரை வளரக் கூடியது. பிளவுபட்ட கூட்டிலை, சிற்றிலைகள் முட்டை வடிவம். நுனிவளர் பூந்துணர், பூக்கள் மஞ்சள் நிறம்.

கடுகை 2 கிராம் அளவில் அரைத்து நீரில் கலக்கிக் கொடுக்க வாந்தியுண்டாகும். நஞ்சுண்டவர்களில் நஞ்சை வெளியேற்ற இம்முறையை கையாள்வதுண்டு. கடுகுத்தூள், அரிசி மா சம அளவில் எடுத்துக் களிபோலக் கிண்டி மூட்டுவலி, மூட்டு வீக்கமுள்ள இடங்களில் கட்டிவர வலி, வீக்கம் குறைவடையும்.

''கடுகு சிறுத்தாலும் காரம் பெரிது'' என்பதால் கடுகை உணவாகவோ, மருந்தாகவோ அளவுக்கு மீறி பயன்படுத்தினால் தீய விளைவுகள் ஏற்படும்.

(தொடரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 167

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| 9 | | | 10 | | | 11 | |
| 12 | | 13 | | | 14 | | |
| | | 15 | | 16 | | | 17 |
| | 18 | | | | | 19 | |
| 20 | | | | | 21 | | |
| 22 | | | | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### இடமிருந்து வலம்

1.திருடு
4.இந்தக் கதிரைக்குத்தான் போட்டி
7.நெற்றியில் போடும் நாமம்
8.முழக்கத்தோடும் வரும் முழக்கமின்றியும் தோன்றும்
9.கடற்கரையில் மீனவர் அமைப்பது
10.கம்பு
11.பன்னிருவயதுப் பெண்
12.தமிழ் மக்கள் 1977இல் வாக்களித்தது இதற்கு
14.ஒரு மிருகம்
15.வெருளி நிற்பது இந்தத் தோட்டத்தில்
18.சீக்கிரம்
19.சிஷ்யனுக்குப் பெரியவர்
20.வானிலிருந்து வீழ்வது
21.தங்கத்தைத் தரம் பார்க்கப் போடுவது
22.திடீரென
23.மறு/அடையாளம்

### மேலிருந்து கீழ்

1.பழிச்சொல்
2.பஞ்சத்தால் வருவது
3.வர்த்தக நிலையம்
4.பல
5.செல்வந்தன்
6.குளிசை
8.வறுமை
10.மறித்தல்
13.பண்பாடு
14.கோடைக்குப் பின் வருவது
16.ஓர் அசைச் சொல்
17.சீனி தயாரிப்பது இதிலிருந்து
18.பகுதியான பொருள்
19.ஒரு பாத்திரம்
20.தலையில் எழுதப்பட்டது
21.கீழ்மட்ட உயிரினம்

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 167**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 29.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில்ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.167 க்கான விடைகள் 3-7-2011 ஞாயிறு உதயனில் ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 165 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)அருந்ததி(5)பதி (7)பசி. (8)கறத்தல். (9)சிவன். (10)கலை. (11) மிகுதல். (13)வாளி. (14)தரும். (15)நடிப்பு. (17)பகல். (19புதை. (20) கரம்குவி. (22)உடம்பு. (23)திடல்.

### மேலிருந்து கீழ்

(1) அபரிமிதம் (2)ருசி. (3)தகவல். (4)திறன் (5)பதகளிப்பு (6)தில்லை (9)சிதம்பரம். (12)குரு (13)வாடி (15)நல்கு (16) புதையல் (18)கம்பு (20)கட (21)விதி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 165 இற்கான சரியானவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **க.அருள்செல்வி,**
4 ஆம் கட்டை, பூநகரி, கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு** — **ம.மனுசங்கர்,**
ரகிமஹால், கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

**3 ஆம் பரிசு** — **ஸ்ரீ- துஷாரா,**
ஆண்டு - 6 மாணவி, யா/ வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி.

**4 ஆம் பரிசு** — **சி.அவிஷானி குமாரவாசம்,**
ஆனைக்கோட்டை.

**5 ஆம் பரிசு** — **அ.சாம்பவி,**
குருவளை, அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

### பாராட்டுப் பெறுவோர்

**திரு.கு.ஜெயகோபன்,**
11/1 R.D.D விடுதி வெளிவட்ட வீதி, வவுனியா.

**செல்வி ஜெயரேகா புண்ணியமூர்த்தி**
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**செ.சந்தராசா,**
எழுது மட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# என் கதையையும் கொஞ்சம் கேளுங்களேன்.....

நான் யாழ்ப்பாணம் காரைநகர் வீதியில் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு எதிரில் மானிப்பாய் சென் ஆன்ஸ் பாடசாலைக்கு அருகில் இருக்கிறேன். நான் தான் மானிப்பாய் சென். ஆன்ஸ் வீதி. என்னை கடந்து தான் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்கள் மானிப்பாய் சென். ஆன்ஸ் மாணவர்கள் மற்றும் சென். ஆன்ஸ் முன்பள்ளி மாணவர்கள் உட்படப் பெரும்பாலானோர் அன்றாடம் போக்குவரத்துச் செய்கிறார்கள்.



என்னை கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யாரும் திரும்பி பார்க்காமல் இருப்பதால் நான் நொந்து நூலாகிப் போனேன். என் அழகில் எவரும் அக்கறை கொள்ளாமையால் குண்டும் குளியுமாக என் தேகம் ஆகிவிட்டது.

எத்தனையோ தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு என் நிலை பற்றி அறிவிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. என் மேல் பரிதாபப்பட்டு வாழும் மக்கள் அனைவரும் கையொப்பமிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல முறை அறிவித்தும் அவர்களும் என்னைத் திரும்ப பார்க்கிறார்கள் இல்லை.

நான் சிறியவனாய் இருக்கிறேன். என்னை விட பெரியவர்கள் எல்லோருக்கும் 'காப்பெற்' என்று கௌரவப் பட்டங்கள் வழங்கி விட்டார்கள். வயது முதிர்ந்தாலும் அவர்கள் மிடுக்குடன் இருக்கிறார்கள்.

இளையவளான என்னை எவரும் தீண்டுவதும் இல்லை. திரும்பிப் பார்ப்பதும் இல்லை. என்ன செய்வேன் இது என் வீதி விதியா? இல்லாது விட்டார் எனக்குக் கிடைத்துள்ள சாபமா. பதில் கிடைக்காது தடுமாறுகின்றேன். என்னை எந்த அதிகாரிகளும் கண்டு கொள்வதாய் இல்லை. யாருக்குமே என்னைப் பிடிக்கவில்லையா...........? எப்போது எனக்கு ஒரு விடிவு வரமோ தெரியலையே.......... என்னை நீங்களும் பார்க்க போகிறீங்களா....

- [illegible]

# மேடைகள்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் பதிலுக்குப் பதில் பேசாததால் அவரும் இப்ப கண்ட மாதிரிக் கதைக்கிறது குறைவு'' பதில் கூறிக்கொண்டே சிந்தியா மகளைப்பார்த்து ''கயல்!உனக்கு வகுப்புக்கு நேரமாகுது வெளிக்கிட்டுப் போ'' எனக் கூறினாள்.

''என்றாலும் இந்த ஆண்கள் இருக்கிறார்களே, தாங்கள் எஜமானார்கள்,பெண்கள் அடிமைகள் என்ற எண்ணம் அவர்களின் மனதில் நன்றாக வேரூன்றிவிட்டது. அதை அறுத்தெறியிறது கொஞ்சம் கஷ்டம்தான்'' நான் எனது கருத்தை வெளிப்படுத்தினேன். ''ஓமோம் கணவன் மனைவி இரண்டு பேரும் வேலைக்குப் போனாலும் வீட்டில கணவன் ஒரு வேலையும் செய்யமாட்டான். பொம்பிளைதான் சமைக்கிறது, உடுப்புத்தோய்க்கிறது எண்டு எல்லா வேலைகளையும் இயந்திரம் போல் செய்ய வேணும். ஆனால் பலவீடுகளில் இப்ப ஆம்பிளையளும் வீட்டில் வேலை செய்யினம்'' சிந்தியா நடப்பு வாழ்வைக் கூறினாள்.

''என்ர அவரும் முதல் இப்படித்தான். ஒரு நாள் மாம்பழம் சாப்பிட்டுக் கொண்டு இருந்தவர்,சாப்பிட்டு முடிச்சுப் போட்டுத் தண்ணீர் கேட்டார்,கொண்டு வந்து கொடுத்தேன் , குடிச்சுப் போட்டு மனுசன் குசினுக்கு போய் கைகழுவி, வாய்கொப்பளித்து விட்டு வாறார். ''தலையிடி என்று படுத்துக்கிடந்த என்னை எழுப்பி வேலை வாங்காமல் கைகழுவப் போகும் பொழுதே தண்ணியையும் குடிச்சிருக்கலாம் தானே!'' என்று கேட்டேன். சரிதான் என்று விட்டுப் போனார். ''ஆம்பிளையளுக்கு நாங்கள் இடங்குடுக்கிறதாலதான் அவையள் இந்த ஆட்டம் போடுறவையள்'' நான் என்வாழ்வில் நடந்த சம்பவங்களை பகிர்ந்து கொண்டேன்.

''இடங்கொடுக்கிறதெண்டில்லை. பெண்களாகிய நாம் தான் அதிகாரம், மமதை என்ற போதை மருந்துகளை ஆண்களுக்கு ஊட்டுகிறோம். அவற்றுக் குச் சரியான பரிகாரம் அளித்தால் எல்லாம் சரியாகிவிடும். அதேவேளை சமஉரிமை , சமஉரிமை என்று சில பெண்கள் போடுற ஆட்டத்தையும் பார்க்க சகிக்கவில்லை'' என்று இரண்டு பக்க நியாயத்தையும் கூறினாள் சிந்தியா.

உண்மைதான்! மேடையில் பேசும் பேச்சுக்களால் எந்தப் பயனுமில்லை அவற்றில் நல்லவற்றைத் தேர்ந்தெடுத்து நாம் எமது வாழ்வை சரிவர அமைத்துக்கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் ஒருவரை மற்றவர் குறை கூறுவதை விட்டு, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து புரிந்துணர்வுடன் வாழ்வதே நல்ல குடும்பத்துக்கு அழகு என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு சிந்தியாவிடமிருந்து விடைபெற்றேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 23

# நல்ல கொலஸ்ரோல் கூட்டுவது எப்படி?

கொலஸ்ரோல் என்பது ஒரு வேதிக்கூட்டுப் பொருள். இது இயற்கையாக எமது உடலில் உருவாக்கப்படுகிறது. எமது உடலுக்குத் தேவையான கொலஸ்ரோலில் 80 வீதமானதை எமது கல்லீரல் உற்பத்திசெய்து விடுகிறது. மீதம் நாம் உண்ணும் உணவில் இருந்து எடுக்கப்படுகிறது.

கொலஸ்ரோல் நாம் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது. ஆயினும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகரிக்கும்போது தீங்கை ஏற்படுத்துகின்றது.

நமது உடலில் கடத்தும் சாதனமாகத் தொழிற்படும் குருதியின் கொழுப்பானது புரதங்களுடன் இணைந்த நிலையில் பின்வருமாறு காணப்படுகிறது.

1. L.D.L குறை அடர்த்திக் கொழுப்புப் புரத கொலஸ்ரோல் (Low Density Lipo Proteins)

2. V.L.D.L மிகக் குறை அடர்த்திக் கொழுப்புப் புரத கொலஸ்ரோல் (Very Low Density Lipo Proteins )

3. Trigly Condes முக்கிளிசரைட்டுகள்.

4. H.D.L மிக அடர்த்திக் கொழுப்புப் புரத கொலஸ்ரோல் (High Low Density Lipo Proteins )

இந்தக் கொழுப்புச் சத்துக்கள் எமது குருதியில் மிருதுவாகவும் மெழுகுத்தன்மையுடனும் நகர்ந்து கொண்டிருக்கின்றன. எனினும் L.D.L, V.L.D.L மற்றும் Trigly Coandes குருதியில் இவற்றின் செறிவு அதிகரிக்கும்போது இருதய மற்றும் குருதிக் குழாய்களில் அடைப்பு, குருதி அமுக்கம் போன்ற நோய்கள் ஏற்பட ஏதுவாகிறது.

L.D.L, V.L.D.L இரண்டினதும் அடர்த்தி குறைவடையும் போது குருதிக் குழாய்களின் சுவர்களில் ஒதுங்கி உட்புறச் சுவர்களிலே மெல்லிய பாளங்களாகப் படிகின்றன. நாளடைவில் இந்தக் குருதிக்குழாய்களில் உட்சுவர் சுருக்கம் அடைந்து குறுகலாகும் வாய்ப்பு அதிகரிக்கின்றது. அத்துடன் இரத்த ஓட்டமும் தடைப்படுகிறது. இதனால் மாரடைப்பு உட்படப் பல இருதய நோய்கள் ஏற்படுகின்றன. அத்துடன் மாரடைப்பு வந்தவர்களின் குருதியைப் பரிசோதிக்கும்போது அநேகருக்கு Trigly Coandes (முக்கிளிசரைட்டுக்கள்) மட்டம் உயர்வாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. எனினும் H.D.L (மிக அடர்த்திப் புரதக்கொலஸ்ரோல்) இது குருதியில் நல்ல கொலஸ்ட்ரோல் என்று அழைக்கப்படுகிறது. இதன் செறிவு குருதியில் அதிகரிக்கும்போது இரத்தக் குழாய்களில் படிந்துள்ள தீங்கிழைக்கும் கொலஸ்ட்ரோல் படிவுகள் அகற்றப்பட்டு இரத்தக் குழாய்களின் அடைப்பு நீங்குகிறது.

அத்தடன் இருதய நோய்கள், மாரடைப்பு வராமல் தடுகின்றது. H.D.L இன் அளவு குருதியில் கூடு வது மிகவும் நன்மை பயக்கும் என்பது ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. எனவே இதனை உற்பத்தி செய்யும் கல்லீரலை துாண்டக்கூடிய உணவு, மருந்து பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் குருதியில் H.D.L இன் செறிவை அதிகரிக்கலாம். இதற்கு நாம்

1. சீரான உடற்பயிற்சி செய்தல்.

2.உடற்பருமனைக் குறைத்து சீரான எடையைப் பேணுவது.

3.உணவில் காய்கறி, பழவகை, நார்ச்சத்து உணவுகளை அதிகளவு எடுத்தல்.

4.வறுத்த, பொரித்த மாமிசப் பண்டங்களைத் தவிர்த்தல்.

5. எமது கல்லீரலினால் உற்பத்தி செய்து விட முடியாத கொழுப்பு வகைகளை ஒமேகா-3 மீன் உணவுகளில் இருந்தும் ஒமேகா-6, சோளம் மற்றும் சூரியகாந்தி எண்ணெய், சோயா பீன்ஸ் மற்றும் விதைகள், பருப்புக்களில் இருந்து பெறலாம். இவற்றை உணவில் அளவுடன் சேர்த்தல்.

6. உங்கள் உடலில் உற்பத்தியாகும் கொலஸ்ட்ராலைக் கட்டுப்படுத்தத்தக்க மருந்துகளை வைத்திய ஆலோசனைப்படி எடுத்தல்.

7.புகைப்பிடிப்பது, மது அருந்துதல் போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது. தொடர்ச்சியாக மதுபானம் அருந்துபவராயின் முற்றாகத் தவிர்த்தல்.

8.புரதக் கொழுப்புக்களைத் தவிர்த்தல். (உதாரணமாக விலங்கின் இறைச்சிகள், நெய், வெண்ணை, தேங்காய் எண்ணெய், கேக், ஐஸ் கிறீம் போன்றன)

**ச.சுதாகரன்,** தாதிய உத்தியோகத்தர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

9. மாமிச உணவு உண்பவராயின் கூடுதல் மரக்கறி வகைகளையும் கீரை போன்ற உணவு வகைகளையும் எடுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வகைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் குருதியில் H.D.Lசெறிவை அதிகரிக்கச் செய்யலாம். ஒருவரின் மொத்தக் கொலஸ்ரோல் (totalcholostol) அளவிடுவதைவிட அதன் பிரிவுகளை அளவிட்டுச் சிகிச்சைப் பெறுவது சாலச்சிறந்தது.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

# மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் 8

மதங்களில் உள்ள காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களைக் களைவது பாவச்செயலா? மதக்கருத்துக்களுடன் சிந்தனையைத் தூண்டும் புதிய கருத்துக்களைச் சேர்த்துக் கொள்வதும் அதற்கு விஞ்ஞான வடிவம் கொடுப்பதும் தவறான செயலா? இவை சிந்திக்கப்பட வேண்டிய விடயங்கள்.

சிந்துவெளியிலே இருந்த வழிபாட்டு முறைகளுக்கும் வேதகாலத்து வழிபாட்டு முறைகளுக்கும் இடையிலே பெரும் வேறுபாடுகள் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. உபநிடத காலத்திலே சமயக்கருத்துக்கள் மீள ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. சங்ககாலத்திலே மதக்கருத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு பல விடயங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. எனவே சமயக்கருத்துக்கள் மீள ஒழுங்கமைக்கப்படுவது ஒரு தவறான நடவடிக்கை என்று கருதப்படவேண்டிய அவசியமில்லை எனவே எமது பண்டைய சமய, மருத்துவ நூல்களும் அவற்றின் கோட்பாடுகளும் பெரியவர்களினால் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பது ஒரு வரலாற்றுத் தேவையாகும்.

எல்லாவற்றிலும் முன்பு தோற்றம்பெற்ற சித்த வைத்திய முறையும் ஆயுள்வேத வைத்திய முறையும் வளர்ச்சி பெறமுடியாமல் போனதற்குக் காரணம் என்ன? இந்த வைத்திய முறைகளின் உச்சக் கட்டப் பயன்களை பெறமுடியாமல் போனதற்குக் காரணம் என்ன? நவீன மருத்துவ முறைகளுடன் கரம்கோர்த்துப் புதிய புதிய சாதனைகளைச் செய்யமுடியாமல் போனதற்குக் காரணம் என்ன? இதற்கான காரணங்களை வரிசைப்படுத்துவோமாயின்

1.இந்த வைத்திய முறையிலே சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துக்களை காலத்துக்கு ஏற்ற வகையில் புதுப்பிப்பதற்கு நாம் ஆயத்தமாக இல்லை. ஆனால் நவீன மருத்துவக் கருத்துக்கள் தினந்தோறும் புதுப்பிக்கப்படுகின்றன.

2.இந்த வைத்திய முறைகளை விருத்தி செய்வதற்கான தொடர் ஆராச்சிகளைச் செய்வதற்கும் இவற்றில் இருக்கின்ற நல்ல விடயங்களை மேம்படுத்துவதற்கும் தீய விடயங்களை அகற்றுவதற்கும் புதிய விடயங்களைப் புகுத்துவதற்கும் நாம் முயற்சி செய்யவில்லை. ஆனால் நவீன மருத்துவ முறைகளிலே மருத்துவ சிகிச்சை முறைகள் ஆராய்ச்சி முடிவுகளுக்கு ஏற்றவகையில் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன.

3.இந்த வைத்திய முறைகளில் கற்பித்தல், கருத்துப்பரிமாற்றம், விஞ்ஞாக விளக்கம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. பல அரிய சிகிச்சை முறைகள் சில சந்ததியினருடன் அழிந்துபோயின. அந்தச் சிகிச்சை முறைகளின் தத்துவம் மற்றவர்களுக்குப் போதிக்கப்படவில்லை. ஆனால் நவீன மருத்துவ முறைகளில் கற்பித்தல் செயற்பாடுகள் திறம்பட வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடி எம் தமிழினம்' என்று மட்டும் நாம் பெருமை பேசிக்கொண்டு இருப்பதால் ஆகப் போவது எதுவுமில்லை.

காலத்தின் தேவை கருதி சிலவற்றை நாம் செய்தே ஆகவேண்டும் . அதைவிடுத்து கண்களை மூடிக் கொண்டு எமது மருத்துவ முறைகள் தான் சிறந்தன எனக் கூறிக்கொண்டு அவற்றைப் புதிப்பிக்காமல் இருப்பது புத்திசாலித்தனம் ஆகாது. இதுபோலவே எமது மதம்தான் உலகில் சிறந்த மதம் என்று கூறிக்கொண்டு அவற்றில் இருக்கின்ற அரிய கருத்துக்களை மெருகேற்றவும் காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களை நீக்கவும் எமக்குத் துணிவு இல்லாமல் போனால் எமது அடுத்த சந்ததி மதநம்பிக்கை இழந்தவர்களாக உருவெடுப்பதைத் தடுக்கமுடியாது. அவர்களை நல்வழிப்படுத்தவும் [illegible]மாகும்.

*மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் என்ற இந்தத் தொடர் கட்டுரையின் கருத்தோட்டங்களுடன் நீங்கள் பூரணமாக உடன்பட்டால் "A" எனவும் ஓரளவு உடன்பாட்டால் "B" எனவும் உடன்படவில்லை எனில் "C" எனவும் இக்கருத்துக்களை எதிர்ப்பதாயின் "D" எனவும் ரைப் செய்து 0773604094 என்ற இலக்கத்துக்கு SMS செய்துவிடுங்கள்.*

கடவுள் மனிதனுக்குப் பகுத்தறிவைக் கொடுத்தது அதனைப் பத்திரமாக வைத்திருப்பதற்கு அல்ல. மதக்கருத்துக்களிலும் மருத்துவக் கருத்துக்களிலும் சொல்லப்படுகின்ற விடயங்கள் பற்றி விளக்கம் கேட்பது தெய்வகுற்றமாகாது. பகுத்தறிவைப் பாவிப்பது பாவமாகாது.

பண்டைக்காலத்து மதநூல்களிலே பல நோய் நிலைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்காகக் கூடச் சொல்லப்பட்டிருக்கின்றன. திருமூலர் தனது திருமந்திரத்திலே ஓர் இளம் மனிதனுக்கு மாரடைப்பினால் ஏற்படும் திடீர் மரணத்தை தெளிவாக விவரித்திருக்கிறார்.

*"அடைப்பணிவைத்தார் அடிசிலை உண்டார்*
*மடக்கொடியாருடன் மந்தணம் உண்டார்*
*இடப்பக்கமே இறை நொந்தது என்றார்*
*கிடக்கப்படுத்தார் கிடந்தொளிந்தாரே"*

சுகதேகியாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு மனிதன் நெஞ்சுவலி ஏற்பட்டு இறந்த போனதை தெளிவாகச் சொல்லி இருக்கிறார் இந்தத் திருமூலர். இவர் உண்மையிலே ஒரு வைத்தியர். அகத்தியரின் தலைமையிலே சித்த மருத்துவத்தை வடிவமைத்த 18 சித்தர்களில் இவரும் ஒருவராகக் கருதப்படுகிறார்.

**சி.சிவன்சுதன்,** வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

அந்தக்காலப்பகுதியிலே சித்தர்களினால் செய்யப்பட்ட வைத்திய முறைகள் அன்றைய வசதிகளையும் சூழ்நிலைகளையும் கருத்தில் எடுக்கும் பொழுது சிறந்தவனாக இருந்தன. ஆனால் இன்றைய காலத்தில் ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுவிட்டால் அன்று சொல்லப்பட்ட வைத்திய முறைகளை அப்படியே செய்வது புத்திசாதுரியமாகாது. எந்த மருத்துவம் சிறந்தது என்பது முக்கியமல்ல. மனிதன் சுகப்பட வேண்டும் என்பதே முக்கியமானது. எந்த மதக் கருத்துக்கள் சிறந்தவை என்பது முக்கியமல்ல. மனிதன் நல்வழிப்பட வேண்டும் என்பதே முக்கியமானது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவும் தெய்வமாகலாம்

வரலாற்றில் தெய்வம் மனிதனாக அவதரித்த சந்தர்ப்பங்கள் பல. கண்ணபிரான், யேசுநாதர், புத்தபகவான் என மனிதனின் ஆன்மீக வழிகாட்டலுக்கும் சமூக வழிகாட்டலுக்குமாக அவதரித்த தெய் வங்கள் பல. அவற்றினூடே நாம் பல வாழ்வியல் தத்துவங்களை அறியக்கூடியாதாக உள்ளது.

கடந்த சனிக்கிழமை நயினை தில்லையம்பதி பிடாரி அம்மனில் நிகழ்ந்த வருடாந்த வேள்வித் திருவிழாவும் கடந்த திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த வருடாந்தப் பொங்கல் விழாவும் தமிழ் மக்களின் விடிவுக்காகத் தென்னிந்தி யாவில் இருந்து வந்த அம்மன் தெய்வங்களை உணர்த்தி நிற் கின்றன.

நயினாதீவு தில்லையம்பதியில் மணிமேகலை வந்திறங்கினாள் எனவும் மணிமேகலை கத்திய இடம் கத்தியாக்குடா என்றும் ஐதீகம் உண்டு. அங்கு தமிழர் மரபில் அம்மனுக்கு ஆலயம் அமைக்கப் பட்டு வருடாந்தம் வேள்வி சிறப்பாக நடைபெறுகின்றது. பறை இசை முழங்க ஊர்மக்கள் பண்ணிசை பாட மணிமேகலைத் தெய்வத்தின் வழிபாடு கிராமிய வடிவில் பிடாரி அம்மனாக வணங்கப்பட்டு வரு கின்றது.

அவ்வாறே வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயமும் தமிழ் முறைப்படி வணங்கப்பட்டு வருகின்றது.

இந்த இரண்டு நிகழ்வுகளையும் தரிசிக்கும் போது ஈழத் தமிழர்கள் தற்போதுபடும் அவலநிலைக்கு நேசக்கரம் நீட்டும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் இலங்கையில் தெய்வ மாகப் போற்றி வணங்கப்படும் காலம் எதிர்காலத்தில் அமையலாம் என்று தோன்றுகின்றது.

இதுவே மனிதனும் தெய்வமாகலாம் என்பதற்கான வாழ்வியல். ஈழத் தமிழரின் ஆத்மாவின் துடிப்பு. ஈழத்தமிழரின் அரசியல் நிலை திபெத் மக்களது அரசியல் நிலைக்கு ஒப்பானது.

ஏனெனில் இன்னும் மீள்குடியேற்றம் முற்றாகவில்லை, வீடுகள் அமைக்கப்படவில்லை, தொழில் முயற்சிகள் இல்லை, ஆலயங்கள் அழிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன, பலர் சிறையில் உள்ளனர், பலர் விதவைகளாக உள்ளனர், பலர் ஆதரவற்றவர் களாகி உள்ளனர். பலர் அங்கவீனர்களாகி உள்ளனர்.

இவர்களுக்கு ஆண்டுகள் இரண்டாகியும் சர்வதேச உதவிகள் கிடைக்கவில்லை. ஐ.நாவினால் கைவிடப்பட்ட இனமாகவும் ஈழத் தமிழினம் உள்ளது.

இதனைப் போக்கும் தெய்வசக்தி உள்ள வர்களை எம்மக்கள் மணிமேகலை, கண்ணகி என முன்னர் எப்படி அம்மனாக வழி பட்டனரோ அவ்வாறே வழிபடுவர்.



**டாக்டர் எஸ்.யமுனாநந்தா**

# வெறும் காலில் நடப்பது நல்லதா?

உணவருந்தும்போது கூட காலில் செருப்பணிந்திருப்பதை அந்தஸ்தாகக் கருதும் தலைமுறையில் நாம் வாழுகின்றோம். மிதியடிகள் மட்டும் பாதரட்சைகளாக இருந்த காலத்திலும் வெறும் காலில் நடப்பவர்களை நன்மையுள்ளவர்களின் கணத் தில் உட்படுத்தியிருந்தனர். ஒருவர் அணிந்திருக்கும் செருப்பின் விலையிலிருந்து அவருடைய சமூகநிலையை மதிப்பது இன்றைய சமூகம்.

உடற்பயிற்சிக்காக நடக்கும்போதும் இறுக்கிப் பிடிக்கும் 'ஷூஸ்' அணிவது சமூகத்தில் கட்டாயமாகின்றது. ''பிறர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்'' என்ற தாழ்வுமனப்பான்மையே இக்கட் டாயத்தை ஏற்படுத்துகின்றது.

வெறும் காலில் நடந்தால் பார்ப்பவர்கள் தங்களை எளிய வர்கள் என மதிப்பிடுவார்களே என்ற பிரச்சினை பலரையும் கவ லைக்குள்ளாக்குகின்றது.

வெறும் காலில் சிறிது நேரமாவது நடப்பது சரியான முறை யிலான இரத்த ஓட்டத்துக்கும் ஆரோக்கியமான வாழ்வுக்கும் இன்றியமை யாதது என்று நவீன மருத்து இயல் அண்மையில் வெளிப்படுத்தி யுள்ளது.

கரடுமுரடான தரையில் நடக்கும்போது பாதத்தின்கீழ்ப் பாகத் துக்கு நேரடியாக அழுத்தம் ஏற்கின்றது. இது உடற்செயற்பாட்டை ஊக்குவிக்கும் என்று கண்டறிந்துள்ளனர்.

பாதத்துக்கு அடியில் விரல்கள் முதல் குதிக்கால்வரை அமைந் திருக்கும் ஒவ்வொரு பாகமும் நரம்புகள், மூளை, இருதயம், சிறு நீரகம் முதலிய எல்லா உறுப்புக்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளன.

இதனால் ஒவ்வொரு பாகத்திலும் ஏற்படும் அழுத்தம், அதனுடன் தொடர்பு கொண்டுள்ள உறுப்பின் செயலாற்றலைத் துரிதப்படுத் தும். பாதத்துக்கடியில் ஊசிகள் குத்திச்செய்யும் அக்யுப்பங்சர் என்னும் சீனச் சிகிச்சையின் மறு உருவமே செருப்பில்லாமல் வெறும் காலில் நடப்பதில் இயற்கை எமக்களிக்கின்றது.

# காவலன்




**விமர்சனம்**

அம்முக்குட்டி என்ற பெண் பூமியை விரும்புவதாக மீராவே தனது செல்போனில் பூமியுடன் தொடர்பு கொண்டு பேசி பூமியை ஏமாற்றப்போய் கடைசியில் மீராவே பூமியின் காதல் வலையில் விழுந்துவிடுகிற காட்சியமைப்பில் இப்படத்தின் காதல் கதை நகர்கிறது. மீராவின் அப்பாவுக்கு உயிராபத்து இருப்பதாக அவருக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக பூமி வந்து மீராவிற்கு பாதுகாப்பாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பூமி கல்லூரியில் படித்துக்கொண்டும் மீராவிற்கு பாதுகாப்பாக இருக்கும் படியும் கல்லூரியில் பூமிக்கும், மீராவுக்கும், மீராவின் நண்பி மதுவுக்கும் சேர்த்து சீற் எடுத்து விடுகிறார் மீராவின் அப்பா. மூன்று பேரையும் கல்லூரி இருக்கும் இடத்தில் ரூம் எடுத்து தங்குவதற்கு அனுமதிக்கிறார் மீராவின் அப்பா. மூவரும் அங்கே போய் இருந்து கல்லூரிக்குப் போய் வருகிறார்கள். பூமியும் இவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து தானும் படிக்கிறான். பூமியின் கட்டுப்பாட்டில் இருக்கும் மீராவுக்கும், மதுவுக்கும் பூமியைக் காண்டால் பிடிக் காது. காரணம் பூமி மீராவையும் மதுவையும் காலையில் சீக்கிரம் எழுப்பி கல்லூரிக்குப் போகும்போது அவர்கள் பின்னாலேயே போகிறதும் இப்படியாகப் பூமியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அவர்களுக்குப் பிடிக்காமல் போகிறது. இதனால் பூமியைத் தங்களிடம் இருந்து தூர விலக்கி வைப்பதற்காக மீராவும், மதுவும் திட்டம் போடுகிறார்கள். மீராவே செல்போனில் தன்னை யார் என்று இனங் காட்டாது பூமியுடன் பேசுகிறாள். பூமியும் அந்தப் போன் யாரிடமிருந்து வருகிறது என்று தெரியாமல் அந்தப் போன் தொடர்பினைத் துண்டிக்க நினைக்கிறான். மீராவும் விட்ட பாடில்லை. பூமிக்கு இரவு பகல் என்று பாராமல் செல்போனில் தொடர்பினை ஏற்படுத்த முயற்சிக்கிறாள். தொடர்ந்து போன்செய்து பூமியின் திட்டினைக் கேட்டு ரசிக்கிறாள் மீரா. ஒருநாள் கல்லூரிக்குப் போகும் போது பூமியைக் காய் வெட்டுவதற்காகப் போன் தொடர்பினை ஏற்படுத்தி நான் உனக்குப் பக்கத்தில் தான் நிற்கிறேன் என்று சொல்லி பூமி போட்டிருக்கும் சட்டையின் அடையாளத் தையும் சொல்லி விட பூமி கல்லூரிக்குள் சுற்றும் முற்றும் ஓடிப் போனில் பேசிக்கொண்டு போகும் எல்லா பெண்களையும் இவளா எனப் பார்ப்பதையும், அவர்களிடமிருந்து திட்டுவாங்குவதையும் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறார்கள் மீராவும் மதுவும். பூமி போனில் கேட்கிறான் உனது பெயரையாவது சொல்லிவிடேன் என்று. மீராவோ அம்முக் குட்டி என்று சொல்லிவிட அதிர்ச்சியில் பூமி உறைந்து போய் நிற்கிறான். ஏனெனில் சிறு வயதில் தன்னுடன் ஒன்றாகப் படித்த அம்முக்குட்டியா என எண்ணி அவளிடம் பேச முற்படுகிறான். அப்போது மீரா போனினை துண்டித்து விடுகிறாள். அம்முக்குட்டி என்ற தும் அவளது போன் அழைப்பு வராதா என எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். இதற்கிடையில் பூமியின் மாற்றத்தைக் கண்டு மீராவும் மதுவும் தங்களுடைய திட்டம் சரிவந்துவிட்டதாக எண்ணி அவர்களுக்குள்ளே சந்தோஷப்படுகிறார்கள். மீண்டும் போனில் பூமியின் தொடர்பினை எடுக்கிறாள் மீரா. இப்படியாகப் போன் தொடர்பில் படத்தின் காட்சிகள் சுவாரஸ்சியமாக நகர்கிறன. ஒரு நாள் மீராவோ பூமியுடன் போனில் தொடர்புகொண்டு பேசும்போது பூமியை எப்போதும் மீராவின் பின்னால் சுற்றுகிறாய் அதைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட பூமிக்கு வந்த கோபத்தில் இனிமேல் என்னுடன் பேசவேண்டாம் என்று போனைத் துண்டித்து விடுகிறான். சிறிதுநேரம் கழித்து மீண்டும் மீரா பூமிக்கு போன் தொடர்பினை ஏற்படுத்தி மன்னிச்சுவிடு மீராவினைப்பற்றி எனக்கும் கொஞ்சம் சொல்லிவிடேன் என்று கேட்கிறாள்.

அதற்கு பூமியோ மீராவின் உண்மையான நல்ல மனத்தினைப் பற்றிச் சொல்லி, தான் மீராவின் அப்பாவுக்கு பாதுகாப்பாக வந்து மீராவுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது என்பது எனக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று சொல்லுகிறான். இதைக்கேட்ட மீரா உண்மை யாகவே பூமி மீது காதல்கொள்கிறாள் மீரா. என்று தெரியாத பூமி அம்முக் குட்டியாக நினைத்து அந்தச் சம்மதத்தை வாங்கிக் கொள்கிறான். காட்சி திசை மாறுகிறது. தான்தான் பூமியின் காதலி என்று சொல்ல முடியாமல் மீரா ஒவ்வொரு தடவையும் தவிப்பதுவும் உண் மையை பூமிக்குச் சொல்லப்போய் முடியாமல் திரும்பி வருவதும் பெரிய பிரச்சினைக்கு ஆளாகப் போகிறாய் என்று மது மீராவுக்கு புத்திமதி சொல்லுவதுமாகக் காட்சிகள் நகரு கிறது. ஓடிப்போகலாமா என மீரா பூமியைக் கேட்க பூமியும் அதற்கு சம்மதம் தெரிவித்துவிட மீராவின் அப்பாவுக்குத் தெரிந்து விடுகிறது. அதாவது பூமி தன்னுடைய மகளை விரும்புகிறான் என்று தப்பாக முடிவெடுத்து பூமி ரயில் நிலையத்தில் எந்தப் பெண்ணுடன் ஓடிப்போகிறான் என்று பார்த்துவர அடி ஆள்களை அனுப்புகிறார். இதற்கிடையில் மீராவோ தனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையை மதுவுக்குச் சொல்லி தான் தான் அம்முக்குட்டி என்ற சொல்லும்படி மதுவினை ரயில் நிலையத்துக்கு அனுப்புகிறாள். மது ரயில் நிலையத்துக்கு செல்லுகிறாள். ரயில் புறப்படும்போது மது ஓடி வருகிறாள். மதுவினைப் பார்த்த பூமி போனில் தொடர்பு கொண்டு பேசிய பெண் நீயா எனச் சொல்லி அவளை ரயிலில் ஏற்று கிறான். மதுவோ நடந்தவற்றை சொல்ல முற்படும்போது அங்கே மீராவின் அப்பா அனுப் பிய அடி ஆள் நிற்பதைப் பார்த்ததும் பூமியைக் காப்பாற்ற வேறு வழியில்லை என எண்ணி தான்தான் என மது சொல்லுகிறாள். ரயில் புறப்பட்டது. சிறிது காலம் உருண் டோடியது மதுவுக்கு ஒரு மகன் பிறந்து வளர்ந்து வரும் தறுவாயில் மது நோய்த் தாக்கத்தினால் இறந்து விடுகிறாள். மகனின் விருப்பத்துக்கு இணங்க மீராவின் ஊருக்கு மீண்டும் வருகிறான் பூமி. அங்கே வந்து பார்க்கிறான் மீரா திருமணம் செய்யாமல் இருக்கிறாள். ஒரு நாள் தங்கிவிட்டு புறப்பட ஆயத்தமாகும்போது பூமியின் மகன் மீராவினை தனது அம்மாவாக வரும்படி கேட்கிறான். இதை எதிர்பார்த்திருந்த மீராவின் அப்பா கூட்டிச் செல்லும்படி பூமியை கேட்கிறார். மீராவைக் கூட்டிக் கொண்டு பூமியும், மகன் சித்தார்த்தும் மீண்டும் ரயில் ஏறுகி றார்கள். மது ஒரு டயரியில் தனது வாழ்க்கையினை எழுதி விட்டு இறந்திருந்தாள். சித்தார்த் அந்த டயரியைப் படித்ததினால் உண்மை புரிய வந்தது . அதன்பின் அது தேவையற்றது என அந்த டயரியினை குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு சித்தார்த் வந்து ஏறி விட்டதும் அதனை எடுத்து பூமி படித்த போதுதான் தன்னை போனில் காதலித்தது மீரா என்று தெரியவந்தது. டயரியை தனது உடுப்புப் பையில் பத்திரமாக வைத்துவிட்டு ரயில் பெட்டியில் மீராவுக்கு அருகில் வந்து உட்காருகிறான். அவளது கையை இறுக்கிப் பிடித்தபடி மீராவும் பூமியின் தோளில் சாய மகன் சித்தார்த்தை அணைத்தபடி படத்தின் கதை முடிகிறது.

பூமியாக விஜயும், மீராவாக அசினும், அசினின் அப்பாவாக ராஜ்கிரனும் நடித்திருக்கிறார் கள். சித்திக் இயக்கி இருக்கும் இப்படம் இளம் வட்டங்களின் மனதில் ஊஞ்சல் ஆடும் [illegible] யாரது யாரது என்ற பாடல் இனிமையானது.

- குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பிரதிபலிப்பில் சிறப்பு அடையாளம்..?

சிவசுப்பிரமணியம்

எமது இளம் சந்ததியினரிடையே எமது கலாசாரத்தையும் அதன் மாண்பு களையும் அருகிப் போகச் செய்யும் வகை யில் பெருகி வரும் சூழல் மாற்றத்தைக் காணுகின்றோம். நாம் சிறந்த சமூக விழுமியங்களைக் கொண்டவர்கள் என்ற வகையில் அவற்றைப் பேணிக்காப்பது எமது பணியாகும்.

இந்தச் சீரிய பணி ஆரம்பக் கல்விக் கூடங்களில் ஆரம்பித்து அனைத்து மாணவ சமுதாயத்தினருக்கும் படி முறையில் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே நாம் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம். சமூகத்தின் சேவைகள் வர்த்தக மயமாகியுள்ளன. சிறப்பாகக் கூறின் மதம், கல்வி, வைத்தியம் ஆகிய சேவைகளில், மனிதநேயமும் சேவை அர்ப்பணிப்பும் கூடுதலாக வேண்டப்படினும் அங்கே அவை தளர்வுற்றுப் பண ஆதிக்கம் மேலோங்கிச் சமூகச் சீரழிவுக்கு வழிசமைத்துள்ளது. விசேடமாக ஆசிரியரதும் வைத்தியர்களதும் ஈடுபாடான அர்ப்பணிப்பான சேவையை முதன் மைப்படுத்துவது சிறப்பாகும்.

### யாரைக் குறை கூறுவது?

வைத்தியரின் ஆதரவான வார்த்தைகள் அரைப் பங்கு நோயைக் குணப்படுத்துவது போல ஆசிரியரது அன்பும் அரவணைப்பும் மாணவரை உள ரீதியாக உரம்பெறச் செய்து, நம்பிக்கையை வளர்த்து நல்ல ஆலோசனைகள் மூலம் நல்வழியைப் பின்பற்றிச் சிறந்த வாழ்க்கையை அமைக்க வழி செய்யும். இப்படியான சேவையிலுள்ள ஆசிரியர், வைத்திய சேவையாளரது பொருளாதார மேம்பாட் டைக் கவனிப்பது சமூகத்தினதும் அரசினதும் கடமையாகும். ஆசிரியர் தமது கண்ணியத்தையும் உயர்நிலையையும் பாதுகாப்பது சமூகத்தின் எதிர்பார்ப்பாகும். அண்மையில் வருங் கால ஆசிரியர் சிலர் பகிடிவதை ஈடுபாட்டால் நீதிமன்றம் வரை சென்ற நிகழ்வு, மாணவர் சமுதாயத்துக்கு ஆரோக்கியமான நிகழ்வாக அமையாது. இளம் மாணவரும் இந்த வழியைப் பின்பற்றினால் யாரைக் குறைகூறுவது?

எமது சமய விழுமியங்களான இறை வழிபாடு, குரு, பெற்றோர், முதியோருக்கு மரியாதை செய்தல் மற்றும் நல்வழி உபதேசங்கள், கூட்டுப் பிரார்த்தனைப் பாடல் முறை ஆகியன வீட்டில் ஆரம்பித்துப் பாடசாலைகள், கோயில்கள் வரை நடத்தி சிறு வயதிலேயே இளையோர் மனதில் பதியச் செய்வது வாழ்நாள்வரை பயனுடையதாகும். சிறு வயது அனுபவங்கள் நிரந்தரமானவை, விரைவாக மனதில் பதிபவை, நல்ல விடயங்கள் போதனையிலும் பார்க்கச் சாதனை மூலம் பற்றிக் கொள்வன.

### பாதுகாக்கப்படவேண்டிய பாரம்பரியம்

பல மாணவர் நவீன வளர்ச்சி சூழ்நிலை காரணமாகப் பல அச்சுறுத்தல்களுக்கும், நெருக்குதல்களுக்கும் ஆளாகும் போது, எமது பாரம்பரியத்துக்கு அமைவாகப் பெற்றோரின் ஆதரவும் அனுசரணையும் பெரிதும் வேண்டப்படுகின்றது. பெற்றோர் நாளாந்தம் தமது பிள்ளைகளுடன் ஒன்று கூடிப் பல நாளாந்த விடயங்களையோ பிரச்சினைகளையோ கலந்து பேசுவது, பிள்ளைகள் தமது சுமைகளை இறக்கி மன நிம்மதி பெறப் பெருவாய்ப்பாகும். இரவு உண வையாவது பெற்றோர் - பிள்ளைகள் ஒன்றாக இருந்து உண்பது பாதுகாக்கப்பட வேண்டிய பாரம்பரியமாகும்.

இந்த முறை உடன் தயாரிப்பு உணவை (Fast Food) என்றும் கூடுதலாக நாடும் பல பிள்ளைகளின் போக்கை மாற்றிச் சுகாதாரத்துக்கு ஒவ்வாத தற்கால உணவுகளை உட்கொண்டு பல நோய்களுக்கு ஆளாவதையும் தவிர்க்கலாம். பாரம்பரிய உணவு வகைகள் சுத்தமானதும் ஆரோக்கியமானதென்பதும் எவராலும் மறுக்க முடியாததாகும்.

மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கம் முக்கியமாகும். பரீட்சைகள் முதன்மை பெற்றாலும், அந்த நோக்கோடு மாத்திரம் வெறும் புத்தகப் பூச்சியாகாமல், பரந்த, பொது உலக அறிவு யாவும் பரந்துபட்ட வாசிப்பு மூலமே பெறப்படும். வாசிப்புக் கல்வியைப் பூரணப்படுத்தும் பாரம் பரியமாக நிலவி வந்த வாசிப்புப் பழக்கம் தற்போது அருகிவருவது கவலைக்குரியதாகும். ஆசிரியரும் பெற்றோரும் இந்தப் பழக்கத்தை இளையோரிடம் ஊக்குவிப்பது பயன்பாடுள்ளதாக அமையும்.

எமது பாரம்பரிய பொருளாதாரத்தின் அடிப்படைச் சிதைவுகள் இன்று பெருஞ் சவாலாக உருப்பெற்று எம்மவரின் நாளாந்த வாழ்வியலைப் பெரிதும் பாதித்துள்ளது. கிழக்கில் பலர் சொந்த நிலங்களை மீளப்பெற்று விவசாயத்தைத் தொடரமுடியவில்லை. பாரம்பரிய நிலங்கள் வர்த்தக ரீதியாகக் கைமாறுவதும், படைத்தரப்பு மற்றும் குடியேற்றம் காரணமாக மாற்றப்படுவதும் இதற்கு அரசின் மாற்றாந் தாய் மனப்போக்கும் இனச் சிதைவாகவே கொள்ளலாம். இந்த நிலை அந்தப் பிரதேச வாக்காளர் விகிதத்தில் இனப்பரம்பல் வேறுபாடுகளை ஏற்படுத்தும். வன்னிப் பெரும்பரப்பில் நில ஆக்கிரமிப்பு பெருமளவில் விவசாயத்தையும், மீளக்குடியமர்வு ஆகியனவற்றையும் பாதித்துப் பரம்பரையாகக் கொண்ட சொந்த மண்ணையும் அன்றாட வாழ்வாதாரத்தையும் ஆயிரக்கணக்கானோர் இழக்கும் நிலை யிலுள்ளார்கள். வடக்கு, கிழக்கு கடல்சார் தொழிலாளர் கூடப் பல அத்துமீறல்களுக்குள்ளாகித் தொழிலையும் வருமானத்தையும் இழக்கும் தறுவாயிலுள்ளனர்.

### நலிவடைந்து போயுள்ள வளம்

எமது பிரதேசம் காலாதிகாலமாகத் தென்னை, பனை வளங்கள் நிறைந்த நிலப்பரப்பு. தற்போது அந்தச் செல்வச் செழிப்பு யாவும் பெருமளவில் சிதைந்து நலிவுற்றுள்ளது. தேங்காய் இறக்குமதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஒரு காலத்தில் 'மில்க்வைற்' நிறுவனத்தினர் மூலைமுடுக்கெல்லாம் பனை வளத்தைப் பெருக்க வெற்றிகரமாக ஊக்குவித்தனர். பனை வளத்தைப் பெருக்க மீண்டும் முயற்சிகள் நடக்கின்றன.

எமது பொருளாதாரத்துக்குப் பனம் பொருள்கள் யாவும் சிறந்த வர்த்தகப் பொருளாகும் வாய்ப்புண்டு. வேர், கிழங்கு முதல் ஓலை, பதநீர் வரை நவீன தொழில் நுட்பமுறையில் தொழில்துறையை வளர்த்து வேலை வாய்ப்பை வழங்கி, இந்தப் பொருள்களைத் தெற்கில் மாத்திரமல்லாது, நம்மவர் வாழும் புலம்பெயர் நாடுகளுக்கு ஏற்றுமதி சந்தைப் பொருள்களாக விரிவாக்கலாம். பிளாஸ்ரிக் பாவனை சுகாதாரம் அற்று சூழலுக்கு ஒவ்வாத நிலையில் பனை ஓலைப் பை, உமல், பாய், கடகம், பெட்டி மற்றும் ஆரோக்கியமான உணவுப் பண்டங்களான ஒடியல், பனங்கட்டி போன்றவற்றை எம்மவரிடையே பிரசாரம் செய்வது அவசியம். அரிச்சுவடி ஏடுகளைக் கூட பிளாஸ்ரிக்குக்குப் பதிலாகப் பனை ஓலையில் அச்சுப் பதிவு செய்தல் பயனுள்ளதாகும். எம்மவரின் மனமாற்றமே வேண்டப்படுகின்றது.

கலை கலாசாரமே இனப் பிரதிபலிப்பின் சிறப்பு அடையாளமாகும். அதன் பெருமையையும் தொன்மையையும் விழாக்களே பறைசாற்றுகின்றன. இந்த நிகழ்வுகள் மொழிச் செழிப்பையும் வளர்ப்பது இயல்பு. நம்மவரின் இசை, நடனம், வில்லுப்பாட்டு, நாடகம், நாட்டுக்கூத்து, காவடியாட்டம் கடலோடிகள், நாட்டார் பாடல்கள் மற்றும் சிறுகதை, கவிதை ஆக்கங்கள் போன்றன யாவும் எமது அரும்பெரும் பொக்கிஷங்களாகும். இவையாவற்றையும், சேர்த்துத் தொகுத்து ஆவணப்படுத்துவது, உரியவர்களது வாழ்க்கை வரலாறு பதியப்படுவது, யாவற்றையும் காப்பகங்களில் பேணிப் பாதுகாப்பது அவசியமான பணியாகும். மன்னார், மட்டக்களப்பு, தீவகம், வன்னி மற்றும் மலையகம் போன்ற இடங்களில் காணப்படும் இப்படிப்பட்ட அரும்பெரும் விழுமியங் களைப் பிரதேச வாரியாகத் தொகுப்பது பெரும் பயனைத் தரும். இவற்றைப் பாதுகாப்பதோடு அடிக்கடி மேடையேற்றுவதால் நமது இளையோருக்கு உயிரூட்டமுள்ள வாழும் கலையாகக் காட்சிப்படுத்துவது இவற்றை வளர்க்கும் வழியாகும். யாழ்.திருமறைக் கலாமன்றம் மத எல்லைகளைக் கடந்து எமது பல கலாசார விழுமியங்களை உள்நாட்டில் மாத்திரமல்லாது, பல உலக நாடுகளில் வெற்றிகரமாக அரங்கேற்றிப் பெருமை சேர்த்தது ஒரு சிறந்த முன் மாதிரியாகும்.

> பல மாணவர் நவீன வளர்ச்சி சூழ்நிலை காரணமாகப் பல அச்சுறுத்தல்களுக்கும் நெருக்குதல்களுக்கும் ஆளாகும் போது எமது பாரம்பரியத்துக்கு அமைவாகப் பெற்றோரின் ஆதரவும் அனுசரணையும் பெரிதும் வேண்டப்படுகின்றது. கலை கலாசாரமே இனப் பிரதிபலிப்பின் சிறப்பு அடையாளமாகும். அதன் பெருமையையும் தொன்மையையும் விழாக்களே பறைசாற்றுகின்றன. இந்த நிகழ்வுகள் மொழிச் செழிப்பையும் வளர்ப்பது இயல்பு.

### தவிர்க்க முடியாத நியதிகள்

வளர்ச்சியும், மாற்றமும் வாழ்க்கையின் தவிர்க்க முடியாத நியதிகளே. சில பழைமைகள் கூறும் வரலாறு திடமானதாகவும் மறைக்க முடியாதனவுமாகும். சில பழைமை வாய்ந்த கல்லூரிகள், மத மையங்கள் போன்றன வரலாற்று விவரங்களைத் தகுந்த ஆதாரங்களுடன் சந்ததி சந்ததியாக இயம்பிநிற்கின்றன. இவற்றில் பழைய கோட்டைகளும் அடங்கும். வீதி அகலிப்புப்பணி காரணமாக இவற்றில் சில பாதிக்கப்படும் வாய்ப்புண்டு. பழைமையையும் பாரம்பரியத்தையும் பேணி, நவீன வசதிகளை விரிவடையச் செய்வதே உகந்ததாகும். இயற்கை வனப்புடன் கூடிய கீரிமலை, திருவடி நிலை, சாட்டி, கசூரினா, கோவளம், பாசிக்குடா, கன்னியா வெந்நீரூற்றுக் கிணறுகள் போன்றனவும் நமது நாட்டின் சிவ ஸ்தலங்களான தான்தோன்றீஸ்வரம்,கோணேஸ்வரம் , கேதீஸ்வரம், முனீஸ்வரம், இரத்மலானை திருநந்தீஸ்வரம், நகுலேஸ்வரம் ,பொன்னம்பலவாணேஸ்வரம், மாவிட்டபுரம் குறிஞ்சிக்குமரன்,கதிர்காமம் மற்றும் மடுமாதா திருத்தலம் போன்றவற்றின் அருமை, பெருமைகள் ஆவணங்களாகவும், நிழற்படங்களாகவும், வரலாற்றுப்பதிவுகளாகவும் பேணிப்பாதுகாத்து சந்ததி சந்ததியாக எமது விலைமதிப்பற்ற விழுமியங்களைப் பயன்படச் செய்வது எமது தலையாய கடமையாகும்.

வைத்தியத்துறை நவீன மயமாக நாள்தோறும் அமோக முன்னேற்றமடையும் நிலையில் எமது பாரம்பரிய ஆயுள்வேத, சித்த, யுனானி முறைகளையும் பாதுகாக்க வேண்டும். இயற்கையைத் தழுவி முரண்பாடற்ற மூலிகை வைத்திய முறை பயன்பாடுள்ளனவே.ஆயுள்வேத முறைக்கு அரச ஆதரவும் அங்கீகாரமும் பெருமளவில் இருப் பதால் அத்துறை உன்னத வளர்ச்சி கண்டுள்ளது.சித்த, யுனானித் துறைக்கும் சமூக அங்கீகாரமும் அரச ஆதரவும் கிடைத்தால் இவற்றையும் சிறப்பித்துப் பேணிப் பாதுகாக்கலாம். தமிழ்நாட்டு முன் மாதிரி போல் மூலிகைப் பண்ணைகள் அமைப்பது அவசியமாகும். நீரிழிவு நோய் நிவாரணியாகச் சிறு குறிஞ்சா இலைப் பயன்பாட்டில் ''பானக்கலக்கி''திட்டம் சிறப்படைந்து வருவது நற்செய்தியாகும்.

சில காலத்துக்கு முன்னதாக யாழ்.பல்கலைக்கழக ஆய்வு மாணவர் தமது செயற்திட்டத்தின் ஒரு படியாக,வெவ்வேறு பிரதேச ஆய்வுகளை மேற்கொண்டு சிறந்த முறையில் ஆவணப்படுத்தியது நல்நோக்கமுடையது; ஆதரித்து வரவேற்க வேண்டியது; இம்முறையை மேலும் விரிவுபடுத்துவது சிறந்த பயனாக அமையும்.

யாழ்., கிழக்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களும் மற்றும் கல்வியியற் கல்லூரிகளும் இணைந்து தத்தம் வரலாறு , கல்வி புள்ளிவிவரவியல் சார்ந்த வெவ்வேறு பிரதேசங்களைப் பிரதிநிதிப்படுத்தும் ஆய்வு மாணவர் மூலம் தத்தம் பிரதேச வாரியாக அவர்தம் பிரதேச பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை முதியோர் வாய்ச் சொல்வழி நிழற் படம், வரைபடம், வரலாற்று ஆவணம் போன்றவை மூலம் தொகுத்தால் அப்பேறபட்ட கூட்டுத் திரட்டின் மகிமை காலப் போக்கில் நம்மவரின் அதிஉயர்ந்த பொக்கிஷமாகக் கணிக்கப்படும். இந்தப் பணி நமக்கு இன்றியமையாததும் அவசியமானதுமாகும். புதிதாக அமையவுள்ள பதினாறு பிரதேச செயலகங்களின் பங்கும் பணியும் இந்தத் துறை வளர்ச்சிக்குச் சாதமாக அமையும். இந்த நிலையில், 21 அதி உயர் கல்வியாளர்களைக் கொண்ட, அரசால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு 2010 வரையிலான சமகால அரசியல் மற்றும் பௌத்த பண்பாட்டியல் வளர்ச்சி வரலாற்றை மகாவம்சத்தின் ஆறாம் தொகுதியாக விரைவில் வெளியிட இருப்பது நோக்கற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 ★ 05 ★ 1927

மறைவு 22 ★ 06 ★ 2008



**அமரர் காசிப்பிள்ளை பஞ்சாட்சரம்**

திதி - சங்கட ஹர சதுர்த்தி

வினை தீர்க்கும் விளாத்தியடி வைரவரின் தீர்த்தமாடி பருத்தியான் அருளுடனே இணுவைக்கந்தன் பதம்போற்றி நல்லூரான் திருவடியில் சரண்புகுந்த குலவிளக்கே- உம் மூன்றாண்டு நினைவு நாளில் ஆத்ம சாந்தி வேண்டித் தொழுகின்றோம்.

'செல்வ பதி'
பாப்பாத் தோட்ட வீதி, இணுவில் மேற்கு. (4995) குடும்பத்தினர்.

# மட்டுவிலில் இன்று மாட்டு வண்டிச் சவாரி

சாவகச்சேரி, ஜூன் 19

மட்டுவில் வடக்குப் பகுதியில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. மட்டுவில் வடக்கு சந்திரபுரம் அம்பாள் சனசமூக நிலைய அனுசரணையுடன் மட்டுவில் வடக்கு சத்திரங்கிராய் மாட்டு வண்டிச் சவாரித்திடலில் இந்தப் போட்டி இடம் பெறும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரபலமான மாட்டு வண்டிச் சவாரிக் காரர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர்.

(ஒ-131)

**வெளிவாரி பட்டப்படிப்பு (EXTERNAL DEGREE)**

From Internationally Recognized University Examinations in Education/Business/Arts/Computer.

BA,B.Com,BSc.,BBA,MA, M.Com,M.Sc. & MBA

A/L-3 சித்தியுடன் தொலைக்கல்விமுறை மூலம் இளமாணி/முதுமாணி பட்டங்களுக்கான கல்வியினை கற்பதற்கான அரிய வாய்ப்பு.SMS மூலம் உங்கள் முகவரியை அனுப்பி விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்

GENIUS ACADEMY
COLOMBO- 13.
011 3134067,077 9914260

**துணை முகவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

இந்தியா கப்பல் போக்குவரத்திற்கான பயணச்சீட்டுக்களை விற்பனை செய்வதற்கான நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் துணை முகவர்கள் தேவை. இணையத்தளம் மூலம் இருக்கும் இடத்திலிருந்தே கப்பல் விமானச்சீட்டுக்களை கணனி மூலம் உங்களது வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடியும் Sub Agent Special Offer Business செய்யும் ஆட்களுக்கு ஒரு வருடம் இந்திய விசாவும் 300kg அனுமதி பெற்று கொடுக்கப்படும்.

கப்பல் மூலம் பொதிகள் Cargo Transport வசதி

ITN TRAVELS NO. 399-1/2 GALLE ROAD, COLOMBO -04.
E-MAIL:shipboking.hotmail.com
www.shipboking.webs.com
077 9944353 077 9941987

**இலங்கையில் முதலாவது மற்றும் ஒரே ஒரு தலை முடியியல் நிபுணத்துவ சிகிச்சை நிலையம் இதுவே**

VCare இன் Dr, Hair ல்

தலைமுடி உதிர்தல், ஆண், பெண் வழுக்கை, பொடுகு, இளநரை, புளுவெட்டு, Psoriasis போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கு இலங்கை இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது- V care (Pvt) Ltd.

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா விட்டுத்தள்ளுங்கள்!

DR, HAIR

எதிர்வரும் 23, 24 ஆகிய திகதிகளில் யாழ் கிளையில் இலங்கை, இந்திய பிரபல தலைமுடியியல் நிபுணர்களின் நேரடி ஆலோசனை நடைபெறவுள்ளது.
முற்பதிவுகளுக்கு :0776 291 099

21, Frazerr Avenue, Dehiwala. Phone: 011-4874854, 2735715
162/5, Jaffna Road, Vavuniya. Tel: 024-4924940
26,brown Road, Jaffna.

**யாழ்ப்பாணம், சாவகச்சேரி இரு இடங்களிலும்.!**

அனைத்துப் பொருள்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



Sumsung
23" LED T.V.
Made In Malesiya
(With Tamil Menu)
அமோக விற்பனையில்...

34 900/-

Midea Electro Mart

Authorized Dealer for Abans Ltd.

No:1-I, 1-H, Stanley Road, Jaffna, SriLanka.
Tel: 021-222 4566,
Fax: 021 222 1646,
E-mail: midea21@gmail.com

Branch: No.4, New Market, Chavakachcheri.
Tel: 0212270268, Fax: 0212270129. (C-942)(48)

**மலேசியா**

தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா. 28,000 |

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592

**விற்பனைக்கு**

டோயோட்டா பிரியஸ் ஹைபிரிட் (Toyota Preus hib ride) 2008 ஆம் ஆண்டு மோடல் வெள்ளை நிற நல்ல நிலையிலுள்ள 62000 k.m பாவித்த பதிவு செய்யப்படாத கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774894018

**பதவி வெற்றிடம்**

பனிக்கட்டி ஆலைக்கு ஆலை இயக்குநர்கள், பயிலுநர்கள் உதவியாளர்கள் தேவை.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
Promotors Engineering Co.Ltd.
NO. 33, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**லிவிலியா எலெக்ரிசன்**

லைம்லைனிங், பெயின்ரிங், வயறிங் போன்ற வேலைகள் உங்கள் இடங்களுக்கு வந்து செய்து கொடுக்கப்படும். அரச அதிகாரம் பெற்றவர்.
தொடர்பு: 0777111355, 021 222 3687 (4990)

**அனைவருக்கும் வேலைவாய்ப்பு**

EMC நிறுவனத்தில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு
முகாமைத்துவப் பயிற்சி.
அடிப்படைச் சம்பளம் 6,000/=
பயிற்சி முடிவில் வேலைவாய்ப்பு
(23,000/= தொடக்கம் 33,000/= வரை)
தொடர்பு:- 0777740735
0776125911 (4994)

**பஹ்ரைன், ஜோர்தானில் உடனடி தொழில் வாய்ப்பு**



10 நாட்களில் பயணம்

பஹ்ரைன், ஜோர்தானில் O/L படித்துவிட்டு வேலையின்றி இருக்கும் யுவதிகளுக்கு மத்திய கிழக்கில் தமிழ் பேசும் நிருவாகத்தினால் நடாத்தப்படும் ஆடைத்தொழிற்சாலையில் உடனடி தொழில் வாய்ப்பு

- Juke Machine Operator - 300 Nos. USD 145 + OT / Rs: 16240/- + OT
- Final Checker - 75 Nos. USD 145 + OT / Rs: 16240/- + OT
- Helper - 75 Nos USD 135 + OT / Rs: 15120/- + OT

(பயிற்சிபெற்ற / பயிற்சிபெறாத)

அனைத்தும் அடங்கலாக Rs: 30,000/- சம்பளம்

நிபந்தனைகள்:
- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி இருவழி விமான டிக்கட் என்பன இலவசம்.
- ஒப்பந்த காலம்: - பஹ்ரையின் - 2வருடம், ஜோர்தான் - 3 வருடம்.
- ஏனைய அனைத்தும் பஹ்ரையின், ஜோர்தான் நாட்டு தொழில் சட்டதிட்டங்களுக்கு அமைவானது.

அரச கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும் அதற்கும் வசதி இல்லாதவர்களுக்கு வட்டியில்லாத கடன் வசதி செய்து தரப்படும்.

வெளிநாட்டு பிரதிநிதிகளினால் தினசரி காலை 10 மணி முதல் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுகின்றன, நேரே வாருங்கள். Hotline: 011 2447125
AI/56/Advt:07/11

ஹில்டொப் டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
(வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்)
இல: 111, செட்டியார் தெரு, கொழும்பு - 11.



HERO CYCLES KENTON

**ஹீரோ, கென்டன் காட்சியறை**

சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (Recharchable)கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.



தொ.பே.: 021 4921672

(49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியை நிச்சயப்படுத்துவது எப்படி?

89 ஆயிரம் பட்டதாரிகள் தற்போது நாட்டில் வேலையின்றி இருக் கின்றனர் என்று ஊடகத் தகவல்கள் கூறு கின்றன.

க.பொ.த உயர்தரம், டிப் ளோமா கற்கைகளை நிறைவு செய்தோரின் எண்ணிக்கை இந்தத் தொகையின் சில மடங் காக இருக்கக் கூடும்

கொழும்பு போன்ற பெரு நகரத்தை விடுத்து இலங்கை யின் ஏனைய மாவட் டங்களில் அரச வேலை வாய்ப்புக்கான மதிப்பு உயர்வானதாகவே இன் னமும் உள்ளது. ''கோழி மேய்க் கின்ற வேலை யெண்டாலும் கொர்ணமேந்து வேலை யாக இருக்க வேண்டும்'' என்று எம் மவர் இன்னும்தான் கூறுகின்ற னர்.

பட்டதாரிகளுக்குக் கட்டாயம் வேலை வழங்குதல் என்ற கொள்கையை அரசு இப்போது நடைமுறைப்படுத்துவதில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆனால் பட்டதாரி களை அரச சேவைக்குள் உள் வாங்குவதற்கான போட்டிப் பரீட்சைகள் அவ்வப்போது நடைபெற்றே வருகின்றன. இதில் திறமை காட்டும் சிலர் அரச சேவைக்குள் நியமனம் பெற் றுள்ளனர். நீங்களும் இவ்வா றான பரீட்சைகளில் வெற்றி பெற முடியும். தன்னம்பிக்கை, விடாமுயற்சி இருந்தால் அதிர் ஷ்டம் உங்கள் பின்னால் வந்து விடும்.

பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப் பட்டு நான்கு அல்லது ஐந்து மாதங்களின் பின்புதான் பரீட்சை நடைபெறுவது இப்போ தெல்லாம் வழக்கமாகிவிட்டது.

பரீட்சைக்கு விண்ணப்பித்த நாள் முதல் உரியவிடயதானங் களை ஒரு மணித்தியாலம் வீதம் கற்று வந்தாலேயே வெற்றி பெறுவதற்குப் போதுமானது. அவ்வாறு செய்து வந்தால் 4 மாதங் களில் அதாவது 120 நாள்களில் பரீட்சை நடை பெறும் போது 120 மணித்தியா லங்களை அந்தப் பரீட்சைக் கான தயார்ப்படுத்தலில் செல விட்டிருப்பீர்கள் இது உங்க ளுக்கு பரீட்சையை வெற்றி கரமாக எதிர்கொள்வதற்கான ஆற்றலைத்தரும் .

அதைவிடுத்து பரீட்சை அனுமதி அட்டை வந்த பின்பு ஓடித்திரிந்து படிப்பதால் பெரி தாக எதனையும் சாதிக்க முடி யாது.

பரீட்சை என்னென்ன விட யங்களில் இடம்பெறப்போகிறது என்பதை வைத்துக் கற்றுக்கொள் வதே மிக முக்கியமானதா கும்.

பரீட்சைகள் ஒவ்வொரு அரச சேவைக்கும் அதற்குத் தேவைப் படும் திறனுக்கும் ஏற்றவாறு வேறுபட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

கடந்த கால வினாத்தாள் களை, மாதிரி வினாத்தாள்க ளைச் சேகரித்து வைத்து கற்ற லில் ஈடுபடுவதே வெற்றியைத் தரும். இது தொடர்பான வழி காட்டல் வகுப்புக்களில் பங் கேற்பதும் வெற்றிக்கு வழிகாட் டும்.

### பொது அறிவு

இலங்கை,சர்வதேசம் தொடர் பான அரசியல், பண்பாடு, பொரு ளாதாரம், விளையாட்டு, விஞ்ஞா னம் போன்றவை தொடர் பான வரலாற்று மற்றும் சமகாலத் தக வல்களைக் கொண்டதாக பொது அறிவுப் பரீட்சை அமையும். வீட் டில் குறிப்புக் கொப்பிகளை வைத்திருந்து அன்றாடம் ஊட கங்கள் வாயிலாக அறிபவற்றை குறித்து வைத்தும், இதுதொடர் பாக வெளியிடப்படும் புத்தகங் களை வாசித்தும் பொதுத் தக வல்களைப் பெறலாம்.

பொது அறிவுப் பரீட்சை யின் வினாக்களின் தன்மையா னது அரச பதவிகளின் தன் மைக்கேற்ப, மாறுபாட்டைக் கொண்டிருக்கும். வினாக்கள் கடந்த காலத்தில் இவ்வாறு வந் தன. இம்முறை இவ்வாறுதான் வருமென எதிர்வு கூறுவது கடின மானது. அதனால் இந்த வினாத் தாளுக்கான தேடல் மிக நீண்ட தாக இருக்க வேண்டும்.

### பொது உளச்சார்பு

கணிதம், மொழி, தர்க்கித் தல், போன்ற விடயங்களைப் பெருமளவில் கொண்ட தாக இந்த வினாத்தாள் அமையும். பொது உளச்சார்பை பொது அறிவு எனத் தவறாக விளங்கிக் கொண்டு பரீட்சைக்கு பிழை யாக ஆயத்தமாகும் சிலரும் உள்ளனர். இவ்வினாத்தாளை உளச்சார்பு எனவும் பரீட்சைத் திணைக்களம் குறிப்பிடுவது உண்டு. இவ்வினாத்தாள் மொழித் திற னுடன் இணைந்ததாகவும் சில பரீட்சைகளில் இடம்பெறு கிறது.

### நுண்ணறிவு

மிக நுட்பமான தர்க்கித்தல், எண் கோலம், உருவங்களை இனம் காணல், கணிதம் சார் வினாக்கள் போன்றவை இவ் வினாத்தாளில் அமைந்திருக் கும். இந்த வினாக்களுக்கு விடையளிப்பதில் நேரம் போதாது என்ற பிரச்சினையை பரீட் சார்த்திகள் எதிர்நோக்குகின்ற னர்.

நிறையப் பயிற்சிகளைச் செய்வதும், பரீட்சை மண்ட பத்தில் இந்த வினாத் தாளில் இலகுவான கேள்விகளை இனம் கண்டு முதலில் விடையளித்து கடின மானவற்றுக்குப் பின்பு விடையளிப்பதும் வெற்றிகர மான பெறுபேற்றுக்கு உதவும்.

### மொழித்திறன்

அரச பொது, மாகாண முகா மைத்துவ உதவியாளர் சேவை, கிராம அலுவலர் களுக்கான பரீட்சை போன்றவற்றில் இந்த வினாத்தாள் அமையும்.

சில பரீட்சைகளில் இது தனி யாகவோ பொது உளர்ச்சார்பு டன் இணைந்தாகவோ அமை யும். மொழி தொடர்பான திறன் களைப் பல வழிகளிலும் அள விடுவதாக இந்த வினாத்தாள் அமையும்.

மொழி அறிவை அலுவ லங்களில் ஒரு பரீட்சார்த்தி எவ்விதம் பிரயோகிக்கின்றார் என இதிலிருந்து அளவிடப் படுகிறது.

### கிரகித்தல்

அகில இலங்கை சேவைப் பரீட்சைகளான நிர்வாக சேவை, கல்வி நிர்வாக சேவை போன்ற பரீட்சைகளில் இந்த வினாத் தாள் வழமையாகப் பரீட்சிக்கப் படுகின்றது.

தரப்பட்ட பந்தியொன்றை வாசித்து தனித்த ஒரு வசனத் தில் தலையங்க மிடல், தடித்த எழுத்திலான சொற்களுக்கு கருத்து எழுதுதல், பந்தியை வாசித்து கேள்விகளுக்கு விடை எழுதுதல், பந்திக்குச் சுருக்கம் எழுதுல் போன்ற விடயங்கள் இந்த வினாத்தாளில் அடங்கியி ருக்கும்.

கட்டுரையும் சுருக்கமும், அறிக்கையிடல் போன்ற வினாத் தாளும் சில பதவிகளுக்கேற்ப பரீட்சையில் இடம்பெறுகிறது. மேற்கூறிய வினாத்தாள்கள் தான் பிரதானமானவை.

## வே.தபேந்திரன்

இலங்கை வெளிநாட்டுச் சேவை, விஞ்ஞான சேவை போன்ற பரீட்சை வினாத்தாள் கள் அந்தந்த பதவிகளுக் கான தனித்துவங்களைப் பரீட்சிக் கும் வினாக்களை கொண்டிருக் கும்.

போட்டிப் பரீட்சைகளில் வெற்றி பெற்று அரச சேவை யில் இருப்போரி டம் அவர்கள் எவ்விதம் பரீட்சைக்குத் தயாரா னார்கள் என்பதைக் கேட்டறிவ தும் வெற்றிக்கு வழி வகுக்கும்.

பரீட்சை மண்டபத்தில் வினாக்களைத் தேர்ந்தெடுக் கும் முறையும் வெற்றிக்குப் பிரதானமானது.

ஒரு பரீட்சை முடிந்தால் தேநீர், மதிய உணவு இடை வேளையின் போது முடிந்த பரீட்சை வினாக்களுக்கான விடை களைப் பற்றிக் கதைக்காமல் இருப்பதும் அவசியம். பிறர் மனத்தைக் குழப்பி விடுவார் கள்.

பரீட்சை என்பது கற்றலின் அளவு கோல் அல்ல வெளிப் படுத்தும் ஆற்றலின் அழகு என் பதை மனதில் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.



பல்வேறு நெருக்கீடு களையும், அழுத்தங்களையும் எதிர்கொண்டவர் களாக, எமது கற் கும் பிள்ளைகளும், கற்பிக்கும் ஆசிரி யர்களும் உள்ள னர்.நெருக்கீடுகளி லிருந்தும், மன அழுத்தங்களிலிருந் தும் விடுபட்ட பின் னர் கற்றல்/கற்பித் தல் செயற்பாட்டை மேற்கொள்வோம் என்று வாழாவிருக் கவும் முடியாது.

உள நெருக்கீடுகளிலிருந்தும் மன அழுத்தங்களிலிருந்தும் விடுபடும் ஒரு செயற்பாடகக் கூட கற்றல் கற்பித்தலைத் திட்ட மிட்டு அமுல்படுத்தலாம்.

இயற்கை மனிதனால் மேற்கொள்ளப்படும் அனர்த்தங் களின் பின்பு கூட, பாடசாலைகளை மிக விரைவாக ஆரம் பிக்கவேண் டும் என்பதில் யுனிசெவ் போன்ற நிறுவனங்கள் அக்கறையாக உள்ளன. இதற்கான காரணம் கல்வி இழக்கப் படக்கூடாது என்ப தற்கு மேலாக நான்கு ஆசிரியர்கள், பத்துப் பிள்ளைகளை சந்தித்து, உரையாடும் போது அவர்களுடைய மனச்சுமை குறையும்; ஆறுத லும், தேறுதலும் பெறுவர் என் பதும் ஒரு காரணம் ஆகும்.

### கற்றல் கற்பித்தலின் போது...

விசேடமாக ஆரம்பக் கல்வி யில்; பொம்மலாட்டம் உத்தி முறை மூலம் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் அது கூட எம்மை இயல்பு நிலைக்குத் திரும்பச் செய்யும் ஒரு செயலொ ழுங்கு நடை முறையாக அமையும்.

பொம்மலாட்ட முறை மூலம் வகுப்பறைச் செயற்பாட்டில் ஈடு படும்போது,

* கருத்துப் பரிமாறல் திறன் கள்/ தொடர்பாடல் திறன்கள் விருத்தியாகின்றன.
* கணித, மொழி எண்ணக் கரு விருத்தியாகின்றது.
* விஞ்ஞான ரீதியான சிந்தனைக்கும், அவதானத்துக்கும் வழிப் படுத்துகின்றது.
* சுயாதீனமாகவும், ஆக்க பூர்வமாகவும் திறனாய்வுகளை யும் கருத்துக்களை வெளிப் படுத்துவதற்கான திறன் விருத்தி ஆகின்றது.
* ஒத்துழைப்பு, நெகிழ்வு, துணிவு, கனிவு ஆகிய பண்புகள் விருத்தியாகின்றன.
* ஆக்கத்திறன் விருத்தி ஏற்படுகின்றது.
* அவயவங்களுக்கான பயிற்சிகள் கிடைக்கின்றன.
* குழு மனப்பாங்கு, விட்டுக் கொடுக்கும் மனப் பாங்கு ஒத்தி சைந்து தொழிற்படல் திறன் விருத்தி ஆகும்.
* சூழலிலுள்ள சில கழிவுப் பொருள்களிலிருந்து கலைஞான மிக்க பொருள்கள் உருவாக்கப்படுகின்றன.
* மொழித்திறன் விருத்தி களில் ஒன்றான,கேட்கும்/ செவி மடுக்கும் திறன் விருத்தி ஆகின் றது.

ஆரம்பக் கல்வி மாணவர்க ளின் வயதுக்கு ஏற்ற நாட்டங் களின் அடிப் படையிலும், நிறைவுற்ற போர் வடுக்கள், குடும்பப் பிரச்சி னைகளிலிருந்து விடுபட்டு, கல்வியினுள் உள்நுழைவதற்கும் பொம்மலாட்டம் ஒரு சாதனமாகத் திகழ்கின்றது. இந்த முறை மூலம் கற்பிப்பதன் மூலம் ஆசிரியர்கள் உயிர்ப்பான கற்பித்தலில் ஈடுபடு கின்ற அதேவேளை மாணவர்களும் புதிது புதிதாக அவதரிப்பர். மாணவர்களின் அனைத்துப் புலனங்கங்களுக்கும் இங்கு சந்தர்ப் பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

* கற்றல் மகிழ்ச்சிகரமான சூழலில் நிகழும்.
* கூச்ச சுபாவமுடையவர் கள், கற்றல் குறைபாடு உடை யவர்கள் போன்றோர், செயற்பாட்டு முறையிலான இந்தக் கற்றல் மூலம் மற்றவர்களுடான குழு முயற்சியில் தமது பங்களிப்பை நல்கி முன்னேற வாய்ப்பு வழங்கப்படுகின்றது.
* பொம்மைகளின் 'அசைவு' பிள்ளைகளின் பார்வையையும் பின் ணணி குரல் ஒலிமூலம், செவிப்புலனையும் ஈர்த்து வைத் திருக்கின்றது.

## செல்லக்கண்டு செல்வராஜா

இந்தப் புலனங்கங்கள் மூலம் கல்வியின் பால் ஈர்த்து வைக் கப்படுவதுடன், கற்பனை ஆற்றல் ஆக்கத்திறன் விரிவடைகின் றது. கற்பித்தலும் கலை நயம் பொருந்தியதாக இடம்பெறுகின்றது.

இரசிப்பது ஒரு கலை. இது நன் முறையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மனித உள் ளங்களில் கருணையும், பண்பும் உருவாக் கும் ஒரு பலம் வாய்ந்த காரணி இரசனை. இர சனை உணர்வினூ டாக சிறந்த ஆளுமை வளர்த்து எடுக்கப்படுகிறது.

பொம்மலாட்டம் முறை கற் றல், கற்பித்தலும் இரசனையை வளர்க்கின்றது. 'பொம்மலாட்டம்' என்பதும் தன்னள வில் ஓர் அழகியற் கலையே. இது தாய் மொழி, பிறமொழிகளைக் கற்ப தற்கான ஓர் உயர்தர ஊடகமாகும்.

# கல்வி ஆக்கத்திறன் பொம்மலாட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று முதல்
# யாழ் நகரில்

முதல் முறையாக UK ஐ தலைமையாக கொண்ட

LMC

## LONDON METROPOLITAN COLLEGE

197, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில்
காலை 9.30 மணிக்கு
வைபவரீதியாக திறந்து வைக்கப்படுகிறது

யாழ் நகரில் முதல் முறையாக
அனைத்து பாடநெறிகளுக்கும்
பிரபல UK கல்லூரியான Westminster Academy இன்
சான்றிதல்கள் நேரடியாக வழங்கப்படும்.

**Hot Line : 071 4150995, 077 6919455**

EPC net

## EXPONET
Overseas Consultants
(Group of Exponet (Pvt) Ltd.)

No. 379, ½ Galle Road,
Colombo - 06. Sri Lanka.
Phone - 0117555511,12,13,14

No. 56, The Gardens
Harrow Middlesex, HA1 4EY UK
Company No - Fco 27424
Branch No - BR 009294

FLEX Graphic


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி அடாவடி!!

ஔண்யன்

''நில்!'' என்றான் ஓராள்.
''நிறுத்து!'' என்றான் மற்றோராள்.
''புல்'' என்றான் ஓராள்
''புலை'' என்றான் இன்னோராள்
''கொல்'' என்றான் ஓராள்
''கொளுத்து'' என்றான் வேறோராள்.

''கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர் தெறித்து
நிலம் சிவந்து
மல்லொன்று நேர்ந்து .....''

வலி.வடக்கின் புலமையாளர் கவிஞர் மஹாகவி ஒரு கலவரம் பற்றிச் சொன்ன வரிகள் அவரது மண்ணிலேயே அரங்கேறி, நிதர்சனமாகியிருக்கிறது.

அளவெட்டி மகாஜன மண்டபம். ஆரம்பம் அமைதியாகவே இருந்தது சுனாமிக்கு முந்திய கடலைப் போல. எதிர்பார்த்ததை விடவும் பெருமளவான ஆதரவாளர்கள் வந்திருந்தார்கள். கூட்டமைப்பு எம்.பிக்களின் முகத்தில் வெற்றியின் ரேகைகள்.

கலந்துரையாடலொன்றுக்கே இவ்வளவு ஆர்வமாக ஆதரவாளர்கள் வருகிறார்கள் என்றால் நிச்சயமாக தேர்தலிலும் வழமையைவிட வாக்களிப்பு வீதம் அதிகரிக்கும்; கூட்டமைப்பின் வெற்றி வலுவானதாகப் பதிவு செய்யப்படும் என்பதாலேயே கூட்டமைப்பினரின் முகங்களில் அப்படியொரு மகிழ்ச்சி.

மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன், சரவணபவன், சிறிதரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும் கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்த காங்கேசன்துறை தொகுதியின் தமிழரசுக் கட்சியின் செயலாளர் சுகிர்தனும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சங்கையாவும் மேடையில் அமர்ந்து கொண்டனர். ஒலிபெருக்கிகளின் அலறல் இல்லை. ஒரு பொக்ஸ் மட்டும் மண்டபத்தின் உள்ளே நிகழ்பவற்றை எல்லோரும் தெளிவாகக் கேட்கக் கூடியவகையில் பொருத்தப்பட்டிருந்தது. ஆடம்பரங்கள், அமர்க்களங்கள் எதுவுமில்லாது அந்தக் கலந்துரையாடல் ஆரம்பமாயிற்று.

நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி உரையாற்றினார். இன்றைய நெருக் கடியான சூழலில் உள்ளூராட்சித் தேர்தலின் முக்கியத்துவம், கூட்டமைப்பின் வியூகங்கள் பற்றியெல்லாம் கூறிவிட்டு அமர்ந்தார்.அதன் பின் பேச வந்தவர் ஈ. சரவணபவன் எம்.பி. அண்மையில் தொலைபேசி மூலம் கொலையச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த போதும் , துணிச் சலோடு கலந்துரையாடலுக்கு வந்திருந்தார். அவர் உரையாற்றிக் கொண்டிருக் கும் போதுதான் அன்றைய பூகம்பத்தின் முதல் அதிர்வு ஏற்பட்டது.

மண்டபத்தின் வெளிப்புறமாக நின்றிருந்த சுமந்திரன் எம்.பியின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் பதற்றமான முகத்தோடு மேடையில் ஏறி, சுமந்திரனின் காதருகே இராணுவ மேஜர் ஒருவர் படையினர் சகிதம் வந்திருக்கிறார். அனுமதியின்றிக் கூட்டம் நடைபெறுவதாகவும் அதனை தடுத்த நிறுத்துமாறு மேலிடத்திலிருந்து தனக்கு உத்தரவு வந்திருப்பதாகவும் எங்களுக்கு அவர் சொன்னார் என்ற வார்த்தைகளை உதிர்த்தார். மேடையில் இருந்தவர்களுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்துவிட்டு, இராணுவ மேஜருக்கு நிலைமையை விளக்குவதற்காக மேடையை விட்டிறங்கினார் சுமந்திரன். அதற்குள் மேஜர் மண்டபத்துக்குள் வந்துவிட்டார். ஏதோ விபரீதம் நிகழப்போகின்றது என்பதை ஊகித்துக் கொண்டவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்ப்பாதுகாவலர்கள் மேடையைச் சூழ்ந்து கொண்டனர்.

மேஜருக்கும் சுமந்திரனுக்கும் இடையே மண்டபத்தின் ஓரமாக காரசாரமான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில்- கைகளில் இரும்புக் கம்பிகள், மண்வெட்டிப்பிடிகளின் சைஸ்களில் கொட்டன்கள், இயங்கியபடியிருக்கும் சி.டி.எம்.ஏ தொலைபேசிகள் சகிதம் திபுதிபு வென மேடையை நோக்கி - புலிகளின் முகாமொன்றைக் கைப்பற்ற முனைவது போன்ற - ஆவேசத்துடன் நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் பாய்ந்து சென்றனர். சரவணபவன் உரையாற்றிக் கொண்டிருப்பதையும் லட்சியம் செய்யாதவர்களாக , அவர் முன்னால் இருந்த மைக்கை பிடுங்கியெடுக்க முனைந்தனர். சரவணபவன் எம்.பியும் விடவில்லை. அவர்களின் பிடுங்குதலில் இருந்து மைக்கை காப்பாற்ற எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். வந்ததே சிப்பாய்க்கு கோபம்! சரவணபவன் எம்.பியை நோக்கி, அடிப்பதற்காக கையை ஓங்கினார்.

நல்லவேளையாக அந்தச் சமயத்தில் குறுக்கே புகுந்து கொண்ட அவரது மெய்ப்பதுகாவலர் 'தரித்'தின் நெஞ்சின் மீது வீழ்ந்தது அந்தக்குத்து.மூர்க்கமான அந்த அடியில் நிலைகுலைந்து போனார் தரித். கலந்துரையாடலுக்கு தலைமை வகித்த தமிழரசுக்கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதிச் செயலாளர் சுகிர்தனின் உடலையும் படையினரின் கொட்டன்கள் பதம் பார்த்தன.

மேடையில் மட்டுமல்லாது கீழே அமர்ந்திருந்தவர்கள் மீதும் கொட்டன்களும், இரும்புக்கம்பிகளும் தாறுமாறாக விளையாடின. எவருமே படையினருடன் நியாயம் கதைக்கவோ, அல்லது அவர்களிடம் கருணை கிடைக்குமென்று எதிர்பார்க்கவோ முற்படவில்லை. சில நாள்களுக்கு முன்னர் சனல்-4 வெளியிட்ட இலங்கையின் கொலைக்களம் என்ற ஆவணப்படத்தில் சீருடையினரின் கொடூரங்களைப் பார்த்த பயத்தில் இருந்து இன்னமும் மீளாததால் இங்கும் அப்படியான அசம்பாவிதங்கள் நடந்து விடுமோ என்றும் அஞ்சினர்.


தாக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்காக...

தங்களை நிர்வாணமாக்கி தலையில் சுட்டோ அல்லது கொட்டன்களால் அடித்தோ கொலை செய்து விடுவார்களோ என்று பலர் எண்ணிப் பயந்தனர். எனவே வேறு வழியின்றி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடத்தொடங்கினர். ஓடினாலும் சீருடையினர் விடுவதாயில்லை. பராசக்தி படப்பாணியில் சொல்வதானால் துரத்தினர், துரத்தினர் வாழ்வின் எல்லை வரை படையினர் துரத்தினர்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர் ஒருவரை - பெண் என்று கூடப்பாராமல்- ஆவேசத்தோடு ஒரு சிப்பாய் கொட்டனோடு துரத்திச் சென்றான். மேடையில் நின்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவின் மீதும் தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்டது. அதுவும் மெய்ப்பாதுகாவலர்களால் தடுக்கப்பட்டது.


தாக்குதல் நடைபெறுவதற்கு சில செக்கன்களுக்கு முன்னர்...

மாவையின் சகோதரரின் கமெராவைப் பறித்தெடுத்து அதற்குள்ளிருந்த மெமரிசிப்பை பிடுங்கினர். சற்றும் தளராத விக்கிரமாதித்தர்களாக மீண்டும் மாவை மீது தாக்குதலை நடத்த சீருடையினர் முயன்றபோது, அவரது மெய்ப்பாது காவலர் சம்பத் துணிச்சலாக ஒரு காரியம் செய்தார். அதனால் ஓங்கிய சீருடையின் கை அந்தரத்திலேயே நின்றது. ஏனெனில் மெய்ப்பாதுகாவலர் சம்பத்தின் கைகளில் பிஸ்ரல் பளிச்சிட்டது. துப்பாக்கியைக் கண்டதும் சீருடையினருக்கு கொஞ்சம் பயம் வந்தது.

இனி ஒரு அடி விழுந்தால் உங்கள் மீது சுடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கர்ச்சித்தவாறு துப்பாக்கியை நீட்டியபடி, மேடையில் நின்றவர்களை சம்பத்தும் ஏனைய மெய்ப்பாதுகாவலர்களும் பத்திரமாக வெளியேற்றினர்.

அதன் பின்னர் தெல்லிப்பழைப் பொலிஸில் இச்சம்பவம் குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் முறைப்பாட்டைச் செய்து கொண்டிருக்கும் போது அங்கு வந்த மேஜர் ஜெனரல் வல்கம நடந்த சம்பவத்துக்கு வெரி சொறி! வெரி சொறி! என மன்னிப்புக் கேட்டதோடு , முறைப்பாட்டைச் செய்யவேண்டாமெனவும் வேண்டினார். அத்துடன் ஊடகங்களிலும் இச்சம்பவம் பற்றிய செய்திகள் வெளிவராமல் பார்த்துக் கொள்ளும்படி கெஞ்சினார். ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தாது கூட்டமைப்பினர் முறைப்பாட்டைச் செய்து விட்டு மீண்டும் அளவெட்டி மகாஜன மண்டபத்துக்கு வந்த போது , கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு தங்கள் கண்களையே நம்பமுடியவில்லை. அடிதடியால் திசைக்கொன்றாய் பறந்து, சிதறிக்கிடந்த கதிரைகள் எல்லாம் மிக நேர்த்தியாக அடுக்கப்பட்டு, களேபரம் நடந்த சுவடுகள் மறைக்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் கண்டன அறிக்கைகள், ஜனாதிபதிக்கு கடிதம், வழக்கு போடுவதற்கான முயற்சி எனத் தொடர்கின்றன இச்சம்பவத்தின் அதிர்வலைகள். மிக நீண்டகாலத்துக்குப் பின்னர் நடைபெறப் போகும் உள்ளூராட்சித் தேர்தல் என்பதால் பிரசாரங்களை முழுவீச்சில் முன் னெடுக்க கூட்டமைப்பு நினைத்திருந் தது. ஏனெனில் மக்கள். உள்ளூராட்சி அமைப்புகள் இருப்பதைக் கூட மறந்து போய்விட்டார்கள். அதிகாரம் தன்னுடைய கைகளுக்கு வரப்போவதில்லை என்பதை நன்குணர்ந்து கொண்ட பேரினவாத அரசுகள் ஒவ்வொருமுறையும் உள்ளூராட்சித் தேர்தல்களைப் பிற்போடு வதையே தன்னுடைய மரபார்ந்த செயற்பாடாக வரித்திருந்தன.

தற்போதும் உள்ளூராட்சித் தேர்தலில் அரசுத் தரப்பின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதால் எந்தவிதக் காரணங்களுமின்றி தேர்தலை அரசு ஒத்திப்போட்டது. பின்னர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, தமது வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற தீர்ப்பினை பெற்றுக்கொண்டது. யாழ்.மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் திடீரென - கட்டாயத்தின் பேரில்- இடமாற்றம் செய்யப்பட்ட கையோடு புதிய தேர்தல் திகதியை அரசு வெளியிட்டது.

இவ்வளவு ரிஸ்க் எடுத்தும் தோல்வியைத் தழுவினால் அதைவிட அவமானம் வேறொன்றும் இருக்கப்போவதில்லை. போதாக்குறைக்கு வவுனியாவில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியிருந்தது. அதே நிலைமையே யாழ்ப்பாணத்திலும் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவேதான்கொட்டன்களையும், இரும்புக்கம்பிகளையும் கையிலெடுத்துள்ளது அரசு.

இன்னமும் நாங்களே இந்தப் பகுதியின் முடிசூடா ஆட்சியாளர்கள். எங்களை மிஞ்சி எதுவும் செய்யமுடியாது. இங்கு நாங்கள் வைத்ததுதான் சட்டம். அடிப்போம், துவைப்போம், யாரும் எங்களை எதுவும் செய்யமுடியாது. இதுவே அளவெட்டித் தாக்குதல் மூலம் சீருடையினர் சொல்லியிருக்கும் செய்தி. மக்களை ஒரு அச்சுறுத்தலான சூழலுக்குள் வீழ்த்துவதன் மூலம் தேர்தலில் அவர்களுக்கிருக்கும் ஆர்வத்தைக் குறைத்து பயத்தை அதிகரிக்கச் செய்வதே இத்தாக்குதலின் உடனடி நோக்கம்.

இதன் மூலம் அவர்கள் நிறைய விளைவுகளை எதிர்பார்க்கிறார்கள். அச்சம் அதிகரித்தால் வாக்களிப்பதற்கு கூட்டமைப்பு ஆதரவாளர்கள் வரமாட்டார்கள். வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடப் பார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் தமது பணபலத்தால் விலைக்கு வாங்கியவர்களைக் களத்தில் இறக்கி, அரசுத்தரப்புக்கே வாக்களிக் கச்செய்யலாம். சொற்பமான வாக்குகளைக் கொண்டே எல்லா உள்ளூராட்சிச் சபைகளையும் தமது காலடிக்குள் கொண்டுவரலாம். தமிழ்மக்கள் எங்கள் பக்கம்தான் என்று சர்வதேசத் தின் முன்னால் மார்தட்டலாம்.

அரசின் இத்தகைய் எண்ணங்கள் அடாவடித்தாக்குதல்களால் நிறைவேறுமா என்பது கேள்விக்குறியான விடயமே. ஆனாலும் இப்படி நிறைய அச்சுறுத் தல்களையும், வெருட்டல்களையும், அடிகளையும், பலியெடுப்புகளையும், வலிகளையும் தாங்கிய மக்களை அரசு தவறாக எடை போடுகின்றது. தவறான வன்முறை வழியைத் தேர்வு செய்கிறது. இதற்கு ஜனநாயக வழி மூலம் - உள்ளூராட்சி தேர்தல்களில்- மக்கள் கொடுக்கப்போகும் அடி , அதிகாரத்தின் முகத்தில் விழுகின்ற மரண அடியாக இருக்கப்போவது மட்டும் நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடைப்பந்தாட்டம் வவுனியாவில்

யாழ்ப்பாணம்,ஜூன் 19

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் 19 வயது ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி நாளையும் மறுதினமும் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ் மாவட்டத்திலிருந்து ஆண்கள் பிரிவில் யாழ் மத்திய கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியனவும் பெண்கள் பிரிவில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, உடுவில் மகளிர் கல்லூரி ஆகியனவும் கலந்து கொள்கின்றன. (த-23)

# மாகாணக் கிரிக்கெட் போட்டியில் வவுனியா தமிழ் ம.வி. சம்பியன்

வலி.வடக்கு,ஜூன் 19

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று வடமாகாண சம்பியனாகியது.

வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயமும் யாழ்ப்பாணம் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியும்மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது. ரஜீவன் 23 ஓட்டங்களைப் பெற்றார்.

வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த அனோஜன் 2 ஓவர்கள் பந்துவீசி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

72 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் 9.5 ஓவர்களில் 74 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. வினோஜன் இறுதி ஓவரில் 19 ஓட்டங்களைப் பெற்றமை வவுனியா தமிழ் வித்தியாலயத்தின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த தயா 2 ஓவர்கள் பந்து வீசி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இரு அணிகளும் அகில இலங்கை ரீதியாகத் தேசிய மட்டத்தில் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-86)

## ஹரிகரன் புதிய சாதனை

யாழ்ப்பாணம்,ஜூன் 19

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டியில் நேற்றைய தினம் தட்டெறிதல் போட்டியில் வடிவேற்கரசன் ஹரிகரன் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

வடமகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் நடைபெற்ற தடகளப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ஹரிகரன் 2009ஆம் ஆண்டு பதிவுசெய்த 36.29 மீற்றர் என்ற தனது பழைய சாதனையை முறியடித்து இம்முறை 38.10 மீற்றல் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார். (த-86)

## பிரதேச செயலகங்களின் மெய்வன்மைப் போட்டி இன்று

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். செயலக விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்ட செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் மெய்வன்மை போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் எஸ்..பத்மநாதன், இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையின் பிரதம முகாமையாளர் எஸ்.மகாதேவா, யாழ். செயலக பிரதம கணக்காளர் எஸ்.சண்முகரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-86)



இலங்கை ரெனிஸ் சங்கத்தின் ஏற்பாட்டில் பாட்லீட் பிளான்ஸ் கம்பனியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட ரெனிஸ் சுற்றுப் போட்டி தொடரில் பெண்களுக்கான ஒரேஞ் பந்து போட்டியில் வெற்றியீட்டிய சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியினருடன் விருந்தினர்கள் காணப்படுகின்றனர். (ம-23)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஜூன் 19

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆறு பேர் பங்குபற்றும் 5 பந்து பரிமாற்றங்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன. இந்த ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

✱ குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் முருகமூர்த்தி விளையாட்டுக் கழகம்.

✱ அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் கொக்குவில் இந்திரா விளையாட்டுக் கழகம்.

✱ மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழகம் எதிர் அளவெட்டி ஜீ.பி.எஸ்.விளையாட்டுக் கழகம்.

✱ கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகம் எதிர் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகம்.

இரண்டாம் சுற்றில் இருந்து உடுவில் கண்ணகி விளையாட்டுக் கழகமும் உரும்பிராய் சச்சின் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (த-86)

## வீரர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 19

89ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வில் முதலிடம் பெற்ற வீரர்கள் பதக்கங்கள் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உப தலைவர் இ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் சி.தேவகுமார், பணிப்பாளர் சபை உறுப்பினர் வீ.சிவசுப்பிரமணியம், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.இராஜாராம், செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-311)

## பெண்களுக்கான மேசைப்பந்தாட்டம் தெல்லிப்பழை யூனியன் வென்றது

வலி.வடக்கு, ஜூன் 19

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழையூனியன்கல்லூரி வட மாகாண சம்பியனாகியது.

வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி நிறைவுபெறும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்ட போதிலும் ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றிபெற்று வட மாகாண சம்பியனாகியது.

முதலாம் இடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும், மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

இந்த அணிகள் தேசிய மட்டத்தில் அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ள போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (த-86)

## முக்கோண வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி ஓகஸ்டில்

வலி.வடக்கு, ஜூன் 19

ஜோர்ஜ் வெஸ்ரர் வெற்றிக் கிண்ணத்துக்காக 2010 ஆம் ஆண்டு யாழ். சென்ரல் விளையாட்டுக் கழகம் நடத்திய சுற்றுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளுக்கு இடையேயான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய முக்கோண வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டி ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும், 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ். சென்ரல் விளையாட்டுக் கழகம், 21 ஆம் திகதி யாழ். சென்ரல் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ். பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன.

28 ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் மோதவுள்ளன. (த-86)



யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தொகுதி மாணவர்களுக்கான குபுடோ தற்பாதுகாப்பு கலைக் கருத்தரங்கும், பயிற்சி நெறியும் அண்மையில் கொக்குவிலில் உள்ள வலுவிழந்தோர் நிலையத்தில் நடைபெற்றது. [illegible] கராத்தே சம்மேளனப் பிரதித் தலைவர் சிகான் எச்.டி.சி.ஜே.பெரேரா, [illegible] யாழ்ப்பாணத்தில் உள்ள குபுடோ பயிற்சி ஆசிரியர் எம்.சபேசன் உட்படபயிற்சி மாணவர்கள் உள்ளார்கள். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை இங்கிலாந்து ஆட்டத்தில்...

இலங்கை -இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்றைய ஆட்டமுடிவில் இலங்கை அணி 9 விக்கெட் இழப்பிற்கு 177 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சௌதாம்ப்டன் ரோஸ் போல் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியின் முதல் நாளில் மழை காரணமாக 38 ஓவர்கள் மாத்திரமே விளையாடப்பட்டன. அன்றைய ஆட்டமுடிவில் இலங்கை அணி 4 விக்கெட் இழப்பிற்கு 81 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

போட்டியின் இரண்டாவது நாளான இன்று 23 ஓவர்கள் மாத்திரமே விளையாடப்பட்டன. இன்றும் இலங்கை அணி விக்கெட்டுகள் வேகமாக சரிந்தன. பிரசன்ன ஜயவர்தன 43 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்டமுடிவின்போது தில்ஹார பெர்னாண்டோ 33 ஓட்டங்களுடனும் வெலகெதர ஓட்டமேதுவும்பெறாமலும் களத்திலிருந்தனர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்களில் கிறிஸ் ட்ரெம்லெட் 42 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

## வேகம் ஒரு பொருட்டல்ல..

வேகப்பந்து வீச்சாளர்களுக்கு வேகம் என்பது ஒரு பொருட்டே அல்ல. நீண்ட நாள்களுக்கு எப்படி திறமையாக செயல்படுகின்றனர் என்பது தான் முக்கியம் என்று இந்திய வீரர் ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் சென்றுள்ள இந்திய அணி, ஒரு நாள் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதில் இந்திய அணியின் முனாப் பட்டேல், இஷாந்த் சர்மாவை மேற்கிந்தியத்தீவுகள் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அண்டி ரோபர்ட்ஸ் விமர்சித்தார். இவர்கள் வேகத்தை குறைத்துக் கொண்டதால், சுழற்பந்து வீச்சாளர்கள் போல பந்துவீசுவதாக கூறினார்.

அண்டி ரோபர்ட்சின் இந்த புகாருக்கு, இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீநாத் பதிலடி கொடுத்துள்ளார். இது குறித்து ஸ்ரீநாத் கூறியதாவது, வேகப் பந்து வீச்சாளர்களுக்கு வேகம் என்பது ஒரு பொருட்டே அல்ல. நீண்ட நாள்களுக்கு எப்படி திறமையாக செயல்படுகின்றனர் என்பது தான் முக்கியம்.

முனாப் பட்டேல் முன்பு இருந்த வேகத்தை குறைத்தபின் தான், விக்கெட்டுக்களை அதிகம் கைப்பற்ற தொடங்கியுள்ளார் என்று ஸ்ரீநாத் தெரிவித்தார்.

இதேபோல இந்திய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் எரிக் சிம்மன்ஸ் கூறுகையில், சமீபத்திய உலகக் கிண்ணத் தொடரில் சகீர்கான், யுவராஜ் சிங்கிற்கு அடுத்து அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய இந்திய வீரர் வரிசையில் முனாப் பட்டேல் மூன்றாவது இடம் பெற்றார் என்பதை மறக்க கூடாது என்றார். (15)

## நான் இளமையாகிறேன்...



ஆஸ்திரேலிய கிரிக்கட் அணியின் முன் னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் சமீபத்தில் நடந்த ஐ.பி.எல் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பாக விளையாடியவர்.

41 வயதை கடந்த இவர் கடந்த ஜூன் 2005இல் தனது மனைவியான சிமோன் கல்லாஹனை விட்டு பிரிந்தார். பின்னர் ஹொலிவுட் நடிகையும், இந்திய நாட்டைச் சேர்ந்த அருண் நய்யாரின் முன்னாள் காதலியுமான எலிசபெத் ஹர்லியுடன் (வயது 46) தனது நட்பை புதுப்பித்துத் கொண்டார்.

அருணுடனான தனது தொடர்பை முற்றிலுமாக முறித்து விவாகரத்து பெற்று விட்ட ஹர்லி தற்போது நிரந்தரமாக வோர்னுடன் அவரது வீட்டில் குடியேற உள்ளார்.

இந்நிலையில் தனது காதலிக்கு நிகராக வோர்ன் தோல் சுருக்கம் நீங்கி முகப்பொலிவு பெறுவதற்காக அறுவை சிகிச்சை செய்து கொண்டதாக அவரது நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இது பற்றி டிவிட்டர் இணையதளத்தில் அவரது ரசிகர்கள் பல்வேறு கருத்துகளை கூறி வருகின்றனர். ஆனால் வோர்ன்,''அவ்வாறு எந்த அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளவில்லை'' என மறுத்துள்ளார். (15)

## இப்ப ரொம்ப சரியில்லை!



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இந்தியா 3-2 என்ற கணக்கில் வென்றுள்ள போதிலும் ரெய்னா சரியாக விளையாடவில்லை. 5 ஆட்டங்களில் வெறும் 82 ஓட்டங்களை மட்டுமே அவர் எடுத்தார்

ஐந்தாவது ஆட்டத்தில் தோல்வியடைந்த பின் இது குறித்து ரெய்னா கூறியதாவது:

முதல் இரண்டு ஆட்டங்களில் நான் நன்றாக விளையாடினேன். ஆனால் அடுத்த 3 ஆட்டங்களிலும் நான் சரியாக விளையாடவில்லை.

அதுவும் ஐந்தாவது ஆட்டத்தில் இக்கட்டான சூழ்நிலையில் களம் இறங்கி ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தது மன்னிக்க முடியாத விடயம்தான்.

சரியான முறையில் நான் விளையாடவில்லை. பயிற்சி ஆட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை தொடங்க இருக்கிறது. அதற்கு முன் தீவிரமாக வலைப்பயிற்சி மேற்கொண்டு எனது திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

அணியில் ரோஹித் சர்மா, விராட் ஹோக்லி, பார்த்திவ் படேல் ஆகியோரது துடுப்பாட்டமும், அமீத் மிஸ்ராவின் பந்து வீச்சும் சிறப்பாக இருந்தது. இதனால் தொடரை வெல்ல முடிந்தது. புதிய களத்தடுப்பு பயிற்சியாளர் பென்னி வந்த பின் களத்தடுப்பிலும் முன்னேற்றம் அடைந்துள்ளோம். - இவ்வாறு ரெய்னா கூறினார். (15)

## காசில்லை; அதனால் அறையில்லை!

ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெறவுள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்காக, இலங்கை கிரிக்கெட்டிற்கு (ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை) அறைகளை வாடகைக்கு வழங்க நட்சத்திர ஹோட்டல்கள் சில மறுப்பு தெரிவித்துள்ளன. ஹோட்டல்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்பட்டமையே இதற்குக் காரணம்.

ஆஸ்திரேலிய அணி, ஒகஸ்ட் 6 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 20 ஆம் திகதிவரை ஒரு 20 ஓவர் ஆட்டம் 5 ஒரு நாள் சர்வதேச ஆட்டங்கள், 3 டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அண்மைக்காலமாக கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. கடந்த மாதம் அதன் சுமார் 270 ஊழியர்களுக்கு சம்பளப்பணத்தை உரிய திகதியில் செலுத்த முடியாமல் அது தடுமாறியது.

இந்த நிலையில் அரசாங்கத்திடமிருந்து மானிய உதவியை இலங்கை கிரிக்கெட் சபை கோரியிருந்தது. இதனால் அந்த நிறுவனத்திற்கு 200 கோடி ரூபா மானியம் வழங்கும் திட்டமொன்று புதன்கிழமை விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டபோது அமைச்சர்கள் அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பொதுமக்களின் பணத்தை ஊழல் மிக்க, வினைத்திறனற்ற இலங்கை கிரிக்கெட்டுக்கு வழங்குவது குறித்து கலந்துரையாடுவதற்குக் கூட அமைச்சர்கள் மறுத்தனர் என்று சிரேஷ்ட அரசாங்க வட்டாரமொன்று ஊடகங்களுக்குத் தெரிவித்தது.

இது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கருத்துத் தெரிவிக்கையில் உலகக்கிண்ணப் போட்டிகளுக்காக பள்ளேகல, ஆர். பிரேமதாஸ அரங்குகளை புனரமைப்பதற்கும் ஹம்பாந்தோட்டையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரக்கெட் அரங்கை நிர்மாணிப்பதற்கும் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டிற்கு அதிக செலவாகியதாகவும் இந்தச் சூழ்நிலையிலேயேதான் மேற்படி அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்ததாகவும் கூறினார். (15)

## முக்கோணத் தொடர் மீண்டும் ஆரம்பம்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை 3 நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டியை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு கைகழுவியது.

இந்தத் தொடர் நீண்ட நாள்களுக்கு நடத்தப்படுவதாக வீரர்கள் ஆட்சேபம் தெரிவித்ததை தொடர்ந்து சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. தற்போது மீண்டும் 3 நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டித் தொடரை ஆஸ்திரேலிய சபை நடத்த தீர்மானித்துள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் இந்திய அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 4 பயிற்சி போட்டி, ஒரு 20-20 இல் ஆடுகின்றது. அதைத்தொடர்ந்து 3 நாடுகள் ஒரு நாள் தொடர் தொடங்குகிறது. 3 ஆவது நாடாக இலங்கை பங்கேற்கிறது.

இந்தத் தொடர் பெப்ரவரி 5 ஆம் திகதி தொடங்கி மார்ச் 8 ஆம் திகதி வரை நடக்கிறன. மொத்தம் 12 லீக் ஆட்டங்கள், 3 இறுதி ஆட்டங்கள் நடக்கின்றது. ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா 4 முறை மோதும்.

புள்ளிகள் அடிப்படையில் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தும். கடைசியாக ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட 3 நாடுகள் போட்டியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவை வீழ்த்தி கிண்ணத்தை வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (15)

## முதல் சுற்று இலகுச் சுற்று



விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று சானியா மிர்சா, சோம்தேவ் தேவ்வர்மன் உள்ளிட்ட இந்திய நட்சத்திரங்களுக்கு எளிதானதாக அமைந்துள்ளது.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் வரும் 20ம் திகதி துவங்குகிறது. இதற்கான அட்டவணை நேற்று வெளியிடப்பட்டது.

இதில் இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சாவுக்கு முதல் சுற்று எளிதானதாக அமைந்துள்ளது. டபிள்யு.டி.ஏ தரவரிசைப் பட்டியலில் 60வது இடத்தில் உள்ள சானியா முதல் சுற்றில், 98வது இடத்தில் உள்ள பிரான்சின் விர்ஜினி ரசானோவை சந்திக்க உள்ளார்.

இதில் வெற்றி பெறும் பட்சத்தில் இரண்டாவது சுற்றில் உலகின் நம்பர்-1 வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை சந்திக்க வேண்டியிருக்கும்.

இதேபோல ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஏ.டி.பி தரவரிசைப் பட்டியலில் 68வது இடத்தில் உள்ள இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், 110வது இடத்தில் உள்ள ஜேர்மனியின் டெனிஸ் கிரிமெல்மேயரை சந்திக்க உள்ளார்.

இதில் வெற்றி பெறும்பட்சத்தில் இரண்டாவது சுற்றில் ஜுயன் மொனாகோ(அர்ஜென்டினா) அல்லது ரஷ்யாவின் மிக்கேல் யோஸ்னியை சந்திக்க வேண்டியிருக்கும்.

ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்-மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா(இந்தியா)-குரேஷி (பாகிஸ்தான்) உள்ளிட்ட ஜோடிகளுக்கு முதல் சுற்று எளிதானதாக அமைந்துள்ளது. இதேபோல பெண்கள் இரட்டையரில் இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் எலினா வெஸ்னினா ஜோடிக்கு முதல் சுற்று சுலபமாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி செல்லக் கதிர்காம கோயில் திருப்பணிச் சபை தெரிவு

ஆலய பாலஸ்தாபன மற்றும் திருப்பணிகளுக்குரிய திருப்பணிச் சபை தெரிவுக்கான கூட்டம் இன்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அடியார்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஆலய பரிபாலனசபை

த.தர்மலிங்கம் (தலைவர்)
வே. சரவணமுத்து செயலாளர்.

## திருநிலைப்படுத்தலின் 25ஆம் ஆண்டு நிறைவு

அருட்தந்தை
# இராஜேந்திரம் ஸ்ரலின்



இறைவன் அழைப்பில் -உமை
உவகையுடன் உவந்தளித்தவரே
அலைந்திடும் மந்தைகளை
உண்மை உறவின் மேய்பனாய் - இருந்து
உயர் வழிகாட்டி நிற்பவரே
தடம்புரண்ட உள்ளங்களுக்கு - நேர்வழிகாட்டும்
உளவளத் துணையானவரே
உண்மை அன்புடன் இருகரம் நீட்டி
நற்பணி புரிந்து இருபத்தைந்தாண்டு
கண்டிட்ட நற்குருவே
தொடர்ந்தும் உம் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்....

கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த மாதம் 19.05.2011 வெள்ளிக்கிழமை கனடாவில் சிவப தமடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி
### நாகராசா சரஸ்வதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மா.செல்வராசா,
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி. (5011)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்
### சாள்ஸ் பற்றிக் டுவின்சன்



ஜேர்மனி, பேர்லினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாள்ஸ் பற்றிக் டுவின்சன் 16.06.2011 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் சாள்ஸ் பற்றிக் - தயாநிதி தம்பதியரின் அன்பு மகனும், பரி, அனித்தா ஆகியோரின் சகோதரனும், உதயகுமார், சாந்தகுமார், செல்வகுமார், அன்ரன்ஜேஜ் ஆகியோரின் மருமகனும், ஜெயாநிதி, அன்ரன்ஜேஜ் இரவீந்திரன், வாட்டர், அன்ரன் ஆகியோரின் பெறாமகனும், விஜிதா, சுசீந்திரா, ராணி ஆகியோரின் மருமகனும், செல்லத்துரை, மல்லிகாதேவி தம்பதியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனி பேர்லினில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.மல்லிகாதேவி (அம்மம்மா)
50/15, செட்டித்தெரு,
நல்லூர்.

## நல்லூர்ப் பகுதியின் வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவுக்கு உட்பட்ட உணவு கையாளும் நிலையங்கள், உணவுப்பண்டத்தொழிற்சாலைகள், பலசரக்கு வர்த்தக நிலையங்கள், பேக்கரி ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கானகலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோண்டாவில் மருத்துவமனைக்கு அருகில் உள்ள நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில்வைத்திய அதிகாரி இ.சிவசங்கர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதன்போது புதிதாக மறுசீரமைக்கப்பட்ட எச்/எண்ணூறு (H/800) வடிவம் தொடர்பாக பூரண விளக்கமளிக்கவுள்ளதுடன், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள்குறித்தும் விளக்கமளிக்கப்படவுள்ளன. (ஒ-14)

## உதைபந்தாட்டப் போட்டி

கிளிநொச்சி, ஜூன் 19

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ள முதற் சுற்றில் குறிஞ்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளம்பறவை விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ம)

### வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கில் கோணாவில் ஒழுங்கையில் மாடி வீட்டின் மேல் பகுதி வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0750485258

### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய காலிக்குயின் பெண் நாயும், ஜேமன் செப்பேட் அல்சேசன் ஆண் நாய்களும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 60 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாய்க் குட்டிகளும், வான்கோழிகளும், பன்ரம், சினைப் படுத்திய யமுனா பாறி ஆடும், சேரன் ஆடும் விற்பனைக்கு உண்டு.

லி.மயூரன், இல 209, பலாலி றோட் கோண்டாவில், ராஜா பிளாசா முன்பாக.

### உடன்தேவை

இராமநாதன் வீதியில், யாழ். பல்கலைக் கழகத்துக்கு அண்மையில் டிஜிற்றல் தொழில் நுட்பத்துடன் கூடிய போட்டோ கொப்பி செய்யும் நிலையத்துக்கு கணினி தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யக்கூடியபெண்கள் உடன் தேவை.

தொலைபேசி இலக்கம்:
0212226951, 0779522444

### விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத புத்தம் புதிய 49 CC மோட்டார் சைக்கிள்கள், பாவித்த Sony Wega T.V என்பன விற்பனைக் குண்டு. அரசாங்க ஊழியர்கள் மாதாந்த தவணை அடிப்படையிலும் பணம் செலுத்தலாம்.

குணம், 517, வைமன் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.

# தெய்வ நெறியில் வாழ்ந்த பெரியார்

30.06.2010 அன்று சிவபதமடைந்த முதுபெருமறிஞர்

### சரவணமுத்து இராசரத்தினம்

(தத்துவஞானி பொ.கைலாசபதி, பண்டிதமணி, சி.கணபதிப்பிள்ளை ஆகியோரின் மாணவன்)

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்தி நினைவாக இக்கவிதை பிரசுரமாகிறது.



ஆன்ற வித்தடங்கிய கொள்கைச் சான்றோர்!
அன்பின் உறைவிடம்! அமைதியின் பிறப்பிடம்!
ஆயிரம் ஆயிரம் மாணவர் நமக்கும்
அறிவொளி நல்கிய தீபம் அவரே!
தமிழ் சைவத்தில் பெரியவர் அவர்!
பணியினை அணியெனக் கொண்டவர் அவரே!
நல்லவை நினைத்தல் நல்லவை சொல்லல்
நல்லவை ஆற்றல் வாழ்வெனக் கொண்டவர்!
பெரியோர்க்குரிய குணமெலாம் கொண்டவர்!
பெரியோர் தம்மைப் பேணும் இயல்பினர்!
பண்டிதமணியிடம் கற்கும் பேற்றைப்
பெற்றதை என்றும் பெருமையாய்ச் சொல்பவர்!
வீட்டினில் அன்பு வெளியினில் அன்பு
விருந்தினர் தம்மைப் போற்றிடும் பண்பு யாவும்
நிறைந்த நிறைகுடம் எங்கள்
இராசரத்தினம் எனும் பெரியார்!

பிள்ளைகள் மீது பேரன்புடையவர்
பிள்ளைகள் வளர்ச்சியே மகிழ்ச்சி என்றிருந்தவர்

நல்லாசிரியராய் நல்ல துணைவனாய்
நல்ல தந்தையாய் நல்ல உறவுமாய்
நன்மை வடிவாய் வாழ்ந்த பெரியார்!

வையமீது வாழ்வாங்கு வாழ்ந்தே
தெய்வத் திருவடி எய்தினர் இனிதே!
-கவிதை ஆக்கம்: புலவர் ம.பார்வதிநாதசிவம்.

இன்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன்கோயிலடி, வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி சபாரத்தினம்
(74, கண்டி வீதி, சுண்டிக்குளி)

திருமதி புவனேஸ்வரி சபாரத்தினம் அவர்கள் 16.06.2011 அன்று தனது 97ஆவது வயதில் காலமானார்கள். அன்னார் காலஞ்சென்ற K.சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் ரகு, திலகா, காலஞ்சென்ற திருமலர், சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மச்சாளும் காமதேனு, வசந்தகுமார், சித்தி, இந்திரகுமார், ரன்ஜி, காலஞ்சென்ற சுகுமார், திருக்குமார் ஆகியோரின் பாசமுள்ள தாயாரும் அருளானந்தம் ஹிரோகோ, நாகராஜா, யோகமலர், குணசிங்கம், வதனா, கிருஷா ஆகியோரின் அருமை மாமியாரும் நிரஞ்சலா, ரமனன், லக்ஷ்மி, சஞ்சீவன், பிரதீபா, லக்ஷ்மன், சுமித்ரா, ருக்மன், சீதா, சுரியன், சயிந்தன், கௌஷல்யா, சாந்தினி, அருஜனா, நகுலன், மீரா, தீபா ஆகியோரின் பிரியமான பாட்டியும் 23 பூட்டப்பிள்ளைகளின் பூட்டியாருமாவார். அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை காலை 10 மணியிலிருந்து அஞ்சலிக்காக ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு ஞாயிறு காலை இறுதிக்கிரியைகள் நடைபெற்று 10 மணிக்கு பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**No.110/2A, 2nd Lane, Hill Crescent,
Capt. Sumudu Rajapakse Mawathe,
Off Hill Street, Dehiwela.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் 3 மணி முதல் யாழ். சிவில் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

அளவெட்டியில் நடந்த சம்பவத்துக்காக தளபதி தனது துக்கத்தையும் கவலையையும் வெளியிட்டதுடன் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவம் இடம்பெறாது என்று உறுதிமொழி வழங்கினார்.

மேஜர் பதவியை அடையாளப்படுத்தும் 'பட்டி' யுடன் ஒருவர் எம்முன்னால் பிரசன்னமாகி மேலிட உத்தரவின் பேரில் வந்துள்ளேன் எனத் தெரிவித்தார். அவரை எங்களால் அடை யாளம் காட்டமுடியும்.

இராணுவச் சீருடையில் துப்பாக்கியுடன் மட்டுமல்லாது பொல்லுகள், கொட்டன்களுடன் அவர்கள் வந்திருந்தனர்.

இராணுவச் சீருடையுடன் வந்தவர்கள் என்பதை நோக்கும் போது, பாதுகாப்பு நடவடிக்கையில் குறைபாடு இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது. இது ஒரு வெட்கக்கேடான விடயம் எனச்சுட்டிக் காட்டினோம்.

இராணுவ விசாரணை முடிவடைந்து, சம்பவத்தில் தொடர்புடையவர்கள் எனப் படையினரைக் கைது செய்தால், அவர்களை அடையாளம் காட்ட நாம் தயார் என்றும் தளபதியிடம் தெரி வித்தோம்.

யுத்தம் முடிவடைந்து இரு வருடங்களில் இந்த மோசமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தன்று கூட்டத்தில் கலந்துகொண்ட ஒருவர் படையினர் மீது கல் ஒன்றை எறிந்திருந்தால் என்ன நடந்திருக்கும். படையினர் திருப்பிச் சுட்டிருப்பார்கள். அப்படி ஒரு நிலை ஏற்பட்டிருந்தால் நாட்டின் நற்பெயர் என்னவாயிருக்கும் என்றும் தளபதியிடம் கேட்டோம் - என்றார் சுரேஷ்.

அதேசமயம், யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் பதிவு நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தளபதி ஹத்துருசிங்கவிடம் கேட்டுக்கொண்டார். (ஒ-ஐ)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப் பிள்ளை கனகலிங்கம்

(யாழ். ப.நோ. கூ. சங்க முன்னாள் கிளை முகாமையாளர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கனகலிங்கம் நேற்று (18.06.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

443/2, சரஸ்வதி லேன்,
கண்டி வீதி, அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### உ. செந்திமலர்



இமையாணன், உடுப்பிட்டியில் பிறந்து முதுமையில் 244, மெய்ன் றோட், கொட்டகலையில் வாழ்ந்த உ. செந்திமலர் கடந்த (17.06.2011) வெள்ளிக்கிழமை தன் உடலை நீத்து இயற்கை எய்திவிட்டார்.

அன்னாரது ஆத்ம பயணத்தில் புதிய அத்தியாயம் சிறப்புற இறுதிக்கிரியைகள் உருட்டாலை கரணவாய் வடக்கில் இன்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் நிகழ்ந்து உடல் எள்ளங்குளத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
தா.உமாபதிசிவம் (கணவர்),
மற்றும் உறவினர்.

0778501827

## VACANCY

சாவகச்சேரியில் இயங்கும்IDM கிளைக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் (முழுநேரம்) உள்ளன.

★ ஆங்கிலம்/கணினி போதனாசிரியர்கள்.
★ கணினி ஆய்வுகூட மேற்பார்வையாளர்கள்
★ கற்கை நெறி முகாமையாளர்
★ வரவேற்பாளர் (பெண்)
★ சுத்திகரிப்பு தொழிலாளர்கள்.

மேற்படி பதவிகளுக்குத் தகுதியானவர்கள் எதிர்வரும் 26.06.2011 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

**HRM,**
**IDM Affiliated Campus,**
**5 1/1, Kandy Road,**
**CHAVAKACHCHERI.**

(சி/953)

## தீர்வுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவரணியைச் சந்தித்த ஜனாதிபதி, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை நோக்காகக் கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைத் தான் அமைக்க உத்தேசிக்கிறார் என்று தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்த போது, தெரிவுக் குழுவை அமைப்பது குறித்து ஆராய்ந்தார் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களே நாடாளுமன்றத் தெரிவுக் குழு யோசனையை அப்போது முன்வைத்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வாரத்தில் தெரிவுக்குழு அமைக்கப்படலாம் என்று அரச தரப்புச் செய்திகள் கூறுகின்றன. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பில் மீண்டும் ஒரு தெரிவுக்குழுவை அரசு அமைப்பதில் இந்தியாவுக்கு உடன்பாடுகள் இல்லை என்று எமது அரசியல் வட்டாரங்கள் ஆணித்தரமாகத் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினை இலங்கையின் உள் விவகாரம் என்பதால், அரசியல் தீர்வைக் காண்பது தொடர்பில் கொழும்பு அரசே முடிவுசெய்ய வேண்டும் என்று இந்தியா வெளிப்படையாகச் சொல்லி வந்தாலும் தெரிவுக் குழு, அனைத்துக் கட்சிக் குழு போன்றவற்றை அமைத்து காலத்தை மஹிந்த வீணடிப்பதை புதுடில்லி விரும்பவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை ஆணித்தரமாக எதிர்க்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

"சந்திரிகா காலத்தில் மங்களமுனசிங்க குழு, தீர்வுப் பொதி என்பனவும் மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அனைத்துக் கட்சிக் குழுவும் அமைக்கப்பட்டன. இவை அனைத்தும் தத்தமது தீர்வுத் திட்டங்களை முன்வைத்துள்ளன. ஆனால் அவற்றால் என்ன நடந்தது?

இறுதியில் அனைத்துக் கட்சிக் குழு ஒரு தீர்வுத் திட்டத்தை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தது. அதில் என்னென்ன விடயங்கள் உள்ளடங்கி இருக்கின்றன என்பதும் எமக்குத்தெரியும். ஆனால் இன்றைய அரசு அதனைப் பேச்சு மேசையில் வைத்து தீர்வை நோக்கி நகர்வதற்குத் தயாராக இல்லை.

அதுபோன்றே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் இருக்கப் போகிறது. எனவே அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டால் கூட்டமைப்பு அதனை அடியோடு நிராகரிக்கும். அனைத்துக் கட்சிக் குழுவில் நாம் எப்படி இறுதி வரை பங்கேற்கவில்லையோ அது போலவே இதிலும் பங்கெடுத்துக் கொள்ளமாட்டோம்" என்றார் அவர்.

தெரிவுக்குழுவை இந்தியாவும் எதிர்க்கும் நிலையில் இலங்கையில் அதனை எதிர்க்கும் சக்திகளுக்குப் புதுடில்லியின் ஆதரவு கிடைப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன என்று கொழும்பு அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

## தமிழீழமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடையளித்த தமிழக மக்களில் 69.8 சதவீதத்தினர் தனித் தமிழீழம் மட்டுமே தீர்வாக அமைய முடியும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பேச்சு மூலம் சம உரிமையைப் பெறுவதற்கு 17.2 வீதத்தினரும் அரசமைப்புத் திருத்தம் மூலம் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்படுவதற்கு 14.4 வீதத்தினரும் சிங்களவருக்கு அடங் கிப் போவதற்கு 2.3 வீதத்தினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

போர்க் குற்றத்தில் ஈடுபட்டிருப்பதாக இலங்கை அரசு மீது குற்றச்சாட்டு எழுந்திருப்பதால் இந்தியா உள்ளிட்ட நாடுகள் கொழும்பு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டசபை தீர்மானம் நிறைவேற்றி உள்ள நிலையில், மத்திய அரசு - இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவித்துத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று 69.8 சதவீதத்தினர் வலியு றுத்தி உள்ளனர். இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று 42.3 சதவீதத்தினர் தெரிவித்துள்ளனர். இலங்கையின் இறுதிப் போரில் நடந்தது இனப்படுகொலை தான் என்பதை ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா உறுதிப் படுத்த வேண்டும் என்று 40.5 சதவீதத்தினர் கூறியுள்ளனர். இலங்கையுடனான தூதரக உறவை முறித்துக்கொள்ள வேண்டும் என்று 12.1 சதவீதத்தினர் கருதுகின்றனர். (உ)

**Student Visa**
***Visit Visa & Migration***

***Student/Visit & Migration***
UK/Canada/Australia/Netherland/New Zealand/Malaysia/Ireland Reject/Refusal Visa க்கள் பரிசீலனை செய்து தரப்படும்.
★ புதிய வீசா விதிகளுக்கமைய Visa Process மிக திறமையாகச் செய்து தரப்படும்.
★ 15 வருட அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் ஆவணங்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
★ அங்கீகாரம் பெற்ற College/University அனுமதி

ADIMISSION INTAKE 2011 JUL/AUG/SEP

Student Visiter Visa - No Need IELTS

Free IELTS Classess

**Australia Migration**
**Business & Skill** •Engineers •Accountants •IT Degree Holders

O/L, A/L OFFER Letter Within 3 Days
Min Qualification O/L

JAFFNA BRANCH: 82/12A, CHETTY STREET, NALLUR.
Phone: 0774454646/0777849853
**EUROPEANT TECHNOLOGY & BUSINESS COLLEGE**
No: 22A, FrankFort, Bambalapitiya, Colombo - 4, Srilanka.
Tel: 011 2508443/ Mbo: 0777849853 Web:www.etbclanka.com/E.mail:etbc@etbclanka.com

சிவ குரு குருமயம்



WEMBLEY EELAPATHEESWARAR TEMPLE, UNION ROAD, WEMBLEY HA0 4AU
TEL. NO : 02089023238 CHARITY NO. : 1125884

**லண்டன், வெம்பிலி ஈழபதீஸ்வரர் ஆலய**
**நூதன ப்ரதிஷ்டா அஷ்ட பந்தன மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

18.06.2011 சனிக்கிழமை
எண்ணெய் காப்பு சாத்துதல்
காலை 7 a.m. to 7 p.m.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும்
மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச் சிவாயவே!

19.06.2011 ஞாயிறு
மஹா கும்பாபிஷேகம்
காலை 9.15 a.m. to 10 p.m

சிவமெய்யடியார்களே,

சிவபூமி, புண்ணிய பூமி எனப் போற்றப்படும் இலங்கைத் திருநாட்டின் ஈழபதீஸ்வரர் எனத் திருநாமம் பெற்ற இயற்கைச் சிறப்புகள் யாவும் நிறைந்த லண்டன் மாநகரில், வெம்பிலி எனும் பதியில் வீற்றிருந்து நமக்கெல்லாம் அருள்பாலித்து வரும் அருள்மிகு பர்வதவர்தனி அம்மன் உடனுறை ஈழபதீஸ்வரர் சுவாமி மற்றும் விநாயகர் முதலான ஏனைய பரிவாரமூர்த்திகள் சகிதமாக வழிபாட்டுக்கு ஏதுவாகவும், சாஸ்திர முறைகட்கு அமையவும், அடியார்களின் பெருமுயற்சி யாலும், வர்ண கலாபங்களுடன் கூடிய புதிய ஆலயம் அமைத்து நூதன சிலா விக்கிரகங்கள் ஸ்தாபித்து மஹா கும்பாபிஷேகமானது இறையருளால்,

நிகழும் மங்களகரமான கரவருடம், உத்தராயண ஆனி மாதம் 5ஆம் நாள் 19.06.2011 ஞாயிற்றுக்கிழமை, சதுர்த்தி திதியும், திருவோண நஷத்திரமும், அமிர்த யோகமும் சிம்ம லக்னத்துடன் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.15 மணி முதல் 10 மணிக்குள்

அருள்மிகு பர்வதவர்தனி அம்பிகை உடனுறை ஈழபதீஸ்வரர் சுவாமிக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேக பெருவிழா பொலிவுடன் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் சிவனடியார்களும், மெய்யன்பர்களும், ஆசார சீலர்களாய் வருகை தந்து காண்பதற்கரிய இக்கும்பாபிஷேக பெருவிழாவைக் கண்டு, தரிசித்துப் பெரும் பேறு பெறுவீர்களாக! அத்துடன் இந்நிகழ்வின் முன், பின் கிரியைகளிலும் கலந்துகொண்டு எம்பெருமான் அருள்பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வீர்களாக!

வெம்பிலி ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாகம்.

**கும்பாபிஷேக சர்வ போதகாச்சாரியார்கள்**

"கிரிய கலாமணி, ப்ரதிஷ்டா பூஷணம், கலாநிதி"
**சிவஸ்ரீ நா.சோமஸ்கந்த குருக்கள்**
(கதிரமலை, சிவன்கோயில் தேவஸ்தானம், சுன்னாகம்.
வரசித்தி விநாயகர் கோயில், ரொரன்ரோ.)

"சிவாகம கலாநிதி, சிவாகம செல்வர், சைவசித்தாந்த சரபம்"
**சிவஸ்ரீ A.V.சுவாமிநாத சிவாச்சாரியார்**
(முதல்வர், வேதாகமப் பாடசாலை, மயிலாடுதுறை.)

சர்வசாதகம்

"சிவாகம சிரோண்மணி"
**சிவஸ்ரீ சு.ராஜசேகரக் குருக்கள்**
(வெம்பிலி ஈழபதீஸ்வரர் கோயில்.)

ப்ரதிஷ்டா பிரதம குரு

"சிவாகம க்ரியாநிதி, கிரியா பூஷணம், சத்யாகம வித்வஜோதி"
**சிவஸ்ரீ சி.சுரேஷ்வர குருக்கள்**
(வெம்பிலி ஈழபதீஸ்வரர் கோயில், அல்வாய் முத்துமாரியம்மன் கோயில் பிரதம குரு.)

**மற்றும் லண்டனில் உள்ள அனைத்துச் சிவாச்சாரியார்களும் கலந்துகொள்வார்கள்.**

*மங்கள வாத்தியம்:*
கேதீஸ்வரன் குழுவினர்.

*ஆலய கட்டட நிர்மாணம்:*
"சிற்ப கலா வாரிதி", பா.சுரேந்திரன், க.இந்திரன், சி.சந்திரகுமார்.

(C/966)(31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில்....
கீழ்க் காணும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

★ வியாபார நிறுவனம்:
- கணக்குப் பதிவாளர்
- அலுவலக உதவியாளர்
- சிற்றூழியர்

★ வீடு:
- வீட்டுப் பணிப்பெண்

(சமையல் பணி தெரிந்திருத்தல் அவசியம்)

★ மேற்படி பணிநிலைகளில் அனுபவமுள்ளவர்கள் தேவை ★

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் சுயவிவரத்தினை எதிர்வரும் 25.06.2011 ஆம் நாளுக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

C/O உதயன்,
விளம்பர இல: 4153,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

**சோதிலிங்கம் ஈஸ்வரி**


திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் ஈஸ்வரி நேற்று (18.06.2011) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.
தொ.பே.: 021 4900167

தகவல்: கணவர், பிள்ளைகள்.

புதிய முதலீடு
50,000/- க்கு மேல் மாத வருமானம்

ஐஸ் கிறீம் இயந்திரம்

கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டீன், பேக்கரி, பாமசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

BRAND NEW

Rs.99,000/- upwards

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிறீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.

Hotlines: 077 3918870 / 077 1066902



## TILKO JAFFNA CITY HOTEL S(PVT) LTD (BOI APPROVED)

மேற்படி நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

★ Food and Beverage Manager ★ Waiters ★ General Cleaners/helpers

தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் விலாசத்துக்கு பதிவுத் தபால்மூலம் அல்லது E.mail விலாசத்துக்கு வரும் 30.06.2011 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

TILKO JAFFNA CITY HOTEL (PVT) LTD
70/6, K.K.S. Road, Jaffna.

E.mail address:
citystarkv@gmail.com



புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**ICT - OL /Grade 10 /Grade 6 - 9**

A சித்தி எண்ணிக்கை ஆண்டு வரிசையில்

2010 - 65 கணினிக் கல்வியில்
2009 - 18 தொடர்ச்சியான
2008 - 59 10 வருட அனுபவம்
2007 - 68

உங்கள் குழந்தையும் சாதித்திட....

MIS Open Source College
Call me: 0776577359
Mr.R.Kumaran-B.Sc (Computing & IS)



DHL
உத்தரவு பெற்ற முகவர்

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

24 மணி நேரத்தில் உள்நாட்டிற்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

London -Rs.750
Canada, U. S. A, France, Denmark, Germany, Italy, Norway, Swiss
Rs.900

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள்,அன்பளிப்புபொருட்கள்,DVD,CD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும்அனுப்பிட



திருமுருகன் கொம்நெற்

TCN Express,
2B,Nelsan place,COlombo-06.
Customer service No.021 222 7835

இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம். இல.18.பிரதானவீதி,நெல்லியடி. இல.05.திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. இல.46.ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.





**ALLIANCE FINANCE** மேலும் மூன்று பொற்கடன் நிலையங்களை வடக்கு, கிழக்கில் திறந்து 30 நிலையங்களாக விஸ்திகரிக்கின்றது.

★ நாங்கள் 55 வருட வரலாற்றுப் பெருமை கொண்ட வலையமைப்பினை கொண்டவர்கள். வடக்கு,மற்றும் கிழக்கிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு எமது மேலான சேவையினை வழங்குகின்றோம்.

★ கிளிநொச்சி நிலையம் 2011 ஜூன் 20ஆம் திகதியும் நெல்லியடி நிலையம் ஜூன் 21ஆம் திகதியும் திறக்கப்பட இருக்கின்றன.

(49)

Since 1956
Alliance Finance COMPANY PLC
Built on Trust. Powered by Innovation.

வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்றாற்போல் மிகக்கூடுதலான தொகைகளை நாம் வழங்குகின்றோம்.

வரிசையில் நிற்கவேண்டிய தேவையில்லை மற்றும் பரபரப்பற்ற இலகு சேவை. {ஏழு நாள்களிலும் 7.00 மணி வரை திறந்திருக்கும்}

சந்தையில் மிகக்கவர்ச்சியான வட்டிவீதம்

"Alliance House" 84, Ward Place, Colombo 7. | Tel : 0112 673673 | Fax: 0112 691090



# VIVEKANANDA ACADEMY



Gov.Reg.No W/A 76795

(Centre For international Language Studies)

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஜேர்மன் Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch மொழி பரீட்சைகளில் சித்தி அடைந்த எமது மாணவர்களை நாம் பாராட்டுகின்றோம்.

## German- Deutsch

தூதரகப் பரீட்சைகளில் சித்தியடைந்தோர்



K.Yalini, P.Arulselvi, S.Rajamalar, T.Kalena, T.Babyalini



S.Printha, J.Jesinthamalar, K.Kanusha, M.Vasuki, P.Jalini

## Netherland- Dutch

தூதரகப் பரீட்சைகளில் சித்தியடைந்தோர்



S.Thivijagini, S.Yogarani, N. Nisanthika, V.Suganthini, P.Sugirtha



S.Rajeepan, J.Nishanthan, S.Jesintha, K.Vithusha, S.Manojah



E.Eluxman, S.Anitha, Usha, S.Thisanthini, G.Nilojini

- கடந்த 5வருடங்களுக்கும் மேலாக ஜேர்மன் டொச் மற்றும் நெதர்லாந்து- டச் மொழிப் பரீட்சைகளில் பலநூறு மாணவர்களை சித்தியடையச் செய்த ஒரே கல்வி நிறுவனம்.
- German மற்றும் Netherland தூதரக பரீட்சைகளில் 100% வெற்றிக்கு நாம் உத்தர வாதம்.
- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு முறைப்படி பதிவு செய்யப்பட்ட ஒரேயொரு கல்வி நிறுவனம்.
- எமது வகுப்பறைகள் நவீனமான குளிரூட்டப்பட்ட Digital White Board மற்றும் ஓடியோ, வீடியோ வசதிகளுடன் ஐரோப்பிய தரத்திற்கமைவானது.
- பாடவிதானங்களுக்குரிய Audio- Video CDக்கள் மற்றும் கடந்தகால வினாப் பத்திரங்கள் இலவசமாக வழங்கப்படும்.
- இங்கு German- Deutsch டொச்), Netherland- Dutch (டச்), French, Italian மொழிகளும் கற்பிக்கப் படுகின்றன.
- திருமணம் முடிந்து Londan செல்பவர்களுக்கு பரித்தானிய அரசினால் தற்போது கோரப்படும் KET/ ESOL/ AI/ BL வகுப்புகளும் நடைபெறுகின்றன.

அடுத்த பரீட்சைக்கான German- டொச் Netherland- டச் புதிய வகுப்புகள்
**25/06/2011 ஆரம்பமாகின்றன** (49)

VIVEKANANDA ACAEMY
(Centhe For International Langvage Studies)
இல.3, 2nd Lane, பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
T.P: 021 321 6928, 0774842464.
Tel: 0212220393

Head Office:
VIVEKANANDA ACAEMY
இல. 183 & 187, புது செட்டித் தெரு,
கொழும்பு-13
Directo 011 2447227,
011- 3133487,07484248.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்பகப் புற்றுநோயை கண்டறியும் புதிய கருவி கண்டுபிடிப்பு

ரஷ்யக் குழுவுடன் இணைந்து இந்தியத் தொழில்நுட்ப நிபுணர்கள் பெண்களுக்கான மார்பக புற்றுநோயைக் கண்டுபிடிக்க அதிநவீன கருவியை கண்டுபிடித்துள்ளனர். இதனைத் துல்லியமாக கண்டறிவதுடன் எந்த பாதிப்பும் ஏற்படாது என்வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலகாபாத் நகரில் உள்ள இந்திய நிறுவனத்தின் ஆப் தகவல் தொழில் நுட்பத்தைச் சேர்ந்த நிபுணர்கள், ரஷ்யாவின் ரேடியோ பொறியியற் துறை நிறுவனத்துடன் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

மார்பக புற்றுநோயை கண்டறியும் கருவியை மிகவும் நவீனமயமாக கண்டுபிடிக்க இந்த குழுவினர் மேற்கொண்ட முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது. இப்போதுள்ள கருவியை விட எடையும் குறைவு. விலையும் குறைவு. ஆனால் கணினித் தொழில்நுட்பத்துடன் இணைந்த பல துல்லியமான தகவல்களை தரும் வகையில் இது நவீனமயமாக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவியில் பல நவீன பயன்கள் உள்ளன. இதில் உள்ள கருவிகள் மூலம் எந்தப் பாதிப்பும் செல்களுக்கு ஏற்படாது.

சோதனை செய்தபின் உடனுக்குடன் துல்லியமான தகவல்கள் கிடைக்கும். எந்த செல்லில் பாதிப்பு என்பதை சொல்லி விடும். ஒரு மடிக் கணினியில் இந்த கருவியை இணைத்து விட்டால் போதும் சோதனை முடிந்த 50 நொடிகளில் முடிவு கிடைத்து விடும் என்று அலகாபாத் தகவல் தொழில்நுட்ப நிறுவன இயக்குனர் திவாரி கூறியுள்ளார்.

நாயகர்களின் நாயகன்
ரூ. 99,000/- வுக்கு
சென்றல் பினான்ஸ் மூலம்*




விசேட லீசிங் வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்

CF

சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சீ
நேரடி தொலைபேசி இல. 011 2315315
*நிபந்தனைகளும் அடங்கும்

- 25 குதிரை வலு கொண்ட சக்தி மிக்க டீசல் எஞ்ஜின்
- விலை ரூபா 855,000/- (அனைத்து வரிகள் அடங்கலாக)
- சுமக்கக்கூடிய மொத்த எடை 850 கி.கி
- ஒரு வருட / 40,000 கி.மீ உத்தரவாதம்*

புத்தம் புதிய வாகனம்
டீசல்
சிறந்த எரிபொருள் சிக்கனம்

அயிடியல் வாகனம் - CF லீசிங் சக்தி - வெற்றிக்கு வழி

MAXXIMO

Mahindra Rise.

அயிடியல் மோட்டர்ஸ் தனியார் நிறுவனம்
271, காலி வீதி, கொழும்பு 3

IDEAL Motors
011 7755555

WORDS

## உடல் எடையை அதிகரிக்க

கொழுப்புச் சத்து அதிகரிக்காமல் உடல் எடையை அதிகப்படுத்தலாம். இதற்கான உணவுப் பழக்க வழக்கங்களை குறைந்தபட்சம் 21 நாள்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

இதற்கு அதிகாலை மிதமான உடற்பயிற்சிக்கு முன்னதாக ஐந்து பாதாம் பருப்புகளை தினமும் உட்கொள்ளுங்கள். தினமும் ஒன்றரை லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

வெண்ணெய் தடவிய நான்கு பாண், ஒருவித கொழுப்புச் சத்துள்ள பாலில் கலக்கப்பட்ட ஒரு கப் ஹோர்லிக்ஸ் சாப்பிடுவது சிறந்தது.

உலர் பழங்களுடன் ஒரு பெரிய பாத்திரம் நிறைய அவித்த பயறு வகைகள், கொஞ்சம் முந்திரி, சீனி கலந்த திராட்சைப் பழரசம் ஆகியவற்றை உண்ணுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபக சக்தியை அதிகரிக்கும் கறுவாப்பட்டை

உணவில் வாசனை மற்றும் சுவைக்காக கறுவாப் பட்டை, ஏலம் உள்ளிட்ட பொருள்கள் சேர்க்கப்படுகின்றன. இவற்றில் மருத்துவ பயன்கள் உள்ளது என்பதை அறியாதவர்களும் உள்ளனர்.

நாம் உண்ணும் உணவு எளிதில் சமிபாடு அடைவதற்கு இந்தப் பொருள்கள் பயன்படுகின்றன என்று கூறுவார்கள். ஆனால் கறுவாப்பட்டையில் உள்ள மூலப்பொருள்கள் மறதி நோய்க்கு மருந்தாக இருக்கிறது என்பது அண்மையில் ஆய்வில் தெரியவந்துள்ளது.

சரியான அளவில் அதற்கான முறையில் உட்கொள்ளப்படும் இந்தப் பட்டை மறதி நோயை இல்லாது ஒழித்துவிடும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். டெல்அவிவ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இது குறித்த சிறப்பு ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். பேராசிரியர் மைக்கேல் ஒவாடியா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தான் இந்தப் பட்டையின் பெருமை தெரியவந்தது.

மறதி நோய்க்கான காரணமும் தீர்வும் என்ற தலைப்பில் நடந்த ஆய்வு முடிவில் வெளியாகி உள்ள தகவல்கள் வருமாறு:

எமது உணவில் சுவை மற்றும் வாசனையை அதிகரிக்கவும், எளிதில் சமிபாடு அடைவதற்காகவும் சேர்க்கப்படும் தாவரப் பொருளான இந்தப் பட்டை மறதி நோய்க்கும் மருந்தாகிறது.

பட்டையில் உள்ள மூலப்பொருள் மூளையின் மறதி நோய்க்குக் காரணமான பக்றீரியாவைத் தாக்கி அழிக்கிறது.

இந்த பக்றீரியாக்கள் மூளையில் உள்ள நியூரோன்களை அதிக அளவிலும் விரைவிலும் அழிக்கும் திறன் கொண்டவை. இவற்றைக் கட்டுப்படுத்தி அழிப்பதால் நோய்த் தாக்குதல் பெருமளவு குறையும்.


மறதி நோய் உள்ளவர்கள் மட்டுமின்றி சாதாரணமானவர்களும் கூட கறுவாப்பட்டையை தேவையான அளவு உட்கொள்ளலாம். அதே நேரத்தில் நாள் ஒன்றுக்கு 10 கிராமுக்கு அதிகம் உண்ணாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.




| அனுகூலம் | சாதாரண மின்பொருள் | HAVELLS நுஜ 50 மின்பொருள் |
|---|---|---|
| கால அவகாசம் | இரண்டு வருடம் | 3 வருடம் |
| 1மணி நேர மின் செயற்பாடு. | வொட் 85 | வொட் 60 |
| சேமிப்பு ∴ மாதம | இல்லை | வொட் 10,500 மற்றும் யூனிட் 10.5 |
| சேமிப்பு ∴ வருடம் | இல்லை | ரூ. 3150* |

விலை ரூபா. 4675.- இலிருந்து ( VAT இன்றி)

Orel ads




விசேடம்சங்கள்

- வளி பரிமாற்றம் - 1 வினாடிக்கு ∴ 210 ° கியூபிக் மீடர்
- 100% துரு பிடிக்காத சிறகுகள் மற்றும் தண்டு
- 33% மின்னை கட்டுப்படுத்தும் விசேட திறமை
- வெள்ளை, கபிலம், ஐவரி போன்ற வர்ணங்களில்.

HAVELLS

இலங்கையில் அங்கீகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்

MACKS MARKETING Private Limited

மெக்ஸ் மாகடிங் தனியார் நிறுவனம்

317, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10, பக்ஸ்: 0115 555 877
ஈ-மெயில்: marketing@havells.com இணையம்: www.havells.com
Havells Power Line - 011 5 66 88 77

MACKSONS HOLDINGS

மெக்சன்ஸ் ஹோல்டிங்ஸ் சார்ந்த நிறுவனமாகும். www.macksons.com

# மனிதன் பிறக்கும் மாதம் அவனின் ஆயுள்காலத்தை நிர்ணயிக்கிறதாம்!

மனிதனின் ஆயுள் மற்றும் ஆரோக்கியம் அவன் பிறக்கும் மாதத்தைப் பொறுத்து அமையும் என புதிய ஆய்வு முடிவு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. கருவில் இருக்கும் குழந்தைக்குக் கிடைக்கும் சூரிய ஒளியின் அளவே இதற்கு காரணம். குழந்தை பிறக்கும் காலநிலைக்கும், அந்த குழந்தையின் வாழ்நாளுக்கும் உள்ள தொடர்பு குறித்து நிபுணர் குழு ஆராய்ச்சி மேற்கொண்டது.

இதில், ஒரு மனிதனின் அறிவாற்றல் முதல், வாழ்நாள் வரை பல்வேறு விடயங்களுக்கும், அவன் பிறக்கும் மாதத்துக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. வசந்த காலத்தில் பிறக்கும் குழந்தைகள் ஆஸ்துமா, மனவளர்ச்சி குறைவு, மூளை நோய் உள்ளிட்ட நோயால் பாதிக்க வாய்ப்பு உள்ளது. ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் பிறப்பவர்களைவிட ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் பிறப்பவர்களின் வாழ்நாள் குறைவாக இருக்கும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் நடத்தப்பட்ட இதுபோன்ற ஆய்வில், வசந்த காலத்தில் பிறப்பவர்களைவிட இலையுதிர் காலத்தில் பிறப்பவர்களின் வாழ்நாள் 160 நாள்கள் அதிகமாக இருக்கும் என தெரியவந்துள்ளது. சூரிய ஒளியில் கர்ப்பிணிகள் நடமாடுவதைப் பொறுத்து இது கணக்கிடப்பட்டுள்ளது.சூரிய ஒளியில் உள்ள விற்றமின் டி, கரு வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். கருவுக்கு விற்றமின் டி குறைவாக கிடைக்கும் போது, அந்த குழந்தையின் வாழ்நாள் குறைவதுடன், மனநிலை மற்றும் உடல்நிலையிலும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவ வெள்ளி

### யாழ் ஆயரின் செய்தி



அருட்தந்தை ரூபன்மரியாம்பிள்ளை அவர்கள் பாதுகாவலன் பத்திரிகை மூலமும் ஊடகத்துறை சம்பந்தமான நூல்களின் மூலமும் யாழ். தமிழ் பத்திரிகைகள் மூலம் அனைவருக்கும் அறிமுகமான ஒருவர். சில்லாலையை தமது பிறப்பிடமாகக் கொண்டு 1986 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப் படுத்தப்பட்டு பல பங்கு தளங்களிலும் சிறப்பாக பணியாற்றி இருக்கின்றார்.

தமது குருத்துவ படிப்புக்களுக்கு அப்பால் இளங்கலைமாணிப் பட்டத்தையும் பெற்று யாழ். சமூக தொடர்பு ஆணைக்குழுவின் இயக்குநராக பணியாற்றியுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடாக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளராக, விரிவுரையாளராக பணியாற்றி அனுபவம் பெற்றுள்ளார்.

கடந்த யுத்தத்தில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தை புனருத்தாரணம் செய்து பல சிரமங்கள் மத்தியில் காவலன் பத்திரிகையை அச்சிட்டார். அதனைச் சிறப்பாக பிரசுரித்தும் அதன் பிரதிகளை அதிகரிப்பதிலும் வெகு விமரிசையோடு ஈடுபட்டு உழைத்தார்.

யாழ்.மறைமாவட்டத்தின் செய்திகளை இலத்திரனியல் ஊடகங்களுக்கு நேரகாலத்துடன் பகிர்ந்து அவற்றை வெளிக் கொணரச் செய்தார். ஊடக வளங்களை பற்றிய அறிவை வளர்க்க 8 நூல்களை இயற்றி ஊடகத்துறைக்கு அரும் சேவையாற்றியுள்ளார். தோற்றத்தில் சிறியவரானாலும் பல்கலை பாண்டித்தியம் பெற்று நிர்வாகத்துறையிலும் எழுத்துப் பணியிலும் ஆர்வத்துடன் உழைப்பவர். அனைவருடனும் இலகுவாக பழகி கத்தோலிக்க மக்கள் மாத்திரம் இன்றி இதர மக்கள் மத்தியிலும் புகழ் சேர்த்தவர்.

பத்திரிகைத்துறைகளில் புதுமைகள் சேர்த்து சிறப்பாக கத்தோலிக்கர்கள் ஊடகத்துறையில் அதிகம் பங்குபற்றி உழைக்க வேண்டும் என்ற அவாக் கொண்டவர். அதற்காக செயல்முறை பயிற்சிகள் பல நடத்தியவர்.

தற்போது இங்கிலாந்தில் யாழ். பல்கலைக்கழக புலமைப் பரிசில் பெற்று கலாநிதி படிப்பை நிறைவு செய்து கொண்டிருக்கிறார். தனது குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடும் தருணத்தில் இவரின் பல்வேறு பணிகள் இன்னும் சிறக்க இறை அரசை கட்டி எழுப்பும் பணியில் சிறப்புடன் பணியாற்ற இறை அருளை ஆசிக்கின்றோம்.

*மேதகு இ.தோமஸ் சௌந்தரநாயகம், யாழ். ஆயர்.*

### செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை



இறைபணிக்காக பிறப்பவர்கள் பாக்கியசாலிகள். இவர்களிடம் பொறுமை, கருணை, மன்னிக்கும் மனப்பாங்கு போன்ற நற்குணங்கள் அணி செய்வது இயல்பு. ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் வாழ்வு தவ வாழ்வு. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக துறவு வாழ்வில் சிறப்புற்று பெருமை பெற்றவர். அறிவுலகிலும் தடம் பதித்து அரிய பல நூல்களை வெளியிட்டவர். பத்திரிகைத் துறையிலும் பட்டம் பெற்றுத்தன் ஆற்றலை, ஆளுமையை வெளிப்படுத்திய பெருந்தகை. அன்பினால் அனைவரையும் தன் வசப்படுத்தும் பண்பாளர். உறக்கமின்றி, ஓய்வின்றி தன் கடன் பணி செய்யும் சேவையாளர். சீரிய வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் இப் பெருந்தகை மேலும் பல சிறப்புக்களைப் பெற்று பல்லாண்டு! பல்லாண்டு!! வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தினைச் சமர்ப்பித்து அமைகிறேன்.

*செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்*

### தமிழில் ஊடகக் கல்வியை வளர்த்தவர்



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு அடைவதையிட்டு எடுக்கப்படும் விழா தொடர்பாக வெளியிட இருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை இறைபணி, சமூகப் பணி, கல்விப் பணிகள் மூலம் தமிழ் மக்களிடையே மிகுந்த நன்மதிப்பைப் பெற்றவர். கடந்த 30 வருட யுத்த காலத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளின்போது இவர் மக்களுடன் கூட நின்று அவர்களின் துன்பம் துயரங்களைத் தணிக்க, தீர்க்க தன்னால் ஆன பணிகளைச் செய்தவர். இவரது தன்னலமற்ற சேவை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூருகின்றனர். இவர் இறை, சமூகப் பணிகளுக்கு அப்பால் சிறந்த கல்விப் பணியைச் செய்து வருகின்றார். ஊடகத்துறையின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் பணி மிகவும் சிறப்புமிக்கது. யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் பாட இணைப்பாளராக இருந்தும் இன்று பிசப் சௌந்தரம் மீடியா சென்ரர் இயக்குநராக இருந்து ஊடக கல்வி வளர்ச்சிக்கு பெரும் பணி செய்து வருகின்றார். ஊடகத்துறையில் நூல்கள் கட்டுரைகள் எழுதியும் ஆய்வுகளிலும் ஈடுபட்டுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகமும் சுவீடன் நாட்டு போயோ நிறுவனமும் இணைந்து இவரது கலாநிதி பட்டப் படிப்புக்குப் புலமைப் பரிசில் வழங்கின. இதன் மூலம் இவர் இங்கிலாந்தில் செபிலட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சியில், கல்வி நிர்வாகத்தில், முகாமைத்துவத்தில் சிறப்புற்று விளங்குகின்றார். தமிழில் ஊடகக் கல்வியை வளர்த்தலும் தமிழ் ஊடகங்களின் தரத்தை உயர்த்துவதும் தமிழ் மக்களின் ஊடக அறிவை, தெரிவை மேம்படுத்துவதற்கு தனது பேச்சாலும் எழுத்தாலும் செயற்பாடுகளாலும் கடினமாக உழைத்து வருகின்றார். யாழ்ப்பாணத்தில் பிசப் சௌந்தரம் மீடியா சென்ரரை பெரிய கல்வி நிறுவனமாக வளர்த்து எடுக்க வேண்டுமென்று இவது இன்னொரு இலட்சியமாகும். தமிழ் ஊடகத்துறைகளில் இவர் காணும் பல்வேறு மேம்பாடுகள், இவரது பணிகள் மூலம் குறுகிய காலத்துக்குள் அடையப்படும் என நம்பிக்கை மக்களிடத்தில் இருக்கின்றது. அருட்தந்தை வரும் காலங்களில் மேலும் மேலும் சிறப்பான இறைபணி, சமூகப் பணி, இளைஞர்களை வழிநடத்தல் பணிகளை கல்விப் பணியுடன் சிறப்புறச் செய்ய இறைவனை வேண்டுகின்றேன்.

இவரது சேவை மேலும் மேலும் வளர்க,சிறக்க

*பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D Durham*
*முன்னாள் துணைவேந்தர் - வாழ்நாள் பேராசிரியா*

### எதிர்கால வாழ்வு வளம் பெற பல வழிகளிலும் உதவியாக இருக்கிறார்



பாதர் அவர்கள் சுண்டுக்குளி யுவானியார் ஆலய பங்குத்தந்தை பாக இருந்த காலப்பகுதியில் அவருடன் அறிமுகமாகிய நான் அவருடன் இருந்து அவர்தம் குடும்பத்தரின் ஒருவனாகி இன்ப துன்பங்களில் பங்கெடுக்க வாய்ப்பு கிடைத்ததனை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அன்று முதல் எனது வாழ்க்கைக்கான பல அனுபவங்களை பெற்றதுடன் எனது எதிர் கால வாழ்வு வளம் பெற பாதர் பல வழிகளிலும் உதவியாக இருந்து வருகிறார். இன்று தனது 25ஆவது குருத்துவ வெள்ளிவிழாவை நிறைவு செய்யும் பாதர் அவர்களுக்கு என் வாழ்த்துக்களையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*எஸ்.ஸ்ரனிஸ்லோஸ் [illegible]*



Revd.Fr. Justin B Gnanapragasam
Bth (Pune) MA. (Hull) PhD.Ed. (Southampton)
VICAR GENERAL

I am very pleased to send this message of felicitation to Fr.Ruban Mariampillai, who is celebrating his Sacerdotal Silver Jubilee. Twenty five years of dedicated service to the people of God, and that too during the worst period in the history of Tamils, is indeed great and praiseworthy. My hearty congratulations to Fr. Ruban and I pray that he will be given enough strength to continue the good work for many years for the greater golry of God.

I have known Fr. Ruban and his family for some thirty years and have watched his steady progress in the priestly ministry and in the field of Media and Communication. He comes from Sillalai which is known for piety and devotion. As a young seminarian preparing for priesthood he spent some time with me at Mareesankoodal and I was able to watch his ability to write very well in Tamil and also preach very good sermons, though he was a bit shy at the beginning. Fr. Ruban, while serving at Karamopn Parish had to flee from there along with the people and seek refuge in Jaffna. He was the first priest who had the misfortune to be displaced due to military operations in the Islands in 1991. Fr. Ruban did not get discouraged but continued his pastoral work and, in the meantime, continued his studies and obtained his BA and MA as well. As Manager of the Catolic Press, Jaffna, he dared to put up a building with great difficulty in order to give better facilities to the Press. As war broke out once again, he could not realize his dreams but the building that he put up stands as a monument to his untiring efforts and foresight. He also took up lecturing at the Media Resource Training Centre of the University of Jaffna. He was involved in organizing the lectures and also in the formulation of syllabi for the degree programme. As Founder and Director of Bishop Savundram Media Centre he has resumed training young journalist. He received a scholarship from Jaffna University to do his doctoral studies in the UK. and will be completing it very shortly and join the staff of the University of Jaffna.

I take this opportunity to wish Fr. Ruban 'Ad multos annos' and pray for the blessings of God Almighty. ***'Those who wait for the Lord shall renew their strength. Thay shall mount up with wings like eagles. They shall run and not be weary. They shall walk and not faint'. Is . 40.31***

Revd.Fr. Justin B Gnanapragasm Vicar General- Jaffna Diocese

### நீண்ட காலமாக ஓர் ஊடகவியலாளராக பணியாற்றியவர்



அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் மிகச் சிறந்த ஓர் ஊடகவியலாளர். ஊடகவியலிலே உயர் பட்டங்களும் நல்ல பட்டறிவும் வாய்க்கப் பெற்றவர் அடிகளார். அவர் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஊடகவியல் பட்டதாரியாவார். முதுமாணிப் பட்டத்தினை அவர் பெற்றுள்ளார். அந்த வேளையிலேயேதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பயிற்சி இணைப்பாளராக இணைந்து கொண்டார். அவ்வேளை அந்நிறுவனத்தின் இயக்குநராகப் பணிசெய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுதுதான் அடிகளாரைப்பற்றி நான் நன்கு அறிந்து கொள்ளமுடிந்தது.

யாழ்ப்பாண மறை மாவட்ட கத்தோலிக்க குருவானவர் அருட்திரு ரூபன்மரியாம்பிள்ளை அடிகளார் குருவுக்குரிய சாந்தமும் அமைதியும் அருட்பார்வையும் அவரிடம் எப்போதும் காணப்படுவன. ஆனால், அடிகளார் நீண்ட காலமாக ஓர் ஊடகவியலாளராகவும் பணியாற்றி வந்துள்ளார். இதற்கு துறவியின் நெஞ்சுரமும் புறநின்று நோக்கத்தக்க பயிற்சியும் அவருக்கு நன்கு உதவின.ஊடகவியல் ஒரு புதிய கற்கை நெறியாகப் பல்கலைக்கழகங்களிலே தற்போது தொடங்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியிலே இதனைக் கற்கவும் கற்பிக்கவும் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் மிகுந்த தொலைநோக்கிலே பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தே நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இத்துறை சார்ந்த பெருந்தொகையான நூல்கள் ஆங்கில மொழியிலே இருக்கின்றன. ஆனால் தமிழ் மொழியிலே கற்கும் எம்முடைய மாணவர்களுக்கு அடிகளாருடைய நூல்கள் மிகுந்த பயனுடையனவாக அமைவன. அவருடைய எளிமையான ஆனால், நிபுணத்துவம் வாய்ந்த தமிழ் நடை படிப்பவர்க்குத் துணைசெய்யும். தொடக்கத்திலே பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம். பத்திரிகை இயல் அடிப்படைகள், ஊடக இயல் கலைச்சொல் அகராதி என இதழியல் தொடர்பான பொதுவான நூல்களை எழுதலானார். மின்னியக்கப் பத்திரிகையியல் ஓர் அறிமுகம், ஊடக நேர்காணல்கள் ஓர் அறிமுகம், செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம், சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம் அச்சு ஊடக அறிக்கையிடல் போன்றவை துறைசார் நூல்களாகும்.

யாழ்ப்பாண மாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தநாயகம் அவர்களிலே அவர் கொண்டிருந்த விசுவாசத்தினையும் பக்தியினையும் நான் நன்கு உணர்ந்து கொண்டேன். தந்தையை நாடி நிற்கும் தனயனைப் போல அவர் பணிவன்புடன் ஆயருடைய அருட்செயல்கள் பற்றிக் கூறுவார். எனக்கும் அடிகளாருக்குமுள்ள நட்பினை நன்கறிந்த ஆயர் அவர்களும் என்னைக் காணும்போதெல்லாம் ரூபன் அடிகளார் பற்றி ஏதாவது செய்தி சொல்வார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் வீரசிங்கம் மண்டபத்திலே என்னைக் கண்ட ஆயர் அவர்கள் 'ரூபன் லண்டனிலிருந்து வந்துவிட்டார்' என்ற செய்தியினைச் சொன்னார். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஊடகவியலிலே கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக ஐக்கிய இராச்சியத்துக்கு அடிகளார் சென்றதால் அவரை நான் நீண்ட நாட்களாகக் காணவில்லை என்பதை நன்கு உணர்ந்தே ஆயர் அவர்கள் அந்தச் செய்தியை எனக்குக் கூறினார். எல்லாவற்றுக்கும் மேலாக ரூபன் அடிகளார் நிறுவி நடத்தும் பிசப் சௌந்தரம் பத்திரிகை இயல் நிலையம் அவருக்கு ஆயர் மேலிருந்த அன்பினையும் பக்தியினையும் நன்கு வெளிப்படுத்துவதாயுள்ளது.

ஊடகவியலிலே அடிகளார் பெற்றிருக்கும் படிப்பறிவினையும் பட்டறிவினையும் உயர் கல்வி நிறுவனங்கள் பயன்படுத்தவேண்டும். இவர் இத்துறையிலே பல கருத்தரங்குகளையும் பணியவைகளையும் நடத்தியுள்ளார். அடிகளாருக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்வடைகிறேன்.

*பேராசிரியர் அ. சண்முகதாஸ் Ph.D (Edinburgh), D.Litt (Hon UJ)*
*தகைசார் வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம*



**1986 - 201**

### அருள்திரு ரூபன் மரிய

| | |
|---|---|
| 1986 | குருத்துவ திருநிலைப்ப |
| 1986 - 1987 | உதவிப் பங்குத்தந்தை |
| 1987 - 1988 | பங்குத்தந்தை மண்டதீவ |
| 1988 - 1991 | பங்குத்தந்தை கரம்பொ |
| 1991 - 1992 | உயர்கல்வி B.A - BTh ( |
| 1992 - 1993 | பங்குத்தந்தை அரியால |
| 1993 - 1997 | நிதியாளர் - இயக்குநர் கொழும்புத்துறை சவேரி (கிளி - யாழ்ப்பாணம்) |
| 1997 - 1999 | யாழ் சுண்டிக்குழி புனித |
| 1997 - 2007 | அதிபர் - கத்தோலிக்க ... ஆசிரியர் பாதுகாவலன் இயக்குனர் சமூகத் தெ |
| 2005 - 2008 | இணைப்பாளர், விரிவுரை பயிற்சி நிலையம் யாழ் |
| 2008 - 2010 | யாழ். பல்கலைக்கழக இங்கிலாந்தில் உயர் க |
| 2011 | இயக்குநர் - பிசப் சவுந்தர விரிவுரையாளர் - ஊடக நிலையம் யாழ். பல்க |

### ஊடகக் கற்கை நெறிக்கு பல ஆய்வு

அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகள வாழ்வின் வெள்ளிவிழாக் கொண்டாடுவதை அ மகிழ்ச்சிஅடைகிறேன்.

வெண்ணிற அங்கிக்குள் விவிலியம் வாழ்ந்த பதைக் கண்டும் கேட்டும் அறிந்தும் அனுபவித்

நான் விரும்புகின்ற, நேசிக்கின்ற, பழகுகின்ற சந்திரகாந்தன் அடிகளார், அருட்கலாநிதி அடிகளார், அருட்கலாநிதி ஜஸ்ரி ஞானப்பிர பேராசிரியர் வண.பிலேந்திரன் முதலான வரிசையிலே இளையராஜாவாக என்னுட் க மரியாம்பிள்ளை அடிகளார் ஆவார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கருணை முதலான பண்புகள் நிரம்பப் பெற்ற அடிகள மரியாம்பிள்ளை அடிகளார் திகழுகின்றார்.

ரூபன் மரியாம்பிள்ளை அடிகள என்னிடம் நேற்றுப்போல் என் நெஞ்சில் நிழலாடுகின் இலக்கணத்திலே மிகுந்த ஈடுபாட்டோடு இன் தவழ அவர் வகுப்பிலே இருந்த நாள்களை நின நிறைகின்றது.

ஆர்வமும் அமைதியும் தேடலும் அவரிடம் அவரோடு பழகுகின்ற, உறவாடுகின்ற உறவைக்கடந்து ஒருவித பக்திப் பய உணர்வ


ஊடகவளங்கள் கற்கை நெறியில் அவ நெருக்கமாக அவருடன் பழகினேன்.

ஊடகக் கற்கை நெறிக்கு உகந்ததான தந்திருக்கிறார். இன்னும் தரவேண்டும் என அ

தமிழின் - தமிழ்ப் பண்பாட்டின் அடையாள தனிநாயகம் அடிகளாரின் அடிச்சுவட்டை எமது ரூபன்மரியாம்பிள்ளை அடிகளார் தொடர வேண வாழ்த்துகிறேன்.

*தமிழ*

### குருத்துவப் பணியுடன் ஊடக



குருத்துவப் பணியில் இரு செய்துள்ள ரூபன் மரியா வணங்கு வதில் பெரிதும் அ

சிறந்த ஒரு ஆன்மிக வழிக கல்வியாளராகவும் அடிகளா அடிகளாருக்கென்று ஒரு த களுக்கு அது மிகவும் உவ

ஊடகத்துறையில் ஆர்வம் சார்ந்த தனது தகைமைகள அண்மையில் பிரித்தானியாவ நிதிப் பட்டத்தையும் மேற்கொண்டு வருகின்ற சார்ந்து வெளிவரு கின்ற நூல்கள் தமிழில் ம போக்கும் வகையில் அடிகளார் கணிசமா உழைப்பின் வெளிப்பாடுகளாகத் தமிழில் தந் பல்கலைக்கழக மாணவர்கள் முதற்கொண்டு மிகவும் விரும்பிப் படிக்கின்றனர். எல்லாம்வல் நலன்களையும் வளங்களையும் வழங்கவேண்

*தமிழ்த்துறை கலைப்பீட*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளிவிழா வாழ்த்து மலர்

1986 - 2011



## ரூபன் மரியாம்பிள்ளை

துவ திருநிலைப்படுத்தல்
பிப் பங்குத்தந்தை யாழ்.மரியன்னை பேராலயம்
த்தந்தை மண்டதீவு
த்தந்தை கரம்பொன்
கல்வி B.A - BTh (மாட்டினார் குருமடம்)
த்தந்தை அரியாலை
ளர் - இயக்குநர் - ஆரம்ப மெய்யியல் பிரிவு
ழம்புத்துறை சவேரியார் குருத்துவக் கல்லூரி
- யாழ்ப்பாணம்)
சுண்டிக்குழி புனித யுவானியார் ஆலயம்
ர் - கத்தோலிக்க அச்சகம்
யர் பாதுகாவலன்
துனர் சமூகத் தொடர்புகள் ஆணைக்குழு
ணப்பாளர், விரிவுரையாளர் ஊடக வளங்கள்
ி நிலையம் யாழ் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக புலமை பரிசிலுடன்
லாந்தில் உயர் கல்வி
துநர் - பீசப் சவுந்தரம் மீடியா சென்ரர் யாழ்ப்பாணம்
ரையாளர் - ஊடக வளங்கள் பயிற்சி
யம் யாழ். பல்கலைக்கழகம்

### சேவை ஒன்றே தேவை எனும் அருட்தந்தை



அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் மிகுந்த புலமையும் பொறுமையும் வாய்ந்தவர்கள். முன்னர் அவருடன் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் பணியாற்றியபோது அருட்தந்தையின் சேவை மனப்பான்மையையும் எல்லோரையும் சரிசமமாக நடத்தும் அவரின் நல்ல உள்ளத்தையும் உணர்ந்து கொள்ள முடிந்தது. எந்நேரமும் புன்முறுவலுடனும் பிறருடன் கலகலப்பாகப் பழகும் அவரின் இனிய குணம் பலரும் அறிந்த ஓர் விடயமே. உண்மையில் இறை சேவையே தன் தேவை என்பதை பரிபூரணமாக உணர்ந்து தன் பணியில் ஒழுங்கு நெறியுடன் ஈடுபட்டு வரும் இவரைப் போன்றவர்கள் மண்ணில் கிடைப்பது மிக அரிது. அருட்தந்தையின் சேவை ஆரம்பித்த இந்த இருபத்தைந்தாவது ஆண்டில் இன்னும் பல காலம் நமது யாழ். சமூக மக்களுக்கு அவரின் பணி பரவவேண்டும் என வேண்டுகிறேன். கடவுள் கிருபையால் எல்லா நலன்களும் கிடைக்கப்பெற்று நீண்டகாலம் அருட்தந்தையின் சேவை இவ்வுலகிற்கு கிடைக்க மனதாரப் பிரார்த்திக்கிறேன்.

*கிருத்திகா தருமராஜா, உதவி விரிவுரையாளர்,*
*ஊடகக் கற்கை, யாழ். பல்கலைக்கழகம்.*

### Loved by all the teachers and students

It is indeed a great pleasure for me to write a few lines about my past student FR.Ruban Mariampillai.

First of all I think the almighty for having blessed him with the great priestly vocation and enabled him to priest hood. During the tenure of these twenty five years, he has worked tirelessly to fulfill his priestly obligations.

I remember the days when he was my student at Sillalai R.C. School. He was a very passive, studious and obedient student and loved by all the teachers and students.

I pray to god to grant him good health and strength to contin to serve in his vineyard and to win many more souls for him.

My family members and I congratulat him on this great occasion and wish him all the best.

***Mrs. Ranjini Saminather***

### விளம்பரம் வேண்டாதவர் அமைதியாக இருந்து பணிபுரிபவர்



"ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்"
"நுண்மான் நுழைபுலமுடையோர்"
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்"
"நடமாடும் பல்கலைக்கழகம்"

என்றெல்லாம் கூறக்கூடிய ஒருவர் இன்று எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கிறார். சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து காட்டி வரும் பெரியவர் பலரையும் பண்பாக உபசரிக்கத் தெரிந்த இவர் தற்பெருமையே இல்லாதவர் கல்விமானாகவும் சமூக சீர்திருத்தவாதியுமாவார். எழுத்துலகில் அந்தரங்க சுத்தியுடன் ஈடுபட்டுள்ள அற்புதமான இறை பணியாளர் ஒரு சிறு புள்ளியிலிருந்து ஆரம்பமாகிய இவரது வாழ்வின் பாதச்சுவடுகள் பரந்து விரிந்து ஓர் உலகை நோக்கிப் பெயர்ந்து செல்வதை அதவானிக் முடிகின்றது. தனி மனித தொடர்பு வழியாகவும் பதவி வழியாகவும் அவர் ஆற்றிவரும் ஒப்பற்ற பணிகள் மதிக்கப்படவேண்டியவை மதிப்பீடு செய்யவேண்டியவை அவரிடமிருந்தும் மிகச் சிறந்த குண அடக்கம் விளம்பரம் வேண்டாதவர் அமைதியாக இருந்து பணிபுரிய விரும்புபவர் எப்போதும் மனம் திறந்து இனிமையுடன் உரையாடுபவர் துணிச்சல் மிக்கவர் எதையுமே புதுமையாக செய்ய வேண்டும் என்ற வெறி உடையவர். இதை இலக்கிய உலகம் நன்கறியும் இறைவாழ்வில் வெள்ளிவிழாக் காண்பதில் மகிழ்வெய்தி நிற்கின்றேன்.

*கி.கிருபானந்தா, செயலாளர், யாழ். இலக்கிய வட்டம்*

### இவரது சேவைத்தளம் ஆளமும் அர்த்தமும் கொண்டு பரந்து விரிந்தது



குருத்துவ வெள்ளிவிழாக் காணும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்குமுரிய அருள் திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் ஞானமேன்மை வார்த்தைகளால் வரித்துவிட முடியாத தனித்துவம் கொண்டதாகும். ஆன்மிக மற்றும் அறிவியல் தளத்தில் நின்று இறைபணி சமூகபணி தமிழ்ப்பணி அறிவுப்பணியென எத்தனையோ சேவைத்தளம் பொறுப்புணர்வு கடமையாற்றிய அவரது சேவைத்தளம் ஆளமும் அர்த்தமும் கொண்டு பரந்து விரிந்தது என்றால் மிகையில்லை.

1986இல் குருத்துவ நிலைப்படுத்தலில் ஆரம்பித்து வெள்ளிவிழாக் காணும் இத்தருணம் வரை ஓய்வற்ற சிந்தனை, உறுதியான உழைப்பு, இடையறாத செயற்பாடு என அவர் பன்முகத் தளத்தில் இயங்கியமையே அவரின் தனித்துவ மேன்மைக்கு ஆதாரமாகு.

ஊடக வளமே உலகின் பலமாகி நிற்கும் இன்றைய காலகட்டத்தில் அத்துறையின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் துறைசார் அறிவால் அவர் ஆற்றிவரும் பணிகள் நாடு போற்றும் பெருமைக்குரிது. குறிப்பாக தமிழ் ஊடகத் துறை அவரால் வளம் பெற்று வருகின்றமையை அனைவரும் அறிவர்.

அவர் சாதிக்கப்பிறந்தவர், சாதிக்கத்துணிந்தவர் எனவே இனிமேலும் அதிகம் சாதிப்பவராக விளங்குவார். அவரால் தமிழும், மனிதமும் வளம் பெற வேண்டும் அருளும் திருவும் அவரது ஆன்மாவுள் நிறைந்தே உள்ளது அமைதியாக அவர் ஆற்றிவரும் பெருமை மிகு பணிகள் அனைத்தும் இறை ஆசியுடன் உயர்வுகாண பிரார்த்திக்கிறேன்.

*என்றும் வணக்கத்துடன் எம்.நியூட்டன், ஊடகவியலாளர், வீரகேசரி*

### வாழ்த்து மலர் ஆசிரியரின் உள்ளத்திலிருந்து



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் குருத்துவ பணி வாழ்வு புனித மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமானது முதல் கடந்த 25 ஆண்டுகளாக அவரோடு இந்தும் பின்னர் அவரோடு அன்பாகப் பழகி அவரின் வழிகாட்டலில் வளர்ந்த அனுபவத்தில் இந்த வாழ்த்து மலரை வெளியிட வேண்டும் என விரும்பி அதனை நிறைவுசெய்திருப்பது மனநிறைவைத் தருகிறது. எனக்கு அவர் சிறந்த ஆலோசகராகவும் வழிநடத்துநராகவும் விளங்கிவரும் அவரின் பணி சிறக்க வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

*பி.றெஜிஸ் நியூட்டன், ஆசிரியர் ... மன்னார்*

### க்கு பல ஆய்வு நூல்களை அவர் தந்தவர்



ம்பிள்ளை அடிகளார் குருத்துவ
கொண்டாடுவதை அறிந்து மட்டற்ற

விவிலியம் வாழ்ந்து கொண்டிருப்
அறிந்தும் அனுபவித்தவன் நான்.
கின்ற, பழகுகின்ற அருட்கலாநிதி
அருட்கலாநிதி மரியசேவியர்
ஸ்ரீ ... ஞானப்பிர... அடிகளார்,
திரன் முதலான பேரறிஞர்கள்
வாக என்னுட் கலந்திருப்பவர் அருள்திரு ரூபன்
ஆவார்.
டுப்பாடு, கருணை, கடவுள் பக்தி, விடாமுயற்சி
ப் பெற்ற அடிகளார் வரிசையின் வாரிசாக ரூபன்
திகழுகின்றார்.
டிகளார் என்னிடம் தமிழ் படித்தவர். அவர் படித்தது
சில் நிழலாடுகின்றது. தமிழ் இலக்கியத்திலே
டுபாட்டோடு இன்முகம் காட்டிப் புனித புன்னகை
ந்த நாள்களை நினைத்துப் பார்க்கின்றேன். நெஞ்சம்

டலும் அவரிடம் ஒருங்கே குடியிருக்கும்.
உறவாடுகின்ற போதெல்லாம் ஆசிரிய, மாணவ
க்திப் பய உணர்வு என்னிடம் தலைகாட்டுவதுண்டு.
நெறியில் அவர் பணியாற்றுகின்றபோது மிக
கினேன்.
த உகந்ததான பல ஆய்வு நூல்களை அவர்
வேண்டும் என ஆசைப்படுகிறேன்.
ட்டின் அடையாளத்தைத் தரணியெங்கும் நிறுவிய
ச்சுவட்டை எமது அன்புக்குரிய மாணவர் அருள்திரு
ார் தொடர வேண்டுமென்று ஆண்டவனை வேண்டி

*பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா*
*தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம*

### னியுடன் ஊடகத் துறைப் பணியும்

ப் பணியில் இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு
ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரை வாழ்த்தி
தில் பெரிதும் அகம் மகிழ்கின்றேன்.
ரு ஆன்மிக வழிகாட்டியாக மட்டுமன்றிச் சிறந்த ஒரு
ாகவும் அடிகளாரை நான் நன்கறிவேன். கற்பித்தலில்
கென்று ஒரு தனித்தன்மை உள்ளது. மாணவர்
து மிகவும் உவப்பானது.
றையில் ஆர்வம் கொண்டுள்ள அடிகளார், இத்துறை
து தகைமைகளைப் பெருக்கிக் கொண்டுள்ளார்.
ப் பிரித்தானியாவுக்குச் சென்று இத்துறையில் கலா
ண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஊடகவியல்
ல்கள் தமிழில் மிகக் குறைவாகும். இக்குறையைப்
ளார் கணிசமான நூல்களைத் தனது அயராத
கத் தமிழில் தந்துள்ளார். அடிகளாரது நூல்களைப்
முதற்கொண்டு இத்துறைசார்ந்த ஆர்வலர்களும்
ர். எல்லாம்வல்ல ஆண்டவர் அடிகளாருக்கு எல்லா
ும் வழங்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

*பேராசிரியர் கி. விசாகரூபன்,*
*றை கலைப்பீடம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.*

### ஊடகத்துறைக்கு காத்திரமான பங்களிப்பு



நவீன வளர்ச்சியை உள்வாங்கி எமது இளம் சந்ததியினர் ஊடகத்துறையில் வளர்ச்சி காண்பதற்கு தமிழில் நூல்கள் மிகவும் வேண்டப்படுகின்றன.

இந்தப் பெரும் பணியைச் செய்வதில் யாழ். குடாநாட்டில் அருள்.திரு ரூபன் மரியாம்பிள்ளை குறிப்பிட்டுக் கூறத்தக்கவர். விளையும் பயிரை முளையில் தெரியும் என்ற முதுமொழிக்கு ஏற்ப அவர் தமது பாடசாலை பருவத்திலும் குருத்துவ மாணவர் பருவத்திலும் சிறுகதைகள் கவிதைகள் சமயக்கட்டுரைகள் என்று நிறையவே தரமான ஆக்கங்களைப் படைத்தவர். ஊதயன் சஞ்ஜீவி பத்திரிகைகளில் பல வகை சார்த்த அவரது தரமான படைப்புக்கள் 1986 தொடக்கம் வெளியாகிவருகின்றன. எழுத்தில் அவர் கொண்ட பிடிமானம் அவரை அத்துறையில் பல படிகளுக்கு உயரவைத்துள்ளது.

இன்று அவர் ஊடகத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று பெரும் கல்விமானாக உயர்ந்து நிற்பதைக் காணும் போது நெஞ்சம் குளிர்கிறது. எழுத்தாளராக இருந்தவர் ஊடகத்துறையில் நெடிது உயர்ந்து நிற்பதால் அவரது பெற்றோருக்கு உண்டாகக்கூடிய புளகாங்கிதமும் பூரிப்பும் எனக்கும் உண்டாகின்றன. எவருடனும் இனிமையாக பழகி எல்லோரையம் நண்பர்களாக்கிவிடும் நற்பண்பு அவரை உயர்த்தியுள்ளது எனலாம். தனியே ஊடகத்துறை ஆசானாக மட்டுமன்றி அத்துறை சார்ந்த நூலாசிரியரானாவும் அவர் விளங்குவது அத்துறை சார் மாணவருக்கு பெறும் பேறாகும் இந்த இரட்டைப்பணியில் மிளிர்வது எல்லோருக்கும் கைவரக் கூடிய வல்லமை அல்ல. பத்திரிகைத் துறையில் எட்டு நூல்களை வெளியிட்டு இப்போது ஆசிரியர் தலையங்கம் ஓர் அறிமுகம் என்ற ஒன்பதாவது நூலை வெளியிடுவது இத்துறையில் எமது பிரதேசத்தில் நிலைநாட்டப்படவுள்ள பெரும் சாதனையாகும். ஊடகத்துறைக்கும் அது சார்ந்த கல்விப்புலத்திற்கும் அவரது காத்திரமான பங்களிப்புத் தொடரட்டும் இத்துறை சார்ந்த பணி மேலும் பல்கிப் பெருகி மலரட்டும் என்று மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

*ம.வ.கானமயில்நாதன், பிரதம ஆசிரியர், உதயன் - சஞ்சீவி*

### Congratulations on your 25th silver Jubilee Thambi



I am very proud and previladged to be a part of my loving thambi Rev Fr Ruban Mariampillai's silver jubilee celebrations.

He was a small boy at St Martin's seminary when I left for England in 1975. Today 36 years on he is still my loving thambi, I am proud to say with lots of achievements and awards, celebrating 25 years of priesthood. He has worked hard to earn his name in the media, university, and lecturing field.

I was unable to join him for his ordination celebrations in 1986, therefore I am very hounered to be able to join him in his Jubilee celebrations.On behalf of my Husband and my family I congratulate him and wish him every success for the future, good health and happiness. Most of all I pray to god to bless him, guide him guard him and protect him.

***Pushpam & Arul Loving sister &Husband***

### 'ஊடகத்தின் ஊடே இறையரசை ஒளிர்வித்த பணியாளன்'



யூபிலி நாயகனாம் அருட்பணி ரூபன்மரியாம்பிள்ளை அவர்களின் குருத்துவ வாழ்வின் 25 ஆண்டுகள் நிறைவுறும் இந்நாளில் பாதுகாவலன் நிருபர்கள் சார்பாக இதயம் மகிழ்ந்த வாழ்த்துககளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

பங்குப் பணிகளுடன் பாதுகாவலன் பத்திரிகையினை எழுத்தயல் களமாகக்கொண்டு இவரது சமூக இறையரசுப் பணி விரிவடையத் தொடங்கியது. ஆன்மீகக் கட்டுரைகள் வழியாக இறையரசின் விழுமியங்களை சமுதாயத்திற்கு எடுத்துரைக்கும் வகையில் மொட்டு விரியத்தொடங்கிய ஊடகப் பணி, குறிப்பாக 'குடும்பம் ஒரு கதம்பம்' என்ற தொடர் கட்டுரையின் மூலம் எழுத்தாற்றலில் நறுமணம் பரப்பத் தொடங்கியது. இது மட்டுமன்று, பல சமூகப் பத்திரிகைகளுக்கும் காலத்தின் தேவையுணர்ந்து ஆன்மீகக் கட்டுரைகளையும் வரைந்து தமக்கே உரித்தான நற்செய்திப் பணியை ஊடகங்களின் ஊடாகச் சிறப்புற ஆற்றினார். 1997 இல் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தின் அதிபராகவும், பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பொறுப்பேற்று நற்பணியாற்றியதுடன் இக்காலத்தில் சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் இயக்குனராகவும் செயலாற்றி 'பல்துறைப் பணியாளராக' விளங்கியமை இலை மறைகாய் போன்ற இவரது ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டேயாகும்.

1997 முதல் 2007 வரை பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகச் செயற்பட்ட பத்தாண்டுக்காலத்தில் எம் தமிழ் தாயக மண் கொடும் போர் மேகம் சூழ்ந்திருந்த காலப்பகுதியாகும். இக்காலகட்டத்தில் ஊடகத்துறைதனை ஒழுங்குற நடத்துவது என்பது முயற்கொம்பாகவே இருப்பினும் பல இடர்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து பாதுகாவலன் பத்திரிகையைத் தொடர்ச்சியாக வெளிவரச் செய்தது மட்டுமன்றி அதன் ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடிகள், அச்சுறுத்தல்களைக் கடந்து உண்மை, நீதி, மனித மாண்புள்ள விடுதலை என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து தமது சிந்தனை, ஆற்றல் மூலம் சமுதாயத்திற்கு இறையரசின் படிப்பினைகளை வழங்கி வழிப்படுத்திய ஊடக இறைபணியாளனாகவும் விளங்கியபோது தமது உயிரையும் ஒரு பொருட்டாகக் கருதாது தமிழ் மக்களின் அடிமைத் துயரங்களை அகிலம் அறியச் செய்த அரும்பணியாளனாகவும் செயற்பட்ட தன்மைகளை ஊடகத்துறையினர் மறந்துவிட முடியாது.

மேலும் இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் இரு விருதுகளை பாதுகாவலன் பத்திரிகைக்காகப் பெற்று கத்தோலிக்க பத்திரிகைக்கு பெருமை சேர்த்ததுடன், கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆண்டு யூபிலி விழாவையும் தமது ஆசிரியப் பணிக்காலத்தில் வெகு விமரிசையாக நிறைவு செய்த பெருமையும் அடிகளாரையே சாரும். ஊடகவியல் துறையில் பாதுகாவலன் பத்திரிகை என்ற குறுகிய வட்டத்திற்குள் மட்டும் நின்றுவிடாது யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் இணைப்பாளர், விரிவுரையாளர் என்ற பணிகளை மேற்கொண்டதுடன் ஊடகத்துறை தொடர்பான பல தமிழ் மொழி நூல்களை வெளியீடு செய்த சாதனையாளராகவும் விளங்கும் இவரது திறன் 'தமிழ் தூது' தவத்திரு தனிநாயகம் அடிகளார் தமிழ் மீது கொண்ட வாஞ்சையை நிறைவேற்றுபவராகவும் அதனை ஊடக உலகிற்கு எடுத்தியம்புகின்ற செயல் வீரராகவும் இவர் ஆற்றிய, ஆற்றி வருகின்ற பணி இவரது குருத்துவ அர்ப்பண யூபிலி விழாவின் ஓர் மைற்கல் என்றே பாராட்டுகின்றேன். 'தொடர்க நின் பணி மிளிர்க இறையரசு'

*பாதுகாவலன் நிருபர்கள் சார்பாக வாழ்த்தும்*
*செல்வி வுளொறன்ஸ் ஜூசைதாஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறக்கமின்மை நோயைக் குணப்படுத்தும் புதிய தொப்பி கண்டுபிடிப்பு

உறக்கமின்மை நோயை ஆங்கிலத்தில் insomnia என்று குறிப்பிடுகின்றோம். இந்த நோயைக் குணப்படுத்தக் கூடிய தொப்பியொன்றை மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதன் தொழிற்பாடு மிகவும் சுலபமானது. இந்தத் தொப்பியோடு இணைந்த பையில் குளிர்ந்த நீர் ஊற்றப்படுகின்றது அல்லது ஐஸ் கட்டிகள் போடப்படுகின்றன.



24 மணிநேர
சேவை அழைப்பு
077 MAHARAJ
077 6242725
MAHARAJ PUMPS

அந்தத் தொப்பியைத் தலையில் அணிந்ததும் அது தலையில் குளிர்ச்சியை ஏற்படுத்தி உறக்கத்தை உண்டாக்குகின்றது. மூளை ஓய்வு பெற மறுக்கின்ற போது உறக்கமும் கண்களைத் தழுவ மறுக்கும்.

இது பொதுவான விடயம். மூளை சூடாக இருப்பது இதற்கு ஒரு முக்கிய காரணம். எனவே மூளையைக் குளிர்ச்சியடைய வைத்து ஓய்வு பெறச் செய்வது தான் இந்தத் தொப்பியின் வேலை.

இதை அணிந்து கொள்வதன் மூலம் insomnia பிரச்சினை உள்ளவர்களும், மற்றவர்களைப் போல் நிம்மதியாகத் துங்கலாம் என அமெரிக்க ஆய்வாளர்கள் இந்தத் தொப்பியை தயாரித்துள்ளனர்.

அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் இலட்சக்கணக்கான மக்கள் insomnia பிரச்சினையால் கஷ்ரப்படுகின்றனர். இவர்களுள் அநேகமானவர்கள் தூக்க மாத்திரைகளை பாவிக்கின்றனர். தூக்க மாத்திரைகள் வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவை. எனவே இத்தகையவர்களுக்கு இந்தத் தொப்பி பாதுகாப்பான ஒரு மாற்றீடாக அமையும் என்று நம்பப்படுகின்றது.

நெற்றிக்குக் கீழ் இருக்கின்ற மூளைப் பகுதியை இந்தத் தொப்பியின் மூலம் குளிரச் செய்யலாம். அதன் மூலம் அது மூளையை ஓய்வு பெறச் செய்து உறக்கத்தைக் கொண்டு வரும்.

## உடல் வெப்பத்தைத் தணிக்கும் எலுமிச்சை

எலுமிச்சை பல்வேறு மருத்துவ குணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் பழம், காய், இலை என அனைத்துமே மருத்துவத்துக்குப் பயன்படுகிறது.

இதில் செடி, கொடி என்று இரண்டு வகைகள் உண்டு. புளிப் புச்சுவை கொண்ட எலுமிச்சை, குளிர்ச்சியானது. பசியைத் தூண்டி நா வறட்சியைப் போக்கும். இயற்கையாகக் கிடைக்கும் விற்றமின் சி இதில் அதிகம் காணப்படுகிறது. அதுமட்டு மல்லாமல் இரும்புச் சத்து, கால்சியம், மக்னீசியம், மாங்கனீஸ் போன்ற சத்துக்களும் உண்டு.

கோடை காலங்களில் வெளியில் சென்று வந்தவுடன் அதிகமானோருக்கு தலைவலி ஏற்படுகிறது. எலுமிச்சம் பழத்தின் தோலை நன்றாகக் காய வைத்து தூளாக அரைத்து வைத்துக்கொண்டு தலைவலி வரும் போது இதனைத் தண்ணீரில் கரைத்து வலி இருக்கும் இடங்களில் தடவி வந்தால் இந்தப் பசை குறையும் போது தலைவலி குறைந்து விடும்.

கோடை காலத்தில் சிலருக்கும் வியர்வைக் குரு மற்றும் கட்டிகள் வருவதுண்டு. அதற்கு எலுமிச்சை மிகச் சிறந்த மருந்து. எலுமிச்சம் பழச் சாற்றில் சந்தனத்தை அரைத்துத் தடவினால் வியர்வைக் குருவும், வேனல் கட்டியும் சரியாகும்.

Roche
Mannheim Germany

உங்களுக்கு நீரிழிவு நோய் உள்ளதா...?



நம்பிக்கையான சரியான பெறுபேறுகளை
சுயமாக அறிந்து கொள்ளலாம்
ஜேர்மனிய தொழில்நுட்பத்தில் உற்பத்தி செய்யப்பட்ட
ACCU-CHEK
சுயமாக குருதியிலுள்ள
குளுக்கோஸின் அளவினை அளவிடும் கருவி

நீரிழிவு நோய் உங்களுடைய இருதயம், சிறுநீரகம், கால்கள் மற்றும் கண்பார்வையில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் முதன்மை காரணம் என்பது உங்களுக்கு தெரியுமா...? அதனால் நிகழ் காலத்தில் உடனுக்குடன் குருதியிலுள்ள குளுக்கோஸின் (சீனி) அளவினை அளவிடுவது மிக அவசியமாகும். எக்கு-சேக் கருவி மூலம் சுயமாக குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவினை வீட்டில் இருந்தே அளவிட முடியும். நம்பகமான எக்கு-சேக் கருவியை உபயோகித்து குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவு அதிகரிப்பதால் ஏற்படும் பக்க விளைவுகளை தவிர்ப்பதற்கு வைத்தியரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளவும்.




ஆயுட் கால உத்தரவாதம்

அனைத்தும்
ரூ .6950/-

அழையுங்கள் 0718 -691697

விரைவாக,
5 வினாடிகளில்
குருதியிலுள்ள குளுக்கோஸின்
அளவினை அளவிட

ACCU-CHEK Active
Strips are in packs of 10s, 25s & 50s

பொதியில் உள்ளடங்கியவை - • அளவிடும் கருவி • தோலை துளையிடும் கருவி • குருதி மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் 10 துண்டங்கள் • 10 ஊசிகள்

Sole Agent :
J.L.MORISON SON & JONES (CEYLON) PLC
620, Biyagama Road, Pethiyagoda, Kelaniya. Tel 011 2904222
ACCU-CHEK®
Live life The way you want

**Dealers** : Union Chemists, Col-2,5&10. City Dispensary, Col-2. I.C. Drugs, Col-3. Medico Pharma, Col-3. Wellawatte Pharmacy/Drugs, Col-6. Watson's Pharmacy, Wellawatta.Sam's Pharmacy, Nugegoda. City Pharmacy, Maharagama. Lanka Pharmacy, Kiribathgoda. Prasanna Pharmacy, Ja-Ela. Unique Pharmacy, Negombo. The Pharmacy, Negombo. Sri Lanka Pharmacy, Kandy. Galle Drugs, Gampola. The Pharmacy, Kurunegala. City Medicals, Kurunegala. Crystal Pharmacy, Galle. United Pharma, Galle/Matara. New Pharmacy, Anuradhapura. Chami Pharmacy, Anuradhapura. Aruna Pharmacy, Matara. Empaire medicals Gampha. Waruna Pharmacy, Panadura. City Medicals, Jaffna. Rathnam Pharmacy, Jaffna. Raaj Medicals, Vavuniya and at all leading Chemists

நாங்கள் நாடளாவிய பெருமையுடையோம்


micro PANDA
LC 1.3



BIG Bonanza from Micro

- பாதுகாப்பு (C-NCAP Standard, Dual Air Bag optional)
- இடவசதி (4/5 Adults)
- சக்தி (84Hp. DOHC 16V)
- விசேட அம்சங்கள் (ABS EBD, Power Steering, Power shutters, Power Mirrors...)
- தொழில் நுட்பம்
- வடிவமைப்பு (Modern & Aerodynamic)

Rs.1,395,000/=
( Including VAT )
Conditions Apply



Exclusive Leasing Partner
LANKA ORIX FINANCE
(An LOLC Group Company)
Call : 011 5 880 700

Micro Holdings (Pte,) Limited
GEELY by micro

Colombo Showroom [T] 011 2692... [F] 011 2692786
Kandy Showroom & Regional Service Centre [T] 081 ...
Matara Showroom [T] 041 2235551 [F] 041 2235552
E-mail : sales@microholdings.lk
Web site : www.microcars.lk

Hotlines
0773 667 658 0773 667 698 0773 523 307
0777 715 122 0773 667 686 0777 715 259 0773 523 308

micro HOLDINGS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனி உண்ணுவதால் ஏற்படும் சில கசப்பான உண்மைகள் !

மனிதன் அதிகம் உண்ணும் சத்தில்லாத உணவுகளில் சீனியும் ஒன்று. உண்மையில் நம்முடைய உடலுக்கு சீனி அறவே தேவையில்லை. உடலுக்கு சக்தி தேவைப்படும் போது இதர உணவுகள் குளுகோஸ் ஆக மாற்றி அமைக்கப்படுகின்றன.

சீனி உடலுக்கு எந்த சத்தையும் கொடுக்காமல் இருப்பதோடு உடலிலுள்ள சத்தையும் ஈர்த்துக் கொள்கிறது. அதனால்தான் இது சத்தில்லாத கலோரி, சத்தில்லாத உணவு என்று அழைக்கப்படுகிறது.

சிகரெட், மது முதலியவற்றைவிட சீனி அதிக ஆபத்தானது என்று சொல்லலாம். புற்றுநோய், எலும்பு முறிவு நோய், மூட்டு வியாதிகள், உடல் பருமன், இதய நோய்கள், இரத்த அழுத்தம், சருமநோய்கள், விரைவில் முதிர்ச்சி, முதுமை, பித்தக்கல், ஈரல்நோய், சிறுநீரகக்கோளாறு, பல் சூத்தை, அளவுக்கு மீறிய சுறுசுறுப்பு, வன்செயல் மற்றும் பரவலாக இருக்கும் நீரிழிவு நோய் ஆகியன உருவாகுகின்றது. உடம்பிலுள்ள ஒவ்வொரு உறுப்பையும் சீனி பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.

உங்கள் குழந்தைக்கு குளிர்பானம், ஐஸ்கிரீம், இனிப்புப் பண்டங்கள் மற்றும் அளவுக்கு அதிகமான சீனி உள்ள உணவுகளைக் கொடுப்பதன் மூலம் உங்கள் குழந்தையை நீங்களே நோயாளியாக உருவாக்குகிறீர்கள் என்பதுதான் அர்த்தம். சீனி அதிகமாகவும் விற்றமின் மற்றும் தாதுப் பொருள்கள் குறைவாகவும் உள்ள உணவு வகைகளை உட்கொண்டு வருபவர்களுக்கு உடலில் இரசாயன மாறுதல்கள் ஏற்பட்டு, அளவுக்கு மிஞ்சிய துடுக்குத் தனத்தையும் வன்செயலையும் தூண்டிவிடும்.

ஜப்பானில் பெருகிவரும் வன் செயல்களுக்கும் நொறுக்குத் தீனிகளுக்கும் அதிக தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

இனிப்பான பொருளை உண்ணும் போது வாயில் உள்ள பாக்ரீரியாக்கள் அதனுடன் சேர்ந்து அமிலத்தை உருவாக்குகிறது. இந்த அமிலம் பற்களில் உள்ள எனாமலை அரித்து ஓட்டையாக்கி பல் சூத்தையை உண்டாக்குகிறது.

சீனியும் கொழுப்பும் அதிகம் உள்ள உணவுப் பொருள்கள் இரத்தத்தில் கொலாஸ்ரோல் அளவை அதிகரித்து விடுவதால், இருதய நாளங்கள் அடைபடுகின்றன. இதனால் இரத்தம், ஒட்சிசன் மற்றும் சத்துக்கள் செல்வது தடைப்பட்டு விடுகிறது. இது தொடருமானால் ஒருவருடைய தசைநார்கள் இறந்து போய் மாரடைப்பு ஏற்படு கிறது. இந்த மாரடைப்புக்கு குழந்தைப் பருவத்திலேயே நாம் வித்திட்டு விடுகிறோம்.

தினமும் 24 தேக்கரண்டி சீனி நமது உணவில் சேர்ந்தால் இது 92 சதவிகித வெள்ளை இரத்த அணுக்கள் உருவாவதை தடுக்கிறது. இந்த வெள்ளை அணுக்கள் அபாயகரமான பாக்ரீரியாக்களை எதிர்க்கும் தன்மை உடையவை.

உடலில் அதிகம் சீனி இருந்தால் அதைச் சுத்தப்படுத்த அதிகமான இன்சுலின் வெளியக்கூட்டுகிறது அளவுக்கு அதிகமாக வெளியாகும் இன்சுலினுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியைத் தடுக்கும் ஹார்மோன்களான புரோஸ்டேட் கிளேண்டினுக்கும் அதிக தொடர்பு இருக்கிறது. இது புற்றுநோய் கழலையை உருவாக்குகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிகால மனிதர்களைவிட தற்போதைய மனிதர்களின் மூளை அளவு குறைவு

இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிச் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிபுணர் டாக்டர் மார்தா லாகர் தலைமையிலான குழுவினர் மனிதனின் பரிணாம வளர்ச்சி குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளனர். அவர்கள் ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய கண்டங்களில் வாழும் மனிதர்களின் மண்டை ஓடுகளை வைத்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சமீபத்தில் இஸ்ரேலில் உள்ள குகைகளில் இருந்து மனித மண்டை ஓடுகள் கிடைத்தன. அது கடந்த ஒரு லட்சம் முதல் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த குகை மனிதர்களுடையது எனத் தெரிய வந்துள்ளது. அவர்கள் நடத்திய ஆய்வின் மூலம் இவர்கள் மிகவும் உயரமாகவும், கட்டுமஸ்தான உடலமைப்புடனும் இருந்தது தெரிய வந்துள்ளது.

அதே போன்று அவர்களின் மூளை அளவு பெரிதாக இருந்தது. அவர்களின் உடல் அமைப்பைத் தற்போது வாழும் மனிதர்களுடன் ஒப்பிட்டு ஆய்வு மேற்கொண்டனர். கடந்த 10 ஆயிரம் ஆண்டுக்குள் ஆதிகால மனிதனை விட தற்போதைய மனிதனின் உயரமும், உடல் எடையும் குறைந்துள்ளது.

அதே நேரத்தில் மூளையின் அளவும் 10 சதவீதம் குறைந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு தற்போது உணவுக் கட்டுப்பாடு மற்றும் சுகாதாரமற்ற சூழ்நிலையும் இதை தொடர்ந்து ஏற்படும் நோய்களும் காரணம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## அதிக நேரம் தொலைக்காட்சி முன் அமர்வதால் இதய நோய்கள் ஏற்படும் அபாயம்



நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதால் நீரிழிவு நோய் மற்றும் இதய நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது என்றுஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு நாளில் 2 மணி நேரத்துக்கு அதிகமாகத் தொலைக்காட்சி முன் உடல் உழைப்பு இல்லாமல் அமர்ந்திருக்கும் நபர்ருக்கு ஐந்தில் ஒரு பங்கு நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்பும், 15 சதவீதம் இதய நோய் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது.

தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தைக் குறைத்தால் நீரிழிவு நோயைக் குறிப்பிடத்தக்க அளவு தவிர்க்க முடியும். அதே போன்று இதய நோய்கள், முன்கூட்டிய மரணம் போன்றவற்றையும் தவிர்க்க முடியும்.

தொலைக்காட்சி பார்க்கும் போது அசையாமல் இருப்பதைப் போல கணினி நிகழ்வுகளில் பல மணி நேரம் ஈடுபடும் போதும் இதே நோய்கள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படும் நோய் நிலையை உறுதி செய்ய ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் கொண்ட 8 பெரும் ஆய்வுகள் நடத்தப்பட்டன. 2 மணி நேரத்திற்கு மேல் தினமும் தொலைக்காட்சியைப் பார்ப்பதால் நீரிழிவு நோய், இதய நோய் பிரச்சனைகள் வருகின்றன. 3 மணி நேரத்துக்கு மேல் தொலைக்காட்சியை தினமும் உட்கார்ந்து பார்ப்பவர்களுக்கு முன்கூட்டியே மரணம் நிகழலாம் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

உடல் உழைப்பு இல்லாததால் பிரச்சினைகள் மோசமாக இருக்கும் என்று நீரிழிவு நோய் ஆய்வாளரான பிரிட்டனின் வைத்தியர் லெய்ம் பிரேம் கூறியுள்ளார். தொலைக்காட்சியைப் பார்ப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து பொது சுகாதாரத்துக்கான கர்வர்டு பள்ளியின் பேராசிரியர் பிராங்ஷீ தெரிவித்துள்ளார்.


# நீங்கள் நேர்மையான வழியில் செல்வத்தைத் தேடினால் செல்வம் உங்களை நாடிவரும்

தொழுகை, நோன்பு, ஹஜ் என்பவற்றைப் போலே "ஹலால்" முறையில் சம்பாதிப்பதும் ஒரு மார்க்கக் கடமையாகும்



**முதாரபாஹ்**
இலாபத்தைப் பங்கிடும் முதலீடு

**முராபஹா**
வர்த்தக நிதியுதவி

**இஜாரா**
குத்தகை

**டிமினிஷிங் முஷாரகா**
சொத்து/வேலைத்திட்ட நிதியுதவி

الفلاح
AL-FALAAH
*Shari'ah is our Success*
ISLAMIC FINANCIAL SERVICES

நாம் வழங்கும் சேவைகளுள் முதாரபாஹ் (இலாபத்தைப் பகிர்ந்துகொள்ளும் முதலீடுகள்), இஜாரா (குத்தகை), முராபஹா (வர்த்தக நிதியுதவி), டிமினிஷிங் முஷாரகா (சொத்து மற்றும் வேலைத்திட்ட நிதியுதவி) என்பன உள்ளடங்கும். இச் சேவைகள் கண்டிப்பான இஸ்லாமிய ஷரிஆ சட்டத்திற்கு அமைவாக வழங்கப்படுவதுடன், பிரபல உள்நாட்டு மற்றும் சர்வதேச ஷரிஆ அறிஞர்களைக் கொண்ட ஷரிஆ மேற்பார்வைச் சபையினால் கண்காணிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்பட்டு, அங்கீகரிக்கப்படுகின்றன.

உங்கள் ஆன்மீக மற்றும் வியாபார வளர்ச்சிக்கு இஸ்லாமியச் சட்டத்திற்கு அமைவான எமது நிதிச் சேவைகள் மூலம் நாம் எவ்வாறு உதவ முடியும் என்பதை அறிந்துகொள்ள இன்றே எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(LOLC குழுமத்தின் அங்கத்துவ நிறுவனம்)

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்: ஹொட்லைன் 011 5 880 786 / ரம்ஸி 0777 274256 அல்லது தில்பௌஸி 0777 931178


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு முதலாம் தெரு

# அருள் தரு சிவதர்மசாஸ்த்தா திருக்கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



## பிரதம குருவின் ஆசியுரை



எங்கள் வம்ச தெய்வமாக விளங்குகின்ற தமிழ்நாட்டு சாத்துபத்தூர் ஐயன் அவரை நெஞ்சில் நிறுத்தி சபரி ஆண்டவன் பாதம் பணிந்து மக்கள் வழிபாட்டுத் தலமாக சிறுதுளியாக நிதி சேர்த்து எல்லா மக்களின் துணையோடு இந்த ஆலயத்தைக் கட்டி எழுப்பினேன். இன்று பெருமானுக்கு பஞ்சகுண்டபக்ஷ கும்பாபிஷேகம் செய்து மகிழ்கின்றேன். தொடர்ந்து 41 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். இந்த ஆண்டு ஐயப்பன் புனித மாலை அணிகின்றவர்கள் எமது ஆலயத்தில் மாலை அணிந்து சபரியாத்திரை மேற்கொள்ளலாம். தமிழ்நாடு சென்று யாத்திரை செய்யமுடியாதவர்கட்கு - யாழ். கட்டுவன் ஐயப்பன் ஆலயம், நவிண்டில் சுந்தர ஐயப்பன் ஆலயம் சென்று 18 படி யேறி நெய் அபிஷகம் செய்ய வசதிகள் செய்து தரப்படும் என்பதனை அறியத்தருகிறேன்.

இன்று நடைபெறும் ஐயப்பனின் கும்பாபிஷேக பலன் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திப்பதோடு சரீர உதவி புரிந்தவர்கள், நன்கொடை தந்தவர்கள், தொண்டர்கள், அடியார்கள், சுவாமிமார்கள், சுவாமிக்குத் தேவையான பொருள்கள் வாங்கித் தந்தவர்கள் எல்லோருக்கும் ஐயப்பன் ஆசி உரித்தாகுக.

பிரதம குருசாமி சபரிமலை குருசுவாமி சபரீசதாசன்
சபரீசகான விநோதன் சபரீசகான மாயன்
பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவசிவாச்சாரியார், உரும்பிராய்.

## ஐயப்ப ஸ்வாமி அருள் பெருகுக!



உரும்பிராய் நகரின் மத்தியிலே கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வரும் ஐயப்ப ஸ்வாமி குடமுழுக்குக் காண இருக்கிறார். இந்தியாவிலே கேரளத்திலே சபரிமலையை தன்னுடைய பிரதான இருப்பிடமாகக் கொண்டு அற்புதங்கள் செய்து வருபவர் ஐயப்ப ஸ்வாமி. அவர்தம் பெருமையை உணர்ந்த இலங்கை மக்களும் விரதமிருந்து சபரிமலை செல்லும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலே ஆரியங்காவு, எரிமேலி, சாத்துப்பத்தூர் முதலிய க்ஷேத்திரங்கள் ஐயப்பனுக்கு பிரதானமானவை. உரும்பிராய் ஐயப்ப ஸ்வாமியின் ஸ்தானிக அர்ச்சகர் பிரம்மஸ்ரீ வாசுதேவக் குருக்களுக்கும் எமக்கும் சாத்துப்பத்தூர் ஐயப்பன் குடும்ப தெய்வமாக விளங்குகிறார். நாங்கள் அவர்பெருமையைப் பாடும் போது 'சாத்துப்பத்தூரினில் வாழ்ந்திடும் எங்கள் குலதெய்வமே பூதாநாதா' என்று போற்றிப் புகழ்வது வழக்கம். பெருமை மிக்க ஐயப்பன் புகழ் உரும்பிராய் ஐயப்ப தேவாலயத்திலிருந்து உலகெங்கும் பெருகிப் பரவ ஐயப்பன் திருவருள் வேண்டிநிற்கிறேன்.

சிவஸ்ரீ மகாதேவக்குருக்கள்.



## என் கனவில் வந்தான் ஐயன்



